வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்களின் அடிச்சுவட்டில்



இராமேசுவரம் - காசி பாதயாத்திரை என் அனுபவங்கள்

***வலையபட்டி சித்தர், காசிஸ்ரீ, பச்சைக்காவடி ஐயா அவர்கள்
20 யாத்திரிகர்களை உடன் அழைத்துக் கொண்டு,
26.05.2014 அன்று இராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டு,
110 நாட்களில், 2464 கி.மீ. நடந்து, 7 மாநிலங்களைக் கடந்து,
12.09.2014 அன்று காசிமாநகர் சென்று சேர்ந்த பயணக் கட்டுரை.***

இந்தப் பாதயாத்திரையானது, வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்களுக்கு, 11ஆவது பாதயாத்திரை ஆகும். இதற்கு முன் இவர் 10முறை இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். இந்தப் பாதயாத்திரையில் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற 20 யாத்திரிகர்களில் நானும் ஒருவன். என்னுடைய பயண அனுபவங்களை இந்தப் புத்தகத்தின் வழியாக உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

நூலாசிரியர்
காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	**இராமேசுவரம் - காசி பாதயாத்திரை என் அனுபவங்கள்**
பொருள்	:	நூலாசிரியர் இராமேசுவரத்தில் இருந்து காசிக்கு 110 நாட்கள் நடந்து செல்லும் போது பார்த்த, கேட்ட, உணர்ந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு
நூலாசிரியர்	:	**காசிஸ்ரீ, முனைவர், நா.ரா. கி. காளைராசன்,** (மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்) 28 அ, குருநாதர் கோயில் தெரு, கோட்டையூர் 630 106 e-mail : kalairajan26@gmail.com cell phone : 824 826 6418, WhatsApp : +91 94435 01912
இணையப் பதிப்பு	:	**https://kasi-pathayathrai-kalairajan.blogspot.com/**
மொழி/ எழுத்துரு	:	தமிழ் ஒருங்குறி - 10 புள்ளி
பதிப்பு	:	முதல் பதிப்பு / ஏப்ரல் 2025
அளவு	:	B5 size, (70 GSM காகிதம்)
பக்கங்கள்	:	420 பக்கங்கள்
நூல் உரிமை	:	காசிஸ்ரீ,முனைவர், நா.ரா.கி.காளைராசன்
அச்சகத்தார்	:	onlineprintingz.com
நன்கொடை	:	₹ 500/-

Koviloor Madalayam
Koviloor - 630 307
Madurai Road, Koviloor
Sivagangai Dist

உ
Sivamayam

☎ 04565 - 238783, 94433 35312
Email : slnaiyar@gmail.com

Sri La Sri
Narayana Gnana Desiga Swamigal
Madathipathy



கோவிலூர் ஆண்டவர்தம் குருவருளும், கோவிலூர் அருள்மிகு திருநெல்லையம்மன் உடனாய கொற்றவாளீசர் திருவருளும், கோவிலூர் சிவகாமி உடனாய ஆனந்த நடராசர் திருவருளும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

புனித யாத்திரை செல்வது இந்து சமயத்தின் தலையாய கடமை. தென்னாட்டுத் தலங்கள், வட நாட்டுத் தலங்கள் என எல்லாவற்றையும் தரிசனம் செய்வது என்பது ஒரு மனிதனுக்கு அவன் பிறவியில் கிடைத்தற்கரிய வாய்ப்பு. அதிலும் காசி யாத்திரையை நடைபயணமாக மேற்கொள்வது என்பது மனிதர் அனைவராலும் இயலும் செயல் அல்ல. தரை, வான் வழிப் பயணங்கள் வந்த பின்பு நடையாத்திரை என்பது அரிதினும் அரிதான செயலாகிவிடுகின்றது.

வலையபட்டியைச் சார்ந்த காசிஸ்ரீ பச்சைக்காவடி என்றழைக்கப்படும் திரு தேனிமலை அவர்களின் தலைமையில் இருபது பேர் கொண்ட குழுவினர் இராமேசுவரத்தில் தொடங்கிக் காசிவரை நடைபயணம் மேற்கொண்டு, காசி அருள்மிகு விசுவநாதரைத் தரிசித்து வந்துள்ளனர். 26-05-2014 அன்று தொடங்கிய இந்த நடையாத்திரை, 110 நாட்கள் நிகழ்ந்து, 2464 கிலோ மீட்டர் தொலைவைக் கடந்து ஏழு மாநிலங்களின் வழியாகக் காசிக்குச் சென்று 12-09-2014 அன்று நிறைவடைந்துள்ளது. இந்த அனுபவங்களை முனைவர் நா.ரா.கி. காளைராசன் அவர்கள் ஒவ்வொரு நாளாக, ஒவ்வொரு இடமாக, ஒவ்வொரு நிகழ்வாக அனுபவித்ததை அனுபவித்தபடி பதிவு செய்து நூலாக்கம் செய்துள்ளார். இடையிடையே இடம்பெற்றுள்ள படங்கள் பயணத்தின் அருமையைக் காட்டுகின்றன. காளைராசனின் பயண அனுபவங்கள் அடங்கிய முகநூல் பதிவுகளைத் தொகுத்து வழங்கி, இந்நூலாக்கத்திற்கு உதவிய புதுவயல் சுப. சி. பழனியப்பனுக்கு நம் வாழ்த்துகள்.

நல்ல தலைப்புகளும், அன்று அன்று நடந்த தூரங்களின் அளவுகளும், சந்தித்தவர்களின் தகவல்களும், நிகழ்ந்த எதிர்பாராத கடவுள் அருளால் கிட்டிய நன்நிகழ்வுகளும் இந்நூலில் இடம்பெற்று படிக்கும் நம்மைக் காசி பயணத்தில் ஒரு அங்கமாக எண்ண வைக்கிறது. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்ற பழமொழி நடையாத்திரை அன்பர்களின் அனுபவ மொழியாக இருந்துள்ளது. காசி பயணத்தின்போது ஏற்பட்ட நெருக்கடிகள் இவர்களின் இறைவனை நோக்கிய பயணத்தினால் தானகவே வந்த இடம் தெரியாமல் மறைந்திருக்கின்றன. அவ்வப்போது அசதி, அலுப்பு காரணமாக இருபது பேரில் ஓரிருவர் உடல் நலம் குன்றினாலும் அவர்களை விட்டுவிடாது, அவர்களையும் அரவணைத்து அவர்களுக்காக நேரம் தந்து இக்குழு காசிப்பயணத்தை மேற்கொண்டுள்ளது.

நாள்தோறும் வழிபாடு, கோயில்தோறும் வழிபாடு, காணவந்த அன்பர்களுடன் வழிபாடு என்று எந்நேரமும் வழிபாட்டுச் செயல்பாடுகளிலேயே

இவர்களின் பயணம் தொடர்ந்து வந்துள்ளது. பல கோயில்களை வெளியில் இருந்தே தரிசிக்க வேண்டிய காலக் கெடுவும் நிகழ்ந்துள்ளது. புளிய இலையும், வேப்ப இலையும் கலந்த கொதிநீர் இவர்களின் கால் வலியைப் போக்கியுள்ளது. இவர்களுடன் சமையல்காரர்களும் காசிப் பயணப் புண்ணியம் பெற்றனர். வண்டி நிறைய உணவுப் பொருள்களும் பயணித்து அவையும் இறை அனுபவம் பெற்றன.

பதினோரு ஆண்டுகளாக காசிப்பயணம் மேற்கொள்ளும் பச்சைக்காவடியார் தான் செல்லும் ஊர்களில் எல்லாம் அன்பர்களையும் தொண்டர்களையும் பெற்றிருக்கிறார். அவர்களில் பலர் கடந்த நடைபயண அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டது மிகச் சிறப்பு.

காசியைக் காட்டும் மைல் கற்கள் எல்லாம் நடையாத்திரை அன்பர்களுக்கு தெய்வத் திருத்தலத் தூண்களாகக் காட்சியாகியுள்ளன. இவர்கள் காசிக்கு நடைபயணம் மேற்கொண்டதைப் பாராட்டி காசிவிசுவநாதர் கோயிலில் காசிஸ்ரீ பட்டம் இவர்களனைவருக்கும் வழங்கப்பெற்றது. இது காசி விசுவநாதர் கோயிலின் சிறப்பினையும் இவர்களின் சிறப்பினையும் ஒரு சேர எடுத்துக்காட்டும் தெய்வ சாட்சியாகின்றது.

பச்சைக்காவடியார் தலைமைத் தொண்டராக அமைந்து இந்நடைவேள்வியை நடத்தியுள்ளார். நடையாத்திரையின்போதும், அதன் பிறகும் அவரைத் தன் குருவாகக் கொண்டு காசிஸ்ரீ காளைராசன் வாழ்வினை நடத்திவருவது இந்நூலின் வழி அறியவரும் நற்செய்தி.

மழை வேண்டியும் உலக அமைதி வேண்டியும் செய்யப்பட்ட காசி நடையாத்திரை முழு வெற்றி பெற்று இன்று எழுத்தாவணமாக ஆக்கப்பெற்றுள்ளது. இதனைப் படித்து நாமும் காசியை எண்ணுவோம், தொழுவோம், பயனடைவோம்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை

உ
சிவமயம்

AL. AR. SM. Narayanan Chettiar,
Zamindar,
palace
DEVAKOTTAI - 630 302
Phone : 273073(04561)

Camp - தேவகோட்டை
Date – 14.10. 2022


வாழ்த்துரை




நமது பேரன்பிற்குரிய காசிஸ்ரீ முனைவர் கி. காளைராஜன் அவர்கள் 2014 ஆம் ஆண்டு 110 நாட்கள் மதிப்புமிகு பச்சைக்காவடி ஐயா அவர்களின் தலைமையில் காசிக்கு நடந்து சென்ற அனுபவங்களை அந்தந்தப் பகுதிக்குரிய புகைப்படங்களுடன் அழகிய முறையில் தொகுத்து நூலாக வழங்கியுள்ளார். நடையே பெரிய செய்தி, அதனை இவருக்கே உரிய நடையில் வழங்கியுள்ளது மகிழ்விற்குரியது. திருப்பூவணக் காசி திருக்கானப்பேர் ஆகிய தலவரலாறுகளை மூலத்தோடு தந்த பெருமைக்குரியவரின் இந்நூல் நடப்பவர்களுக்கு எந்நாளும் துணையாய் அமையும். இந்நுலாசிரியர் இன்னும் பலப்பல ஆன்மீக செய்திகளை தமது எழுத்து மூலம் வரும் தலைமுறைக்கு வழங்கிடவும், அவர் நிறைந்த செல்வமும் நீண்ட ஆயுளும் பெற்றுச் சிறந்தோங்கிட என் ஆன்ம நாயகனான ஸ்ரீ சுவர்ண காளீஸ்வரப் பெருமானை வழுத்தி, வாழ்த்துதும்.

வேணும்
ஸ்ரீ சுவர்ணகாளீஸ்வரர் துணை

இந்த நூல் அச்சாகி வெளிவரப் பெரிதும் உதவிய நல்ல உள்ளங்கள்

	காசிஶ்ரீ சுப. சின்னகருப்பன் அவர்கள், புதுவயல் (இருப்பு - காரைக்குடி)
	உயர்திரு PL. அண்ணாமலை அவர்கள், கண்டனூர் (இருப்பு - சென்னை)
	காசிஶ்ரீ M.K. மெய்யப்பன் அவர்கள், காரைக்குடி (இருப்பு - சென்னை)
	பிழைத்திருத்தம் செய்து உதவியர் கோயம்புத்தூர் S. சுப்பிரியா அவர்கள்.



வலையபட்டி சித்தர், காசிஸ்ரீ, பச்சைக்காவடி ஐயா அவர்கள்

வயது 62; அலைபேசி எண்:- 9787872121.; இந்தப் புனிதமான பாதயாத்திரையின் கர்த்தா, குருசாமி, வலையபட்டி சித்தர், காசிஸ்ரீ, பச்சைக்காவடி அவர்கள் பொன்னமராவதி வலையபட்டி நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர். அழகர்கோயில், சபரிமலை, திருப்பதி, காசி, மலேசியா-சிங்கப்பூர், அறுபடைவீடு எனப் பல திருத்தலங்களுக்கும் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். இவர் பொன்னமராவதியில் இருந்து சபரிமலைக்குப் பாதயாத்திரையாகப் பல ஆண்டுகள் சென்றுள்ளார். திருப்பதிக்குப் பாதயாத்திரை 18 ஆண்டுகள் சென்றுள்ளார். கடந்த 42 ஆண்டுகளாக பொன்னமராவதியிலிருந்து பழனிக்குக் காவடி எடுத்து வருகிறார். பச்சைக்காவடி அவர்கள் 12 முறை இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். முதன்முறையாக இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொள்ளும் போது திரு.அரு.சோ. மற்றும் சிலருடன் சென்றுள்ளார். அடுத்தடுத்த ஆண்டுகளில் இவரே தன்னுடன் 20 அடியார்களையும் அழைத்துக் கொண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். இவரது 12ஆவது காசி யாத்திரையை 2015ஆம் ஆண்டு நிறைவு செய்தார்.

ஒருமுறை மலேசியா முருகன் கோயிலுக்குச் சிங்கப்பூரிலிருந்து பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார்.

அறுபடைவீடு பாதயாத்திரையை 2016ஆம் ஆண்டு துவக்கி, ஒவ்வொரு ஆண்டும் யாத்திரை மேற்கொண்டுள்ளார். ஆறு ஆண்டுகளுக்கு இந்த யாத்திரையை மேற்கொள்வதெனத் திட்டம் வைத்துள்ளார். 2016, 2017, 2018, 2019 மற்றும் 2022([1]) என ஐந்து ஆண்டுகள் இதுவரை நிறைவாகியுள்ளன. 2023ஆம் வருடமும் யாத்திரை நல்லபடியாக நடைபெற வேண்டுமென நேர்ந்து கொண்டுள்ளார்.

பச்சைக்காவடி - பெயர்விளக்கம்

நகரத்தார் சமூகத்தினர் சுமார் 400 ஆண்டுகளுக்கும் மேலாக தைப்பூசம் விழாவின் போது பழனிக்கு காவடி எடுத்து வருகின்றனர். தைப்பூசம் இந்நாளில் நடைபெறவுள்ளது என்று, பழனி முருகன் கோயிலில் இருந்து 1)கண்டனூர் சாமியாடி, 2)அரண்மனைப் பொங்கல், 3)நெற்குப்பை ஐயா ஆகிய இம்மூவருக்கும் "ஓலை" அனுப்புவார்கள். இம்மூவரது ஏற்பாட்டில் காவடிகள் பழனிக்குப் புறப்படும். ஆரம்ப காலத்தில் குறைந்த எண்ணிக்கையில் காவடிகள் சென்றன. இப்போது சுமார் 400 காவடிகள் செல்கின்றன. பேருந்துகளுக்கு ஓட்டுனர் நடத்துனர் இருப்பது போல காவடிக்கும் உண்டு. காவடிகளுக்கு முன்னதாகச் செல்பவர் கையில் வேல் எடுத்துச் செல்வார். வேல் பின்னர் அனைத்து காவடிகளும் செல்லும். காவடிகளின் மேல் சுற்றப்பட்டிருக்கும் துணிக்கு "பண்ணாங்கு " என்று பெயர். காவடி எடுப்பவரின் விருப்பப்படி மஞ்சள், காவி, அரக்கு நிறத்தில் பண்ணாங்கு இருக்கும். ஆனால் கடைசியாக வரும் ஒரேயொரு காவடியில் மட்டும் பச்சை நிறத்தில் பண்ணாங்கு துணி போர்த்தப்பட்டு இருக்கும். இதனால் இந்த காவடிக்கு "பச்சைக்காவடி " என்று பெயர்.

எல்லாக் காவடிகளையும் விடுதல் இன்றி அழைத்துக் கொண்டு வர வேண்டியது பச்சைக்காவடி தூக்கி வருபவரின் பொறுப்பு. பச்சைக்காவடி வந்து விட்டால் எல்லாக் காவடிகளும் வந்துசேர்ந்து விட்டனர் என்று பொருள். காவடி எடுப்பவர்கள் வேல் எடுத்துச் செல்பவரை முந்திச் செல்லவும் மாட்டார்கள் , பச்சைக்காவடிக்குப் பின் வரவும் மாட்டார்கள். கடந்த 42 ஆண்டுகளாக பொன்னமராவதி வலையப்பட்டியைச் சேர்ந்த "தேனி மலை" அவர்கள் பச்சைக்காவடி எடுத்து வருகிறார். பச்சைக்காவடி எடுக்கும் காரணத்தால் எல்லோரும் மரியாதை நிமித்தமாக இவரைத் தேனிமலை என்ற இயற்பெயரால் அழைக்காமால் "பச்சைக்காவடி" என்றே அழைத்து வருகின்றனர்.

இதனால் குருஜியின் இயற்பெயர் மறைந்து பச்சைக்காவடி என்ற பெயரே நிலைத்துவிட்டது.

பச்சைக்காவடி பெயர்விளக்கம் பற்றிய தகவலை வழங்கியவர் -
காசிஸ்ரீ சுப. சின்னக் கருப்பன் செட்டியார்,
புதுவயல் (இருப்பு - காரைக்குடி).

---

[1] 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு வருடங்களும் சீன தேசத்திலிருந்து பரவிய “கொரோனா” என்ற பெருந்தொற்று நோய் உலகெங்கும் பரவி அதிக மனித உயிர்களைப் பலி கொண்டது. நோய்ப் பரவலைத் தடுக்க மத்தியஅரசும், தமிழ்நாடு மாநிலஅரசும் “பொதுமுடக்கம்” அறிவித்து போக்குவரத்துகளை நிறுத்தியிருந்தன. இதனால் இந்த இரண்டு வருடங்களில் பாதயாத்திரை மேற்கொள்ளப்படவில்லை.

இராமேசுவரம் - காசி புனித பாதயாத்திரை நோக்கமும் பயணத் திட்டமும்

புனித பாதயாத்திரையின் நோக்கம் -- இந்தியப் பெருநாட்டில் பிறந்த காரணத்தினால் இந்திய மக்களின் நலம் காக்கவும், நாட்டுக்கோட்டை நகரத்தார் நலம் காக்கவும், நகரத்தார் பெருமக்கள் அனைவரும் அனைத்துச் செல்வங்களும் பெற்று வாழ்வில் வளம் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, வலையபட்டி பச்சைக்காவடி அவர்கள் இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை மேற்கொள்கிறார்.

வழிபடு தெய்வங்கள் - தென்னிந்தியாவின் திருத்தலமான இராமேசுவரத்தில் வாசம் செய்து கொண்டிருக்கும் அருள்மிகு இராமநாதசுவாமியும் பர்வதவர்த்தினி அம்மையாரும் வழியனுப்பி வைக்க, வழித்துணையாக வருகின்ற வலையபட்டி மலையாண்டி விநாயகப் பெருமான், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகப் பெருமான், குலதெய்வமாகிய ஆலத்துப்பட்டி அருள்மிகு சன்னாசி, கட்டுச்சோத்துக் கருப்பர், உளிவீர சுவாமி, ஆஞ்சநேயப் பெருமான், பஞ்சபூத பகவான்கள் முதலான தெய்வங்களின் அருளாசியுடன், என்றென்றும் பச்சைக்காவடியை ஆளுகின்ற பழனிமலை முருகப்பெருமான், பூமிதேவி மற்றும் மார்க்கண்டேயப் பெருமான் சமேத ஒப்பில்லா ஒப்பிலியப்பன் பெருமாளும் உடன்வர, அருள்மிகு காசி விசுவநாதசுவாமியும் விசாலாட்சி அம்மையாரும், அன்னபூரணித் தாயாரும், காலபைரவரும் வரவேற்க, அகில உலகத்தையும் ஆளுகின்றன நாயகன், முழுமுதல் கடவுள் ஆனைமுகப் பெருமான் திருவருளால் வடஇந்தியத் திருத்தலமாம் காசி விசுவநாதர் கோயிலுக்குப் பாதயாத்திரை செல்கிறார்.

வலையபட்டி நகரத்தார்களின் வாழ்த்துகள் - ***"இறைத்தொண்டே எம் தொண்டு"*** என்று நாளும் தொண்டாற்றி வரும் வலையபட்டி பச்சைக்காவடி அவர்கள், தனக்கென்று எவ்வித நோக்கமும் இன்றித் தொடர்ந்து 12 ஆண்டுகள் மேற்கொள்ளும் 'இராமேசுவரம் காசி பாதயாத்திரை இனிதே நிறைவே வேண்டும்' என்று வலையபட்டி நகரத்தார்கள் ஆகிய நாங்கள் அனைவரும் வலையபட்டி பச்சைக்காவடி அவர்களுக்கு எங்களின் அன்பையும் நல்லாசிகளையும் வழங்கி, அவர்கள் எல்லா நலன்களையும் பெற்று பல ஆண்டுகள் வாழ வேண்டும் என்று ஆனைமுகக் கடவுள் வலையபட்டி மலையாண்டி விநாயகப் பெருமான் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறோம்.

இறைவழிபாடு தொடங்குதல் - பச்சைக்காவடியும், அவர் அழைத்துச் செல்லும் 20 பாதயாத்திரிகர்களும், ஜெய வருடம் வைகாசி மாதம் 10ஆம் தேதி (24.05.2014) சனிக்கிழமை காலை 7.00 மணி அளவில் மலையாண்டி கோயிலில் மலையாண்டி விநாயகப்பெருமானுக்கு அபிஷேக ஆதாரதனைகள் செய்து, திருவடிகளை வணங்கி அருளாசி பெறுதல். பகல் 11.00 மணிக்கு மேல் மதியம் 1.00 மணிக்குள் வேன் மூலம் புறப்பட்டு வைரவன்பட்டி சென்று வைரவப்பெருமான் திருவடிகளை வணங்கி அருளாசி பெறுதல். அன்று மாலை பிள்ளையார்பட்டி கற்பக விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து திருவடிகளை வணங்கி அருளாசி பெற்று, அங்கிருந்து வைரவன்பட்டிக்குச் சென்று இரவு தங்குதல்.

வைகாசி மாதம் 11ஆம் தேதி (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை, அதிகாலை 4.00 மணிக்கு வேன் மூலம் வைரவன்பட்டியிலிருந்து புறப்பட்டு, ஆலத்துப்பட்டி சென்று குலதெய்வமாகிய அருள்மிகு சன்னாசி, கட்டுச்சோத்துக் கருப்பர், உளிவீர சுவாமிகளின் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்றுக் கொள்ளுதல்.

அன்று காலை 6.00 மணி அளவில் அங்கிருந்து புறப்பட்டு மாலை 4.00 மணி அளவில் இராமேசுவரம் சென்று சேர்தல். மாலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள் இராமேசுவரம் இராமநாதசுவாமிக்கும் பர்வதவர்த்தினி அம்மையாருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து, அம்மை அப்பனின் திருவடிகளை வணங்கி அருளாசி பெறுதல். காசியில் காசிவிசுவநாதர் விசாலாட்சி அம்மையாருக்கு அபிஷேகம் செய்தற்காகக் கோடி தீர்த்தமும், கங்கையில் சேர்ப்பதற்காக கடல்மண்ணும் சேகரித்து எடுத்து வைத்துக் கொள்ளுதல்.

பாதயாத்திரை பயண விவரங்கள் - பச்சைக்காவடியும், பாதயாத்திரை செல்லும் 20 பக்தர்களும் ஜெய வருடம் வைகாசி மாதம் 12 ஆம் தேதி (26.5.2014) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு மேல் 4.00 மணிக்குள் இராமேசுவரம் காசி புனிதப் பாதயாத்திரைப் பயணத்தைத் தொடங்குதல். 110 நாட்களில் 2464 கிலோ மீட்டர் தூரம் 7 மாநிலங்கள் வழியாகப் பாதயாத்திரை செய்து ஜெய வருடம் ஆவணி மாதம் 27ஆம் தேதி (12.09.2014) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் 6.00 மணிக்குள் காசியில் நாட்டுக்கோட்டை செட்டியார் நகரச் சத்திரம் சென்று தங்கதல்.

ஜெய வருடம் ஆவணி மாதம் 28ஆம் தேதி 13.09.2014 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள் காசிவிசுவநாதர் கோயில் சென்று காசி விசுவநாதர் விசாலாட்சி அம்மையாருக்கு கோடிதீர்த்தத்தை அபிஷேகம் செய்து அம்மை அப்பனின் திருவடிகளை வணங்கி அன்னபூரணித் தாயாரையும் காலபைரவரையும் வணங்கி அருளாசி பெற்றக் கடல் மண்ணைக் ***காசியில்*** கங்கையில் சேர்த்து இராமேசுவரம் காசி புனிதப் ***பாதயாத்திரையை நிறைவு செய்தல்.*** ஆவணி மாதம் 29ஆம் தேதி (14.09.2014) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை காசியில் இருந்து வேனில் புறப்பட்டு அலகாபாத் சென்று திரிவேணி சங்கமத்தில் தீர்த்தமாடுதல். இறை வழிபாடு செய்து அருளாசி பெறுதல். அங்கிருந்து புறப்பட்டு இரவு காசி வந்து சேர்ந்து தங்குதல். ஆவணி மாதம் 27 ஆம் தேதி (12.09.2014) வெள்ளிக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 5ஆம் தேதி (21.09.2014) ஞாயிற்றுக் கிழமை வரை 10 நாட்கள் காசியில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தில் தங்கியிருந்து திருத்தல வழிபாடு செய்தல்.

பாதயாத்திரை நிறைவு - குருசாமி பச்சைக்காவடியும் அவருடன் பாதயாத்திரிகர் ஒருவரும் என இவர்கள் இருவர் தவிர்த்து மற்ற பிற பாதயாத்திரிகர்கள் அனைவரும் புரட்டாசி மாதம் 5ஆம் தேதி (21.09.2014) ஞாயிற்றுக் கிழமை இரவு தொடர்வண்டியில் காசியிலிருந்து இராமேசுவரத்திற்குப் பயணம். குருசாமி பச்சைக்காவடியும் அவருடன் பாதயாத்திரிகர் ஒருவரும் அன்னதான வண்டியில் புரட்டாசி மாதம் 6ஆம் தேதி (22.09.2014) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு காசியிலிருந்து இராமேசுவரத்திற்குப் பயணம். கட்னி, நாக்பூர், ஹைதராபாத், செகந்தராபாத், பெங்களூர், கிருஷ்ணகிரி, சேலம், திருச்சி, புதுக்கோட்டை வழியாக புராட்டாசி மாதம் 17ஆம் தேதி (3.10.2014) வெள்ளிக்கிழமை இராமேசுவரம் வந்து சேருதல். புரட்டாசி 18ஆம் தேதி (4.10.2014) சனிக்கிழமை காலையில் இராமேசுவரத்தில் இராமநாதசுவாமிக்கும் பர்வதவர்த்தினி அம்மையாருக்கும் கங்கை தீர்த்தத்தை அபிஷேகம் செய்து அம்மை அப்பனின் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்று அன்று இரவு இராமேசுவரத்தில் தங்குதல்.

இராமேசுவரம் வைரவன்பட்டி - புரட்டாசி மாதம் 19ஆம் தேதி (5.10.2014) ஞாயிற்றுக் கிழமை காலையில் இராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டு வேன் மூலம் ஆலத்துப்பட்டி சென்று குலதெய்வமாகிய அருள்மிகு சன்னாசி, கட்டுச்சோத்துக் கருப்பர், உளிவீர சுவாமிகளின் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்ற பின்னர் பிள்ளையார்பட்டிக்கு வந்து கற்பக விநாயகப் பெருமானுக்கு அபிஷேக

ஆராதனைகள் செய்து கற்பக விநாயகப் பெருமாளின் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்று அன்று மாலை வைரவன்பட்டி சென்று வைரவப் பெருமான் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்றுக் கொண்டு அன்று இரவு வைரவன்பட்டியில் தங்குதல். ***வைரவன்பட்டி வலையபட்டி -*** பச்சைக்காவடியும் பாதயாத்திரைக் குழுவினரும் புராட்டாசி மாதம் 20ஆம் தேதி (6.10.2014) திங்கட்கிழமை காலையில் வைரவன்பட்டியில் இருந்து புறப்பட்டு வேன் மூலம் வலையபட்டிக்கு வந்து மலையாண்டி கோயிலில் மலையாண்டி விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து மலையாண்டி விநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்று புனிதப் பாதயாத்திரை பயணத்தை நிறைவு செய்தல்.

முழுமுதல் கடவுள் ஆனை முகத்தான் அருள்



இந்தியப் பெருநாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலம் காக்க
நாட்டுக் கோட்டை நகரத்தார் நலம் காக்க

பதினொன்றாவது முறையாக

ஸ்ரீ வலையபட்டி ஸ்ரீ இராமேஸ்வரம் ஸ்ரீ காசி ஸ்ரீ
பச்சைக்காவடி அவர்களின்

இராமேஸ்வரம் – காசி பாத யாத்திரை

இந்தியத் திருநாட்டில் தமிழ் மாநிலத்தில் புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி தாலுகா, பொன்னமராவதி வலையபட்டி எனும் ஊரில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தில் பிள்ளையார்பட்டி கோயில் பிரிவைச் சேர்ந்த வலையபட்டி பச்சைக்காவடியின் வணக்கங்கள்.

பாதயாத்திரைப் பயணத்தின் நோக்கம்

இந்தியப் பெருநாட்டில் பிறந்த காரணத்தினால் இந்திய மக்களின் நலம் காக்கவும், நாட்டுக்கோட்டை நகரத்தார் நலம் காக்கவும், நகரத்தார் பெருமக்கள் அனைவரும் அனைத்து செல்வங்களும் பெற்று, வாழ்வில் வளம்பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, வலையபட்டி பச்சைக்காவடி அவர்கள் தென்னிந்திய திருத்தலமாம் இராமேஸ்வரத்தில் இருந்து இராமேஸ்வர இராமநாதசுவாமியும் பர்வதவர்த்தினி அம்மையாரும் வழி அனுப்பி வைக்க, வழித்துணையாக வருகின்ற வலையபட்டி மலையாண்டி விநாயகப் பெருமான், பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகப் பெருமான், குல தெய்வமாகிய ஆலத்துப்பட்டி அருள்மிகு சன்னாசி, கட்டுச் சோத்து கருப்பர், உளிவீர சுவாமி, ஆஞ்சநேயப்பெருமான் பஞ்சபூத பகவான்கள் அருள் ஆசியுடன் என்றென்றும் பச்சைக்காவடியை ஆளுகின்ற பழனிமலை முருகப்பெருமான், பூமிதேவித்தாயார், மார்க்கண்டேயப்பெருமான், ஒப்பில்லா ஒப்பிலியப்பன் பெருமாளும் உடன்வர, காசி விசுவநாதசுவாமியும் விசாலாட்சி அம்மையாரும், அன்னபூரணித் தாயாரும், காலபைரவரும் வரவேற்க, அகில உலகத்தையும் ஆளுகின்ற நாயகன், முழுமுதல் கடவுள் ஆனைமுகப் பெருமான் திருஅருளால் வட இந்தியத் திருத்தலமாம் காசி விசுவநாதர் கோயிலுக்கு பதினொன்றாவது முறையாக பாதயாத்திரை பயணத்தை மேற்கொண்டு உள்ளார்கள்.

வலையபட்டி நகரத்தார்களின் வாழ்த்துகள்

இறைத்தொண்டே எம் தொண்டு என்று நாளும் தொண்டாற்றி வரும் வலையபட்டி பச்சைக்காவடி அவர்கள் தனக்கென்று எவ்வித நோக்கமும் இன்றி தொடர்ந்து 12 ஆண்டுகள் மேற்கொள்ளும் இராமேஸ்வரம் காசி பாதயாத்திரை இனிதே நிறைவேற வேண்டும் என்று வலையபட்டி நகரத்தார்கள் ஆகிய நாங்கள் அனைவரும் வலையபட்டி பச்சைக்காவடி அவர்களுக்கு எங்களின் அன்பையும், நல்ஆசிகளையும் வழங்கி அவர்கள் எல்லா நலன்களையும் பெற்று பல ஆண்டுகள் வாழ வேண்டும் என்று ஆனைமுகக் கடவுள் வலையபட்டி மலையாண்டி விநாயகப் பெருமான் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறோம்.

இறைவழிபாடு தொடங்குதல்

பச்சைக்காவடியும், பாதயாத்திரை செல்லும் 21 பக்தர்களும் ஜெய வருடம் வைகாசி மாதம் 10 ஆம் தேதி 24-5-2014 சனிக்கிழமை காலை 7-00 மணி அளவில் மலையாண்டி கோயிலில் மலையாண்டி விநாயகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, திருவடிகளை வணங்கி அருள் ஆசி பெற்றுக் கொள்ளுதல். பகல் 11-00 மணிக்கு மேல் 1-00 மணிக்குள் வேன் மூலம் புறப்பட்டு வைரவன்பட்டி சென்று வைரவப்பெருமான் திருவடிகளை வணங்கி அருளாசி பெற்றுக்கொண்டு அன்று மாலை பிள்ளையார்பட்டி கற்பக விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து திருவடிகளை வணங்கி அருள் ஆசி பெற்று அன்று இரவு வைரவன்பட்டியில் தங்குதல். வைகாசி மாதம் 11 ஆம் தேதி 25-5-2014 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4-00 மணிக்கு வேன் மூலம் வைரவன்பட்டியிலிருந்து புறப்பட்டு, ஆலத்துப்பட்டி சென்று குல தெய்வமாகிய அருள்மிகு சன்னாசி, கட்டுச் சோத்துக்கருப்பர் உளிவீர சுவாமிகளின் திருவடிகளை வணங்கி அருள் ஆசி பெற்றுக் கொள்ளுதல். அன்று காலை 6-00 மணி அளவில் அங்கு இருந்து புறப்பட்டு மாலை 4-00 மணி அளவில் இராமேஸ்வரம் சென்று அடைதல். அன்று மாலை 6-00 மணிக்கு மேல் 7-00 மணிக்குள் இராமேஸ்வரம் இராமநாதசுவாமிக்கும் பர்வதவர்த்தினி அம்மையாருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து அம்மை அப்பனின் திருவடிகளை வணங்கி அருள் ஆசி பெற்றுக் கொள்ளுதல் காசியில் காசிவிசுவநாதர் விசாலாட்சி அம்மையாருக்கு அபிஷேகம் செய்வதற்காக கோடிதீர்த்தமும், கங்கையில் சேர்ப்பதற்காக கடல் மண்ணும் சேகரித்துக் கொள்ளுதல்.

இராமேஸ்வரம் காசி பாதயாத்திரை பயண விவரங்கள்

பச்சைக்காவடியும், பாதயாத்திரை செல்லும் 21 பக்தர்களும் ஜெய வருடம் வைகாசி மாதம் 12-ஆம் தேதி 26-5-2014 திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு மேல் 4-00 மணிக்குள் இராமேஸ்வரம் காசி புனிதப் பாதயாத்திரைப் பயணத்தை தொடங்குதல். 110 நாட்கள் 2464 கிலோமீட்டர் தூரம் பாதயாத்திரை செய்து ஜெய வருடம் ஆவணி மாதம் 27ஆம் தேதி 12-9-2014 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணிமுதல் 6-00 மணிக்குள் காசியில் நாட்டுக்கோட்டை செட்டியார் நகரச் சத்திரம் சென்று தங்குதல். ஜெய வருடம் ஆவணி மாதம் 28ஆம் தேதி 13-9-2014 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு மேல் 7-00 மணிக்குள் காசிவிசுவநாதர் கோயில் சென்று காசி விசுவநாதர் விசாலாட்சி அம்மையாருக்கு கோடி தீர்த்தத்தை அபிஷேகம் செய்து அம்மை அப்பனின் திருவடிகளை வணங்கி அன்னபூரணித் தாயாரையும், காலபைரவரையும் வணங்கி அருள் ஆசி பெற்று கடல் மண்ணை காசியில் கங்கையில் சேர்த்து இராமேஸ்வரம் காசி புனிதப் பாதயாத்திரையை நிறைவு செய்தல்.

14-9-2014 ஆவணி மாதம் 29 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் காசியில் இருந்து வேனில் புறப்பட்டு அலகாபாத் சென்று திரிவேணி சங்கமத்தில் தீர்த்தங்கள் ஆடி இறைவனை வணங்கி அருள் ஆசி பெற்று மறுபடியும் காசியில் வந்து தங்குதல்.12-9-2014 ஆவணி மாதம் 27-ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதல் 21-9-2014 புரட்டாசி மாதம் 5-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை 10 நாட்கள் காசியில் நாட்டுக் கோட்டை செட்டியார் நகரச் சத்திரத்தில் தங்குதல்.



முழுமுதல் கடவுள் ஆனை முகத்தான் அருள்

இந்தியப் பெருநாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலம் காக்க

நாட்டுக்கோட்டை நகரத்தார் நலம் காக்க

பதினொன்றாவது முறையாக

ஸ்ரீ வலையபட்டி ஸ்ரீ இராமேஸ்வரம் ஸ்ரீ காசி ஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின்

இராமேஸ்வரம் – காசி பாத யாத்திரை

பாதயாத்திரை பயணத்தின் மொத்த தூரம் **2464** கி.மீ. மொத்த நாட்கள் **110** மொத்த மாநிலங்கள் **6**

பாதயாத்திரை நாள் தோறும் அதிகாலை **3-00** மணிமுதல் காலை **10-00** மணி வரை

மாலை **3-00** மணி முதல் மாலை **6-00** மணி வரை

பாதயாத்திரை பயண விவரங்கள் - தமிழ்நாடு

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மதியம் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	மொத்த கி.மீ.
1.	26.5.2014	வைகாசி 12	திங்கள்	இராமேஸ்வரம்	3	ஏகாந்த ராமர் கோவில்	4	முருகன் கோவில் தங்கச்சி மடம்	7
2.	27.5.2014	வைகாசி 13	செவ்வாய்	முருகன் கோவில் தங்கச்சி மடம்	12	மண்டபம்	13	பாம்பன் சாமிகள் மடம் பிரப்பன் வலசை	25
3.	28.5.2014	வைகாசி 14	புதன்	பாம்பன் சாமிகள் மடம், பிரப்பன் வலசை	6+13	உச்சிப்புளி, ஆத்ம சாந்தி நிலையம், பனைக்குளம்	15	தேவிபட்டிணம்	34
4.	29.5.2014	வைகாசி 15	வியாழன்	தேவிபட்டிணம்	25	சனவேலி	13	சின்னக்கீரமங்கலம்	38
5.	30.5.2014	வைகாசி 16	வெள்ளி	சின்னக்கீரமங்கலம்	8	புளியால்	13	தேவகோட்டை	21
6.	31.5.2014	வைகாசி 17	சனி	தேவகோட்டையில் தங்குதல்					
7.	1.6.2014	வைகாசி 18	ஞாயிறு	தேவகோட்டை	11	அமராவதி புதூர்	5	காரைக்குடி	16
8.	2.6.2014	வைகாசி 19	திங்கள்	காரைக்குடி	9+3	ஒ.சிறுவயல், குன்றக்குடி, பிள்ளையார்பட்டி	1	வைரவன்பட்டி	13
9.	3.6.2014	வைகாசி 20	செவ்வாய்	வைரவன்பட்டி	8+4	கண்டவராயன்பட்டி, மகிபாலன்பட்டி	12+6	நெற்குப்பை வேந்தன்பட்டி, மேலைச்சிவபுரி,	30
10.	4.6.2014	வைகாசி 21	புதன்	மேலைச்சிவபுரி,	6	புதுப்பட்டி, பொன்னமவராவதி	1	வலையபட்டி	7
11.	5.6.2014	வைகாசி 22	வியாழன்	வலையபட்டியில் தங்குதல்					
12.	6.6.2014	வைகாசி 23	வெள்ளி	வலையபட்டி	15	கொப்பனாபட்டி, குழிபிறை, பனையப்பட்டி	9	நற்சாந்துபட்டி	24
13.	7.6.2014	வைகாசி 24	சனி	நற்சாந்துபட்டி	6	நமணசமுத்திரம்	10	புதுக்கோட்டை	16
14.	8.6.2014	வைகாசி 25	ஞாயிறு	புதுக்கோட்டை	16	நார்த்தாமலை	9	கீரனூர்	25
15.	9.6.2014	வைகாசி 26	திங்கள்	கீரனூர்	16	மாத்தூர்	11	திருச்சி	27
16.	10.6.2014	வைகாசி 27	செவ்வாய்	திருச்சியில் தங்குதல்					
17.	11.6.2014	வைகாசி 28	புதன்	திருச்சி	16	சமயபுரம்	8	நொச்சியம்	24
18.	12.6.2014	வைகாசி 29	வியாழன்	நொச்சியம்	15+7	குணசீலம், அய்யம்பாளையம்	10	முசிறி	32
19	13.6.2014	வைகாசி 30	வெள்ளி	முசிறி	10	தொட்டியம்	9	ஏலூர்ப்பட்டி	19
20	14.6.2014	வைகாசி 31	சனி	ஏலூர்ப்பட்டி	23	பார்வதி கல்யாண	16	லட்சுமி கல்யாண	39

பாதயாத்திரை பயண விவரங்கள் - தமிழ்நாடு தொடர்ச்சி

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மதியம் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	கி.மீ. 397
21.	15.6.2014	ஆனி 1	ஞாயிறு	லட்சுமி கல்யாண மண்டபம்	4	புதுச்சத்திரம்	10	சக்திபீடம், அண்டலூர் கேட்	14
22.	16.6.2014	ஆனி 2	திங்கள்	சக்திபீடம், அண்டலூர் கேட்	14	பொய்மான்கரடு	8	தெய்வீகம் கல்யாண மண்டபம், சேலம்	22
23.	17.6.2014	ஆனி 3	செவ்வாய்	சேலத்தில் தங்குதல்					
24.	18.6.2014	ஆனி 4	புதன்	சேலம்	14	ஓமலூர்	14	தீவட்டிப்பட்டி	28
25.	19.6.2014	ஆனி 5	வியாழன்	தீவட்டிப்பட்டி	12+15	தொப்பூர், நல்லம்பள்ளி	10	தர்மபுரி	37
26.	20.6.2014	ஆனி 6	வெள்ளி	தர்மபுரியில் தங்குதல்					
27.	21.6.2014	ஆனி 7	சனி	தர்மபுரி	21	காரிமங்கலம்	15	காவேரிபட்டிணம்	36
28.	22.6.2014	ஆனி 8	ஞாயிறு	காவேரிபட்டிணம்	12	கிருஷ்ணகிரி	13	குருபராபள்ளி	25
29.	23.6.2014	ஆனி 9	திங்கள்	குருபராபள்ளி	17	சூலகிரி,	9	காமன் தொட்டி	26
30.	24.6.2014	ஆனி 10	செவ்வாய்	காமன் தொட்டி	8	குமுதே பள்ளி	8	ஓசூர்	16
31.	25.6.2014	ஆனி 11	புதன்	ஓசூரில் தங்குதல்					

தமிழ்நாடு மொத்த நாட்கள் : 31 **மொத்த கிலோ மீட்டர்கள் : 601**

பாதயாத்திரை பயண விவரங்கள் - கர்நாடகம்

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	கர்நாடகம் பாதயாத்திரை நாள்	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மதியம் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	மொத்த கி.மீ.
32.	26.6.2014	ஆனி 12	வியாழன்	1	ஓசூர்	10+10	அத்திபெல்லி, வேமன்னா ஆசிரமம்	14+3	மடிவாளா, தாவரக்கரை	37
33.	27.6.2014	ஆனி 13	வெள்ளி	2	மடிவாளா, தாவரக்கரை	10	மேர்க்கிரி சர்க்கிள்	10	எலகங்கா ஐயப்பன் கோவில்	20
34.	28.6.2014	ஆனி 14	சனி	3	எலகங்கா ஐயப்பன் கோவிலில் தங்குதல்					
35.	29.6.2014	ஆனி 15	ஞாயிறு	4						
36.	30.6.2014	ஆனி 16	திங்கள்	5	எலகங்கா	10	சிக்கசாலா	11	தேவனஹள்ளி	21
37.	1.7.2014	ஆனி 17	செவ்வாய்	6	தேவனஹள்ளி	11	எலவாஹள்ளி	11	சிக்பலய்பூர்	22
38.	2.7.2014	ஆனி 18	புதன்	7	சிக்பலய்பூர்	7	ஹரசனஹள்ளி	11	பெரச்சந்திரா	18
39.	3.7.2014	ஆனி 19	வியாழன்	8	பெரச்சந்திரா	18	பரகோடு	6	பாகேபள்ளி	24

கர்நாடகம் மொத்த நாட்கள் : 8 **மொத்த கிலோ மீட்டர்கள் : 142**

பாதயாத்திரை பயண விவரங்கள் - ஆந்திரப் பிரதேசம்

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	ஆந்திரம் பாதயாத்திரை நாள்	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மதியம் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	மொத்த கி.மீ.
40.	4.7.2014	ஆனி 20	வெள்ளி	1	பாகேபள்ளி	15	கோட்டுரு	13	பாலசமுத்திரம்	28
41.	5.7.2014	ஆனி 21	சனி	2	பாலசமுத்திரம்	19	பெனுகொண்டா	13	குட்டுரு	32
42.	6.7.2014	ஆனி 22	ஞாயிறு	3	குட்டுரு	22	கங்கனபள்ளி	13	மரூரு	35
43.	7.7.2014	ஆனி 23	திங்கள்	4	மரூரு	15	அனந்தபூர் பைபாஸ், ராப்தாடு	11	சோமலதொட்டி ஆஞ்சநேயர்	26
44.	8.7.2014	ஆனி 24	செவ்வாய்	5	சோமலதொட்டி	14	கார்லடின்னா	13	பாமிடி	27
45.	9.7.2014	ஆனி 25	புதன்	6	பாமிடியில் தங்குதல்					
46.	10.7.2014	ஆனி 26	வியாழன்	7	பாமிடி	21	கூத்தி	6	சங்காலம்மா கோவில் பச்சபள்ளி	27
47.	11.7.2014	ஆனி 27	வெள்ளி	8	சங்காலம்மா கோவில் பச்சபள்ளி	12	பியாப்பள்ளி	9	ஏனுகாமேரி	21
48.	12.7.2014	ஆனி 28	சனி	9	ஏனுகாமேரி	11	ப.கொத்தபள்ளி	7	தத்தாத்ரேயர் கோவில் உடுமலப்பாடு	18
49.	13.7.2014	ஆனி 29	ஞாயிறு	10	தத்தாத்ரேயர் உடுமலப்பாடு	14	வெல்துருத்தி	13	உளிண்டகொண்டா	27
50.	14.7.2014	ஆனி 30	திங்கள்	11	உளிண்டகொண்டா	10	பெத்ததெருக்குரு	14	கர்நூல்பைபாஸ், சந்தோஷ் நகர்	24
51.	15.7.2014	ஆனி 31	செவ்வாய்	12	சந்தோஷ் நகர்	32	கோதண்டபுரம்	10	பீச்பள்ளி	42
52.	16.7.2014	ஆனி 32	புதன்	13	பீச்பள்ளியில் தங்குதல்					
53.	17.7.2014	ஆடி 1	வியாழன்	14	பீச்பள்ளி	15	மாலபள்ளி	6	வில்லியம்கொண்டா	21
54.	18.7.2014	ஆடி 2	வெள்ளி	15	வில்லியம்கொண்டா	12	கொத்தகோட்டா,	15	அட்டக்கல்	27
55.	19.7.2014	ஆடி 3	சனி	16	அட்டக்கல்	13	ஜனாம்பேட்	12	புத்பூர்	25
56.	20.7.2014	ஆடி 4	ஞாயிறு	17	புத்பூர்	14	ஜட்சேர்லா	10	ராஜ்பூர்	24
57.	21.7.2014	ஆடி 5	திங்கள்	18	ராஜ்பூர்	10+10	[illegible] நகர், [illegible] நகர்	8	[illegible]	28

பாதயாத்திரை பயண விவரங்கள் - ஆந்திரப் பிரதேசம் தொடர்ச்சி

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	[illegible]	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மற்றும் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	கி.மீ. 491
60.	24.7.2014	ஆடி 8	வியாழன்	21	செகந்திராபாத்தில் தங்குதல்					
61.	25.7.2014	ஆடி 9	வெள்ளி	22						
62.	26.7.2014	ஆடி 10	சனி	23	செகந்திராபாத்	27	மேட்சல்	2	அத்திவெல்லி	29
63.	27.7.2014	ஆடி 11	ஞாயிறு	24	அத்திவெல்லி	16	மனோகராபாட்	8	துப்ரான்	24
64.	28.7.2014	ஆடி 12	திங்கள்	25	துப்ரான்	15	வாடியராம்	10	நரசிங்கி	25
65.	29.7.2014	ஆடி 13	செவ்வாய்	26	நரசிங்கி	9	ராமாயம்பேட்	10	சித்தராமேஸ்வரம்	19
66.	30.7.2014	ஆடி 14	புதன்	27	சித்தராமேஸ்வரம்	20	காமரெட்டி	13	சதாசிவநகர்	33
67.	31.7.2014	ஆடி 15	வியாழன்	28	சதாசிவநகர்	21	திருமன்பள்ளி	10	ஆஞ்சநேயர், டிச்பள்ளி	31
68.	1.8.2014	ஆடி 16	வெள்ளி	29	ஆஞ்சநேயர், டிச்பள்ளி	24	மாமிடிபள்ளி	10	பால்கொண்டா	34
69.	2.8.2014	ஆடி 17	சனி	30	பால்கொண்டா	12	போச்சம்பாடு	10	கத்தால், ஐயப்பன்கோவில், நிர்மல்	22
70.	3.8.2014	ஆடி 18	ஞாயிறு	31	கத்தால், ஐயப்பன்கோவில், நிர்மல்	10	அனந்தபெட்	6	மேகண்டிகுட்டா	16
71.	4.8.2014	ஆடி 19	திங்கள்	32	மேகண்டிகுட்டா	21	நெரிடிகொண்டா	16	இச்சோடா	37
72.	5.8.2014	ஆடி 20	செவ்வாய்	33	இச்சோடா	14	கொடிகட்னூர்	12	மரவாலா, லெட்சுமி கல்யாண மண்டபம்	26
73.	6.8.2014	ஆடி 21	புதன்	34	மாவாலா, லெட்சுமி கல்யாண மண்டபத்தில் தங்குதல்					
74.	7.8.2014	ஆடி 22	வியாழன்	35	மரவாலா, லெட்சுமி கல்யாண மண்டபம்	25	பிம்பல்குடி	5	பாட்டன்பூரி, சாய்பாபா கோவில்	30

ஆந்திரபிரதேசம் மொத்த நாட்கள் : 35 மொத்த கிலோ மீட்டர்கள் : 817

பாதயாத்திரை பயண விவரங்கள் - மஹாராஷ்டிரம்

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	[illegible]	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மற்றும் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	கி.மீ.
75.	8.8.2014	ஆடி 23	வெள்ளி	1	பாட்டன்பூரி, பிம்பல்குடி	8	சோனா	12	கீளப்பூர்	20
76.	9.8.2014	ஆடி 24	சனி	2	கீளப்பூர்	4+17	பண்டர்கவுடா, கரஞ்சி	17	வாட்கி	38
77.	10.8.2014	ஆடி 25	ஞாயிறு	3	வாட்கி	18	வாட்னர்	11	குட்கி	29
78.	11.8.2014	ஆடி 26	திங்கள்	4	குட்கி	19	ஜாம்	13	கண்டளி	32
79.	12.8.2014	ஆடி 27	செவ்வாய்	5	கண்டளி	14	பாமினி	14	புட்டி பூரி	28
80.	13.8.2014	ஆடி 28	புதன்	6	புட்டி பூரி	13 11	காப்ரி R.S, நாக்பூர்	6	ஆனந்தநகர், நாக்பூர்	30
81.	14.8.2014	ஆடி 29	வியாழன்	7	நாக்பூரில் தங்குதல்					
82.	15.8.2014	ஆடி 30	வெள்ளி	8						
83.	16.8.2014	ஆடி 31	சனி	9	நாக்பூர்	24	கன்கான்	8	தும்ரிகார்டு	32
84.	17.8.2014	ஆவணி 1	ஞாயிறு	10	தும்ரிகார்டு	17	மொஹாரா	8	பயோனி	25
85.	18.8.2014	ஆவணி 2	திங்கள்	11	பயோனி	7	டீலோபார்	10	மோர்பட்டா	17

மஹாராஷ்டிரம் மொத்த நாட்கள் : 11 மொத்த கிலோ மீட்டர்கள் : 251

பாதயாத்திரை பயண விவரங்கள் - மத்தியபிரதேசம்

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	-	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழிமதியம் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	கி.மீ.
86.	19.8.2014	ஆவணி 3	செவ்வாய்	1	மோர்பட்டா	5	காவாசா	21	ருக்காடு	26
87.	20.8.2014	ஆவணி 4	புதன்	2	ருக்காடு	11	கோபால்கஞ்ச்	19	லோகபர்ணா	30
88.	21.8.2014	ஆவணி 5	வியாழன்	3	லோகபர்ணா	14	பண்டோல்	7	கோரக்பூர்	21
89.	22.8.2014	ஆவணி 6	வெள்ளி	4	கோரக்பூரில் தங்குதல்					
90.	23.8.2014	ஆவணி 7	சனி	5	கோரக்பூர்	11+16	சாப்ராகாட், கணேஷ்கஞ்ச்	5	மதை	32
91.	24.8.2014	ஆவணி 8	ஞாயிறு	6	மதை	6	லக்னடோன்	22	மௌகான்	28
92.	25.8.2014	ஆவணி 9	திங்கள்	7	மௌகான்	9	பங்கரை	15	சுக்கிரி	24
93.	26.8.2014	ஆவணி 10	செவ்வாய்	8	சுக்கிரி	22	மோஹை	5	நர்மதா தில்வாராகாட்	27
94.	27.8.2014	ஆவணி 11	புதன்	9	நர்மதா சில்வாராகாட்	22	ஜபல்பூர் பைபாஸ்	6	பனகர்	28

98.	31.8.2014	ஆவணி 15	ஞாயிறு	13	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
99.	1.9.2014	ஆவணி 16	திங்கள்	14	கட்னியில் தங்குதல்					
100.	2.9.2014	ஆவணி 17	செவ்வாய்	15	கட்னி	15+15	எக்கரவாரா, பகாரியா	10	அம்தாரா	40
101.	3.9.2014	ஆவணி 18	புதன்	16	அம்தாரா	14	குசண்டி	13	மைஹார்	27
102.	4.9.2014	ஆவணி 19	வியாழன்	17	மைஹார்	21	பராகியா, அமர்பட்டான்	19	மொகாரி கட்ரா	40
103.	5.9.2014	ஆவணி 20	வெள்ளி	18	மொகாரி கட்ரா	13	ரீவாதீன்தயாள்தாம்	19	சல்பத்ரி ஆசிரமம்	32
104.	6.9.2014	ஆவணி 21	சனி	19	சல்பத்ரி ஆசிரமம்	16	மங்காவான்	12	ரகுநாத் கஞ்ச்	28
105.	7.9.2014	ஆவணி 22	ஞாயிறு	20	ரகுநாத் கஞ்ச்	16	பன்னி	8	மௌகஞ்ச்	24
106.	8.9.2014	ஆவணி 23	திங்கள்	21	மௌகஞ்ச்	22	மசூரியா	6	ஹனுமானா	28

மத்தியப் பிரதேசம் மொத்த நாட்கள் : 21 மொத்த கிலோ மீட்டர்கள் : 511

பாதயாத்திரை பயண விவரங்கள் - உத்திரப்பிரதேசம்

மொத்த நாட்கள்	தேதி	தமிழ் தேதி	கிழமை	உத்திர பிரதேசம் பாதயாத்திரை நாள்	புறப்படும் இடம்	கி.மீ.	போகும் வழி மதியம் தங்கும் இடம்	கி.மீ.	போய் சேரும் இடம்	மொத்த கி.மீ.
107.	9.9.2014	ஆவணி 24	செவ்வாய்	1	ஹனுமானா	17+13	தூர்மாண்ட் கஞ்ச், பரோதா	6	லால் கஞ்ச்.செண்பதுபள்ளி	36
108.	10.9.2014	ஆவணி 25	புதன்	2	லால் கஞ்ச், செண்பதுபள்ளி	17	லஹரான்பூர்	11	சமோகரா	28
109.	11.9.2014	ஆவணி 26	வியாழன்	3	சமோகரா	7+12	மிர்சாபூர், மோகன்பூர்	21	சுனார்	40
110.	12.9.2014	ஆவணி 27	வெள்ளி	4	சுனார்	16+9	கைலாகாட் ராம்நகர் மேம்பாலம்	5+8	பனாரஸ் யுனிவர்சிட்டி காசிவிஸ்வநாதர் கோவில் வாரணாசி	38

உத்திரப் பிரதேசம் மொத்த நாட்கள் : 4 மொத்த கிலோ மீட்டர்கள் : 142

நாமக்கல் முதல் காசி வரை தேசிய நெடுஞ்சாலை எண் 7 (ஏழு) (NATIONAL HIGHWAY -7) வழியாக செல்கிறோம்

மாநிலத்தின் பெயர்கள்	பாதயாத்திரை தொடங்கும் தேதி, தமிழ், ஆங்கிலம்	பாதயாத்திரை நிறைவு பெறும் தேதி, தமிழ், ஆங்கிலம்	பாதயாத்திரையின் மொத்த நாட்கள்	பாதயாத்திரையின் மொத்த கிலோமீட்டர்கள்
1. தமிழ்நாடு	ஜய வருடம் வைகாசி மாதம் 12ஆம் தேதி 26-5-2014	ஜய வருடம் ஆனி மாதம் 11ஆம் தேதி 25-6-2014	31	601
2. கர்நாடகம்	ஜய வருடம் ஆனி மாதம் 12ஆம் தேதி 26-6-2014	ஜய வருடம் ஆனி மாதம் 19ஆம் தேதி 3-7-2014	8	142
3. ஆந்திரப்பிரதேசம்	ஜய வருடம் ஆனி மாதம் 20ஆம் தேதி 4-7-2014	ஜய வருடம் ஆடி மாதம் 22ஆம் தேதி 7-8-2014	35	817
4. மஹாராஷ்டிரம்	ஜய வருடம் ஆடி மாதம் 23 ஆம் தேதி 8-8-2014	ஜய வருடம் ஆவணி மாதம் 2 ஆம் தேதி 18-8-2014	11	251
5. மத்தியப்பிரதேசம்	ஜய வருடம் ஆவணி மாதம் 3ஆம் தேதி 19-8-2014	ஜய வருடம் ஆவணி மாதம் 23 ஆம் தேதி 8-9-2014	21	511
6. உத்திரப்பிரதேசம்	ஜய வருடம் ஆவணி மாதம் 24ஆம் தேதி 9-9-2014	ஜய வருடம் ஆவணி மாதம் 27ஆம் தேதி 12-9-2014	4	142
மொத்த பயண நாட்கள் = 110		மொத்த கிலோ மீட்டர்கள் 2464	110	2464

விவரங்களுக்கு : பச்சைக்காவடி வலையபட்டி - 622 411, புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு.

போன் : 04333-260260, செல் : 9787872121

பாதயாத்திரை பயணத்திற்கும், அன்னதானத்திற்கும் நன்கொடை வழங்கும் மெய் அன்பர்கள்

தாங்களும், பச்சைக்காவடிக்கு டிராப்ட் அனுப்பவும் அல்லது பணம் கட்டவும் வேண்டிய விவரங்கள்

STATE BANK OF INDIA, Ponnamaravathy Branch : IFSC Code No.SBIN0005132

V.S. BATCHAI KAVADI - Account No : 20043882595

Ph : 04333-260260, Cell : 9787872121

நன்கொடையாளர்கள்

இராமேசுவரம் - காசி பாதயாத்திரை சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற உயர்ந்த நல்ல எண்ணத்துடன் மனம் உவந்து பலரும் குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் நன்கொடை அளிக்கின்றனர். அன்னதான வண்டி, டீசல் செலவு, ஓட்டுநர் ஊதியம், சமையல்காரர் ஊதியம், பால், அரிசி, பருப்பு, பலசரக்கு, யாத்திரிகர்களுக்கு வேட்டி, சட்டை, துண்டு, போர்வை, ஜமுக்காளம், பாய், குடை, டார்ச் லைட், பிரம்பு, தண்ணீர் பாட்டில், சோப்பு, எண்ணெய், மூட்டுவலித் தைலம், நடையன் (செருப்பு) எனப் பல்வேறு பொருட்களையும் உபயமாக வழங்குகின்றனர்.



பாதயாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்குதல் - நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள் அனைவராலும், பச்சைக்காவடியுடன் அனைத்து பாதயாத்திரைகளிலும் கலந்துகொண்ட மெய்யன்பர்கள் அனைவராலும், இராமேசுவரம்-காசி பாதயாத்திரை முழுவதும் அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும் அன்னதானச் சமையல் செய்யும் அன்பர்கள் அனைவருக்கும் சம்பளமும் வழங்கப்படுகிறது. PL.A. குடும்பத்தார் அவர்கள் வழங்கும் அன்னதான வாகனத்தில் சமையல் செய்யும் நளபாக அன்பர்கள் மூன்று பேர் அமர்ந்து வர, அவர்களுடன் அடுப்பும் எரிவாயு சிலிண்டர்களும் அன்னதான வாகனத்தில் இருந்து வர, யாத்திரை முழுவதும் அன்னதானம் அமுதசுரபி போல் ஆனைமுகத்தான் அருளால் நடைபெறுகிறது.



அன்னம் பாலித்தல்

ஜெய வருடம் வைகாசி 9 (23.05.2014) வெள்ளிக் கிழமை மாலை நேரத்தில் யாத்திரிகள் அனைவரும் குருசாமி பச்சைக்காவடி அவர்களது வீட்டில் ஒன்றாகக் கூடினோம். அன்று இரவுமுதல், ஆவணி 27 (12.09.2014) வெள்ளிக்கிழமை அன்று காசியில் பாதயாத்திரை நிறைவடையும் நாள் முடிய 112 நாட்களும், (1) அதிகாலையில் எழுந்து நித்திய வழிபாடு முடிவடைந்தவுடன் ரொட்டியும் ஹார்லிக்சும், (2) காலை 6.30 மணியளவில் ரொட்டியும் தேநீரும், (3) காலை 8.30 மணியளவில் பலகாரம் (இட்லி, ஊத்தப்பம், உப்புமா, பொங்கல் இவற்றில் ஏதேனும் இரண்டு பலகாரங்கள்), (4) மதியம் இரண்டுவகைக் காய்கறிகளுடன் சாம்பார் ரசம் மோர் ஊறுகாயுடன் புழுங்கலரிசிச் சாதம், (5) மாலை 5.00 மணியளவில் ரொட்டியும் தேநீரும், (6) இரவு பலகாரம் (இட்லி, ஊத்தப்பம், உப்புமா, சப்பாத்தி இதில் ஏதேனும் ஒன்று) (7) இது தவிர காலைநேரத்தில் நெடுந்தூரம் நடந்த நாட்களில் காலை பகல் 11.00 மணியளவில் காய்கறி - சூப் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையும் உணவிற்கு முன், வழிபடு தெய்வங்களையும், வழித்துணையாக வருகின்றன தெய்வங்களையும் பஞ்சபூதங்களையும் வணங்கி அரோஹரா சொல்லப்படும். நிறைவாக, “பாதயாத்திரைப் பயணத்திற்கும், அன்னதானத்திற்கும் நன்கொடைகள் வழங்கியோர் விநாயகப்பெருமானின் திருவருளால் பதினாறு செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டுகள் வாழ வேண்டும்” என்று விநாயகப்பெருமான் திருவடிகளை வணங்கி, வலையபட்டி சித்தர் பச்சைக்காவடி ஐயா அவர்கள் வேண்டிக் கொள்வார். 112 நாட்களும் 6 வேளையும் தவறாமல் சிறப்பாக உணவு வழங்கப்பட்டது. அரோஹரா சொல்லும் நேரத்தில் வழிப்போக்கர்கள் வேறு யாரேனும் வந்து நின்றால் அவர்களுக்கும் யாத்திரிகர்களுக்கு வழங்கும் அதே உணவைக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் வழங்கினார். “ஒரே ரொட்டியைத் தினமும் மூன்று வேளை தின்று திகட்டிவிட்டது” என்று யாத்திரிகர் ஒருவர் சொல்ல, மறுநாளே குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பல்வேறு ருசிகளில் உயர்தரமான ரொட்டிகளை வாங்கிக் கொடுத்தார்.



அன்னதான வாகனம் வழங்குதல்	PL.A.சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் , திருச்சி.
அன்னதான வாகனத்திற்கு டீசல் முழுவதும் வழங்குதல்	PL.A.கனகு என்ற பழனியப்ப செட்டியார் அவர்கள், திருச்சி
அன்னதான வாகனத்திற்கு டிரைவர், கிளீனர் சம்பளம் வழங்குதல்	PL.A.சிதம்பரம் செட்டியார் அவர்கள், தஞ்சாவூர்
ஜமுக்காளம் போர்வை வழங்குதல்	V.வள்ளியப்பன் செட்டியார் அவர்கள் சிவகாசி ஸ்ரீ கற்பக விநாயகர் பேப்பர்ஸ் உரிமையாளர்
டிபன், சாப்பாடு பேப்பர் பிளேட் வழங்குதல்	A.சின்னையா அவர்கள் சிவனடியான் & கோ புதுக்கோட்டை
டிபன், சாப்பாடு பேப்பர் பிளேட் வழங்குதல்	R.சேகர் அவர்கள் குழிபிறை
டீ, காபி பேப்பர்கப் வழங்குதல்	PL.பசுபதி அவர்கள் துர்கா பிளாஸ்டிக், புதுக்கோட்டை
டீ, காபி பேப்பர்கப் வழங்குதல்	N.பொன்னையா அவர்கள் நாகப்பா ஏஜென்சீஸ், திருச்சி
சமையல் ரீபைண்ட் ஆயில் வழங்குதல்	K.செந்தில்வேல் இன்சினியர் அவர்கள், நற்சாந்துபட்டி
நல்லெண்ணெய் வழங்குதல்	A.காசி அவர்கள் நற்சாந்துப்பட்டி,
நல்லெண்ணெய் வழங்குதல்	SP.கோபு, அவர்கள் காதிவஸ்திராலயம், புதுக்கோட்டை
சர்க்கரை, துவரம்பருப்பு வழங்குதல்	VN.S.ஆண்டியப்பன் அவர்கள் திருச்சி, சோனா,மீனா தியேட்டர் உரிமையாளர்
டார்ச் லைட் வழங்குதல்	L.செல்லப்பன் அவர்கள், கண்டனூர், சென்னை
பால் பவுடர் வழங்குதல்	பழனி பாதயாத்திரைக் குழு அன்பர்கள் தேவகோட்டை
பால் பவுடர் வழங்குதல்	T.C.B.ரவிச்சந்திரன், இன்ஜினியர் அவர்கள், திருச்சி
பெரிய பை வழங்குதல்	G.கணேஷ் பாபு அவர்கள் சன்லைட் ஏஜென்சீஸ், திருப்பூர்
இரண்டு சிறிய பை வழங்குதல்	RM.இளங்கோ அவர்கள், N.சுந்தரேசன் அவர்கள், ஸ்ரீ கோட்ஸ் இண்டஸ்ட்ரீஸ், கோவை
	G.குழந்தைவேலு அவர்கள் Euro Process Company
	R.சத்திய நாராயணன் அவர்கள் Rayon Engineer
பச்சை கவர் வழங்குதல்	V.சேகர் அவர்கள் ஸ்ரீ குமரன் பேப்பர்ஸ், சிவகாசி
பாதயாத்திரைக்கு ஒரு பகுதி அரிசி வழங்குதல்	B.ஹரி அசோக் அவர்கள், காசி ஸ்ரீ PR.லெட்சுமணன் அவர்கள் அசோகா பேப்பர், கோவை,
	S.வைரவன் அவர்கள், மினர்வா கிளாஸ் ஹவுஸ், கோவை

பாதயாத்திரைக்கு ஒரு பகுதி அரிசி வழங்குதல்	AR.சுப்பிரமணியன் அவர்கள், வலையபட்டி
பாதயாத்திரைக்கு ஒரு பகுதி அரிசி வழங்குதல்	SY.பழனியப்பன் அவர்கள், ஞானம் காட்டன், காரைக்குடி. Y.கார்த்திகேயன் அவர்கள், அப்பலோ செட்டி லாக்கர், மதுரை.
குடை வழங்குதல்	S.ராமநாதன் அவர்கள், குழிபிறை SP.பழனியப்பன் அவர்கள், திருச்சி, வளத்தி Chit Fund Pvt.Ltd
காய்கறி வழங்குதல் 10 நாட்களுக்கு	PV.கணேசன் அவர்கள், தேவகோட்டை
உளுந்தம் பருப்பு வழங்குதல்	K.சொக்கலிங்கம் அவர்கள், சொர்ணகணபதி டிரேடர்ஸ் அண்டு அன்னம் ஏஜென்சிஸ், ஈரோடு (கண்டவராயன்பட்டி)
துவரம் பருப்பு வழங்குதல்	K.ஆறுமுகம் அவர்கள், அமர்ஜோதி டைப்ஸ் அண்டு எலக்ட்ரிகல்ஸ், கரூர் (கண்டவராயன்பட்டி)
தமிழ் பிரிண்டிங் வழங்குதல்.	SV. சாத்தப்பன், அவர்கள், தென்னூர் பிரிண்டர்ஸ், திருச்சி
பாதயாத்திரை சாமிகள் அனைவருக்கும் சட்டை, வேஷ்டி ,துண்டு வழங்குதல்.	சிங்கப்பூர் நகரத்தார் அன்பர்கள்
பாதயாத்திரை சாமிகள் அனைவருக்கும் *காசி - இராமேசுவரம்* இரயில் டிக்கெட் வழங்குதல்	காசி. ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள், காரைக்குடி S. ராமசாமி அவர்கள், காரைக்குடி S. அழகப்பன் அவர்கள், காரைக்குடி
பாதயாத்திரை அழைப்பிதழ்களுக்கு பேப்பர் வழங்குதல்	M.ஏகப்பன் அவர்கள், முத்துராமன் அன் சன்ஸ் ஏஜென்சிஸ், சென்னை
பாதயாத்திரைக்கு முதல் பகுதி அரிசி வழங்குதல்	காசி. ஸ்ரீ M.மெய்யப்பன் அவர்கள், காரைக்குடி. காசி. ஸ்ரீ K.தட்சிணாமூர்த்தி (எ) ராமு அவர்கள், காரைக்குடி.

முழுமுதல் கடவுள் ஆனைமுகத்தான் அருளால் தாங்களும் தங்கள் குடும்பத்தார் அனைவரும் எல்லா செல்வங்களும் பெற்று, எல்லா நலன்களும் பெற்று பல ஆண்டுகள் வாழ வேண்டும் என்று ஆனைமுகத்தான் திருவடிகளை வணங்கி தங்கள் அனைவரையும் வாழ்த்தும் பச்சைக்காவடி.

பாதயாத்திரை பயணத்திற்கும், அன்னதானத்திற்கும் நன்கொடை வழங்கும் மெய் அன்பர்கள் தாங்களும், பச்சைக்காவடிக்கு டிராப்ட் அனுப்பவும் அல்லது பணம் கட்டவும் வேண்டிய விவரங்கள்

INDIAN OVERSEAS BANK Pon - pudupatti : IFSC Code No.IOBA0000073
BATCHAI KAVADI - Account No : 007301000077777

PANDIAN GRAMA BANK,Valayapatti : IFSC Code No.IOBAOPGB001
BATCHAI KAVADI - Account No : 527001000007777

தென்னூர் பிரிண்டர்ஸ், திருச்சி-17. போன் : 27917


யாத்திரிகர்கள் அறிமுகம் ***: --*** பாதயாத்திரை வரும் ஒவ்வொரு வருக்கும் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் வரிசைஎண் வழங்கினார்கள். குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்கு 1ஆம் எண். மற்ற யாத்திரிகர்களின் **வயதுமூப்பின்** அடிப்படையில் வரிசைப்படுத்தி வரிசை எண் வழங்கப்பட்டது. மிகவும் மூத்தவரான **மதுரை** திரு. கந்தசாமி ஐயா அவர்களுக்கு 2ஆம் எண். மிகவும் இளையவரான ஆந்திரா திரு. சிவப்பா அவர்களுக்கு 21 ஆம் எண்.

வரிசை எண் 2.



மதுரை திரு A.கந்தசாமி, வயது 74; கைப்பேசி எண்:- 9600807115; மதுரைக்காரர் என்ற காரணத்தினால் “மதுரை வீரன்” என்று அழைக்கப்பட்டார். நடைவேகம் அதிகம். ஒண்டிப்புலியாக பல முறை ஐயப்பன் கோயிலுக்குச் சென்று வந்தவர்.

வரிசை எண் 3.




புதுக்கோட்டை **திரு** SP SN மாதவன், வயது 70; கைப்பேசி எண்:- 9363073151; அமைதியானவர். நடைவேகம் அதிகம். குருசாமிக்குப் பிடித்தமானவர்.

வரிசை எண் 4.



காரைக்குடி திரு SP சின்னகருப்பன், வயது 69; கைப்பேசி எண்;- 9442043558; காரைக்குடி புதுவயலைச் சேர்ந்தவர். திருக்கயிலாயம் சென்று தரிசித்து வந்தவர். திருத்தணி பாதயாத்திரை குழு பொறுப்பாளர்களில் ஒருவர்.

வரிசை எண் 5.



திருச்சிராப்பள்ளி திருவெறும்பூர் திரு R.அங்கமுத்து, வயது 68; கைப்பேசி எண்:- 9677693903; திருச்சி திருவெறும்பூரைச் சேர்ந்தவர். BHEL இல் வேலை பார்த்து

ஓய்வு பெற்றவர். திருக்கைலாயம் சென்று வந்தவர். பஞ்சபூத தலங்களுக்கும் பாதயாத்திரை சென்றுள்ளார். பழனி பாதயாத்திரை செல்பவர். குருசாமியுடன் நான்கு முறை இராமேசுவரம் காசி பாதயாத்திரை சென்றுள்ளார்.

வரிசை எண் 6.



இராமநாதபுரம் திரு K.தாமோதரன், வயது 68; கைப்பேசி எண்:- 9629786318; ஸ்ரீ ஐயப்ப பக்தர், முருக பக்தர். பாம்பன் சுவாமிகளிடம் மிகுந்த பக்தி உடையவர்.

வரிசை எண் 7



திருச்சிராப்பள்ளி திருவெறும்பூர் திரு கோ. சண்முகவேலு, வயது 67; கைப்பேசி எண்:- 9842467140; கும்பகோணம். வசிப்பது திருச்சி திருவெறும்பூர். திருச்சி

வானொலியில் இந்தப் பாதயாத்திரையைச் செய்தியாக வர ஏற்பாடு செய்தார். பக்திமான். நடைவேகம் உள்ளவர்.

வரிசை எண் 8.



காரைக்குடி ஓ.சிறுவயல் திரு M.செந்தில் நாதன், வயது 67; கைப்பேசி எண்:- 8754935130; இவர் திரு.மெய்யப்பன் (வரிசை எண் 12) அவர்களின் அண்ணன் ஆவார். நடைவேகம் உள்ளவர்.

வரிசை எண் 9.



பரமக்குடி திரு M. பஞ்ச வர்ணம், வயது 67; விவசாயி. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகேயுள்ள கிராமம் இவரது ஊர். சிறந்த முருக பக்தர்.

வரிசை எண் 10.



திருவெறும்பூர் காட்டூர் திரு A. கலியபெருமாள், வயது 66; கைப்பேசி எண்:- 9944627793; குருசாமியால் இந்திமேன் (Hindi man) என்றும் அழைக்கப்பட்டார். நடைவேகம் அதிகம். நிறைய படித்தவர். தினசரி வாழ்வில் சொல்ல வேண்டிய மந்திரங்கள் திருமுறைகள் என்ற தலைப்பில் புத்தகம் எழுதியுள்ளார்.

வரிசை எண் 11.




பரமக்குடி திரு S. கந்தசாமி(Health Dept), வயது 64; கைப்பேசி எண்:- 9486965866; ஸ்ரீ ஐயப்ப பக்தர். சபரிமலை யாத்திரை குருசாமி, முருக பக்தர். ஐயப்பன் முருகன் பக்திப் பாடல்களை நன்றாகப் பாடுபவர்.

வரிசை எண் 12.



காரைக்குடி ஓ.சிறுவயல் திரு M.மெய்யப்பன், வயது 62; கைப்பேசி எண்:- 8012510044; சிதம்பரத்தில் மருந்துக்கடை வைத்து நடத்துகிறார். கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களைத் தொகுத்துச் சங்கத் தமிழ்ப்பாடல்களுடன் ஒப்பிட்டுப் பேசுவார்.

வரிசை எண் 13.



திருநெல்வேலி திரு S . நம்பிராஜன், வயது 59; கைப்பேசி எண்:- 9367712997- புட்டபர்த்தி சாய்பாபாவின் அதிதீவிர பக்தர். ஆயுள்காப்பீட்டு நிறுவன முகவர்.

வரிசை எண் 14.



புதுக்கோட்டை திரு N. சுப்பிரமணியன், வயது 61; கைப்பேசி எண்:- 9942143856 & 6380373168; வங்கி அதிகாரி. பணி ஓய்வு.

வரிசை எண் 15.



சென்னை திரு மோகன் என்ற KT பெரியகருப்பன், வயது 58; கைப்பேசி எண்:- 9962511955; அரிமளம் நகரத்தார்.

வரிசை எண் 16.



சென்னை திரு D. தனசேகரன், வயது 58; கைப்பேசி எண்:- 9789804200 & 8680840587; நடைவேகம் அதிகம். தெலுங்கு இந்தி தெரிந்தவர். தங்கும் இடங்களில் யாத்திரிகர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்தார். 'சகலகலா வல்லவன்' என்று குருசாமியிடம் பெயர் வாங்கியவர். RSS தொண்டர். பக்திப்பாடல்களைப் பாடுவார்.

வரிசை எண் 17.



பாண்டிச்சேரி திரு தொப்பை @ கலியபெருமாள், வயது 58; கைப்பேசி எண்:- 9944063120; பாண்டிச்சேரி மடுகரையைச் சேர்ந்தவர். அரசு அலுவலர், விவசாயம்

செய்பவர். யாத்திரையின் போது மிகவும் கடினமான வேலைகளைச் செய்து மிகவும் உதவியாக இருந்தார்.

வரிசை எண் 18.



சிவகங்கை மாவட்டம், கோட்டையூர் முனைவர் கி. காளைராஜன், வயது 57; கைப்பேசி எண்:- 9443501912 & 8248266418; அழகப்பா பல்கலைக்கழகத்தில் துணைப்பதிவாளராகப் பணியாற்றியவர். திருப்பூவணக்காசி, திருப்பூவணப் புராணம், காளையார்கோயில் புராணம், அழகர்கோயில் சித்திரைத்திருவிழா ஏடு, காஞ்சிவனக்கருப்பணசாமி முதலான புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.


வரிசை எண் 19.



தருமபுரி மாவட்டம், பாலக்கோடு திரு K. சரவணன், வயது 35; கைப்பேசி எண்:- 9444989113; கோயில் பூசை, கும்பாபிஷேகம் நடத்துவார். வள்ளலார் பக்தர். குருசாமியின் அனுக்கத் தொண்டர். அன்னதானவண்டியைப் பூட்டிப் பாதுகாப்பது, அதிலிருந்து பொருட்களை எடுத்துக் கொடுப்பது, முதலான எல்லா வேலைகளையும் செய்தார். யாத்திரை முடிந்து திரும்பும் போது குருசாமியுடன் அன்னதானவண்டியில் காசியிலிருந்து இராமேசுவரம் வந்தார்.

வரிசை எண் 20. கடைசி நேரத்தில் இவரால் யாத்திரையில் கலந்துகொள்ள இயலாமல் போனது.

வரிசை எண் 21.



ஆந்திரா மாநிலம், அனந்தப்பூர் திரு K. சிவப்பா, வயது 25; கைப்பேசி எண்:- 09440480518. எல்லோருக்கும் பிடித்தமானவர். அன்னதானவண்டியில் பொருட்களை ஏற்றுவது இறக்குவது போன்ற பணிகளைச் செய்தார். மிகுந்த பக்திமான். ஆந்திராவில் கிராமத்தில் கோயில் கட்டிப் பூசை செய்து வருகிறார்.

சமையல் கலைஞர்கள் ,



1) சிவகங்கை மாவட்டம், ஆத்திரப்பட்டி கிராமம் T. கருப்பையா (வயது 33),
2) கீழச்சிவல்பட்டி RM. செல்வம் (வயது 28),
3) ஆத்திரப்பட்டி கிராமம் S.அழகுமணி (வயது 23).

அன்னதான வாகன ஓட்டுநர் சேலம் அழகாபுரம் செல்வம்.

இராமேசுவரம் - காசி பாதயாத்திரை
குருசாமி அவர்களின் வீட்டில் ஒன்று கூடுதல்

வைகாசி 6 (20.05.2014) செவ்வாய்க் கிழமை

இன்று காலை கோட்டையூரில் உள்ள எனது வீட்டிலிருந்து குருசாமி அவர்களது வீட்டிற்குப் பயணமானேன். கோட்டையூர் – காரைக்குடி – திருப்பத்தூர் – பொன்னமராவதி. பொன்னமராவதி பேருந்து நிலையத்தில் இறங்கி ஆட்டோ ஓட்டுனரிடம் குருசாமி பச்சைக்காவடி வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று கூறியவுடன், "காசி யாத்திரையா? சாமி" என்றார். ஆமாம் என்றேன். சிறிது நேரத்தில் அவரது இல்லத்தினை அடைந்து விட்டேன். குருசாமி அவர்களிடம் என்னை அறிமுகம் செய்துகொண்டேன். அப்பொழுது பாலக்கோடு திரு.சரவணன் அவர்களும் குருசாமியைக் காண வந்திருந்தார். ஐயப்பன்கோயில் யாத்திரை சென்றுவிட்டு நேரடியாக இங்கே வருவதாகக் கூறினார். நானும் அவரும் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொண்டு நண்பர்களானோம்.

குருசாமி அவர்கள் யாத்திரையின் நோக்கம், பயணத்திட்டம், யாத்திரையின்போது வழிபாடு செய்ய வேண்டிய போற்றி அகவல் மற்றும் பலவற்றையும் எங்களிடம் கொடுத்து ஆசி வழங்கினார். கட்டிய வேட்டி சட்டையுடன் வைகாசி 9 வெள்ளிக்கிழமை மாலை மீண்டும் வருமாறு கூறினார். அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நானும் பாலக்கோடு சரவணன் அவர்களும் பொன்னமராவதி பேருந்துநிலையம் வந்தடைந்து அவரவர் இல்லத்திற்குப் பயணமானோம்.

வைகாசி 7 (21.05.2014) புதன் கிழமை *காசி பாதயாத்திரைக்காக இன்று குலதெய்வ வழிபாடு செய்து கொண்டு, திருப்பூவணம் சென்று அம்மா அண்ணன் தம்பி தங்கை குடும்பத்தினரிடம் தெரிவித்துக் கொண்டு, திருக்கோயிலுக்குச் சென்று அருள்மிகு திருப்பூவணன், மின்னாள் வழிபாடு செய்துகொண்டேன். பின்னர் மானாமதுரை வேதியாரேந்தல்விலக்கு சென்று அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவியை வழிபாடு செய்துகொண்டேன். சுவாமிஜி அவர்கள் எலுமிச்சை பழம் ஒன்றைக் கையில் கொடுத்து யாத்திரையின் போது மடியில் கட்டி வைத்துக் கொள்ளுமாறு கூறி ஆசிர்வதித்தார்கள்..*

வைகாசி 8 (22.05.2014) வியாழக் கிழமை *காசி பாதயாத்திரைக்காக இன்று கோட்டையூர் அருள்மிகு சொற்கேட்ட விநாயகர் வழிபாடு. கோட்டையூர்-வேலங்குடி அருள்மிகு காமாட்சி உடனாய கண்டீசுவரர் வழிபாடு. கோட்டையூர் அருள்மிகு மீனாட்சி உடனாய சோமசுந்தரேசுவரர் வழிபாடு.*

அலுவலக நண்பர்கள் மற்றும் வீட்டின் அருகில் உள்ள நண்பர்கள் இவர்களிடம் பாதயாத்திரைக்காகச் சொல்லிக்கொண்டு பயணத்திற்குத் தயார் ஆனேன்.

வைகாசி 9 (23.05.2014) வெள்ளிக் கிழமை புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வலையபட்டியைச் சேர்ந்த குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் காசியாத்திரை செல்லும் யாத்திரிகர்களை (கட்டிய வேட்டி சட்டையுடன் மட்டும்) அவரது இல்லத்திற்கு இன்று மாலை வரும்படி தொலைபேசியில் கூறியிருந்தார். அதன்படி இன்று மதியம் சாப்பாட்டிற்குப் பின்னர் வீட்டிலிருந்து

புறப்பட்டு பேருந்தில் பயணித்து மாலைநேரத்தில் பொன்னமராவதி பேருந்து நிலையம் சென்று சேர்ந்தேன். அங்கே காசிஸ்ரீ அங்கமுத்து அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டு குருசாமி பச்சைக்காவடி அவர்களது வீட்டிற்குச் சென்று சேர்ந்தோம். மற்றபிற யாத்திரிகர்களும் அங்கே வந்து சேர்ந்திருந்தனர். யாத்திரிகர்கள் 20 பேரும் ஒருவரை யொருவர் அறிமுகம் செய்து கொண்டோம்.

வைகாசி 10 (24.05.2014) சனிக்கிழமை இன்று காலை குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்களை அழைத்துக் கொண்டு அவரது வீட்டில் இருந்து புறப்பட்டு பொன்னமராவதி வலையபட்டி அருள்மிகு மலையாண்டி கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.



கோயிலுக்குச் செல்லும் வழியில் சிறுவன் ஒருவனுக்கு மிட்டாய் ரொட்டி கொடுத்து அந்தச் சிறுவனைக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ஆசிர்வதித்தார்.



பொன்னமராவதி வலையபட்டி அருள்மிகு மலையாண்டி விநாயகர், அருள்மிகு மலையாண்டிசுவாமி வழிபாடு. அருள்மிகு வரதராஜப் பெருமாள் வழிபாடு. அருள்மிகு முனீசுவரர் வழிபாடு. வழிபாடு முடிந்தவுடன் குருசாமி அவர்கள் யாத்திரிகர் அனைவரும் ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார்.







மலையாண்டி கோயிலில் இருந்து புறப்பட்டு ஆலத்துப்பட்டி கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தோம். பின்னர் அருள்மிகு வைரவன்கோயில் வழிபாடு.

மாலை நேரத்தில் பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பகவிநாயகர் அபிஷேகம் வழிபாடு. இரவு வைரவன்பட்டி நகரத்தார் விடுதியில் தங்கினோம்.

வைகாசி 11 (25.05.2014) ஞாயிற்றுக் கிழமை வைரவன்பட்டியில் இருந்து புறப்பட்டு தேவகோட்டை வந்து சேர்ந்தோம். *தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் முதல்வர் அவர்கள் 25.05.2014 பகல் 11.30 மணிக்கு வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றார்.*



தேவகோட்டையில் இருந்து புறப்பட்டு மதியம் பிரப்பன்வலசை சென்று சேர்ந்தோம். ***பிரப்பன்வலசையில் மிகவும் பழமையான பிள்ளையார் இருக்கிறார்.*** புதிதாகப் பிள்ளையார்கோயில் கட்டுமானம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மதிய உணவு. மதியம் 2.00 மணிக்கு மேல் புறப்பட்டு இராமேசுவரம் சென்று சேர்ந்தோம்.



இராமேசுவரம் நகரத்தார் விடுதி கட்டுமானப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எனவே கண்டனூர் நகரத்தார் விடுதியில் தங்கினோம்.



நித்திய வழிபாடு

ஆனைமுகத்தான் திருவடி போற்றி,
உப்பிலியப்பன் திருவடி போற்றி.

ஜெய வருடம் வைகாசி 9 (23.05.2014) வெள்ளிக்கிழமை இரவுமுதல், ஆவணி 27 (12.09.2014) வெள்ளிக்கிழமை அன்று காசியில் பாதயாத்திரை நிறைவடைந்தது முடிய 112 நாட்களும் தினமும் நாள்தவறாமல் குருசாமி பச்சைக்காவடி அவர்களுடன் யாத்திரிகர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து வழிபாடு நடைபெற்றது. அதிகாலையில் எழுந்து குருசாமி பச்சைக்காவடி அவர்கள் நடுவில் அமர்திருக்க, அவருக்கு இரண்டு பக்கமும் யாத்திரிகர்கள் அமர்ந்திருக்க, ஔவையார் அருளிச் செய்த ***"விநாயகர் அகவல்"*** *ஓதப்படும். அடுத்து விநாயகர் பஞ்சரத்தினமும், சூரிய நமஸ்காரமும் பாடப்பெறும். தொடர்ந்து* ***"பெருமாள் போற்றி"*** *ஓதப்படும், அடுத்து* ***"திருப்பதி அடைக்கலம்"*** *பாடி முடித்தவுடன்,* ***"ஆனைமுகத்தான் திருவடி போற்றி, உப்பிலியப்பன் திருவடி போற்றி"*** *ஓதப்படும். அருள்மிகு இராமநாதசுவாமியையும் அருள்மிகு காசிவிசுவநாதரையும் மற்றும் அனைத்து வழிபடுதெய்வங்களையும், வழித்துணையாக வருகின்ற தெய்வங்களையும், உறுதுணையாக உடன்வரும் பஞ்சபூதங்களையும் வணங்கிக் கொண்டு* ***"அரோஹரா"***

சொல்லப்படும். நிறைவாக அன்னதானம் வழங்கிய பெருமக்களுக்கும் அரோஹரா சொல்லப்படும். வழிபாட்டின் முடிவில் பாதயாத்திரை நல்லபடியாக நடைபெற வேண்டியும், இந்தியப் பெருநாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலம் காக்கவும், நாட்டுக்கோட்டை நகரத்தார் நலம் காக்கவும் கூட்டுப் பிரார்த்தனை செய்யப்பெறும்.

நாள் தவறாமல் நடைபெற்ற இந்த வழிபாட்டின் பயனாகத் தெய்வங்களின் திருவருளினால்தான் இந்தப் புனிதப் பாதயாத்திரை எந்தவொரு தடங்கலும் இல்லாமல் நல்லபடியாக நிறைவுற்றது.



விநாயகர் அகவல்

ஔவையார் ***அவர்களால்*** பாடப்பட்டது.

(1) *சீதக் களபச் செந்தா மரைப்பூம், பாதச் சிலம்பு பலவிசை பாடப்*
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும், வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும், வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும், நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்,
(5) *நான்ற வாயும் நாலிரு புயமும், மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்*
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்,திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான, அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!, இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்,

(9) தாயா யெனக்குத் தானெழுந் தருளி, மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப், பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில், திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக், கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே,
(13) உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்,தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம், இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து), இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி, மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
(17) ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால், ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும், பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக், கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின், நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
(21) குண்டலி யதனிற் கூடிய அசபை, விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக், காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும், குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும், உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்,
(25) சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும், எண் முகமாக இனிதெனக் கருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத், தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி, இருத்தி முத்தி யினிதெனக் கருளி என்னை
யறிவித்(து) எனக்கருள் செய்து, முன்னை வினையின் முதலைக் களைந்து
(29) வாக்கும் மனமும் இல்லா மனோலயம், தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன, அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்,

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து), அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச், சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
(33) அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க், கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக், கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை, நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட, வித்தக விநாயக விரைகழல் சரணே!(36)

*****

விநாயகர் பஞ்சரத்தினம் அந்தாதி

கைஅதில் மோதகத்தை களிப்போடு வைத்து காட்சி தந்து
வைஅகம் காத்து உயர்வாழ்வு அளித்தே கொடும் வறுமை நீக்கும்
ஐயன் பிறைசூடி அசுரகயன் வென்றோன் அல்லல் போக்கும்
தெய்வம் விநாயகனை தேடிப்பணிந்து இடுவேன் தெரிந்து

தெரிந்து வணங்கினோரை தீங்கு இன்றி காக்கும் தேவன் அவன்
அறிந்தும் அடிபணியார்க்கு அறிவு உறுத்தும் ஆதவனாம்
சிறந்தோர்க்கு உயர்ந்தவனாம் சிவகணத்தின் தேவனையே
புரிந்து வணங்கிடுவேன் புனித மகேசனை போற்றி

போற்றும் யாவருக்கும் புவனம் எல்லாம் நலம் புரிந்திடுவான்
தோற்றும் பெருவயிறும் துதிக்கையோடு தூயமுகமும்
ஊற்று பெருக்கு என உயர்கருணை காட்டும் உமைபாலன்
ஆற்றுலுடன் அசுரகயன் அழித்தோன் அடிபணிவேன்

பணியும் பக்தர்களின் பயம்நீக்கி அபயம் அருளும்
மணியோ மறைபோற்றும் மகேசன் மனமகிழ் மகனாம்
அணியும் அகந்தை உடை அசுரனை அழித்தவனாம்
துணியும் செயல் தொடங்கத் துணைபுரியத் துதிக்கின்றேன்

துதிக்கின்ற யாவருக்கும் துணை இருக்கும் துதிக்கை உள்ளோன்
விதிக்கின்ற எமனையும் விரட்டிடும் விடம் உண்டோன்
மதிக்கின்ற யோகியரின் மனத்துஆளும் மகன் முகத்தில்
உதிக்கின்ற ஒளிவீசும் ஒருதந்தமே உற்றஅவனாம்

உற்றது ஒரு உயர்கவியை உளம் ஆற உதயத்தில்
கற்றுஓத கடைத்தேறி கணபதியின் கருணைஉடன்
பெற்று இடுவர் கவிப்புலமை பிள்ளையுடன் பெரும்செல்வம்
அற்று இடுமே பிணிபீடை ஆயுள் ஓங்க அருளும் கையே.

மங்கலத்து நாயகனே மண்ணாளும் முதல் இறைவா !
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினமே
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச் சங்கரிக்கும்
எங்கள்குல விடிவிளக்கே எழில்மணியே கணபதியே !

அப்பமுடன் பொரிகடலை அவல் உடனே அருங்கதலி
ஒப்பில்லா மோதகமும் ஒருமனதாய் ஒப்புவித்து
எப்பொழுதும் வணங்கிடவே என்னை ஆள வேண்டும் என
அப்பன் அவன் மடி அமரும் அருட்கனியே கணபதியே !

பிள்ளையாரின் குட்டுடனே பிழைநீக்கி உக்கியிட்டு
எள் அளவும் சலியாத என்மனத்தை உனக்கு ஆக்கி
தெள்ளியனாய் தெளிவதற்கு தீந்தமிழில் போற்றுகின்றேன்
உள்ளியதை உள்ளபடி உகந்து அளிப்பாய் கணபதியே !

இன்று எடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன் உடனே நீஎழுந்து
என்பணியை உன்பணியாய் எடுத்து ஆண்டு எமைக்காக்க
பொன்வயிற்றுக் கணபதியே போற்றி எனப் போற்றுகின்றேன் !

கணபதி இருக்கும் வரை கவலைகள் இல்லை – என்றும்
கைகட்டி பதில் சொல்லும் நிலையும் இல்லை
எனக்கு ஓர் இசை தெய்வம் அவன் தான் அய்யா – என்றும்
அவன் புகழ் தினம் சொல்வோம் நாம் தான் அய்யா

கணபதி என்றிட கலங்கும் வல்வினை
கணபதி என்றிட காலனும் கைதொழும்
கணபதி என்றிட காரியங்கள் கைகூடும்
கணபதி என்றிட கவலைகள் தீருமே !

உள்ளம் அதில் நலம் கூட ஓங்கு புகழ்வளம் சேர
வெள்ளம் என பொருள் பெருக வெற்றி மேல் வெற்றி பெற
வேண்டும் வரம் தந்து அருளும் சிவசக்தி விநாயகனே
முன்னின்று எமைக் காத்து அருளும் ஆனை முகமே
உன் நாமம் சொல்லிடுவோம் திருப்பாதம் போற்றிடுவோம்

காது இரண்டும் முறம் போல கண் இரண்டும் கடுகு மணி
ஊதி வைத்த பெரும் வயிறு ஓங்காரம் உன் உருவம்
உலகு ஆளும் விநாயகனே எவ்வினையும் வாராமல்
எந்நாளும் எமைக் காத்து அருளும் ஆனை முகமே
உன் நாமம் சொல்லிடுவோம் திருப்பாதம் போற்றிடுவோம்

முப்பழமும் தேன் உடனே மோதகத்துப் படையல் உண்டு
எடுத்த முறை தப்பாமல் வெற்றி தரும் விநாயகனே
அருளும், பொருளும் அள்ளி வழங்கும் அம்மை அப்பனே ஆதி முதல்வனே
எந்நாளும் எமைக் காத்து அருளும் ஆனை முகமே
உன் நாமம் சொல்லிடுவோம் திருப்பாதம் போற்றிடுவோம்

உலகம் சமநிலை பெற வேண்டும் உயர்வு தாழ்வு இல்லா நிலை வேண்டும்
உண்மை ஞானம் புகழ் வேண்டும் உலக வாழ்வில் அருள் வேண்டும்
தானமும், தவமும் செய்திட வேண்டும் மலைபோல் உயர்ந்த குணம் வேண்டும்
நிறைவே காணும் மனம் வேண்டும் இறைவா இதை நீ தர வேண்டும்

அருளும் பொருளும் பெருகிடவே அறவழியில் செல்வம் சேர்ந்திடவே
தர்மம் எங்கும் தழைத்திடவே சத்தியம் என்றும் நிலைத்திடவே
வாழ்வில் வெற்றி அடைந்திடவே நெறியில் மனிதன் வாழ்ந்திடவே
நேர்மை நெஞ்சில் நிறைந்திடவே இறைவா இதை நீ தர வேண்டும்

சூரிய நமஸ்காரம்

ஆயிரம் கரங்கள் நீட்டி அணைக்கின்ற தாயே போற்றி
அருள்பொங்கும் முகத்தைக் காட்டி இருள்நீக்கம் தந்தாய் போற்றி
தாயினும் பரிந்துசால சகலரை அணைப்பாய் போற்றி – தழைக்கும்
ஓர் உயிர்கட்கு எல்லாம் துணைக்கரம் கொடுப்பாய் போற்றி
தூயவர் இதயம் போல துலங்கிடும் ஒளியே போற்றி
தூரத்தே நெருப்பை வைத்து சாரத்தை தருவாய் போற்றி
ஞாயிறே நலமே போற்றி நாயகன் வடிவே போற்றி
நானிலம் உளநாள் மட்டும் போற்றுவோம் போற்றி போற்றி.

வலையபட்டி, பச்சைக்காவடி. 9787872121

உ

முழுமுதல் கடவுள் ஆனை முகத்தான் அருள்

ஆனைமுகத்தான் திருவடி போற்றி உப்பிலியப்பன் திருவடி போற்றி

நாள் தோறும் 108 முறை சொல்லச்சொல்ல பதினாறு செல்வங்களும் உங்கள் வீடு வந்து சேரும்.

பெருமாள் போற்றி

திரு வேங்கடேசா உன் திருநாமம் போற்றி
திரு மேவும் ஓர் ஏழு மா மலைகள் போற்றி
திருத்தலத்தில் சுரக்கின்ற தீர்த்தங்கள் போற்றி
திருமார்பில் திகழ் லெஷ்மி பதம் போற்றி போற்றி
திருப்பதியை நாடிவரும் அடியார்கள் போற்றி
திருக்கோயில் வைபவங்கள் ஒவ்வொன்றும் போற்றி
திருமாலே வேங்கடவா பெருமாளே போற்றி
திருமேனி திருப்பாத மலர் போற்றி போற்றி

நன்னாளைத் தொடங்கி வைக்கும் சுப்ரபாதம் போற்றி
நல்லார்கள் ஆழ்வார்கள் பாசுரங்கள் போற்றி
கருவறையில் விஸ்வரூப தரிசனமும் போற்றி
கண்ணாரக் கண்டோம் உன்எழில் போற்றி போற்றி
தொடர்கின்ற அபிஷேகம் வேதமொழி போற்றி
தோமாலை சேவை எனும் பாதமலர் போற்றி
கொற்றவையில் படிக்கின்ற பஞ்சாங்கம் போற்றி
கோவிந்தன் அருளாட்சி திறம் போற்றி போற்றி

சகஸ்ர நாமாவளியின் சங்கீதம் போற்றி
சன்னிதியில் ஒலிக்கின்ற அர்ச்சனைகள் போற்றி
இரவினிலே பள்ளியறைத் தாலாட்டு போற்றி
ஏகாந்த சேவை அதன் இசை போற்றி போற்றி
வியாழனில் திருநேத்ரத் திருக்காட்சி போற்றி
விழிகாண வழிகாட்டும் எழில் வண்ணம் போற்றி
மறை நான்கின் கருவான மாயோனே போற்றி
மலர் ஆடை அணிகின்ற மால் போற்றி போற்றி

வெள்ளி தனில் நீ ஆடும் திருமஞ்சனம் போற்றி
வேண்டுகின்ற பெரி ஆழ்வார் பாசுரங்கள் போற்றி
அறுபத்து நான்கு எனும் உபசாரம் போற்றி
அணிவிக்கும் சேலைகளின் வகை போற்றி போற்றி
கல்யாண மூர்த்தி நின் அலங்காரம் போற்றி
கலசா அபிசேகங்கள் பிரம்ம உற்சவம் போற்றி
நிக மார்ந்த தேசிகனாம் கண்டாமணி போற்றி
நித்ய கல்யாணம் நிகழ் தலம் போற்றி போற்றி

அன்னமாச்சாரியார் ஸ்தோத்திரங்கள்	போற்றி
ஆதிசங்கரர் தந்த அஷ்டகமும்	போற்றி
தேனான தியாக ராஜ கீர்த்தனைகள்	போற்றி
திருமலையின் புகழ் நூல்கள் தொகை போற்றி	போற்றி
நாராயண உபநிஷத்தின் நலம் யாவும்	போற்றி
நாமாவளி காயத்திரி மந்திரங்கள்	போற்றி
பாலாஜி புகழ் சேர்க்கும் இலக்கியங்கள்	போற்றி
பரந்தாமன் திகழ் நல்ல பதி போற்றி	போற்றி

அலர்மேலு மங்கை திகழ் திருச்சானூர்	போற்றி
துவாரக திருமலை ஸ்ரீ வேங்கடேசா	போற்றி
பங்காரு திருப்பதியின் கோயில்கள்	போற்றி
பாதார விந்தங்கள் சரண் போற்றி	போற்றி
புது டில்லி ராமகிருஷ்ண புரத்தோனே	போற்றி
பம்பாயின் பனஸ்வாடி தலத்தோனே	போற்றி
வங்கத்தில் வைகுந்த நாதனே	போற்றி
வகுள மாளிகை வளர்த்த சுடர் போற்றி	போற்றி

ஒப்பில்லா உப்பிலியப்பா உன் மேன்மை	போற்றி
உயர் நெல்லை கருங்குளத்தின் தெய்வம் நீ	போற்றி
மலை வையாயூர் பிரசன்ன வேங்கடேசா	போற்றி
மறவாத பக்தர்க்கு உன் துணை போற்றி	போற்றி
திருவல்லிக் கேணி பார்த்த சாரதியே	போற்றி
தினம் தொழுவார் மனம் உறையும் பெருமாளே	போற்றி
திருவரங்கம் பள்ளி கொண்ட ஸ்ரீ ரெங்கா	போற்றி
அருள் மேவும் அவதாரப் பயன் போற்றி	போற்றி

மாதத்தில் உன் மாதம் புரட்டாசி	போற்றி
வாரத்தில் உன் வாரம் சனி வாரம்	போற்றி
யுகம் நான்கில் உனது யுகம் கலியுகமே	போற்றி
கலிதீர்க்கும் பாலாஜி கழல் போற்றி	போற்றி
ஆமுக்த மால்யதா ஆண்டாளும்	போற்றி
அவள் மாலை ஆண்டு தோறும் பெறுவாய் நீ	போற்றி
அனந்தாழ்வான் ஆண் பிள்ளை பரம்பரையும்	போற்றி
அலர்மேலு மணவாளன் அருள் போற்றி	போற்றி

தேடிவரும் திருப்பதிக் குடை ஓராரும்	போற்றி
கூடவரும் அழகு மிகும் பட்டாடை	போற்றி
ஈடில்லா ஆலயத்தின் பண்டிகைகள்	போற்றி
ஏழுமலை ஆண்டவனே தாள் போற்றி	போற்றி
மலையாகத் திகழ் ஆதிசேசன் புகழ்	போற்றி
மணிமார்பில் திகழும் இரு மங்கையரும்	போற்றி
நிலையாக வளம் கூட்டும் இறைவனே	போற்றி
நின்றபடி வரம் அளிக்கும் நிலை போற்றி	போற்றி
ஆகாச ராஜன் அவன் அருளாட்சி	போற்றி
அவர் வளர்த்த அருள் அன்னை பத்மாவதி	போற்றி
காதலித்து கைப்பிடித்த கோவிந்தா	போற்றி
கற்பூரச் சந்தனத்தின் சுவை போற்றி	போற்றி
நரசிம்ம வடிவான அவதாரம்	போற்றி
ஒரு யுகத்தில் ராமன் எனும் திருத்தோற்றம்	போற்றி
மறு யுகத்தில் கண்ணன் என வந்தாய் நீ	போற்றி
கலி யுகத்தில் கோவிந்தா சீர் போற்றி	போற்றி
ஆகமத்தின் விதி காக்கும் வழிபாடு	போற்றி
அமைத்திட்ட ராமானுஜர் திருப்பெயரும்	போற்றி
ஊழி முதல் நீயே ஸ்ரீ கோவிந்தா	போற்றி
உவமையில்லா பெருமாள் உன் ஊர் போற்றி	போற்றி
காணிக்கை சேர்த்து வைத்துத் தருவார்கள்	போற்றி
கைமாறாய் பலவளங்கள் பெறுவார்கள்	போற்றி
கோரிக்கை நிறைவேற்றும் குலதெய்வம்	போற்றி
கோவிந்தா கோவிந்தா பேர் போற்றி	போற்றி
சனிக்கிழமை விரதத்தில் இருப்பார்கள்	போற்றி
சத்தியமும் தர்மங்களும் காப்பார்கள்	போற்றி
வினை தீர்க்கும் பெருமாளே அருளாளா	போற்றி
வேண்டுதலை தந்து அருளும் குணம் போற்றி	போற்றி
ஸ்ரீ நிவாசன் உனது திருநாமம்	போற்றி
ஸ்ரீ பாத ரேணு எனும் பிரசாதம்	போற்றி
மானிடர்க்கும் வானவர்க்கும் கதி நீயே	போற்றி
மலை போற்றி மனம் போற்றி அருள் போற்றி	போற்றி

அடைக்கலம்

திருப்பதி சூழும் திருமலை வாழும்
அருள் நிறை ஆண்டவனே
திருவடி தாமரை திருநிழல் தந்தருள்
அடைக்கலம் கோவிந்தனே
உடல், பொருள், ஆவி கொடுத்ததும் நீயே
ஒளி மலை வேங்கடவா
உயர் குணம் ஓங்கவும் இரு வினை நீங்கவும்
அடைக்கலம் நீ தர வா

அறம், பொருள், இன்பம் தருவது உன் கடன்
அடைக்கலம் வேங்கடவா
வருவதை முன்னால் உரைத்திட வல்ல
அறிஞர்கள் யாரும் இல்லை
இனிவரும் யாவையும் விதித்தவன் நீயே
அடைக்கலம் அன்பு மழை
திருவிழிப்பார்வை ஒரு நொடி போதும்
அகிலமும் உன்னிடம் அடைக்கலமே

விரைவினில் என்முகம் ஒருமுறை பார்த்து அருள்
அடைக்கலம் வேங்கடவா
அறவழிச் செல்வம் பெருகிட வேண்டும்
அருள் என்னும் தேன் பொழிக
உடல் நலம் கல்வியும் குறைவு அற சேர்ந்திட
அடைக்கலம் நீ தருக
உனது அருள் இன்றி உலகு இயல் மேன்மைகள்
பெறுவது பொய் ஐயனே

எது எது இங்கே எதில் எதில் சேரும்
அறிந்தவர் யாரும் இல்லை
வினை பெரிது ஆயினும் விதி வலிது ஆயினும்
அடைக்கலம் வைகுந்தனே
திருவருள் வேண்டும் திருவடி வேண்டும்
நிதம் உனை போற்றுகின்றேன்
அடைக்கலம் திருப்பதி அடைக்கலம் திருமலை
அடைக்கலம் கோவிந்தனே.

வலையபட்டி, பச்சைக்காவடி. 9787872121

இராமேசுவரம் - காசி புனித பாதயாத்திரை தொடக்கம்

இன்று முதல் நாள் - வைகாசி 12 (26.05.2014) திங்கள் கிழமை.

குருசாமி பச்சைக்காவடி அவர்களது தலைமையில் 20 (1+19=20) யாத்திரிகர்கள் இராமேசுவரத்திலிருந்து காசிக்கு பாதயாத்திரை மேற்கொண்டோம்.

யாத்திரையின் முதல் நாளான வைகாசி 12ஆம் நாள் (26.05.2014) திங்கட் கிழமை, இராமேசுவரம் தெற்குக் கோபுரத்திற்கு எதிரில் உள்ள கண்டனூர் விடுதியிலிருந்து புறப்பட்டு காலை 6.00 மணிக்கு அக்னி தீர்த்தத்தில் (கோபுரவாயில் எதிரே உள்ள கடல்) குளித்து மண் எடுத்தோம். மதிய உணவை விடுதியில் முடித்துக் கொண்டு பாதயாத்திரைக்கான அனைத்துப் பொருட்களையும் அன்னதானவண்டியில் ஏற்றினோம். மாலை 3.30 மணிக்கு இராமேசுவரம் கிழக்கு வாயிலில் நின்று தீபம் காட்டி கோபுரத்தையும் நுழைவாயிலையும் வணங்கிக் கொண்டோம். குருசாமி அவர்கள் தேங்காய்மேல் சூடம் வைத்து ஏற்றி 5 முறை யாத்திரிகர்களை வலம் வந்து சிதறுதேங்காய் உடைத்து யாத்திரிகர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கினார். அதன் பின்னர், யாத்திரிகர்களை வழியனுப்பி வைக்க வந்திருந்தவர்களும் மற்றும் அங்கே நின்றிருந்த பலரும் குருசாமியை வணங்கினர். அவர்களையும் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ஆசிர்வதித்து அவர்களுக்கும் விபூதி பிரசாதம் கொடுத்தார்.

யாத்திரிகர்கள் அனைவரும் கிழக்குக் கோபுர வாயிலில் இருந்து புறப்பட்டு தெற்குக் கோபுர வாயிலை அடைந்தோம். அங்கு யாத்திரிகர்களுக்குச் சமையல் செய்து போடுவதற்கான அன்னதானவண்டியும் ஓட்டுனரும் சமையல்கலைஞர்கள் மூன்றுபேரும் இருந்தனர். யாத்திரிகர்களை அன்னதானவண்டியின் முன் வரிசையாக நிற்கச் சொல்லி முன்புபோல் இப்போதும் குருசாமி பச்சைக்காவடி அவர்கள், யாத்திரிகர்களை வலம் வந்து சிதறுகாய் உடைத்து விபூதி பிரசாதம் கொடுத்தார்.

அங்கிருந்த அன்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு யாத்திரையைத் தொடங்கினோம். மாலை 5.15 மணிக்கு ஏகாந்த நாதர் கோயில் வந்து சாமி கும்பிட்டுவிட்டு உடனே புறப்பட்டு மாலை 6.10 மணிக்கு தங்கச்சிமடம் அருள்மிகு முருகன் கோயில் சென்றடைந்தோம்.

தங்கச்சிமடம் மெய்யன்பர்கள் சிலர் வந்து குருசாமியை வணங்கி யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்தனர். இரவு பிள்ளையார் மற்றும் முருகன் வழிபாடு செய்து கொண்டு கோயில் மண்டபத்தில் இரவு தங்கினோம்.

26.05.2014 காசி யாத்திரை முதல்நாள் - மூத்தவருடன் என் முதல் அனுபவம் (1)

26.05.2014 அன்று காலையில் இராமேசுவரத்தில் தீர்த்தமாடி முடித்து வழிபாடு செய்துவிட்டு மடத்தில் வந்து தங்கியிருந்தோம். என்னை வழியனுப்ப வந்திருந்த எனது உறவினர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

அப்போது அருகில் அமர்ந்திருந்த ஐயா கந்தசாமி அவர்கள் (வரிசை எண் 2) அவரது அலைபேசியைப் பிரித்துப் பிரித்து மாட்டிக் கொண்டிருந்தார். மிகவும் கவலையாகக் காணப்பட்டார். அவரது முக வாட்டத்தைக் கண்டு பொறுக்க மாட்டாமல், அவரருகில் சென்று என்னவென்று விசாரித்தேன். அவரது மகன் அவரைக் கூப்பிட்டுப் பேசினாராம். ஆனால் இவரால் அவரது மகனைத் திரும்பிக்

கூப்பிட்டுப் பேச இயலவில்லையாம். மிகவும் வருத்தமாகக் கூறினார்.

அவரது அலைபேசியை வாங்கி என்ன என்று பார்த்தேன். அது மிகவும் பழையது. பிய்ந்து போன வெளியுறை. உடைந்து போன பின்பக்க மூடி. அதில் இருந்த ஒளித்திரை (display screen) வேலை செய்யவில்லை. அதை அவரிடம் சொன்னேன்.

அதுதான் எனக்குத் தெரியுமே. என் மகனுடன் எப்படிப் பேசுவது? என்று கேட்டார். உங்களது மகனின் எண்ணைச் சொல்லுங்கள், எனது அலைபேசியிலிருந்து அழைத்துப் பேசலாம் என்று சொன்னேன். அதுதான் எனக்குத் தெரியுமே. ஆனால் எனது மகனின் அலைபேசி எண் இந்த அலைபேசியில்தானே உள்ளது. அதைத்தானே பார்க்க முடியவில்லை என்று சொன்னார். யாத்திரை முழுதும் இதை வைத்துக் கொண்டு எப்படிச் சிரமப் படுவீர்கள்? மேற்குக் கோபுரம் அருகே செல்போன் கடை உள்ளது. அங்கே போய் இதைச் சரி செய்யலாம் என்றேன். அதுதான் எனக்குத் தெரியுமே, ஆனால் என் மகனுக்குத் தகவல் தெரிந்தால், அவன் இங்கே வந்து இதைச் சரிசெய்து கொடுத்துவிடுவான் என்றார். இன்னும் சிலமணி நேரத்தில் யாத்திரை ஆரம்பிக்கப் போகிறது. எனவே இங்குள்ள கடையிலேயே இதைச் சரிசெய்து கொண்டு யாத்திரைக்குத் தயாராக வேண்டியதுதான் என்றேன். அதுதான் எனக்குத் தெரியுமே, இந்த வேகாத வெயிலில் அந்தக் கடைக்கு நான் எப்படிச் செல்ல முடியும் என்று மிகவும் வருத்தமாகச் சொன்னார்.

ம்… சரி, உங்களது செல்போனைக் கொடுங்கள், நான் அந்தக் கடைக்கு எடுத்துச் சென்று சரிசெய்து கொண்டு வந்து கொடுக்கிறேன் என்றேன். என்னிடம் அவரது செல்போனைக் கொடுப்பதற்கு மிகவும் யோசித்தார். ஐயா, நல்லபடியாகச் சரிசெய்து கொண்டு வந்து கொடுக்கிறேன், வழியில் போன்பேச முடியாமல் சிரமப்படாதீர்கள் என்று பலமுறை சொல்லி, அவரைத் திருப்திப் படுத்தி, அவரது செல்போனை வாங்கிக் கொண்டு மேற்குக் கோபுரம் நோக்கி நடக்க ஆரம்பித்தேன். உச்சி வெயில், வெயில் என்றால் வெயில், அப்படியொரு வெயில். சும்மா வறுத்து எடுத்தது. செல்போன் கடைக்கு வந்து சேர்ந்தேன். ஆனால் அந்தக் கடை பூட்டியிருந்தது. அருகில் உள்ள கடைக்காரரிடம் விசாரித்தேன். இவ்வளவுநேரம் இருந்தார், இப்போதுதான் போயிவிட்டார். அவரது செல்போனில் கூப்பிடுங்கள் என்று சொல்லி, கடைக்காரரின் செல்போன் நம்பர் எழுதியிருந்த இடத்தைக் காண்பித்தார். அந்த எண்ணில் அவரை அழைத்தேன். சிறிது நேரம் காத்திருக்குமாறு கூறினார். காத்திருந்தேன், காத்திருந்தேன். சுமார் 25-30 நிமிடங்கள் ஆகிவிட்டது. வந்து சேர்ந்தார், கடையைத் திறந்தார். என்னிடமிருந்து அலைபேசியை வாங்கிப் பார்த்தார். டிஸ்பிலே புதிதாகத்தான் மாற்ற வேண்டும் என்றார். பரவாயில்லை மாற்றிக் கொடுங்கள் என்றேன். 5 நிமிடத்தில் சரி செய்து கொடுத்தார். அவர் கேட்ட தொகையைக் கொடுத்தேன். சாமி, நீங்கள் பேரம் பேசாமல் கொடுத்துவிட்டீர்கள். எனவே இந்த போனின் உறையையும் புதிதாக மாற்றித் தருகிறேன் என்று சொன்னார். அந்த செல்போனுக்குப் புதிய உறை மாற்றிக் கொடுத்தார். எனக்கோ காலதாமதம் ஆகிவிட்டதே என்ற கவலை. அந்த வேகாத வெயிலில் வேகவேகமாக வேர்க்க விறுவிறுக்க நடந்துவந்து விடுதியை அடைந்தேன்.

எல்லாரும் சாப்பிடுவதற்காகப் பந்தியில் உட்கார்ந்து இருந்தனர்.

குருசாமி அரோகரா சொல்லி முடித்தபின்னர்தான் அனைவரும் சாப்பிட வேண்டும். மிகவும் சரியாக, நொடிப்பொழுது நேரத்தில் எனக்கான இடத்தில் போய் அமர்ந்து விட்டேன். என்னப்பா இப்படியெல்லாம் தாமதப்படுத்துகிறாய் என்று குருசாமி கோபித்துக் கொண்டார். ஆனால் மறுநொடியில் அரோகரா சொல்ல ஆரம்பித்துவிட்டார். வழிபாடு முடிந்து மதிய உணவும் முடிந்தது.

செல்போனைப் பெரியவரிடம் கொடுத்தேன். வாங்கிப் பார்த்தார், எவ்வளவு பணம் அப்பா, நான் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லி அவரது பணப்பையை எடுத்தார். அதெல்லாம் பணம் வேண்டாம், உங்கள் கடைசித் தம்பி

போல் என்னை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை, செலவுத் தொகையை வாங்கிக் கொள் என்று சொல்லிக் கொண்டே இருந்தார். பலவாறு அன்பாக எடுத்துச் சொன்ன பிறகே அமைதியானர்.

அவர் அமைதியான மறு நொடியே ஆரம்பமானது அடுத்த பிரச்சினை. “இந்த போனில் இருந்த உறை எங்கே? அதைக் கொடு” என்று கேட்டார். அண்ணே, அந்த உறை மிகவும் பழைய உறை, கிழிந்து போய் இருந்தது, அதனால் அதையும் கடைக்காரர் மாற்றிக் கொடுத்துவிட்டார் என்றேன். அதுதான் எனக்குத் தெரியுமே, ஆனால் அந்தப் பழைய உறை எனக்கு வேண்டும் என்றார். அண்ணே, அது எதற்கு? அது அவசியம் வேண்டுமென்றால், மீண்டும் மேற்குவாசலில் உள்ள கடைக்குச் செல்ல வேண்டுமே என்றேன். ஆமாம் தம்பி, அந்தப் பழையஉறை எனக்கு அவசியம் வேண்டும், அதில் ஒரு முக்கியமான செல்போன் நம்பர் குறித்து வைத்துள்ளேன் என்றார்.

வேறு வழி, அந்தக் கொளுத்தும் வெயிலில் மீண்டும் தெற்குக்கோபுர வாயில் எதிரே நாங்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து மேற்குக் கோபுர வாசலுக்கு நடந்து சென்று, கடையில் குப்பைக்கூடையில் கிடந்த அந்தப் பழைய கிழிந்து போன அந்தச் செல்போன் உறையை எடுத்துக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தேன்.

இதற்குள் யாத்திரிகள் அனைவரும் அன்னதான வண்டிக்கு முன் வரிசையாக நிற்க ஆரம்பித்து விட்டனர். நானும் ஓடிச் சென்று கடைசி ஆளாகக் கடைசி வரிசையில் நின்று கொண்டேன். நல்லவேளை ஒருசில நிமிடங்கள் காலதாமதம் ஆகியிருந்தால் குருசாமி என்னைத் தேடியிருப்பார். செல்போன் சரியான மகிழ்ச்சியில் அண்ணன் கந்தசாமி அவர்களும், அதைச் சரி செய்து



கொடுத்த திருப்தியில் தம்பி காளைராசனும் காசிக்குப் பாத யாத்திரையைத் தொடங்கினோம்.

26.05.2014 காசி யாத்திரை முதல்நாள் -- திங்கட் கிழமை சுபஹோரை நேரமான மாலை மணி 3.00க்கு வழிபாடு ஆரம்பித்து குருசாமி அவர்கள் யாத்திரிகர்கள் அனைவருக்கும் விபூதி கொடுத்தார். சுபவேளையில் காசிக்கான எங்களது பாதயாத்திரை இனிதே தொடங்கியது.

மற்ற யாத்திரிகர்களுக்குத்தான் யாத்திரை 3.00 மணிக்குத் தொடங்கியது என்று கூறவேண்டும். நான் தெற்குக் கோபுரத்திற்கும் மேற்குக் கோபுரத்திற்கும் அந்த வேகாத வெயிலில் நடந்ததையும் சேர்த்துக் கொண்டால், எனது பாதயாத்திரை சுபஹோரையான நண்பகல் 12.00 மணிக்கே தொடங்கி விட்டது என்றே கூற வேண்டும். வீடு உண்டு அலுவலகம் உண்டு என்றிருப்பேன். அலுவலகத்தில் எனக்குக் குளிர்சாதன வசதி உள்ளது. எனவே வெயிலின் கொடூரம் என்றால் என்னவென்று தெரியாமலேயே இருந்தேன். இந்த யாத்திரையின் முதல்நாளே என்னை வெயில் வறுத்து எடுத்து விட்டது.

யாத்திரையானது மதியம் 3 மணிக்குத் துவங்கும்போது, மேற்கே சூரியன் சுட்டெரித்தது. அந்த வெயிலில்தான் தெற்குக் கோபுர வாயிலில் இருந்து யாத்திரையைத் தொடங்கி இலட்சுமணதீர்த்தம் வந்து சேர்ந்தோம். இப்போது வெயிலின் கொடுமை குறைந்து விட்டது. அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.



நடையன் -

இலட்சுமண தீர்த்தத்தில் இருந்து தங்கச்சிமடத்திற்குப் பயணமாகத் தயார் ஆனோம். அப்போது குருசாமி என்னை அழைத்துச் சாலையோரம் உடைந்து சிதறிக் கிடந்த “பீர்”பாட்டில்களின் கண்ணாடித் துண்டுகளைக் காண்பித்தார். குருசாமி என்ன சொல்லவருகிறார் என்பது எனக்குப் புரிந்து விட்டது. புரிந்து கொண்டேன், புரிந்து கொண்டேன், நீங்கள் சொல்வதே சரி என்பதுபோன்று எனது தலையை ஆட்டிக் கொண்டு குருசாமிக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு நடக்கத் தொடங்கினேன்.

எனது கால்கள் நடந்து கொண்டிருந்தாலும், எனது மனம் குருசாமி அவர்கள் அன்று சொன்னதை நினைத்துக் கொண்டிருந்தது. வைகாசி 6 (20.05.2014) செவ்வாய்க் கிழமையன்று, முதன்முதலாகக் குருசாமி அவர்களை நான் சந்தித்து யாத்திரைக்கு அனுமதி பெற்ற போது, அவர் என்னிடம் யாத்திரையின் போது நீ அவசியம் “நடையன்” போட்டுக் கொள்ள வேண்டும் என்றார். எனக்குக் குருசாமி என்ன சொல்லுகிறார் என்று விளங்கவில்லை. இருந்தாலும் சரியென்று தலையாட்டி வைத்தேன்.

நடையன் என்றால் என்ன? என்று நண்பர் ஒருவரிடம் கேட்டேன். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், செருப்பு அல்லது காலணி என்று சொல்ல மாட்டார்கள், நடையன் என்று சொல்லுவார்கள் என்று விளக்கம் கொடுத்தார். அதாவது யாத்திரையின்போது அவசியம் செருப்புப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார் என்பதை அறிந்து கொண்டேன்.

புராணத்தில் பாதுகை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புனிதமான பாதயாத்திரையின் போது நடையன் ஏன் அவசியம் போட வேண்டும்? பண்டைய காலத்திலேயே பாதயாத்திரையின் போது, மரத்தினால் ஆன நடையனைப் பயன்படுத்தியுள்ளனர். நடையன் அணிந்துள்ள ஆணின் சிற்பம் ஒன்று ஆவுடையார்கோயில் தூணில் உள்ளது. காளையார் கோயிலுக்குச் சித்தமூர்த்தியாகச் சிவபெருமான் எழுந்தருளியபோது, சிவபெருமான் தந்தப்பாதுகை அணிந்து வந்ததாகக் காளையார்கோயில் புராணம் குறிப்பிடுகிறது.





புனிதமான பாதயாத்திரையின் போது நடையன் ஏன் அவசியம் போட வேண்டும்?

காசிக்குச் செல்லும் (NH 7) தேசிய நெடுஞ்சாலையில் இருக்கும் கிராமத்தினர்கூட மிதிவண்டியிலோ இருசக்கர வாகனத்திலோதான் செல்வார்கள். ஆனால் இராமேசுவரம் காசி பாதயாத்திரை செல்பவர்கள் மட்டுமே நடந்து செல்வார்கள். சாலையோரங்களில் கண்ணாடித் துண்டுகள் கிடக்கும், அதனால் தற்காப்பிற்காக அவசியம் செருப்பு அணிந்துகொண்டுதான் நடக்க வேண்டும் என்று குருசாமி அவர்கள் கூறியுள்ளார் என்பதையும் அறிந்து கொண்டேன்.

லாரி ஓட்டுநர்களும், மற்றும் பிற வாகன ஓட்டுநர்களும் வண்டியில் இருந்தபடியே பீர் குடித்துவிட்டு, அந்தப் பாட்டில்களைச் சாலையோரம் தூக்கிப்போட்டு விடுகின்றனர். அது சாலையோரம் பரவிக் கிடக்கிறது. இராமேசுவரம் தொடங்கி, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய தென்மாநிலங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலை நெடுகிலும் சாலையோரம் பீர்பாட்டில்கள் உடைந்து கிடப்பதை இந்தப் பாதயாத்திரையின் போது பார்த்தேன்.

விரதம் இருந்தும், வேண்டுதலுக்காவும் பழனி திருச்செந்தூர் திருத்தணி முதலான திருத்தலங்களுக்குப் பாதயாத்திரை செல்வோர் நடையன் அணிந்து கொள்வதில்லை. ஆனால் இந்தப் பாதயாத்திரை அனைத்தும் 10 அல்லது 20 நாட்களில் முடிந்து விடும். மேலும் இதுபோன்ற பாதயாத்திரை நாட்களில் அடியார்கள் கூட்டங்கூட்டமாகப் பெரும் எண்ணிக்கையில் நடந்து செல்வார்கள். எனவே சாலையோரம் எந்தவொரு கண்ணாடியோ முள்ளோ கிடக்காது. அப்படியே கிடந்தாலும் அவற்றை அடியார்கள் அப்புறப்படுத்தி விடுவார்கள். எனவே காலில் கண்ணாடியோ முள்ளோ குத்தும் என்பதற்கான வாய்ப்பே இல்லை.

தேசிய நெடுஞ்சாலைகளில் லாரி ஓட்டுநர்களும், மற்றும் பிற வாகன ஓட்டுநர்களும் வண்டியில் இருந்தபடியே பீர் குடித்துவிட்டு, அந்தப் பாட்டில்களைச் சாலையோரம் தூக்கிப்போட்டு விடுகின்றனர். அது சாலையோரம் பரவிக் கிடக்கிறது. இராமேசுவரம் தொடங்கி, தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய தென்மாநிலங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலை நெடுகிலும் சாலையோரம் பீர்பாட்டில்கள் உடைந்து கிடப்பதை இந்தப் பாதயாத்திரையின் போது பார்த்தேன். மத்தியப்பிரதேசம் உத்திரப் பிரதேசம் ஆகியமாநிலங்களில் இவற்றைக் காண இயலவில்லை. (ஒருவேளை இந்த மாநிலங்களில் உள்ளவர்கள் பீர் பழக்கத்திற்கு அடிமையாகமல், பீடா பழக்கத்திற்கு அடிமையானவர்களாக இருப்பது காரணமாக இருக்கலாம்).

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்கள் அனைவருக்கும் அவரவர் கால் அளவிற்கு ஏற்ப 5 ஜோடி நடையன்களை வாங்கி யாத்திரையின்போது இலவசமாகக் கொடுத்தார். கூடுதலான நடையன்களை இருப்பில் வைத்திருந்தார். தேவைப்பட்டால் அவற்றை எடுத்துக் கொடுப்பார். நடையன் தேய்ந்து போனாலோ, பிய்ந்து போனாலோ அவரவருக்கு வழங்கப்பட்ட புதிய நடையனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நடையன் மட்டுமல்ல, குடை, தொப்பி, தண்ணீர்ப்பாட்டில், பிரம்பு, டார்ச்லைட், போர்வை, ஜமுக்காளம், பற்பசை, பிரஷ், குளியல்சோப்பு, துணிதுவைக்கும் சோப்பு, தேங்காய் எண்ணெய், கொசுவர்த்தி, கொசுவலை, கொடிக் கயிறு, சொக்காய்(சட்டை), வேட்டி, துண்டு என யாத்திரைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் இலவசமாக வழங்குவார்.

பாதயாத்திரைக்கு நடையன் மிகவும் முக்கியமானது, நடையன் இல்லாத நடைப்பயணம் ஆபத்தானது என்பதை அறிந்து கொண்டேன். ஆனால் நடையனால் யாத்திரிகர் ஒருவருக்குத் துன்பம் உண்டானது. அந்தக் கதையையும் பின்னர் சொல்கிறேன்.

குருசாமி யாத்திரிகர்களை அன்னதானவண்டியின் முன் நிறுத்தி முன்புபோல் இப்போதும் யாத்திரிகர்களை வலம் வந்து சிதறுகாய் உடைத்து

விபூதி பிரசாதம் கொடுத்தார். அங்கிருந்த அன்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு யாத்திரையைத் தொடங்கினோம்.

மாலை 5.15 மணிக்கு ஏகாந்தநாதர் கோயிலுக்கு வந்துசேர்ந்து சாமி கும்பிட்டோம். அங்கிருந்து உடனே புறப்பட்டு மாலை 6.10 மணிக்கு தங்கச்சிமடம் அருள்மிகு முருகன் கோயில் சென்றடைந்தோம்.





அமிர்த வாவி - தீர்த்தம் (பூமி) - தேவர்களுக்காவும், வானர(ர) வீரர்களுக்கும் ஸ்ரீ ராமரால் கோயில் உள்ளே உண்டாக்கப்பட்டுள்ளது தான் அமிர்தவாபி தீர்த்தம். இது அமிர்தத்துவமானது. இந்த புண்ணிய தீர்த்தத்தை பார்த்தாலும், பருகினாலும் ஆயுள் அபிவிருத்தியும் வளமான வாழ்க்கையும் அமையும்.

இந்தத் தீர்த்தத்தின் பெருமைகளைக் கோயில் குருக்கள் குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் எடுத்துக் கூறினார். அவரே யாத்திரிகர்கள் அனைவரையும் தீர்த்தத்திற்கு அழைத்துச் சென்று தீர்த்தம் இறைத்துக் கொடுத்தார். யாத்திரிகர்கள் அனைவரும் அமிர்த தீர்த்தம் அருந்திப் புண்ணியம் பெற்றோம்.

தங்கச்சிமடம் மெய்யன்பர்கள் சிலர் வந்து குருசாமியை வணங்கி யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்தனர். இரவு பிள்ளையார் மற்றும் முருகன் வழிபாடு. கோயில் மண்டபத்தில் இரவு தங்கினோம்.



காசி பாதயாத்திரை இன்று 2-ஆம் நாள் - வைகாசி 13 (27.05.2014) செவ்வாய்க் கிழமை.

தங்கச்சி மடம் முருகன் கோயிலில், இரவு 3.30 மணிக்கு அனைவரும் எழுந்து யாத்திரைக்குத் தயார் ஆனோம். விநாயகர் அகவலும், பெருமாள் போற்றியும் பாடி வழிபாட்டை முடித்துக் கொண்டவுடன், அனைவருக்கும் ஹார்லிக்ஸ் மற்றும் ரொட்டி கொடுத்தார்கள். 4.00 மணி அளவில் அன்னதான வண்டிக்கு முன் அனைவரும் மூன்றுமூன்று பேர்களாக வரிசையில் நின்றோம். குருசாமி அவர்கள் வலம்வந்து சூடம் காட்டித் தேங்காய் உடைத்து அன்றைய யாத்திரையைத் தொடக்கி வைத்தார். சுமார் 4.05 மணி இருக்கும் பாம்பன் பாலம் தொடங்கும் இடத்தில் கால்வைத்ததுதான் தாமதம். காற்று என்றால் காற்று, சும்மா சுழன்று சுழன்று அடித்தது, ஆளையே தூக்கி வீசிவிடுவது போன்று பலத்த சூரைக் காற்று வீசியது. சிறிது நேரத்தில் காற்றுடன் பலத்த மழையும் பெய்யத் தொடங்கியது. மழையில் சட்டைப் பையில் வைத்திருந்த செல்போன் நனைந்து விடாமல் பாதுகாப்பதே சிரமம் ஆகிப்போனது. சட்டையைக் கழற்றிச் செல்போனைச் சுற்றிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினேன். சிறிது நேரத்தில் மின்வெட்டு, பாலத்தில் விளக்குகள் எரியவில்லை. முழுவதும் நனைத்தபடியே அனைவரும் பாம்பன் பாலத்தில் கும் இருட்டில் கையில்

வைத்திருந்த டார்ச்லைட் வெளிச்சத்தில் நடந்து கொண்டிருந்தோம். மழைநீர் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. பாலத்தில் ஓரத்தில் நடைபாதையில் நடந்து சென்றால், ஆங்காங்கே நடைபாதையில் இருந்த சிமெண்ட் ஸ்லாப்களை அகற்றி வைத்திருந்தனர். எனவே நடைபாதையில் நடப்பது மிகவும் ஆபத்தாக இருந்தது. சாலையில் அப்போதைக்கு அப்போது சில வண்டிகள் வேகமாகச் சென்றன.

ஒரு இருசக்கர வாகனத்தில் (பைக்கில்) சென்ற இருவர், யாத்திரிகர்கள் ஒருவர் மீது மோதும்அளவிற்கு மிகவும் அருகே சென்று, நல்லவேளையாக விலகி விரைந்து சென்று விட்டனர். வாகனங்கள் கடந்து செல்லும்போது சாலையிலிருந்த தண்ணீர் எல்லாம் யாத்திரிகர்கள்மேல் அள்ளி இறைத்துச் சென்றன. சிறிது நேரம் ஆகஆக சூரிய வெளிச்சம் தெரியத் தொடங்கியது. சரியாகப் பாம்பன் பாலத்தைக் கடந்து முடிக்கும் போது, மழையும் காற்றும் நின்று போயின.

யாத்திரையின் முதல்நாளில் வெயிலில் வறுத்து எடுத்து, இரண்டாம்நாளில் கொட்டும் மழையில் குளிரக்குளிரக் குளிப்பாட்டி, இயற்கையானது எங்களை இராமேசுவரம் தீவில் இருந்து வழியனுப்பி வைத்தது.

பாம்பன் பலம் முடியும் இடத்தில் இருந்த ஒரு ஐஸ் கம்பெனியில் எனக்கு முன்னால் நடந்து சென்ற யாத்திரிகர்கள் அனைவரும் நின்று கொண்டிருந்தனர். அனைவரும் அவரவர் வேட்டி துண்டுகளைப் பிழிந்து உதறி மீண்டும் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்தோம்.

வழியில் மண்டபம் கடலோரக் காவல்படை குடியிருப்பு அருகேயுள்ள பேருந்துநிறுத்தம் அருகே காலை உணவு சாப்பிட்டோம். அந்தப் பேருந்து நிறுத்தத்தில் படுத்துக்கிடந்த ஒருவருக்குக் குருசாமி அவர்கள் உணவு வழங்கினார். காலை உணவு முடிந்தவுடன், அங்கிருந்து புறப்பட்டு பிரப்பன்வலசையில் உள்ள பாம்பன்சுவாமிகள் கோயிலுக்குச் சென்று சேர்ந்தோம்.

இன்று சுமார் 26 கி.மீ. பயணம்.

கோயிலில் இருந்த சுவாமிகள் எங்களை வரவேற்று உபசரித்தார். யாத்திரிகர்கள் சிலர் முருகன் மீது பக்திப்பாடல்களைப் பாடி வணங்கினர். யாத்திரிகள் அனைவரும் இன்று இங்கே கோயில் வளாகத்திலேயே தங்கினோம். இன்று மதியம் சுவையான உணவு. சமையல்காரர்களுக்கு யாத்திரிகர்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

பாம்பன் சுவாமிகள் பற்றிய கதைகளைக் கேட்டபடி அங்கேயே அன்றைய பொழுது கழிந்தது.

காசி யாத்திரை (28.05.2014 - 3ஆம் நாள்)

பிரப்பன்வலசை பாம்பன்சுவாமிகளின் முருகன்கோயிலில் இருந்து புறப்பட்டு உச்சிப்புளி வழியாக, பனைக்குளம் ஆத்மசாந்தி நிலையம் வந்து சேர்ந்தோம். ஆத்மசாந்தி நிலையத்தின் நிர்வாகி அம்மா அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார்.

இன்றைய பயணம் சுமார் 33 கி.மீ.

ஆத்மசாந்தி நிலையத்திற்குள்ளே அன்னதானவண்டி நுழையும் போது தரையில் போடப்பட்டிருந்த சிறிய சிமெண்ட் ஸ்லாப் ஒன்று உடைந்து போனது. அதைப் புதிதாக மாற்றுவதற்கான செலவுத் தொகையைக் குருசாமி அவர்கள் ஆத்மசாந்தி நிலையத்தை நிர்வகித்த அம்மா அவர்களிடம் கொடுத்தார். இதை நாங்களே சரி செய்து கொள்கிறோம், பணம் வேண்டாம் என்று அம்மா அவர்கள் கூறினார். இருந்தபோதும், செலவிற்கான தொகையைக் குருசாமி அவர்கள் கொடுத்துவிட்டார்.



மதிய உணவிற்குப் பின் தேவிபட்டிணத்திற்கு நடக்கத் தொடக்கினோம். பாதைகளில் பனைமரங்கள் நிறைந்து இருந்தன. அமைதியான கிராமங்கள் ஆங்காங்கே இருந்தன.

கால் புண்ணும், கண் மருந்தும்

திரு. சிவப்பா (எண் 20) அவர்கள் காலில் செருப்புப் போடும் பழக்கம் இல்லாதவர். அவர் எப்போதும் வெறும் காலுடன் நடப்பவர். ஆனால் இந்த யாத்திரையில் சாலையோரங்களில் கண்ணாடித் துண்டுகள் அதிகம் கிடக்கின்ற காரணத்தினால், யாத்திரிகர்கள் அனைவரும் அவசியம் நடையன் (செருப்பு) அணிந்து கொள்ள வேண்டும் என்பது குருசாமியின் கட்டளை. எனவே சிவப்பாவும் நடையன் போட்டுக் கொண்டு நடந்தார். இதனால், இரண்டு நாட்களாக அவருடைய கால்பெருவிரல் இடுக்கில் தோல் உரிந்து புண் உண்டாகியிருந்தது. இன்றைய பயணத்தில் நடையன் போட்டுக் கொண்டு நடக்கும் போது வலியால் மிகவும் வருந்தினார். கிராமப்புறச் சாலைகளில் கண்ணாடித் துண்டுகள் கிடக்கவில்லை. எனவே இன்றையதினம் நடையனை இடது கையில் பிடித்தபடி வெறும் காலுடன் நடந்தார். தார்ச்சாலைகளில் மட்டும் நடையனைப் போட்டுக் கொண்டார். மாலை 6.30 மணி அளவில் தேவிபட்டிணத்தில் உள்ள நகரத்தார் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். ஊரில் எல்லையில் இருந்த ஊருணியில் யாத்திரிகர்கள் சிலர் குளித்துவிட்டு விடுதிக்கு வந்து சேர்ந்தனர்.

“மெட்ராஸ் ஐ” என்று சொல்லப்படும் கண்நோய்க்குப் போடப்படும் பிதுக்கு மருந்தைக் கால்ப் புண்ணுக்குப் போடும்படிக் குருசாமி அவர்கள் சிவப்பாவிடம் கொடுத்தார். கண்மருந்து எப்படிக் கால் புண்ணுக்குச் சரியாகும்? என்று எனக்கு ஏகப்பட்ட ஐயங்கள். ஆனால் அடுத்த இரண்டு நாட்களில் சிவப்பாவின் கால்புண் முற்றிலும் குணமாகிவிட்டது. அவர் நடையனைப் போட்டுக் கொண்டு அருமையாக நடப்பதைக் கண்டதும் அனைவரும் ஆச்சரியப்பட்டோம்.

தேவிபட்டிணத்தில் நகரத்தார் விடுதிக்கு, எங்களுக்கு முன்னதாகவே அன்னதான வண்டியில் வந்து சமையலை முடித்து வைத்திருந்தனர். இரவு உணவு. தங்கல்.

காசி யாத்திரை (29.05.2014 - 4ஆம் நாள்)

இன்று வைகாசி 15 (29.05.2014) வியாழக்கிழமை.

தேவிபட்டிணத்தில் இரவு 3மணிக்கெல்லாம் பலரும் எழுந்து பயணத்திற்குத் தயாரானார்கள். சிலர் அருகில் உள்ள கிணற்றில் தண்ணீர் இறைத்துக் குளித்தார்கள். வழக்கமான நித்திய வழிபாடு முடிந்தவுடன், ஹார்லிக்ஸ் பிஸ்கெட் சாப்பிட்டுவிட்டு யாத்திரிகர்கள் நடக்கத் தொடக்கினோம். மழை வரலாம் என்று கருதி அனைவரும் கையில் குடை எடுத்துக் கொண்டனர். மங்கலம் அருகே காலை நேரத் தேனீர் அருந்தினோம். சனவேலி அருகே காலை உணவு உண்டோம். சனவேலியைக் கடந்து, சாலையோரம் உள்ள ஐயப்பன் கோயிலில் தங்கினோம்.

(Google map = MVQC+42 Sanaveli, Tamil Nadu) .

கோயிலில் மின்சார மோட்டார் போட்டுவிட்டார்கள். சில யாத்திரிகர்கள் குளித்தோம். ஆனால் உப்புத் தண்ணியாக இருந்தது.

காலை மணி 10.30 அளவில் கோட்டக்கரை ஆற்றைக் கடந்து நடந்து வந்து கொண்டிருந்தோம். நல்ல வெயில்.

மதியம் சாப்பாட்டிற்குப் பின்னர், அங்கிருந்து புறப்பட்டு திருவாடானை கைகாட்டியை நோக்கி நடக்கத் தொடங்கினோம். மாலைநேரத்தில் அருமையாகக் காற்று வீசியது. நானும் சிவப்பாவும் கடைசியாக நடந்து வந்துகொண்டிருந்தோம். எங்களுக்கும் பின்னால் குருசாமி அவர்களும் திரு. அங்கமுத்து சாமியும் நடந்து வந்து கொண்டிருந்தனர். எங்களுக்கு முன்னால் நடந்த அனைவரும் கைகாட்டியில் உள்ள ஒரு கடைக்கு அருகே எங்களுக்காக் காத்திருந்தனர். நாங்கள் கைகாட்டிக்கு வரும்போது மாலை 6 மணி ஆகிவிட்டது.

கைகாட்டியில் உள்ள மருந்துக்கடையில் சில யாத்திரிகர்கள் மாத்திரைகள் வாங்கிக் கொண்டனர். கைகாட்டியைக் கடந்து சாலையின் கிழக்குப் பகுதியில் ஊரணி அருகே பெட்ரோல் பங்க் இருந்தது. அதன் எதிரே உள்ள வீட்டில் தங்கினோம். சில யாத்திரிகர்கள் ஊரணியில் குளித்துவிட்டு வந்தனர்.

வீட்டில் இருந்தவர்கள் குருசாமியைக் கும்பிட்டு விபூதி வாங்கிக் கொண்டார்கள். கடந்த ஆண்டு குருசாமி இங்கு வந்து தங்கியபோது, வீட்டின் உரிமையாளரது மகளுக்குத் திருமணம் விரைவில் ஆகும் என்று அருளிச் செய்தாராம். அதேபோல் யாரும் எதிர்பாராத வகையில், திருமணம் நல்லபடியாக ஆனதென்று அந்தத் தாய் மிகவும் மகிழ்ந்து கூறினார்.

இரவு உணவு. குருசாமி அவர்கள் அந்த வீட்டில் இருந்தவர்களையும் அழைத்து இரவு உணவில் கலந்து கொள்ளச் செய்தார். நாங்கள் தங்கியிருந்த வீடு சிறியது. அதன் மொட்டை மாடியில் சிலரும், கீழே சிலரும் தங்கினோம். கடுமையான வெயில் காரணமாக மொட்டைமாடி அதிகச் சுடாக இருந்தது. வெகுநேரம் ஆன பின்பே எனக்குத் தூக்கம் வந்தது.

இன்றைய பயணம் தேவிபட்டிணத்திலிருந்து புறப்பட்டு சனவேலி வழியாகத் திருவாடானை கைகாட்டி அருகே உள்ள சின்னக்கீரமங்கலம் வந்து தங்குதல். ***இன்றைய பயணம் சுமார் 36 கி.மீ***

4ஆம் நாள் - எனது அனுபவம் முதல்நாள் நல்ல வெயில். எனது உடலில் இருந்த தெம்பு தீர்ந்து போனது. இரண்டாம் நாள் நல்லமழை. எனது உடலில் இருந்த தினாவெட்டு தீர்ந்த போனது. மூன்றாம் நாள் நல்லவெயிலில் சுமார் 33 கி.மீ. நடைப் பயணம். மிகவும் சோர்ந்து தொத்தமாடு மாதிரி நடந்து வந்தேன். எனக்கு இருந்தது இரண்டு ஆதரவு. சிவப்பாவுக்குச் செருப்புக்கடியால் நடக்கமுடியாமல்

சிரமம் எனக்கு உடல் சோர்வால் சிரமம். இருவரும் சேர்ந்து நடந்து வந்தோம். எங்களுக்குப் பின்னால் குருசாமி நடந்து வந்து கொண்டிருந்தார். அது மட்டுமே எங்களுக்குத் தைரியம் கொடுத்தது. நான்காம் நாளான இன்றும் 36கி.மீ. பயணம். எனது உடலும் உள்ளமும் மிகவும் சோர்ந்து விட்டன. அசந்து படுத்தாலும் கடுமையான வெக்கை. தூக்கம் முழுமையாக இல்லாமல் போனது. உடலும் உள்ளமும் சோர்வடைந்த நிலையில், காசிக்கு நடக்கிறோம் என்ற எண்ணம் மட்டுமே எனது நடைப்பணயத்திற்குத் துணையாய் இருந்தது. அப்படியே தூங்கிப் போனேன்.

-- ---

வைகாசி 16 (30.05.2014) வெள்ளிக் கிழமை காசி யாத்திரை (நாள் 5)

சின்னக்கீரமங்கலத்தில் இருந்து புறப்பட்டு புளியால் வழியாகத் தேவகோட்டை வந்து சேர்ந்தோம். சுமார் 21 கி.மீ. பயணம். வழியில் ரொட்டி தேநீர்,



புளியாலைக் கடந்து சாலையோரம் இருந்த கோயில் வளாகத்தில் காலை உணவு. நல்ல வெயில்.

அந்த வேகாத வெயிலில், ஜமீன்தார் சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் தேவகோட்டையின் எல்லையில் வந்து நின்று யாத்திரிகர்களை வரவேற்றார். யாத்திரிகர்கள் ஒவ்வொருவருக்கும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தார். என்னைப் பார்த்ததும் “வாங்க, திருப்பூவணம் காளைராசன்” என்று மகிழ்ந்து கூறி வரவேற்றார். ஜமீன்தார் அவர்கள் எங்களிடம் காட்டிய மரியாதையும் உபசரிப்பும் எங்களுக்குப் பெருமை சேர்த்தது, மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.



தேவகோட்டை நாட்டுக்கோட்டை நகரத்தார் தர்ம பரிபாலன சங்கத்தில் தங்கினோம். மதிய உணவு. ஓய்வு. நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள் பலரும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர். திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் துணைத் தலைவரான திரு. பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ஆச்சி அவர்களுடன் வந்திருந்து குருசாமி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றார்கள்.

வைகாசி 17 (31.05.2014) சனிக்கிழமை, காசி யாத்திரை (நாள் 6)

இன்று யாத்திரை பயணம் ஓய்வு நாள். தேவகோட்டை நாட்டுக்கோட்டை நகரத்தார் தர்ம பரிபாலன சங்கத்திலேயே தங்கியிருந்தோம்.
இன்றும், நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள் பலரும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர். திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையில் தலைவரான பேராசிரியர் இராம. திண்ணப்பன் செட்டியார் அவர்களும் வந்திருந்து ஆசி பெற்றார். பயணத்தின்போது களைப்பு ஏற்படாமல் இருக்கச் சில மந்திரங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்து அடியேனையும் வாழ்த்தியருளினார்.

இன்று ஓய்வு நாள் என்பதால், யாத்திரிகர்களில் சிலர் அவரவர் துணிகளைத் துவைத்து உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டனர்.

யாத்திரை பயணத் திட்டம் கடிதம் அனுப்புதல் -

ஆனால் எங்களில் சிலருக்கு மட்டும் நேற்றும் இன்றும் இரண்டுநாட்களும் நாள்முழுவதும் வேலையிருந்தது. குருசாமி அவர்கள், யாத்திரையின் போது தங்கும் இடங்களில் உள்ள அடியார்கள், அந்த ஊர்த் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல்துறை அதிகாரிகள், மற்றும் இதற்குமுன் குருசாமி பச்சைக்காவடிஅவர்களை வந்து சந்தித்தோர் என அனைவரது முகவரிகளையும் தட்டச்சு செய்து நகல் எடுத்துக் கொண்டு வந்திருந்தார். அத்துடன் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் முதலான மொழிகளில் பயணத்திட்டத்தையும் அச்சடித்துக் கொண்டு வந்திருந்தார்.



அந்தந்த முகவரிகளுக்கு உரிய மொழியில் உள்ள பயணத்திட்ட அறிவிப்பை பச்சை வர்ண உறையில் வைத்து, ஒட்டி, தபால்தலையும் ஒட்டி, அந்தக் கடிதங்களை மாநிலம் வாரியாகவும், தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் வாரியாகவும் பிரித்து அடுக்கினோம். இந்தப் பணி முடிந்த பின்னர், குருசாமி அவர்கள் அன்பர் ஒருவரிடம் இவற்றைக் கொடுத்துத் தபால்நிலையத்தில் சேர்க்கச் சொல்லி ஒப்படைத்தார்.

மாலைநேர வழிபாடு, ரொட்டி தேநீர், இரவு வழிபாடு, இரவு உணவு. ஓய்வு.

5 மற்றும் 6 ஆம் நாட்கள் - எனது அனுபவம்

நான் இதுபோன்று நடந்து பழக்கம் இல்லாத காரணத்தினால், எனக்கு மிகுந்த அசதியாக இருந்தது. ஜமீன்தார் அவர்கள் என்னை ஆசிர்வதித்ததும், ஐயா பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ஆச்சி அவர்களுடன் வந்திருந்து என்னை ஆசீர்வதித்துச் சென்றதும், ஐயா இராம. திண்ணப்பன் அவர்கள் என்னை வந்து பார்த்து ஆசிவழங்கிச் சென்றதும் மட்டுமே எனக்குத் தெம்பாக இருந்தது. மற்றபடி நான் எனது உடலால் மிகவும் சோர்ந்து போயிருந்தேன்.

காசி பாதயாத்திரை
(7ஆவது நாள்) வைகாசி 18 (01.06.2014) ஞாயிற்றுக் கிழமை.

தேவகோட்டை தர்மபரிபாலனசபையிலிருந்து புறப்பட்டு அமராவதிபுதூர், தேவகோட்டைசாலை வழியாகக் காரைக்குடி காசிசத்திரம் வந்து சேர்ந்தோம்.
பயணத் தூரம் 16 கி.மீ.

இன்றைய பயணம் சுமார் 16 கி.மீ. தொலைவுதான் என்பதால் எப்போதும் போல் இரவு 3.30 மணிக்குப் புறப்படாமல் 5.00 மணியளவில் புறப்பட்டு 9.30 மணியளவில் காரைக்குடி காசிசத்திரத்திற்கு வந்து சேர்ந்தோம். வழியில் அமராவதிபுதூர் கடந்ததும் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம்.

தேவகோட்டைசாலை இருப்புப் பாதையைக் கடந்ததும் சாலைக்குத் தெற்கே உள்ள கூட்டுறவு கட்டிடத்தில் காலை உணவு.

தொத்தமாடும் 3 சக்கர வண்டிக்காரரும்
(7 ஆம் நாள் - எனது அனுபவம்)

தொத்தமாடு - இன்று நடைப்பயணம் தொடங்கிய உடனேயே பலரும் வெயிலுக்கு முந்திச் சென்றுவிட வேண்டும் என்று வேகவேகமாக நடந்து சென்றனர். செருப்புக் கடித்துக் கால் பெருவிரலில் புண் ஏற்பட்டு அதன் காரணமாக மெதுவாக நடந்து, என்னுடன் வந்த சிவப்பா (எண் 21) அவர்களும் இன்று வேகமாக நடந்து சென்று விட்டார். ஆனால் தொத்தமாடாக மாறிப்போன நானோ மிகவும் மெதுவாகவே நடந்து வந்தேன். காலை நேரத்திலேயே வெயில் சுள்ளென்று முதுகில் அடிக்க ஆரம்பித்துவிட்டது.

யாத்திரை தொடங்கி 5நாட்கள் மட்டுமே நடந்துள்ளோம். 6ஆவது நாள் ஓய்வு. இப்போதே இப்படியிருக்கிறதே? நான் எப்படி 103 நாட்கள் நடந்து காசிக்குப் போகமுடியும் என்று ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தேன்.

ஆற்றல் ஓம்புமின் - கிட்டாதாயின் வெட்டென மற .... , தகுதிக்கு மீறி ஆசைப்படாதே .... , என்பன போன்ற பல பழமொழிகள் நினைவிற்கு வந்து என்னை அமுக்கின. இங்கேயே இப்படி யென்றால், இந்தி பேசத் தெரியாமல் மற்ற மாநிலங்களில் ஒத்தைமாடாக எப்படி நடந்து செல்வது? பாதிவழியில் என்னால் நடக்கமுடியவில்லை என்றால் எனக்கும் சிரமம், குருசாமிக்கும் சிரமம், மற்றபிற யாத்திரிகர்களுக்கும் சிரமம் ஆகுமே என்று நினைத்து வருந்தினேன். உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் சோர்ந்து போனேன். தேநீர் குடித்தால் பரவாயில்லை என்பது போல் தோன்றியது.

காரைக்குடியில் குடும்பத்தினரும் நண்பர்களும் என்னைக் காண வருவார்கள். அவர்களைக் கொண்டு குருசாமியிடம் மெதுவாக எடுத்துச் சொல்லி, யாத்திரையில் யாருக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் காரைக்குடியுடன் பாதயாத்திரையை நிறுத்திக் கொள்வோம் என்று முடிவு செய்தேன்.

விதி மீறல் - பாதயாத்திரையின் போது, தேநீர் ரொட்டி மிட்டாய் உட்பட கடைகளில் எதையும் வாங்கிச் சாப்பிடக் கூடாது. எது வேண்டு மானாலும் குருசாமியிடம் மட்டுமே கேட்கவேண்டும். அவர் வாங்கிக் கொடுப்பார்“ என்பது யாத்திரையில் முக்கியமான விதி. எனக்கோ மிகவும் சோர்வாக இருந்தது. தேநீர் குடித்தால் பரவாயில்லை என்பது போல் தோன்றியது. அன்னதான வண்டி இன்னும் வரவில்லை. அவர்கள் வந்தால் தான் தேநீரும் ரொட்டியும் கிடைக்கும்.

திரும்பிப் பார்த்தேன். குருசாமி அவர்கள் வெகுதொலைவில் எனக்குப் பின்னால் வருவது தெரிந்தது. நாம்தான் யாத்திரையை முடித்துக் கொள்ளப் போகிறோமே, அப்படியிருக்கக் கடையில் தேநீர் வாங்கிக் குடித்தால் என்ன? என்று மனத்தில் தோன்றியது. அருகில் அமராவதிபுதூர் டீக்கடை கண்ணில் தெரிந்தது. சற்று ஆறுதலாக இருந்தது. கடைக்கு எதிரே ஒரு ஆலமரம். அந்த ஆலமரத்தின் நிழலில் வந்து நின்று சற்று இளைப்பாறிச் சாலையைக் கடந்து டீக்கடைக்குச் செல்லத் தயாரானேன். முன்புபோல், ஒரே எட்டில் என்னால் இப்போது சாலையைக் கடக்க இயலாது என்பதை உணர்ந்திருந்தேன். சாலையைக் கடப்பதற்காக சாலையின் இருபுறமும் வாகனங்கள் ஏதும் வருகின்றனவா? எனப் பார்த்தேன்.

மூன்று சக்கர வண்டிக்காரர் - ஒரேயொருவர் மட்டும் மூன்றுசக்கர வண்டியைக் கையால் ஓட்டிக் கொண்டு எனக்குப் பின்னால் வந்து கொண்டிந்தார். அவரோ, கையால் மூன்றுசக்கர வண்டியை ஓட்டி வருகிறார், நாமோ நடக்க

முடியாமல் நடக்கிறோம், எனவே அவர் நம்மைக் கடந்து சென்றதும் நாம் சாலையைக் கடந்து செல்வோம் என்று நினைத்து நின்றேன். அவர் என்னைக் கடந்து செல்லாமல், என்னருகே வந்ததும் வண்டியை நிறுத்தி, நான் நின்ற மரநிழலில் அவரும் சற்று இளைப்பாறினார்.

ஒருசில நொடிகள் அவர் தாமதித்து இருந்தால், நான் சாலையைக் கடந்திருப்பேன். ஒருசில நொடிகள் நான் தாமதித்து இருந்தால், அவர் என்னைக் கடந்து சென்றிருப்பார்.

மிகவும் சோர்ந்து போயிருந்தார். குருட்டழுக்குப் பிடித்த ஆடை, வண்டியைச் சுற்றிலும் பாட்டில்களும் பாத்திரங்களும் துணிகளும் தொங்கிக் கொண்டிருந்தன. மூன்று சக்கர வண்டியின் முன்சக்கரம் சிறிது நெளிந்து கோட்டமாக இருந்தது. பிரம்பு ஒன்றைச் சாய்த்துக் கட்டி வைத்திருந்தார். சுமார் 65 வயது இருக்கும். வடநாட்டவர் போல் தோன்றினார்.

பையா, டீ சாப்பிடுகின்றீர்களா? எனக் கேட்டேன். முதலில் வேண்டாம் என்று தலையை ஆட்டினார். நான் எனக்காகச் சாப்பிடச் செல்கிறேன். அப்படியே ஒரு கப் உங்களுக்கும் வாங்கித் தருகிறேன். இதில் எனக்குச் சிரமம் ஒன்றும் இல்லை என்றேன். சிறிது நேர தயக்கத்திற்குப் பின், சரி என்று தலையை ஆட்டினார். தேநீர் வாங்கி வருவதற்காக வண்டியில் கட்டிவைத்திருந்த பாட்டில் ஒன்றைத் தேடி எடுத்தார். வண்டியைவிட்டுக் கீழே இறங்க முயற்சித்தார்.

<u>அதிர்ச்சி வைத்தியம்</u> - செயற்கைக் கால் ஒன்றை எடுத்து மாட்டினார். அதைப் பார்த்ததும் அப்படியே அதிர்ந்து போனோன், என் அதிர்ச்சி அடங்குவதற்குள் மற்றொரு செயற்கைக் காலை எடுத்து மற்றொரு காலில் மாட்டினார். அவருக்கு இரண்டு கால்களுமே முழங்காலுக்கீழே இல்லை, இதைப் பார்த்ததும் பெரிதும் அதிர்ந்து போனேன்.



(இந்தப் படம் இணையத்தில் இருந்து எடுக்கப்பட்டது. இதைப் போன்றதொரு வண்டியை ஓட்டி வந்தவரைத்தான் நான் சந்தித்தேன்.)

பையா, எங்கிருந்து வருகின்றீர்கள்? என்று கேட்டேன். இராமேசுவரத்தில் இருந்து வருவதாகக் கூறினார். அப்படியானால், எந்த ஊர் உங்களது சொந்த ஊர்? என்று கேட்டேன். “மேதில்லி” என்றார், அப்படியானால் ....? என்று சற்று இழுத்துக் கேட்டேன். தனக்கு வியாதி வந்து இரண்டு கால்களையும் இழந்து விட்டதாகவும், உயிர் பிழைத்தால் இராமேசுவரம் வந்து கும்பிடுகிறேன் என்று வேண்டிக் கொண்டதாகவும் கூறினார். அதன்படி வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக புதுதில்லியில் இருந்து இந்த வண்டியில் இராமேசுவரம் வந்து சாமிகும்பிட்டு விட்டு, இப்போது புதுதில்லிக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகச் சொன்னார். அவரது ஒவ்வொரு பதிலும் எனக்கு மிகப் பெரும் அதிர்ச்சிகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தது.

என்னடா இது, இரண்டு கால்களும் இல்லாத மனிதன் புதுதில்லியிலிருந்து இராமேசுவரம் வந்து சாமிகும்பிட்டுவிட்டுத் திரும்புகிறார். நமக்கோ எல்லாமும் நன்றாக உள்ளன, சாப்பாடு சவரட்டைனையும் பிரமாதமாக உள்ளது. நடந்துசெல்வதற்கு நமக்கு என்ன கேடு வந்தது? என்று நினைத்தேன். இப்போது, சற்று தொலைவில் அன்னதான வண்டியைச் சாலையோரம் நிறுத்தி, ஓட்டுநர் குருசாமியுடன் பேசிக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது.

அவ்வளவுதான், வேகவேகமாகச் சாலையைக்கடந்து சென்று ஒரு கப் டீ வாங்கிக் கொண்டுவந்து அந்த அன்பரிடம் கொடுத்தேன். பின்னால் வருபவர் எங்களது குருசாமி, எனவே நான் விடை பெற்றுக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு, வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

முன்பு இருந்த அலுப்பு சலிப்பு ஏதும் இப்போது என்னிடம் இல்லை. தொத்தல் மாடாக இருந்த நான், திடீரென மஞ்சுவிரட்டு மாடாக மாறி, வேகமாக துள்ளிக்குதித்து வேகமாக நடக்க ஆரம்பித்து விட்டேன். தேவகோட்டை சாலை தொடரிநிலையம் அருகே மற்ற எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். வேகவேகமாக நடந்து அவர்களுடன் சென்று சேர்ந்து விட்டேன். சற்று நேரத்தில் குருசாமி அவர்களும் வந்துவிட்டார்கள். காலை உணவை முடித்துக் கொண்டு, காரைக்குடி நோக்கி நடந்தோம். சிறிது நேரத்தில் காரைக்குடி நடராஜா திரையரங்கம் வந்து சேர்ந்து விட்டோம். குருசாமி அவர்கள் மட்டும் வரவேண்டும். அவர் வந்தவுடன் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து காசிச் சத்திரத்திற்குச் செல்ல வேண்டும். அதற்காகக் காத்திருந்தோம்.

குருசாமி வருகிறாரா? எனச் சாலையைப் பார்த்தேன். ஆனால் சாலையில் அந்த மூன்றுசக்கர வண்டிக்காரரர் வருவதைப் பார்த்தேன். அவரும் நாங்கள் அனைவரும் நின்று கொண்டிருந்த அதே வேப்பரத்தின் நிழலில் வந்து சேர்ந்து இளைப்பாறினார். உங்களது வண்டியைப் பழுது நீங்கித் தருகிறேன், அதன்பின் பயணத்தைத் தொடருங்கள் எனக் கூறினேன். “வேண்டாம் வேண்டாம்” என்ற பலமாகத் தலையை ஆட்டினார். இந்தியில் பேசுவதைக் கேட்ட அருகில் இருந்த ஆட்டோக்காரரர் வேகவேகமாக வந்து அவரிடம் அருமையாக இந்தியில் பேசினார். நாங்கள் செல்வதை எல்லாம் அவரிடம் அருமையாக இந்தியில் எடுத்துக் கூறினார். வண்டியை முழுவதும் சரிசெய்து, புதுவண்டிபோல் ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்றுகூறி பணத்தை ஆட்டோக்காரரரிடம் கொடுத்தேன். உடனிருந்த யாத்திரிகர்கள் சிலரும் பணம் கொடுத்தார்கள். அந்த வடநாட்டு யாத்திரிகர்கள் இந்த உதவியை ஏற்க மறுத்தார்.

குருசாமி அவர்கள் இப்போது அருகில் வந்து விட்டார். நாங்கள் அவருடன் சேர்ந்து புறப்படத் தயாரானோம். இவரது மூன்று சக்கர வண்டியை முற்றிலும் சரிசெய்து, புதுவண்டிபோல் ஆக்கி இவரை நல்லபடியாக வழியனுப்பி வைக்கிறேன் என்று ஆட்டோக்காரரர் எங்களுக்கு உத்தரவாதம் கொடுத்து பொறுப்பு ஏற்றுக் கொண்டு, எங்களை வழியனுப்பி வைத்தார்.

யாத்திரிகர்கள் பலரும் இந்த வடநாட்டுக்காரரர் பற்றியே பேசி இன்றைய பொழுதைக் கழித்தோம்.

இன்றைய பயணத் தூரம் 16 கி.மீ.

காசி பாதயாத்திரை (8 ஆவது நாள்)
வைகாசி 19 (02.06.2014) திங்கட் கிழமை.

காரைக்குடியிலிருந்து காலை 3.30 மணிக்கு புறப்பட்டோம்.



உ. சிறுவயலைச் சேர்ந்த திரு. செந்தில் நாதன் (எண் 8) மற்றும் திரு. மெய்யப்பன் (எண் 12) இருவரும் இந்த பாதயாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர். சிறுவயல் நகரத்தார் பலரும் குருசாமி பச்சைக்காவடி அவர்களை நேரில் சந்தித்து சிறுவயல் வழியாகக் குன்றக்குடிக்குச் செல்லுமாறு வேண்டுகோள் வைத்திருந்தனர். எனவே காரைக்குடியில் இருந்து கோவிலூர் வழியாகக் குன்றக்குடிக்குச் செல்லாமல், சிறுவயல் வழியாகக் குன்றக்குடி சென்றோம். சிறுவயலில் காலை 5.45 மணிக்கு, நகரத்தார்கள் யாத்திரிகர்களுக்கு வரவேற்பு அளித்தனர். அருள்மிகு பொன்னழகி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்து வைத்தனர். குருசாமி அவர்கள் நகரத்தார்களை ஆசிர்வதித்து பிரசாதம் வழங்கினார்.







உ. சிறுவயலில் இருந்து குன்றக்குடி செல்லும் வழியில் உள்ள ஸ்ரீ ஐநூற்றிவிநாயகர் கோயிலில் வழிபாடு செய்து கொண்டோம். அங்கிருந்து புறப்பட்ட சிறிது தொலைவிலேயே குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதன் கோபுரம் அருமையாகத் தெரிந்தது கண்டு வணங்கிக் கொண்டேன்.

குன்றக்குடி வழியாகச் செல்லும் போது, குன்றக்குடி மடத்தின் வாயிலில் நின்று வணங்கிக் கொண்டேன். அப்போது இறையருளால் தவத்திரு அடிகளாரை வணங்கும் பேறு பெற்றேன். அடிகளார் அவர்கள் என்னை ஆசிர்வதித்து பிரசாதம் வழங்கினார். (இந்த நிகழ்ச்சி நடைபெற்றது ஓர் அற்புதம் என்றே கூற வேண்டும், இது பற்றி விரிவாகக் கீழே எழுதியுள்ளேன்).



காலை 10.00 மணிக்கு பிள்ளையார்பட்டி வந்தோம். வழியில், எதேச்சையாக இராமசாமி தமிழ்க் கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் நா. வள்ளி அவர்கள் வந்து யாத்திரிகர்களைச் சந்தித்தார். குருசாமி அவர்களிடம் ஆசிபெற்றார். அம்மா வள்ளி அவர்கள் எனது முனைவர்பட்ட ஆய்வு நெறியாளர் ஆவார். அம்மா அவர்கள் என்னை ஆசிர்வதித்து வழியனுப்பி வைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் மனநிறைவாகவும் இருந்தது. 10.40 மணிக்கு வைரவன்பட்டி கோயில் அருகேயுள்ள நகரத்தார் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். வைரவன்பட்டி நகரத்தார் விடுதியில் யாத்திரிகர்களை வரவேற்று மதியஉணவும் இரவுஉணவும் வழங்கினர். வைரவன்பட்டி நகரத்தார் விடுதியில் தங்கல், ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 18 கி.மீ.

8 ஆம் நாள் - எனது அனுபவம்

முந்தைய நாட்களில் எனக்கு இருந்த உடல் அலுப்போ, மனச்சோர்வோ இப்போது இல்லை. இருந்தாலும் மற்றபிற யாத்திரிகர்களைப் போன்று வேகமாக என்னால் நடக்க இயலவில்லை.

குன்றக்குடிக்கு நடந்து சென்று கொண்டிருக்கும்போதே ஒரு குற்ற உணர்வு என் மனதில் தோன்றியது. குன்றக்குடி தவத்திரு அடிகளார் அவர்களது ஆசிகளைப் பெறவில்லையே என்று எண்ணம் எனக்கு வருத்தத்தை உண்டாக்கியது.

திருப்பூவணம் கோயிலமைப்பை ஆய்வு செய்து, “திருப்பூவணக்காசி” என்ற பெயரில் நூலாக்கம் செய்திருந்தேன். குன்றக்குடி தவத்திரு அடிகளார் அவர்கள் 24.09.2007 அன்று இந்த நூலைக் வெளியிட்டுச் சிறப்புச் செய்தார்கள். திருப்பூவணக்காசி என்ற பெயரில் நூல் எழுதி வெளியிடும்போது, காசிக்குப் பாதயாத்திரையாகச் சென்று வழிபட வேண்டுமென வேண்டிக் கொண்டேன். அந்த வேண்டுகோளின் பயனாகவே இந்தக் காசி பாதயாத்திரை சித்தித்தது.

குன்றக்குடியைக் கண்டு மனம்குன்றியது - குன்றக்குடி குருமகா சந்நிதானம் அவர்களைச் சந்தித்து, பாதயாத்திரை செல்வதற்கு அவரது ஆசிகளைப் பெறமுடியாமல் போனதே என்று மனம் வருந்தினேன். சிறிது வேகமாக நடந்தால், குன்றக்குடி மடத்தில் இருக்கும் யாரிடமாவது செய்தியைச் சொல்லிச் சென்றிடலாம் என்று எண்ணினேன். வேகமாக நடக்கத் தொடங்கினேன். என்னதான் நான் வேகமாக நடந்தாலும், எனக்கு முன்னால் நடந்தவர்களைப் பிடிக்க முடியவில்லை. குன்றக்குடி வந்துவிட்டோம்.

அடிவாரத்தில் கோயில் நுழைவாயில் நின்றுகொண்டு, அருள்மிகு சண்முகநாதனை நினைந்து வணங்கிக் கொண்டு நடந்தேன். குன்றக்குடி மடத்தின் வாயில் அருகே செல்லும் போது, மற்ற யாத்திரிகர்கள் எல்லோரும் வேகவேகமாக என்னைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். செய்தி சொல்லிச் செல்வோம் என்று நினைத்தால், மடத்தின் வாயிலிலும் உள்ளே மண்டபத்திலும் யாரையும் காணோம்.



குருமகா சந்நிதானம் முன் குறுகினேன் - சரி நமக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதான், என்று எண்ணிக் கொண்டே மடத்தின் வாயிலில் நின்றுகொண்டு ஒரு கும்பிடு போட்டேன். அப்போது, மடத்தின் வாயிலைக் கடந்து குருமகா சந்நிதானம் அவர்கள் மடத்தின் உள்ளே சென்றார். எனக்கோ மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இப்போதுதானே குருமகா சந்நிதானத்தை நினைத்துக் கும்பிட்டோம். இதோ, அவரே மடத்தின் உள்ளே சென்று கொண்டிருக்கிறாரே என்று வியந்து, அடிகளாரைப் பின் தொடர்ந்தேன். அடிகளார் அவர்களின் பின்னே வந்த மடத்தின் சிப்பந்தி ஒருவர் என்னைத் தடுத்தார். சாமி பூஜையை முடித்துக் கொண்டு சிறிது நேரத்தில் வந்துவிடுவார். இங்கேயே இருங்கள் என்று சொன்னார்.

அடிகளார் அவர்கள் நிச்சயம் நம்மைப் பார்த்திருப்பார்கள். ஒருவேளை காவிஉடையில் நாம் இருப்பதால் அடையாளம் தெரியாமல் போய்விட்டதோ, என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அடிகளார் அவர்கள் சிறிது நேரத்திலே பூஜையை முடித்துவிட்டு வந்துவிட்டார்கள். அடிகளாரின் அடிகளில் விழுந்து வணங்கி எழுந்தேன். அடிகளார் அவர்கள் ஆச்சரியத்துடன், இது என்ன இந்தக்கோலம் என்பது போன்று வியந்து என்னைப் பார்த்தார்கள்.

திருவருள் - காசிக்குப் பாதயாத்திரை செல்கிறேன் என்று சொன்னேன். அதைக் கேட்டதும் பெரிதும் மகிழ்ந்து விபூதி பிரசாதம் கொடுத்தார்கள். உங்களது குருசாமி யார்? மொத்தம் எத்தனைபேர் செல்கின்றீர்கள்? எத்தனை நாள் பயணம்? எங்கே தங்குவீர்கள்? என்ற விபரங்கள் எல்லாம் மிகவும் ஆர்வமாகக் கேட்டறிந்து கொண்டார்கள். அவரது உதவியாளரிடம் கும்பாபிஷேகப் பிரசாதம் 20 பைகள் கொண்டுவரச் சொல்லி என்னிடம் கொடுத்து, குருசாமி முதலான யாத்திரிகர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுங்கள் என்று கூறி ஆசிர்வதித்தார்கள்.

மடத்தின் வாயிலில் நின்றுகொண்டு கைகளை உயர்த்திக் கும்பிட்ட அந்த ஒரு நொடிப் பொழுது நான் முந்தியிருந்தால், அடிகளார் அவர்களைப் பார்த்திருக்க மாட்டேன். சிறிது நான் பிந்தி வந்திருந்தாலும் அடிகளார் அவர்களை நான் பார்த்திருக்க மாட்டேன். மிகவும் கனகச்சிதமாகச் சொல்லி வைத்ததுபோல், நொடிப்பொழுது நேரத்தில் அடிகளார் அவர்களைச் சந்தித்து ஆசிபெற்ற

பெரும்பேற்றை அருளிய அருள்மிகு சண்முகநாதனை நினைந்து வணங்கிக் கொண்டு பிள்ளையார்பட்டி நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் சற்று தொலைவில் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார். 20 பிரசாதப் பைகளையும் தூக்கிக்கொண்டு வேகமாக நடப்பது எனக்குச் சற்று சிரமமாக இருந்தது.

குருவருள் - சற்று தூரம் சென்று கொண்டிருக்கும் போது, என்னைக் கடந்து சென்ற வாகனம் (Car) ஒன்று நின்றது. அதிலிருந்து அம்மா வள்ளி அவர்கள் இறங்கியதைக் கண்டதும் மிகவும் அதிசயித்துப் போனேன். அம்மாவிடம் குருசாமிஅவர்கள் நடந்து செல்வதைச் சுட்டிக்காட்டினேன். அம்மா அவர்களும் குருசாமி அவர்களிடம் சென்று ஆசிபெற்றார்கள். இன்றை தினம் எனக்குச் சற்றும் எதிர்பாரதவிதமாகத் திருவளும் குருவருளும் கிடைத்தது. குன்றக்குடி மலையைப் பார்த்து நினைத்து வேண்டியது வேண்டியபடியே உடனடியாக நடைபெற்றது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. எப்படி இப்படி யெல்லாம் நடைபெற்றது என்று இன்றளவும் என்னால் நம்ப முடியவில்லை.

குன்றக்குடி குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய கும்பாபிஷேகப் பிரசாதப் பைகளைக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பத்திரப்படுத்தி வைத்திருந்து, யாத்திரையின் நிறைவு நாளில் யாத்திரிகர்கள் அனைவருக்கும் கொடுத்து ஆசிர்வதித்தார்.

குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதன் திருவருள் நம் அனைவருக்கும் ஆகுக.
……………………………..

காசி பாதயாத்திரை (9 ஆவது நாள்)
வைகாசி 20 (03.06.2014) செவ்வாய்க் கிழமை.

03.06.2014 அன்று இரவு 2.40 மணிக்கு. புறப்பட்டோம். திருப்புத்தூர் கண்டவராயன்பட்டி வழியாக மகிபாலன்பட்டி சென்றடைந்தோம்.





வழியில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் திரு உருவம் கண்டு வணங்கிக் கொண்டோம்.

கண்டவராயன்பட்டியிலும் மகிபாலம்பட்டியிலும் நகரத்தார் எங்களை வரவேற்று உபசரித்தனர்.





மகிபாலன்பட்டியிலிருந்து புறப்பட்டு, நெற்குப்பை, வேந்தன்பட்டி, மேலைச்சிவபுரி சென்று சேர்ந்தோம். ஞானம் கலியாணமண்டபத்தில் தங்கல்.

இன்றைய பயணம் சுமார் 32 கி.மீ.

04.06.2014 காசி யாத்திரை (10 ஆவது நாள்)
வைகாசி 21 (04.06.2014) புதன் கிழமை.

மேலைச்சிவபுரியிலிருந்து புறப்பட்டு புதுப்பட்டி வழியாகப் பொன்னமராவதி வந்து சேர்ந்து, வலைபட்டியில் உள்ள குருசாமி பச்சைக்காவடி அவர்களது வீட்டிற்குச் சென்று சேர்ந்தோம்.

இன்றைய பயணம் சுமார் 7 கி.மீ.

05.06.2014 காசி யாத்திரை (11 ஆவது நாள்)
வைகாசி 22 வியாழக் கிழமை.

வலையபட்டியில் அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்மன் பங்காளிகள் படைப்பு வீட்டில் தங்கியிருந்தோம். நகரத்தார் பலரும் வந்திருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர். காலை உணவும், மதிய உணவும் வழங்கிச் சிறப்புச் செய்தனர்.



பாதயாத்திரைக்கான ஏற்பாடுகள்

இங்கு அன்னதான வண்டியில் இருந்த அனைத்து உணவுப் பொருட்களையும் இறக்கி அவற்றை வகைப்படுத்தி எந்தெந்த உணவுப் பொருள் தேவையாக இருக்கும் என்பதை யெல்லாம் கணக்குப் பார்த்து, வரவிருக்கும் நாட்களில் யாத்திரைக்கு வேண்டிய அனைத்து உணவுப் பொருட்களையும் சேகரித்து அவற்றை அன்னதான வண்டியில் பத்திரமாக அடைந்து வைத்தனர். யாத்திரிகர்கள் பயன்படுத்தும் பொருட்களை அவரவர் பைகளில் வைத்து, அந்தப் பைகளை யெல்லாம் ஒரு மூடையாகக் கட்டி அன்னதான வண்டியில் அடைந்து வைத்தனர். இதனால் நேற்றும் இன்றும் குருசாமி அவர்களுக்கு ஓயாத வேலையாக இருந்தது.

சமையல்காரர் உண்டாக்கிய சங்கடம்

சமையல்காரர்கள் மொத்தம் மூன்று பேர். தலைமைச் சமையல்காரர், உதவிச் சமையல்காரர், மற்றும் பாத்திரங்களைக் கழுவ வைக்க என ஒருவர். இதில் தலைமைச் சமையல்காரருக்குச் சில மாதங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இருந்து மருத்துமனையில் சேர்ந்து அறுவைச் சிகிச்சை செய்துள்ளார். இந்தத் தகவலை அவர் குருசாமியிடம் சொல்லாமல் மறைத்துள்ளார். இன்று உதவிச் சமையல்காரர் இதைக் குருசாமியிடம் சொல்லிவிட்டார். இந்த யாத்திரை மிகவும் கடுமையான பயணத்தைக் கொண்டது. வடநாட்டில் போய்க் கொண்டிருக்கும் போது உடல்நிலை சரியில்லாமல் போனால் வைத்தியம் பார்ப்பது சிரமம் என்பதைத் தலைமைச் சமையல்காரருக்குக் குருசாமி எடுத்துச் சொல்லி விளங்க வைத்தார். அவரது மகனுக்குப் போன் செய்து, அவன் வந்ததும் அவனிடமும் விளக்கிச் சொல்லி அவனது தந்தையாரை அவர்களது வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு செய்தார். தலைமைச் சமையல்காரர் இதுவரை வேலைபார்த்த நாட்களைக் கணக்குப் பார்த்து அதற்கான சம்பளத்தைக் கொடுத்தார். மேலும் அவர் மூலமாகவே

வேறொரு சமையல்காரரை யாத்திரைக்கு ஏற்பாடு செய்தார். இதிலேயே குருசாமிக்கு நேரமும் காலமும் போனது. (சமையல்காரரைப் படம் எடுக்க வாய்ப்பில்லாமல் போனது)

கடந்த ஆண்டு காசிபாதயாத்திரையின் போது கலந்து கொண்ட அடியார் ஒருவர் வந்திருந்து குருசாமிக்கு சற்று ஒத்தாசையாகச் செயல்பட்டார்.

05.06.2014 காசி பாதயாத்திரை (11 ஆவது நாள் மாலை) வைகாசி 22 வியாழக் கிழமை.

பயணத் திட்டத்தில் ஒரு சிறு மாற்றம். நாளை 06.06.2014 காலை பொன்னமராவதி வலையபட்டியிலிருந்து புறப்பட்டு கொப்பனாபட்டி, குழிப்பிறை, பனையப்பட்டி வழியாக நற்சாந்துபட்டி சென்று தங்குவது என்பது பழைய பயணத் திட்டம். இந்தப் பயணத்திட்டத்தில் ஒரு சிறு மாறுதலாக இன்று 05.06.2014 மதிய உணவிற்குப் பின் மாலை 5.00 மணிக்குப் படைப்பு வீட்டிலிருந்து யாத்திரை புறப்பட்டு கொண்ணம்பட்டி சென்று இரவு தங்கியிருந்து, நாளை காலை கொண்ணம்பட்டியிலிருந்து புறப்பட்டு நற்சாந்துபட்டி செல்லலாம் என்றும் குருசாமி அவர்கள் பயணத் திட்டத்தைச் சிறிது மாற்றி அமைத்தார்கள்.

புதிய பயணத்திட்டத்தின்படி, இன்று 05.06.2014 மாலை 5.00 மணிக்கு யாத்திரை தொடங்கியது. வலையபட்டி ஸ்ரீ துர்க்கை படைப்பு வீட்டிலிருந்து புறப்பட்டு பொன்னமராவதியைக் கடக்கும் போது நன்கு மழை பெய்யத் துவங்கியது. ஐயா பச்சைக்காவடி அவர்கள் அன்னதான வண்டியை நிறுத்தி அதிலிருந்து குடைகளை எடுத்து யாத்திரிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு குடை வழங்கினார்கள். குடையைப் பிடித்துக்கொண்டு மழையில் நடக்க ஆரம்பித்தோம். மழை பெய்த காரணத்தினால் சாலையில் நடந்தால் நடையன் வழுக்கியது. சாலையை விட்டுக் கீழே இறங்கினால் சேறும் சகதியும் நடையனில் ஒட்டிக் கொண்டு வேட்டி யெல்லாம் பட்டது.

கொன்னையூர் வந்து சேர்ந்தோம் இங்கே மழை இல்லை.
அருள்மிகு கொன்னையூர் மாரியம்மன் கோயில் வழிபாடு. நல்லதொரு தரிசனம்.

கோயிலில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்திற் கெல்லாம் மழைமேகம் சூழ்ந்து இருட்டி விட்டது. மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதி. பாதை சரியாகத் தெரியவில்லை. இருட்டுவதற்கு முன்னதாகவே சென்று சேர்ந்துவிடுவோம் என்ற கணிப்பில் கையில் டார்ச் லைட்டை யாரும் எடுத்து வைத்துக் கொள்ளவில்லை.



கொண்ணம்பட்டி அருள்மிகு ஸ்ரீ பழனியாண்டவர் திருமண மண்டபம் வந்து சேர்ந்தோம். மண்டபத்தில் இருந்த ஒருவர், மண்பட்டத்தைத் திறப்பதற்காகச் சாவி வாங்கி வருவதற்காகச் சென்றுவிட்டார். நாங்கள் யாத்திரிகர்கள் அனைவரும் மண்படம் வாசலில் நின்று கொண்டிருந்தோம்.

கனமழை பெய்ய ஆரம்பித்தது. காற்றும் மழையும் மிகவும் அதிகமாக இருந்தன. அனேகமாக அனைத்து யாத்திரிகர்களும் நனைந்து விட்டோம். சுமார் 1மணி நேரத்திற்கும் கூடுதலாக மழை பெய்து ஓய்த பின்னரே, சாவியைக் கொண்டு வந்து மண்டபத்தைத் திறந்தனர். மழைத் தண்ணீர் ஜன்னல் கதவுகளின் வழியாக மண்டபத்தின் உள்ளே வந்து மண்டபம் முழுவதும் தண்ணீராக இருந்தது. மின்சாரமும் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சமையல் முடிந்து சாப்பாடும் முடிந்தது.

மண்டபத்தில் ஆங்காங்கே தேங்கிக் கிடந்த தண்ணீரைத் துடைத்து அவரவர்க்கு கிடைத்த இடங்களில் படுத்துத் தூங்கினோம். மின்சாரம் இல்லாமல் இருளாகவும், கனமழை பெய்திருந்ததால் கூதலாகவும் இருந்தது.

இன்றைய பயணம் சுமார் 8 கி.மீ.

06.06.2014 காசி யாத்திரை (12 ஆவது நாள்)
வைகாசி 23 வெள்ளிக் கிழமை.



06.06.2014 இரவு 3.45 மணிக்கு கொண்ணம்பட்டி ஸ்ரீ பழனியாண்டவர் திருமண மண்டபத்திலிருந்து புறப்பட்டோம். நேற்றைய சூறைக்காற்றிலும் ஒருமணி நேரத்திற்கும் கூடுதலாகப் பெய்த மழையின் காரணமாகவும், வழி நெடுகிலும் மரங்களும் கிளைகளும் விழுந்து கிடந்தன.

காலை 6.00 மணிக்கு கூழிப்பிறை (குழிப்பிறை என்று அழைக்கப்படுகிறது) அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். கோயிலில் வழிபாடு. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம்.



8.00 மணிக்கு பனையபட்டி.

வழியில் புல்லான் சாது அவர்களின் ஜீவசாமி உள்ள திசையைப் பார்த்து வணங்கிகொண்டே பயணத்தைத் தொடர்ந்தோம்.








10.00 மணிக்கு நச்சாந்துபட்டி சிவன்கோயில் எதிரேயுள்ள நகரத்தார் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். குழிப்பிறை, பனையபட்டி மற்றும் நச்சாந்துபட்டி இந்த ஊர்களில் எல்லாம் நகரத்தார்களும் பொது மக்களும் கூடி நின்று வரவேற்பு அளித்து வழிபாடு செய்வித்தனர். ஓய்வு. 06.06.2014 கொண்ணம்பட்டி நச்சாந்துபட்டி ***பயணம் சுமார் 17 கி.மீ.***

07.06.2014 காசி யாத்திரை (13 ஆவது நாள்) வைகாசி 24 சனிக் கிழமை.

07.06.2014 இரவு 3.40 க்கு நச்சாந்துபட்டியிலிருந்து புறப்பட்டோம். பேரையூர் மற்றும் நமணசமுத்திரம் ஊர்கள் வழியாக வெள்ளாறு மற்றும் குண்டாறு களைக் கடந்து புதுக்கோட்டைக்கு 8.00 மணிக்கு வந்து சேர்ந்தோம். நகரத்தார்களும் பொதுமக்களும் ஊர் எல்லையில் ஒன்று கூடி மேளதாளங்கள் வைத்து வரவேற்பு வழங்கி அழைத்துச் சென்றனர்.







ஸ்ரீ ருக்மணி தாயார் சமேத ஸ்ரீவிட்டல் பாண்டுரெங்கர் ஆலயத்தின் கோபுரக் கட்டுமானப் பணிகளைக் குருசாமி அவர்கள் பார்வையிட்டுத் தாயாரையும் பெருமாளையும் வணங்கித் திருப்பணிக்குழுவினரை ஆசிர்வதித்தார். இயந்திரங்களின் உதவியுடன் தெப்பக்குளம் தூர்வாரும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.







புதுக்கோட்டை நாட்டுக்கோட்டை நகரத்தார் திருமண மஹாலில் சிறப்பான வரவேற்புக் கொடுத்தனர். குருசாமி அவர்களிடம் நகரத்தார் பலரும் ஆசிகள் பெற்றுப் பிரசாதம் வாங்கிக் கொண்டனர்.





புதுக்கோட்டை காசிஸ்ரீ ஆறுமுகம் அவர்கள் அவரது இல்லத்திற்கு யாத்திரிகர்களை அழைத்துச் சென்று சிறப்பானதொரு வரவேற்பு கொடுத்தார். குருசாமி அவர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் பாதபூஜை செய்து வரவேற்று விருந்தளித்தார்.

ஊடகத்தினர் வந்திருந்து குருசாமி அவர்களைப் பேட்டி எடுத்தனர். மழைவேண்டி மக்கள்நலன் வேண்டி இந்தப் பாதயாத்திரையை மேற்கொள்வதாகக் குருசாமி அவர்கள் தெரிவித்தார்.





புதுக்கோட்டை நாட்டுக்கோட்டை நகரத்தார் திருமண மஹாலில் சிறப்பான வரவேற்புக் கொடுத்தனர். குருசாமி அவர்களிடம் நகரத்தார் பலரும் ஆசிகள் பெற்றுப் பிரசாதம் வாங்கிக் கொண்டனர்.



இன்றைய பயணம் சுமார் 15 கி.மீ.

08.06.2014 காசி யாத்திரை (14 ஆவது நாள்) வைகாசி 25 ஞாயிற்றுக் கிழமை.



இரவு 3.10 மணிக்கு புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்டோம். நார்த்தாமலை குளத்தூர் வழியாக 10.05 மணிக்கு கீரனூர் வந்து சேர்ந்தோம்.

மேனாள் சட்டமன்ற உறுப்பினரும், மேனாள் சேர்மன் மற்றும் மேனாள் ஊராட்சி மன்றத் தலைவருமான ஐயா M. சத்தியமூர்த்தி அவர்களின் குடும்பத்தினர் யாத்திரிகர்களை வரவேற்று அவர்களது இல்லத்தில் தங்கிடத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

அரசியல் செய்து சொத்துச் சேர்க்க ஆசைப்படாத உயர்ந்த உள்ளம். பேரும் புகழும் நிலைத்து நிற்கிறது. மிகவும் எளிமையான அன்பான குடும்பத்தினர். ஒரு சிறிய அறையில் அந்தக் குடுப்பத்தினர் அனைவரும் தங்கிக் கொண்டு மற்ற எல்லா அறைகளையும் யாத்திரிகர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து வசதியாகத் தங்க வைத்தனர். குடும்பப்

பெண்கள் சமையல்காரருக்கு உதவியாக இருந்தனர்.
மதிய உணவு. இரவு உணவு. ஓய்வு.
இன்றைய பயணம் சுமார் 23 கி.மீ.

எனது இன்றைய பயண அனுபவம் -_ காலை நேரத்திலேயே கடுமையான வெயில். கீரனூரில் முனிவர் சுகர் தவம் செய்த இடத்தில் சிவன்கோயில் எழுப்பப் பெற்றுள்ளது. மிகவும் பழமையான வரலாற்றையும் கல்வெட்டுகளையும் கொண்ட சிவாலயம். எத்தனையோ முறை திருச்சிராப்பள்ளி செல்லும் போதெல்லாம் இங்கே இறங்கிக் கும்பிட்டுச் செல்லவேண்டுமென நினைத்துக் கொள்வேன். ஆனால் இரவு நேரத்தில் திருச்சி செல்வதாலும், திரும்பும்போது இரவு ஆகிவிடுவதாலும் இந்தக் கோயிலுக்குச் செல்ல முடியாமல் போய்விடும்.



இந்தப் பாதயாத்திரையில் கீரனூரில் தங்கியிருக்கும் போது, மாலைநேர ஓய்வு நேரத்தில் கோயிலுக்குச் சென்று வணங்கி வரவேண்டும் என எண்ணிருந்தேன். அதற்கு வாய்ப்புக் கிடைக்காமல் போனது எனக்கு மிகவும் மன வருத்தமாகவே இருந்தது. ஆனால் எனது வேண்டுதல் அடுத்த 2015ஆம் ஆண்டு நிறைவேறியது. இது பற்றிய விரிவான பதிவை 2015ஆம் ஆண்டு பயணக்கட்டுரையில் தனியாக எழுதுகிறேன்.

மருந்தாளுநர் - காசிஸ்ரீ மாதவன் (வரிசை எண் 3) அவர்களுக்கு மதியத்திலிருந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. மாலையில் சிறிது காய்ச்சல் அடித்தது. குருசாமி அவர்கள் என்னைக் கூப்பிட்டு வண்டியில் உள்ள மாத்திரைகள் உள்ள பையிலிருந்து அவருக்குச் சில மாத்திரைகளை கொடுத்துச் சாப்பிடச் செய்தார். இன்றிலிருந்து யாத்திரைக்கான மருந்துப் பையை எடுத்துக் கொண்டு வந்துகொடுப்பதும், மீண்டும் அந்த மருந்துப் பையை அன்னதான வண்டியில் வைப்பதும் எனது பொறுப்பாகிப் போனது. யாத்திரிகர்களுக்கு மருந்தாளுநர் ஆனேன்.



09.06.2014 காசி யாத்திரை (15 ஆவது நாள்)
வைகாசி 26 திங்கட் கிழமை.

இரவு 2.40 மணிக்கு கீரனூரிலிருந்து புறப்பட்டு 8.10க்கு திருச்சிராப்பள்ளி விமான நிலையம் வந்து சேர்ந்தோம். விமானநிலையம் எதிரேயுள்ள பிள்ளையார் கோயிலில் குருஜி பச்சைக்காவடியின் அடியார்களால் காலை உணவு வழங்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு 10.40 மணிக்கு PL.A. MARUTHI SERVICE CENTRE, CANTONMENT, வந்து சேர்ந்தோம்.



காசிஶ்ரீ அங்கமுத்து அவர்களின் நண்பர்கள் யாத்திரிகளுக்குச் சிறப்புச் செய்து வரவேற்றனர். பத்திரிக்கை நண்பர்கள் சிலர் வந்திருந்தனர். அவர்கள் இந்த யாத்திரையின் நோக்கம் பற்றிக் கேட்டறிந்து செய்தி வெளியிடுவதாகக் கூறிச் சென்றனர்.
மதிய உணவு.



வானொலிச் செய்தி - குருசாமி அவர்களின் அனுமதி பெற்றுத் திருவெறும்பூர் காசிஶ்ரீ கோ.சண்முகவேலு அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு அகிலஇந்திய வானொலி நிலையத்திற்குச் சென்றார். நிலைய அதிகாரிகளிடம் இராமேசுவரம் - காசி பாதயாத்திரை பற்றிய தகவல்களைக் கூறினார். செய்திப்பிரிவில் இருந்து நிருபர் ஒருவர் வந்து எல்லாத் தகவல்களையும் காசிஶ்ரீ சண்முகவேலு அவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர். அன்று அகிலஇந்திய வானொலி நிலையம் பன்பலை ஒலிபரப்பில் மாலை 3.00 மணி செய்திகளில் பாதயாத்திரை பற்றிய செய்தியை அறிவித்தார்கள். ஓய்வு.
இன்றைய பயணம் சுமார் 29 கி.மீ.

10.06.2014 காசி யாத்திரை (16 ஆவது நாள்)
வைகாசி 27 செவ்வாய்க் கிழமை.

இன்று திருச்சியில் தங்கல். ஓய்வு..
காசிஶ்ரீ பச்சைக்காவடி அவர்களின் பாதயாத்திரைக்கு அன்னதானவண்டியை PL.A. நிறுவனத்தினர் கொடுத்து உதவி வருகின்றனர். இன்றைய தினம் யாத்திரிகர்கள் அனைவரையும் PL.A. நிறுவனத்திற்கு அழைத்து மரியாதை செய்தனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் சிறப்பு வழிபாடு செய்தார். அதைத் தொடர்ந்து யாத்திரிகர்களுக்கு விருந்து அளித்தனர்.

11.06.2014 காசி யாத்திரை (17 ஆவது நாள்)
வைகாசி 28 புதன் கிழமை.

இரவு மணி 3.10க்கு திருச்சிராப்பள்ளியிலிருந்து புறப்பட்டோம். காலை 7.15 மணிக்கு அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் வழிபாடு. சமயபுரம் மாரியம்மன்கோயிலில் அதிகாலையிலேயே பக்தர் கூட்டம் இருந்தது. இருந்தாலும் குருசாமி அவர்கள் யாத்திரிகர்களை அழைத்துக் கொண்டு தர்மதரிசனம் வழியாகவே சென்றார். நல்லதொரு தரிசனம்.

வழிபாடு முடித்து விட்டு நொச்சியம் செல்லும் பாதையில் பயணம் மேற்கொண்டோம்.



சாலையோரம் இருந்த இசுலாமானவர் வீட்டு வளாகத்தில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டுக் கொள்ள அனுமதி கேட்டார். அவரும் மகிழ்ந்து, நன்றாக அமர்ந்து சாப்பிட்டுச் செல்லுங்கள் என அனுமதி கொடுத்துக் கைகழுவத் தண்ணீர் வசதியும் செய்து கொடுத்தார்.

அங்கிருந்து 9.15 மணிக்குப் புறப்பட்டு 11.00 மணிக்கு நொச்சியம் சிவன்கோயில் வந்து சேர்ந்தோம். அருள்மிகு பாலாம்பிகை சமேத சுந்தரேசுவரர் உச்சி கால பூஜை வழிபாடு. மதிய உணவு. ஓய்வு. இன்றும் கடுமையான வெயில். ஆங்காங்கே மரநிழலில் நின்று நின்று வந்து சேர்ந்தோம்.

ஒரு பெண் சாமியார் மஞ்சள்சேலை உடுத்தி “காலில் நடையன் இல்லாமல்” அந்த வேகாத வெயிலில் நொச்சியத்திலிருந்து மணச்சநல்லூர் சென்று கொண்டிருந்தார். சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்குச் செல்கிறார் என்று நினைத்துக் கொண்டேன். அவர் அந்தக் கடுமையான சூட்டில் வெறும்காலுடன் நடந்து செல்வதைப் பார்த்த எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

இன்றைய பயணம் சுமார் 24 கி.மீ.



12.06.2014 காசி யாத்திரை (18 ஆவது நாள்)
வைகாசி 29 வியாழக் கிழமை.

இரவு 2.15 மணிக்கு நொச்சியம் சிவன் கோயிலில் இருந்து புறப்பட்டோம். காலை 5.50 மணிக்கு குணசீலம் வந்து வந்து சேர்ந்தோம்.

மிகவும் புராதனமான கோயில். அருள்மிகு ஹேமவர்ணேசுவரி அம்பாள் சமேத அருள்மிகு தார்மீகநாதர் திருக்கோயில். மிகவும் தொன்மையான சுயம்புலிங்கம். தட்சிணாமூர்த்தி, காலபைரவர், நவகிரகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பழமையான நந்தி உள்ளது. அருள் நிறைந்த கோயில்.

அருள்மிகு பிரசன்னவெங்கடாஜலபதி திருக்கோயில் கோபுரதரிசனம். 108 திவ்ய தேசங்களில் ஒன்று. பாவநாச தீர்த்த தரிசனம். ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம்.

8.00 மணிக்கு அய்யம்பாளையம் வந்து சேர்ந்தோம். அருள்மிகு முருகன் கோயிலில் ஒரு திருமணம் நடைபெற்றது. எனவே சாலை ஓரம் கள்ளர் தெருவில் உள்ள அம்மன் கோயிலில் அமர்ந்து. காலை உணவு.

10.00 மணிக்கு முசிறி வந்து சேர்ந்தோம். அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் உச்சி கால பூஜை வழிபாடு. மதிய உணவு. அடியார் ஒருவர் குடும்பத்துடன் வந்து யாத்திரிகர்களுக்கு வேட்டியும் துண்டும் தானம் வழங்கினார்.

காவேரியின் வடகரையோரம் கிராமங்களில் சாலையோரங்களில் நீர்த்தொட்டிகள் இருந்தன. தண்ணீர் மிகவும் சுவையாகவும் சுத்தமாகவும் இருந்தது. ஓய்வு. ***இன்றைய பயணம் சுமாம் 30 கி.மீ.***

13.06.2014 காசி யாத்திரை (19 ஆவது நாள்) வைகாசி 30 வெள்ளிக் கிழமை.

இன்று காலை 3.30 மணிக்கு முசிறியிலிருந்து புறப்பட்டு 6.00 மணிக்கு தொட்டியம் வந்து சேர்ந்தோம். அடியார் திரு. ராஜசேகரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் யாத்திரிகர்களை வரவேற்று பாதபூஜைகள் செய்து வழிபட்டனர். குருஜி பச்சைக்காவடி அவர்கள் அவர்களை ஆசிர்வதித்து பிரசாதம் வழங்கினார். காலை உணவு.

தொட்டியத்திலிருந்து புறப்பட்டு ஏலூர்வந்து சேர்ந்தோம். ஏழூர் என்றும் ஏளூர் என்றும் எழுதி உள்ளனர்.





ஏலூர்பட்டியில் அடியார் இல்லத்தில் வழிபாடு. இரவு உணவு. ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 21 கி.மீ.

காசி யாத்திரை - 20 ஆவது நாள், வைகாசி 31 (14.06.2014) சனிக்கிழமை.

இன்று காலை 3.00 மணிக்கு ஏலூருப்பட்டியிலிருந்து புறப்பட்டு 6.00 மணிக்கு வளையபட்டி வந்து சேர்ந்தோம். தேநீர் சாப்பிட்டோம். நாமக்கல் ஊர் எல்லையில் மரத்தடியில் காலை உணவு. 9.15க்கு நாமக்கல் பார்வதி கல்யாண மண்டபம் வந்து சேர்ந்தோம். ஓய்வு. மதிய உணவிற்குப் பின்னர், மாலை 3.00 மணிக்கு மண்டபத்திலிருந்து புறப்பட்டோம்.



மாலை 4.10 மணிக்கு நாமக்கல் ஆஞ்சனேயர் கோயிலை வந்தடைந்தோம். நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் கோயிலில் நல்லதொரு வழிபாடு. அடியார்களுக்கு மிகவும் மனநிறைவான வழிபாடு.

ஸ்ரீ ஆஞ்சனேயரை வழிபட்டு, ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் கோயில் வாயில் வழியாக நடந்து சென்றோம். இருட்டுவதற்கு முன் சேலம் சென்றுவிட வேண்டும் என்ற காரணத்தினால் அருள்மிகு ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் கோயிலுக்குள் சென்று வழிபட நேரம் இல்லாமல் போனது. நுழைவாயில் மற்றும் விமானத்தை வணங்கிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.

சேலம் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பயணித்து பொம்மைக்குட்டை மேட்டில் உள்ள லட்சுமி கல்யாண மண்டபத்தைச் சுமார் 6.30 மணி அளவில் அடைந்தோம்.

மண்டபம் காற்றோட்டமாக நல்ல வசதியாக இருந்தது. அடியார்கள் சிலர் குடும்பத்தினருடன் வந்து யாத்திரிகர்களுக்கு இரவு உணவு அளித்து மகிழ்ந்தனர். இரவு உணவு முடிந்தவுடன், யாத்திரிகர்கள் அனைவரும் பயணக் களைப்பால் படுத்துத் தூங்க ஆரம்பித்தனர். ஆனால் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் வந்திருந்த அடியார்களை நலம் விசாரித்து அவர்களை ஆசிர்வதித்துப் பிரசாதம் வழங்கினார்.

காவல்துறையிலிருந்து ஒருவர் வந்திருந்து யாத்திரை பற்றிய செய்திகளைக் கேட்டறிந்து குறிப்புகள் எடுத்துச் சென்றார். குருசாமி அவர்கள் அவரிடம் பயணக்குறிப்புகளைக் கொடுத்து அவரையும் ஆசிர்வதித்துப் பிரசாதமும் வழங்கி அனுப்பி வைத்தார். ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 35 கி.மீ.



21ஆம் நாள், ஆனி 1 (15.06.2014) ஞாயிற்றுக் கிழமை,

லட்சுமி கல்யாண மண்டபத்திலிருந்து புறப்பட்டு புதுச்சத்திரம் வழியாக அண்டலூர்கேட் அருகேயுள்ள சக்திபீடம் வந்து சேர்ந்தோம். சிறிது நேரத்தில் அன்னதான வண்டி வந்து சேர்ந்தது. காலை நேர ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம். தேநீர் சாப்பிட்டு முடித்தவுடன் அந்தப் பேருந்து நிறுத்தத்திலிருந்து புறப்பட்டு அண்டலூர்கேட் வழியாக முத்துக்காளிப்பட்டி அருகேயுள்ள சக்திபீடம் வந்து சேர்ந்தோம்.





ஸ்ரீ சிவ சக்தி பீடம், பிரசன்ன ஆருட வல்லுநர் சிம்மம் ஆர்.யூ. மேகநாதன் அவர்கள் அடியார்களை வரவேற்று உபசரித்தார். மிகவும் இயற்கையான மரங்கள் சூழ்ந்த இடத்தில் ஸ்ரீ சிவ சத்தி பீடம் இருந்தது. அடியார்கள் அனைவரும் பயணக் களைப்புத் தீரக் குளித்தனர். திரு மேகநாதன் அவர்கள் அவரது வீட்டில் வைத்திருந்த பச்சைக்கல் விநாயகர், பச்சைக்கல் சிவலிங்கம், மற்றும் பல்வேறு பளிங்குக் கற்களையும், படிக மாலைகளையும் காட்டினார்.



திரு மேகநாதன் அவர்களின் நண்பர் ஒருவரும் குருசாமி அவர்களைக் காண வந்திருந்தார். அவர் நெற்றி யெல்லாம் சந்தனம் பூசிக் குங்கும் வைத்து மிகவும் அருள் நிறைந்தவராகக் காட்சியளித்தார். அவரிடமிருந்த வலம்புரிச் சங்கு முதலாகப் பல்வேறு படிகமாலைகளையும் பளிங்குக் கற்களையும் கொண்டு வந்திருந்து ஒரு ஜமுக்காளத்தை விரித்து அதில் அழகாக அடுக்கி வைத்துக் காட்சிப் படுத்திக் குருசாமி அவர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் காட்டினார்.

யாத்திரிகர் காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் மதிய நேர உணவு தயாரிப்பதில் பெரிதும் உதவியாக இருந்து வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். ஓய்வு. மதிய உணவு.

மாலை தேநீர் நேரத்தில், திரு மேகநாதன் அவர்களின் நண்பர் யாத்திரிகர்களிடம் இராமேசுவரம்-காசி பாதயாத்திரையின் சிறப்பு பற்றியும், குருவருளால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் வெகுவாக எடுத்துக் கூறினார். யாத்திரை முடியும்வரை குருசாமி அவர்கள் என்ன சொல்கிறாரோ அதை அப்படியே செய்யுங்கள். குருசாமியின் வழிகாட்டுதல் ஒன்றே இந்த யாத்திரையைப் புனிதமாக்கும் என்று கூறினார். அவரது பேச்சின் முடிவில் குருசாமி அவர்கள் அனைவருக்கும் விபூதி பிரசாதம் வழங்கினார்.

இரவு உணவு. திரு மேகநாதன் அவர்களும் அவரது குடும்பத்தினரும் யாத்திரிகர்களுடன் சேர்ந்து உணவு உண்டனர். ஓய்வு.

இன்றைய பயண தூரம் 21 கி.மீ.

16.06.2014 22ஆவது நாள் பயணம்

இன்று இரவு 2.50 மணிக்கு சக்தி பீடத்திலிருந்து புறப்பட்டோம்.

கடல்கோள் பற்றித் தமிழ் இலக்கியங்களில் பதிவுகள் உள்ளன. திருவிளையாடற் புராணத்தில் மதுரைவரை வந்த சுனாமியைப் பற்றிய குறிப்புகள் நான்கு இடத்தில் உள்ளன. குமரிக்கோடும் பஃறுளியாறும் பன்மலை யடுக்கமும் அழிந்தபோது உண்டான கடல்வெள்ளத்தால் (பெருஞ் சுனாமியினால்) தமிழகம் ஆந்திரம் கர்நாடகம் எங்கும் பேரழிவு ஏற்பட்டுள்ளது. கிரானைட் மலைகளில் மேல் படிந்துள்ள காரையும் செம்மண்ணும் கடல்கோளால் உண்டானவை என்பது எனது கருத்து.

6.00 மணிக்கு மல்லூர் வந்து சேர்ந்தோம். அன்பர் ஒருவர் அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று பாதபூஜை செய்து தேநீர் வழங்கி உபசரித்தார். அங்கிருந்து புறப்பட்டு 8.00 மணிக்கு "கெஜ்ஜல் நாயக்கன்பட்டி""யை அடுத்துள்ள பொய்மான்கரடு வந்து சேர்ந்தோம். இங்கும் ஒரு அடியார் யாத்திரிகர்களை வரவேற்றார். அன்னதான வண்டியும் வந்து சேர்ந்தது. காலை உணவு.

11.30 மணிக்கு சேலம் தெய்வீகம் கல்யாண மண்டபம் வந்து சேர்ந்தோம். ஓய்வு. மதிய உணவு. அடியார் ஒருவர் அன்னதானம் வழங்கினார். ஓய்வு. அன்னதானவண்டியில் உணவுப்பொருட்களைச் சரியாக அடுக்கி வைத்தல். மாலை தேநீர். இரவு உணவு. ஓய்வு.

இன்றைய பயண தூரம் சுமார் 28 கி.மீ.

17.06.2014 9:34 மணி,
http://epaper.newindianexpress.com/286680/The-New-Indian-Express-Tiruchy/11.06.2014#page/5/2

17.06.2014
http://www.thehindu.com/todays-paper/tp-national/tp-tamilnadu/on-a-110day-journey-on-foot-for-peace/article6121591.ece#.U5_uO64nLuM.gmail

----

இன்று 23ஆம் நாள் - ஆனி 3 (17.06.2014) செவ்வாய்க் கிழமை,

இன்று ஒருநாள் முழுதும் ஓய்வு. யாத்திரிகர்கள் அனைவரும் சேலம் தெய்வீகம் கல்யாண மண்டத்திலேயே தங்கியிருந்தோம். மற்றபிற யாத்திரிகர்கள் ஓய்வு எடுத்தாலும், குருசாமி அவர்களுக்கும் எங்களில் சிலருக்கும் நாள் முழுதும் ஓயாத வேலை இருந்தது.

மொத்தம் 7 மாநிலங்களின் வழியாகப் பயணம். இதில் தமிழ்நாடு தவிர்த்து, ஆந்திரா தெலுங்கானா கர்நாடகா மகாராஷ்டிரம் மத்தியப்பிரதேசம் உத்திரப்பிரதேசம் என 6 மாநிலங்கள். இந்த 6 மாநிலங்களிலும் தேசியநெடுஞ்சாலை எண் 7 வழியாகப் பயணம். எனவே இந்தப் பாதை அமைந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், மற்றுமுள்ள அடியார்கள் அனைவருக்கும் கடிதம் அனுப்பும் வேலை நடைபெற்றது. சுமார் 300க்கும் மேற்பட்ட முகவரிகளை ஒட்டி, தபால்தலை ஒட்டி, மாநிலம் வாரியாகப் பிரித்துக் கட்டி வைத்தோம் காசிஸ்ரீ சரவணன் அவர்கள் அன்னதான வண்டியில் இருந்து கடிதங்கள், கவர், முகவரி, தபால்வில்லைகள், ஒட்டுவதற்கான பசை, மற்றும் கத்திரிக்கோல் இவற்றை அன்னதானவண்டியில் இருந்து எடுத்து வரவும், கொண்டு போய் வைப்பதற்கும் இங்குமங்கும் நடந்து கொண்டே இருந்தார். இவர் இன்று மண்படத்திற்குள் நடந்த தொலைவே ஒருநாள் பயண தூரம் அளவிற்கு இருக்கும்.

குருசாமி அவர்களின் அடியார் ஒருவர் வந்திருந்து அனைத்துக் கடிதங்களையும் தபால்நிலையத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகப் பெற்றுச் சென்றார்.



பத்திரிக்கைச் செய்திகள் - யாத்திரை பற்றிய செய்திகள் “நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்” மற்றும் “தி இந்து” நாளிதழ்களில் வெளியாகி இருந்தது. யாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் அவரவர் அலைபேசியில் இந்தச் செய்திகளைப் படித்து மகிழ்ந்து அவரவர் நண்பர்களிடமும் குடும்பத்தினர்களிடமும் தகவல் தெரிவித்து மகிழ்ந்தனர்.

இன்று 24 ஆம் நாள் - ஆனி 4 (18.06.2014) புதன் கிழமை,

இரவு 2.50 மணிக்கு சேலம் தெய்வீகம் திருமண மண்டபத்திலிருந்து புறப்பட்டோம். வழக்கம்போல் காலைநேர வழிபாடு முடித்து, ஹார்லிக்ஸ் ரொட்டி சாப்பிட்டுவிட்டு பயணத்தைத் தொடங்கினோம். காலை 6.00 மணிக்குச் சுங்கச்சாவடி வந்து சேர்ந்தோம். ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம்.

காலை 8.00 மணிக்கு ஓமலூர் அக்ரஹாரம் அருள்மிகு தைலாம்பிகை சமேத வைத்தீசுவரன் கோயிலுக்குச் சென்று சேர்ந்தோம். காலை உணவு. ஓய்வு. மதியம் 1.30 மணிக்கு மதிய உணவு.

மதியம் 2.30 மணிக்கு அருள்மிகு தைலாம்பிகை சமேத வைத்தீசுவரன் கோயிலில் இருந்து புறப்பட்டோம்.



மாலை மணி 4.30 அளவில் சாலையோரம் இருந்து ஒரு வீட்டில் அமர்ந்து தீவட்டிப்பட்டியில் தங்குவதற்கான முகவரி அடங்கிய கடிதத்தையும், அங்கே தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் அன்பரின் அலைபேசி எண்ணையும் தேடிப்பார்த்து எடுத்தார். சிறிது நேரத்தில் அன்னதான வண்டியும் வந்து சேர்ந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம். குருசாமி அவர்கள் அந்த வீட்டில் இருந்தவர்களுக்கும் ரொட்டியும் தேநீரும் கொடுத்தார். சிறிது நேரம் அங்கே அமர்ந்திருந்துவிட்டுப் பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.



மாலை 5.00 மணி. பூசாரிப்பட்டியில் ஒரு சிறு குன்றின்மேல் கோயில் ஒன்று இருந்தது. அந்தத் தெய்வத்தை வணங்கிக் கொண்டு நடையைத் தொடர்ந்தோம்.



மாலை 6.30 மணிக்கு தீவட்டிப்பட்டி S.V.T. திருமணமண்டபம் வந்து சேர்ந்தோம். ஊரார் ஒன்று கூடி நின்று வரவேற்பு அளித்தனர். குருசாமி அவர்களுக்குப் பாதபூஜை செய்து வழிபட்டனர். குருசாமி அவர்களை ஆசிர்வதித்தார். இரவு ஊரார் அன்னதானம் அளித்தனர். உணவிற்குப் பிறகு, யாத்திரிகர்கள் அனைவரும் அசதி மிகுதியால் அயர்ந்து தூங்கி விட்டனர்.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவரைக் காண வந்திருந்தோரின் நலம் விசாரித்தார். அவர்களது குறைகள் நீங்கச் சில வழிகாட்டுதல்களை அருளிச் செய்தார்.

இன்றைய பயணம் 29 கி.மீ.

பாதயாத்திரை - சிந்தனைகள்

பாதயாத்திரைகள் - _2014ஆம் ஆண்டு இராமேசுவரத்திலிருந்து காசி வரை 110 நாட்களில் 7 மாநிலங்களைக் கடந்து 2464 கி.மீ. நடைப் பயணம். 2015ஆம் ஆண்டு நாக்பூரிலிருந்து காசிவரை 40 நாட்களில் 700 கி.மீ. நடைப் பயணம்.

2016 ஆம் ஆண்டு பிள்ளையார்பட்டியிலிருந்து புறப்பட்டு திருத்தணிகை வரை அறுபடைவீடு பாதயாத்திரை 60 நாட்களில் 1126 கி.மீ. நடைப் பயணம். 2017 ஆம் ஆண்டு பிள்ளையார்பட்டியிலிருந்து புறப்பட்டு திருத்தணிகை வரை அறுபடைவீடு பாதயாத்திரை 60 நாட்களில் 1126 கி.மீ. நடைப் பயணம்./
மொத்தம் 2464 + 1126 = 3590 கி.மீ. நடைப் பயணம்.



சிந்தனை - விவசாய நிலத்தில்தான் பயிரவேண்டும் என்ற அவசியம் இல்லை. சும்மா கிடக்கும் சாலையோரங்களிலேயே பயிரிடலாம். பெரும் பலனை அடையலாம்.

இந்தியா முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் நீளம் சுமார் 2,00,000 கி.மீ. எவ்வளவு மழை பெய்தாலும் சிறிதளவுத் தண்ணீர்கூடச் சாலையில் தேங்கி நிற்காதவாறு வடிகால் வசதியுடன் சாலையை அமைத்துள்ளனர். சாலையில் விழும் மழைத் தண்ணீரெல்லாம் வழிந்தோடி விடுகிறது. இவ்வாறு சாலை யோரங்களில், சிறுமழை பெய்தாலும் சிறிதளவு தண்ணீர் நிற்கும் இடங்களி லெல்லாம் பெரும்பூசணி விதையை ஊன்றி வைக்கலாம். ஊன்றிட இயலாவிட்டால் சும்மா விதைத்து விடலாம்.

இவ்வாறு செய்தால் சுமார் 4 மாதங்களில் பூசணிக்காய் காய்த்துச் சாலையோர மெங்கும் நிறைந்து கிடக்கும். பெரும்பூசணிக்கு நீர்மேலாண்மை என்பது தேவையில்லாதது. அதுவாகவே கிடைக்கும் நீரைக் கொண்டு வளர்ந்து படர்ந்து விடும். பாதுகாப்புக் கருதி, சாலையோரங்களில் யாரும் ஆடுமாடுகளை மேய்ப்பதும் இல்லை. அப்படியே மனிதர்களோ மிருகங்களோ இதைச் சாப்பிட்டாலும் நஷ்டம் ஏதுமில்லை. பெரிய முதலீடு ஏதும் செய்யாமல், நான்கு மாதங்களில் ஓராண்டிற்கான விளைச்சல் கிடைத்துவிடும். இதையும் சும்மா வீட்டில் வைத்திருந்தாலே போதும், சுமார் 6 மாதங்களுக்கும் மேலாகக் கெட்டுப்போகாமல் அப்படியே இருக்கும்.

எனவே, எப்படிப் பார்த்தாலும், முதலீடு தேவையில்லை, தண்ணீர் தேவையில்லை, வேலி பாதுகாப்புத் தேவையில்லை, சேமித்து வைப்பதற்கான வசதி ஏதும் தேவையில்லை. ஆனால் உற்பத்தியோ அதிகமாக இருக்கும், ஓராண்டிற்கு காய்கறித் தேவையைப் பெரிதும் பூர்த்தி செய்து விடும்..

காசு கொடுத்துத்தான் காய்கறி வாங்க வேண்டும் என்ற நிலைமையைக் கணிசமாக மாற்றி யமைத்திடலாம்.🙃

இன்று 25ஆம் நாள் - ஆனி 5 (19.06.2014) வியாழக் கிழமை,

காலை 2.50 மணிக்கு புறப்பட ஆயத்தம் ஆனோம். வழக்கம்போல் காலைநேர வழிபாடு முடித்து, ஹார்லிக்ஸ் ரொட்டி சாப்பிட்டுவிட்டு பயணத்தைத் தொடங்கினோம்.

ஒவ்வொரு நாளும் குருசாமி பச்சைக்காவடி அவர்கள், அன்னதான வண்டியின் முன் அனைத்து யாத்திரிகர்களையும் நிற்கச் செய்து, யாத்திரிகர்களுடன் அன்னதான வண்டியையும் சுற்றி வந்து சூடம் காட்டித் தேங்காய் உடைத்துத்தான் யாத்திரை புறப்படுவார். இன்று இவ்வாறு செய்யும்போது, யாத்திரிகர்கள் இருவர் வரவில்லை. நேற்று இரவு அன்பர் அளித்த உணவு அவர்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை போலும். அவர்கள் வந்துசேர்ந்து புறப்படும் போது மணி 3.40 ஆகிவிட்டது.

6.00 மணிக்கு தொப்பூர் வந்து சேர்ந்தோம்.
சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம்.



6.26 மணி



தொப்பூர் மலைப்பகுதியைக் கடக்க சிரமமாக இருந்தது. குருசாமி பச்சைக்காவடி அவர்கள் மிகவும் மெதுவாகவே மலையேறி வந்தார்.

காலை 7.12 மணி மலைமீது சாலையோரம் உள்ள அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி கோயிலை வணங்கிக் கொண்டோம். இந்தக் கோயில்வரை பாதை ஏற்றமாக இருந்தது. இனிமேல் இறக்கமாகச் செல்லும். அதனால் நடப்பதில் இனிச் சிரமம் இல்லை.

புதிதாகச் சாலை போடப்படுவதற்கு முன் இந்த இடத்தை லாரிகளும் பேருந்துகளும் கடந்து செல்வது மிகவும் சிரமமாக இருந்துள்ளது. அந்நாட்களில் இந்த ஆஞ்சநேயர்கோயிலில் வாகன ஓட்டுநர்களும் பயணிகளும் கூட்டமாக நின்று வழிபடுவர். இப்போது, சாலை அகலப்படுத்தப்பட்டு இருவழிச் சாலையாக மாற்றப்பட்ட பின்னர், ஓரிரு நிமிடங்கள் நின்று கும்பிட்டுவிட்டுச் செல்கின்றனர்.

காலை 9.00 மணிக்கு டோல்கேட் சென்று சேர்ந்தோம். அங்கே காலை உணவு சாப்பிட்டோம். அனைவருக்கும் குளுக்கோஸ் வழங்கப்பட்டது.

11.30 க்கு நல்லம்பள்ளி வந்து சேர்ந்தோம். 1.30 க்கு மதிய உணவு. ஓய்வு. 3.00 மணிக்கு நல்லம்பள்ளியில் இருந்து புறப்பட்டு தருமபுரிக்கு நடக்கத் தொடங்கினோம்.

மாலை 6.00 மணிக்கு தருமபுரி வந்து சேர்ந்தோம். கடைவீதி அருகேயுள்ள ஸ்ரீ அபிராமி மஹாலில் தங்கினோம். தருமபுரி ஊரார் சிறப்பான வரவேற்பு அளித்து குருசாமியை வழிபட்டனர். தருமபுரி அன்பர்கள் பலரும் குடும்பம் குடும்பமாக வந்திருந்து குருசாமி அவர்களிடம் ஆசிபெற்றுச் சென்றனர். இரவு உணவு.

இன்று யாத்திரிகர்களுக்கு சத்து (விட்டமின்) மாத்திரைகள் வழங்கப்பட்டன. ஓய்வு. ***இன்றைய பயணம் சுமார் 35 கி.மீ.***

இன்று 26ஆம் நாள் - ஆனி 6 (20.06.2014) வெள்ளிக் கிழமை,

இன்று முழுதும் ஓய்வு.

தருமபுரி கடைவீதி அருகேயுள்ள ஸ்ரீ அபிராமி மஹாலில் தங்கியிருந்தோம். இன்றும் தருமபுரி அன்பர்கள் பலரும் குடும்பம் குடும்பமாக வந்திருந்து குருசாமி அவர்களிடம் ஆசிபெற்றுச் சென்றனர்.



அருகில் உள்ள முருகன் கோயிலுக்குச் சென்று யாத்திரிகர்கள் வழிபாடு செய்து கொண்டனர்.

இன்று 27ஆம் நாள் - ஆனி 7 (21.06.2014) சனிக் கிழமை,

காலை 3.10 மணிக்கு வழக்கம்போல் தினசரிவழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுத் தருமபுரியிலிருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.

இரவு 3.10 மணிக்குப் புறப்பட்ட காரணத்தினால் ரொட்டியும் தேநீரும் சாப்பிடலாம் என்று பெரியாம்பட்டி சாலையோரம் யாத்திரிகர்கள் அனைவரும் காத்திருந்தோம். சிலர் அயர்ந்து தூங்கிவிட்டனர். ஆனால் அன்னதானவண்டி சற்று காலதாமதமாகக் காலை 6.30 மணிக்கு வந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்ட பின்னர் அங்கிருந்து காலை 6.45 மணி அளவில் புறப்பட்டோம்.

காலை மணி 7.10 அளவில் பெரியாம் பட்டி வழியாகச் சென்றோம். காலை 7.39 மணி பூலாப்பட்டி மற்றும் நாகனம்பட்டி விலக்குப்பாதைகளில் சாலையோரம் மாம்பழக்கடைகள் நிறைய இருந்தன. விதவிதமான மாம்பழங்கள் அடுக்கி வைத்து வியாபரம் செய்து கொண்டிருந்தனர். காலை நேரத்திலேயே வியாபரம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. தேசிய நெடுஞ்சாலையில் செல்வோர் தங்களது வாகனங்களை நிறுத்தி மாம்பழங்கள் வாங்கிச் சென்றனர்.



காலை 9.26 மணி காரிமங்கலம் B.C.R. மெட்ரிக்குலேசன் பள்ளி நிர்வாகத்தினர் ஊர் எல்லையில் வந்து நின்று சிறப்பான வரவேற்பு அளித்து குருஜியை வழிபட்டனர். குருஜி அவர்களை ஆசிர்வதித்தார். காலை மணி 9.30 க்கு பள்ளி வளாகத்திற்கு வந்து சேர்ந்தோம். காலை உணவு. அனைவருக்கும் குளுக்கோஸ் வழங்கப்பட்டது. ஓய்வு.

மதியம் 3.00 மணிக்கு காரிமங்கலம் B.C.R. மெட்ரிக்குலேசன் பள்ளியிலிருந்து புறப்பட்டு நடைப்பயணம் மேற்கொண்டோம்/ பொம்மசமுத்திரம் விலக்கு, ஜெகதாப் விலக்கு, பையூர் வழியாகக் காவேரிப்பட்டினம் S.M. கலியாணி மண்டபத்திற்கு மாலை 6.30 மணிக்கு வந்து சேர்ந்தோம் . இரவு உணவு . ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 36 கி.மீ.

அன்னையின் திருவருள்
கோடியை மீட்டுக் கொடுத்த அன்னைமீனாட்சி

சேலத்திற்கு அருகே மிகப்பெரிய கிரானைட் வியாபாரி ஒருவர் இருக்கிறார். மதுரைக்கு அருகே உலகமகா கிரானைட் வியாபாரி ஒருவர் இருக்கிறார். மதுரைக் காரருக்குக் குறிந்த நாளில் குறிப்பிட்ட அளவு கிரானைட் ஏற்றுமதி செய்ய வேண்டிய நிர்பந்தம். சேலத்துக்காரரின் உதவியை நாடியுள்ளார். பெருமதிப்பிலான கிரானைட் கைமாறியது, குறித்த நாளில் குறிப்பிட்டபடி வெளிநாடும் சென்று சேர்ந்தது.

இன்று அல்லது நாளை கிரானைட் விற்ற பணம் வந்து சேரும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார் சேலத்துக்காரர். ஆனால் பணம் வந்து சேரவில்லை. இவருக்குப் பணம் கொடுக்க வேண்டிய மதுரைக்காரர் வழக்குகளில் சிக்குண்ட காரணத்தினால் அவரால் குறிப்பிட்டபடி பணத்தைக் கொடுக்க இயலவில்லை. பெரும் பணம் வராத காரணத்தினால் மிகவும் கவலை கொண்ட சேலத்து வியாபாரி, குருசாமி பச்சைக்காவடி அவர்களைச் சந்தித்துத் தனது கவலையைத் தெரிவித்துள்ளார். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் அவரிடம்,

நீங்கள் மதுரை சென்று, அதிகாலை பூசையில் அன்னை அருள்மிகு மீனாட்சியையும் அருள்மிகு சோமசுந்தரேசுவரரையும் வணங்கிக் கொண்டு, பணம் கிடைக்க வேண்டுமென வேண்டிக் கொள்ளுங்கள். கோயிலில் இருந்து நேராக அந்த மதுரை கிரானைட் வியாபாரியின் வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்துப் பணத்தைக் கேளுங்கள் என்று அருள்வாக்கு கூறியுள்ளார். சேலத்துக் காரரும் அப்படியே செய்துள்ளார். அன்னை அருள்மிகு மீனாட்சியின் திருவருளால் பணம் முழுமையும் அன்றைய தினமே கிடைத்துவிட்டது. அந்த சேலத்து வியாபாரியும் குருசாமி பச்சைக்காவடி அவர்களை இன்று வந்து சந்தித்து ஆசிபெற்றுச் சென்றார். (குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசிபெற வந்த அன்பர் ஒருவர் சொன்னது இது)

இன்று 28ஆம் நாள் - ஆனி 8 (22.06.2014) ஞாயிற்றுக் கிழமை.


காவேரிபட்டிணத்திலிருந்து இரவு 2.45 மணிக்கு புறப்படத் தயாரானோம். ஆனால் மின்சாரம் தடைபட்டது. அதனால் எங்களது பயணமும் தடைபட்டது. மின்சாரம் வந்த பின்பு காலை மணி 4.10க்கு வழக்கம்போல் தினசரிவழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டோம்.



6.00 மணிக்கு அவதானப்பட்டி அருள்மிகு மாரியம்மன் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். கோயிலில் தீபம் காட்டி பொங்கல் பிரசாதம் வழங்கப்பட்டது. இது ஒரு மனநெகிழ்ச்சியான அனுபவம். இதுபற்றித் தனியாக எழுதுகிறேன்.

கிருஷ்ணகிரி செல்லும் வழியில், சாலையோரம் காலை மணி 6.50க்கு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம்.

காலை 7.20 மணிக்கு கிருஷ்ணனகிரி ஐயப்பன் கோயில் வந்து அடைந்தோம். கோயில் வளாகத்தில் காலை உணவு. அனைவருக்கும் குளுக்கோஸ் வழங்கப்பட்டது. ஶ்ரீ ஐயப்ப பக்தர்கள் பலரும், பொது மக்களும் வந்து குருஜியை வழிபட்டனர். குருஜி அவர்களை ஆசிர்வதித்தார். மதிய உணவு. அதன்பின்னர் ஐயப்பன் கோயிலில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



மாலை 4.20 மணி

கடல்கோள் (சுனாமி) - தேசிய நெடுஞ்சாலையை அகலப் படுத்துவதற்காக மலையை வெட்டி யெடுத்துள்ளனர். இவ்வாறு மலை வெட்டப்பட்டுள்ள பகுதியில், கிரானைட் பாறைகளுக்கு இடையே மண்படிந்து உள்ளதைக் காணமுடிந்தது. கடல்கோள் (சுனாமி) உண்டாகி பஃறுளி ஆறும் பன்மலை யடுக்கமும் (லட்சத்தீவுக் கூட்டமும்) அழிந்தபோது உண்டான கடல்வெள்ளத்தால் தென்னிந்தியா முழுவதும் அழிந்துள்ளது. அப்போது கடல்வெள்ளத்தால் அடித்துவரப்பட்ட மண் இப்படிப் பாறை இடுக்களில் படிந்துள்ளது என்பது எனது கருத்து. இது குறித்த கட்டுரைகளை எழுதிப் பதிவு செய்துள்ளேன்.
http://theory-of-tsunamis-kalairajan.blogspot.com/

குருபராபள்ளி அருகே சாலையோரம் உள்ள சமுதாயக் கூடத்தில் தங்கினோம். யாத்திரிகர்கள் குளிப்பதற்கு வசதியாகத் தொட்டி நிறையத் தண்ணீர் இருந்தது. அனைவரும் அலுப்புத்தீரக் குளித்தனர்.

இரவு உணவு. ஓய்வு. ***இன்றைய பயணம் சுமார் 31 கி.மீ.***

எல்லாச் சாலைகளும் ரோம் நோக்கிச் செல்கின்றன -

இராமேசுவரம் காசி பாதயாத்திரை - 28ஆம் நாள் - ஆனி 8 (22.06.2014) 110 நாட்களில் 7 மாநிலங்கள் வழியாக 2464 கி.மீ. பாதயாத்திரையாகப் பயணம் செய்த போது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவம்.

எல்லாச் சாலைகளும் ரோம் நகரத்தை நோக்கிச் செல்கின்றன("All Roads Lead to Rome") என்பார்கள். ஆனால் உண்மையில், இந்தியாவில் ஒவ்வொரு சாலையும் அருகில் உள்ள கோயிலுக்குத்தான் செல்லும். இராமேசுவரம் - காசி பாதயாத்திரையின் போது, சில கோயில்களில் தங்கிச் சென்றோம். சாலையோரம் உள்ள பல கோயில்களின் வாயிலில் நின்று வணங்கிச் சென்றோம். கோயிலுக்கு உள்ளே சென்று வணங்கினால் காலதாமதம் ஆகிவிடும் என்பதால் வழியில் உள்ள

எந்தவொரு கோயிலுக்கு உள்ளேயும் சென்று யாத்திரிகர்கள் வணங்கியது இல்லை.

இன்று 28 ஆம் நாள் - ஆனி 8 (22.06.2014) ஞாயிற்றுக் கிழமை.

காவேரிபட்டிணத்திலிருந்து அதிகாலை பாதயாத்திரை புறப்பட்டு 6.00 மணி அளவில் அவதானப்பட்டி அருள்மிகு மாரியம்மன் கோயில் வழியாகச் சென்றோம். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் இந்தக் கோயிலில் மட்டும் கோயிலுக்கு உள்ளே சென்றார். குருசாமி அவர்கள் கோயிலுக்கு உள்ளே சென்ற காரணத்தினால் அவருடன் நடந்து வந்த காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களும், சரவணன் அவர்களும், அடியேனும் கோயிலுக்குள் சென்றோம்.

அந்த அதிகாலைப் பொழுதிலேயே, அடியார் ஒருவரின் குடும்பத்தினர் கோயிலைக் கழுவிவிட்டுக் கோலம்போட்டுப் பொங்கல் வைத்து வழிபாடு செய்து கொண்டிருந்தனர்.

அருள்மிகு மாரியம்மனுக்குத் தீபம் காட்டும் நேரத்தில் மிகவும் கனகச்சிதமாக குருசாமி பச்சைக்காவடி அவர்கள் சென்று சந்நிதி முன் நின்று தீபம் பார்த்து வணங்கினார். நாங்களும் வணங்கிக் கொண்டோம். கோயிலைச் சுற்றி வந்தோம். கோயிலை விட்டு வெளியே செல்லும் போது நைவேதியம் செய்த பொங்கலை முதன்முதலாகக் குருசாமி அவர்களுக்கு கொடுத்து, அதன்பின்னர் எங்களுக்கும் கொடுத்து, மற்ற பிறருக்கும் கொடுத்தார்கள்.

இந்தக் கோயிலில் எல்லா நாளும் கூட்டம் அதிகமாக இருக்குமாம். அதிலும் குறிப்பாக ஞாயிறு செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் கூட்டம் மிக அதிகமாக இருக்குமாம். கோயிலுக்குள் சென்று தீபம்பார்த்துச் சுற்றிவந்து பிரசாதம் வாங்கிக் கொண்டு வெளியே வர வேண்டும் என்றால் குறைந்தது பத்துப்பதினைந்து நிமிட நேரம் ஆகிவிடுமாம்.

ஆனால் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கோயிலுக்குள் சென்று சந்நிதி முன் நின்ற அந்த நொடிப் பொழுது நேரத்தில் அபிஷேகம் அலங்காரம் நைவேத்தியம் முடிந்து தீபம் காட்டியதும், சந்நிதியை வலம் வந்து முடித்துக் கோயிலுக்கு வெளியே செல்ல முயன்ற அந்த நொடிப்பொழுது நேரத்தில் நைவேத்தியப் பொங்கலைக் குருசாமி அவர்களுக்கு முதலாவதாகக் கொடுத்ததும் ஆச்சரியமாக அற்புதமாக இருந்தது. அபிஷேக அலங்காரத்திற்கு முன்பே கோயிலுக்குள் சென்றிருந்தால், சந்நிதியில் திரை போட்டிருப்பார்கள். அபிஷேக அலங்காரம் முடிந்து வழிபாடு நடைபெறும் நேரம் வரை, குறைந்தது 15 நிமிட நேரமாவது காத்திருக்கும்படி ஆகியிருக்கும். ஆனால் 3 நிமிட நேரத்திலேயே அன்னை மாரியம்மன் எங்களுக்கு அனைத்தையும் அருளிச் செய்தார்.

அருள்மிகு மாரியம்மனின் திருவருள் கிடைத்த இந்த நிகழ்ச்சியினால் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பெரிதும் மனம் நெகிழ்ந்து போனார். பாதயாத்திரைக்கு அன்னை அருள் புரிந்துள்ளாள் என்று புளகாங்கிதம் அடைந்து போனார்.

கோயிலை விட்டு வெளியே வரும்போது, அடியார் ஒருவர் புதிதாக வாங்கி வந்திருந்த இருசக்கர வாகனத்திற்கு மாலை யணிவித்து வழிபாடு செய்து கொண்டிருந்தார். இந்தச் சாலையில் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் இந்த அம்மனை வழிபட்ட பின்னரே தங்களது பயணத்தைத் தொடர்கின்றனர்.

அவதானப்பட்டி அருள்மிகு மாரியம்மன் திருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர் திருவருளும், காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவரும் நம் அனைவருக்கும் ஆகுக.

23.06.2014 குருசாமி பச்சைக்காவடி அவர்களின் காசி யாத்திரை தினத்தந்தி செய்தி.

http://epaper.dailythanthi.com/showxml.aspx?id=16296636&code=1728

இன்று 29ஆம் நாள் - ஆனி 9 (23.06.2014) திங்கட் கிழமை.

சூளகிரி செல்லும் வழியில் இன்று அதிகாலையில் ஒரு விபத்து நடந்து இருந்தது. சாலை யெங்கும் கண்ணாடித் துண்டுகள் சிதறிக் கிடந்தன. பாதயாத்திரையின்போது காலில் நடையன் (செருப்பு) அணிந்து செல்வதன் அவசியத்தையும் கையில் டார்ச்லைட் எடுத்துச் செல்வதன் அவசியத்தையும் யாத்திரிகர்கள் அனைவரும் உணர்ந்தனர்.

காலை நேரம் சுமார் 7.00 மணியளவில் சூளகிரி மலையைக் கண்டு வணங்கிக் கொண்டு நடந்தோம். தேசிய நெடுஞ்சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றுவதற்காக அகலப்படுத்தியபோது மலைகளை வெட்டி எடுத்துள்ளனர். இது போன்ற இடங்களில் மலைகளில் கிரானைட் பாறைகளிடையே கடல்வெள்ளத்தினால் அடித்து வரப்பட்ட மண் படிந்துள்ளதைக் காண முடிந்தது.



7.29 மணி சூளகிரி அருகே அன்பர்கள் பலர் குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசிபெற்றனர். 7.31 மணி குருசாமி பச்சைக்காவடி அவர்களது அடியார்களுள் ஒருவர் வந்திருந்து யாத்திரிகர்களை வரவேற்றுத் திருமணமண்டபத்தில் தங்கவைத்து உபசரித்தார்.

சூளகிரி மலையடிவாரத்தில் உள்ள M.M. மஹாலில் தங்கல். ஓய்வு. மதியம் 2.14 மணி சூளகிரி சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி பீடத்தில் வழிபாடு செய்து கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

மாலை 4.22 மணி சாலையோரம் மாலைநேரத்தில் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம். கோபசந்திரம் அருள்மிகு தட்சிண திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோவிலைக் கண்டு வணங்கிக் கொண்டோம். காமன்தொட்டி அருகே, குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அன்பர் சிலர் வந்திருந்து யாத்திரிகர்கள் தங்குவதற்கான தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர். குருசாமி அவர்களை ஆசிர்வதித்தார்.



தென் பெண்ணை ஆற்றின் (Ponnaiyar River) கரையில் உள்ள தட்சிணதிருப்பதி கோயில் அருகில் உள்ள சமுதாயக்கூடத்தில் தங்கியிருந்தோம். சமுதாயக்கூடத்தில் உள்ள தண்ணீர்த்தொட்டியில் நன்றாகக் குளித்தோம்.

மாலை 5.12 மணி ஆற்றங்கரையில் இருந்து அருமையாகக் காற்று வீசியது.



இன்றைய பயணம் சுமார் 21 கி.மீ.

இன்று 30ஆம் நாள் - ஆனி 10 (24.06.2014) செவ்வாய்க் கிழமை.

இன்று காமன்தொட்டி என்ற ஊரில் இருந்து புறப்பட்டோம். இரவு மணி 3.10க்கு புறப்பட்டு குமுதேபள்ளி ஊர் வழியாக 6.10 மணிக்கு ஓசூர் வந்து சேர்ந்தோம்.



காலை 6.12 மணி ஓசூர் குண்டாய் மோட்டார் நிறுவனம் அருகில் ஓசூர் நகரத்தார் வரவேற்பு அளித்தனர். காலை 6.20 மணிக்கு தேநீர்.



நகரத்தார் வரவேற்று அளித்த இடத்திற்கு அருகில் ஸ்ரீ காஞ்சி காமாட்சியம்மன் சிற்பத் தொழிற்சாலை இருந்தது. அதில் அழகழகான சிற்பங்கள் செதுக்கி வைத்திருந்தனர்.

தேநீர் சாப்பிட்டு முடிந்தவுடன் அங்கிருந்து புறப்பட்டுக் காலை 7.15 மணிக்கு ஓசூர் நகரத்தார் சங்கம் கல்யாண மஹால் வந்து அடைந்தோம். புதிதாகக் கட்டி முடித்துப் பயன்பாட்டிற்குத் தயாராக இருந்தது. முதன்முதலாக காசிப் பாதயாத்திரிகர்கள் தங்குவதற்காகப் பெருந்தன்மையோடு நகரத்தார் பெருமக்கள் ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

8.45 மணி காலை உணவு. நகரத்தார் பலரும் வந்து குருஜியை வணங்கிக் கொண்டனர். குருஜி அவர்களை ஆசிர்வதித்தார். யாத்திரிகர்கள் அனைவரும் நன்கு வசதியாகத் தங்கினர். ஓய்வு. தங்கல்.

சமையல்காரர்களுக்குள் சண்டை -

சமையல்காரர் மூன்று பேர். அவர்களில் ஒருவர் ஓசூருடன் பணியிலிருந்து நின்று கொள்வதாகத் தெரிவித்தார். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அந்தச் சமையல்காரருக்குப் பலவாறு அறிவுரைகளை வழங்கிக் காசிவரை பணியில் இருக்குமாறு சொன்னார். ஆனால் தலைமைச் சமையல்காரருக்கும் தனக்கும் எந்தவிதத்திலும் ஒத்துவராது என்றும், இத்துடன் வேலையிலிருந்து நின்று கொள்வதே அனைவருக்கும் நல்லது என்று தெரிவித்தார். குருசாமி அவர்களும் வேறு வழியில்லாமல் வேறொரு சமையல்காரரை ஏற்பாடு செய்து ஓசூருக்கு அனுப்பி வைக்குமாறு பொன்னமராவதில் உள்ள அன்பர்களுக்கு அலைபேசி வழியாகப் பேசினார். பணியிலிருந்து நின்று கொண்டவருக்கு உரிய பணத்தையும் வேட்டி துண்டும் கொடுத்து அனுப்பி வைத்தார். ஊருக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அலைபேசியில் தகவல் தெரிவிக்குமாறு கூறி வழியனுப்பி வைத்தார். யாத்திரிகர்கள் பலரும் அவரவருக்கு இயன்ற உதவிகளைச் செய்து அந்தச் சமையல்காரரை நல்லபடியாக வழியனுப்பி வைத்தனர்.

இன்றைய பயணம் சுமார் 14 கி.மீ.

கடல்கோள் - குமரிக்கோட்டைக் கொடுங்கடல் கொண்டபோது உண்டான கடல்கோளால் தென்னிந்தியா முழுவதும் அழிந்துள்ளது. கடல்கோளின் எச்சங்களை ஓசூரிலும் காண முடிந்தது. இதன் விபரத்தைத் தனியாக எழுதி எனது இணைய வளைதளத்தில் பதிவு செய்துள்ளேன்.
https://theory-of-tsunamis-kalairajan.blogspot.com/2020/06/blog-post.html

----

இன்று முதல் கர்நாடகா மாநிலத்தில் பயணம்

இன்று 31 ஆம் நாள் - ஆனி 11 (25.06.2014) புதன் கிழமை.
ஓசூர் நகரத்தார் சங்கம் திருமண மஹாலில் தங்கல்.
நகரத்தார் பலரும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிம் ஆசி பெற்றுச் சென்றனர். யாத்திரிகர்கள் அனைவரும் ஓய்வு எடுத்தோம்.



பாதயாத்திரை பயணத் திட்டப்படி இன்று இங்கே தங்கியிருந்து நாளை காலையில் புறப்பட்டுச் செல்ல வேண்டும். இதனால் நாளைய பயணம் ஓசூரில் இருந்து சுமார் 37 கி.மீ. தொலைவில் உள்ள தாவரக்கரை சென்று சேர வேண்டும். இந்தத் தொலைவில் பாதிப் பயணத்தை இன்றே நடந்து சென்று அத்திப்பள்ளியில் தங்கிவிடலாம் எனக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் திட்டமிட்டார். இதற்காகக் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்கள் பெங்களூரு திரு செல்லப்பன் மெய்யம்மமை ஆச்சி இவர்களைத் தொடர்பு கொண்டார். இவர்கள் கர்நாடக மாநில எல்லையில் உள்ள அத்திப்பள்ளியில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் தங்கிச் செல்ல ஏற்பாடு செய்து கொடுப்பதாகக் கூறினர்.

இதனடிப்படையில், பயணத்திட்டத்தில் ஒரு சிறு மாறுதலாக, மதிய உணவு முடிந்தவுடன் வழக்கமான வழிபாடு செய்து கொண்டு ஓசூர் நகரத்தார் திருமண மண்டபத்தில் இருந்து புறப்பட்டோம். அத்திப்பள்ளியில் திரு செல்லப்பன் தம்பதியினர் யாத்திரிகர்களை வரவேற்று திருமண மண்டபத்தில் தங்கச் செய்து இரவு உணவு வழங்கிச் சிறப்புச் செய்தனர்.

இன்றைய பயணம் ஓசூர் - அத்திப்பள்ளி சுமார் 10 கி.மீ.

தமிழ்நாடு மாநில எல்லையைக் கடந்து கர்நாடகா மாநிலம் வந்து சேர்ந்தோம்.

இன்று 32 ஆம் நாள் - ஆனி 12 (26.06.2014) வியாழக் கிழமை.

சந்திரபுறா (பெங்களூரு) என்ற ஊரில் இருந்து காலை 3.15 மணிக்கு தினசரி வழிபாடு செய்துமுடித்து ஹார்லிக்ஸ் ரொட்டி சாப்பிட்டுவிடுப் பாதயாத்திரை புறப்பட்டோம்.



காலை 6.23 மணி திரு, சிவப்பா அவர்களின் நண்பர்கள் மூவர் சாலையோரம் நின்றிருந்து எங்களை வரவேற்றனர். சிறிது தூரம் எங்களுடன் பேசிக்கொண்டே நடந்து வந்து எங்களை வழியனுப்பி வைத்தனர். வேதமாதா காயத்திரி தேவி கோயில் வாயிலில் நின்று வணங்கிக் கொண்டோம். மடிவாலா ஐயப்பன் கோவிலுக்கு 7.15 மணிக்கு வந்து சேர்ந்தோம். சொல்லி வைத்தார்போல், குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கோயிலுக்குள் வந்து கும்பிடுவதற்கும், தீபம் காட்டுவதற்கும் சரியாக இருந்தது. பிரசாதம் வழங்கினார்கள். இவ்வளவு கனகச்சிதமாக நொடிப்பொழுது நேரம்கூட மாறாமல் தீபம்காட்டிப் பிரசாதம் வழங்கப்பட்டது மனதிற்கு நெகிழ்சியாக இருந்தது.

காலை 7.34 மணி சாலையோரம் இருந்த ஸ்ரீ ஆஞ்சனேயரைக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் வணங்கிக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தார்.

மடிவாலா ஐயப்பன் கோயில் இருந்து தாவரக்கரை ஐயப்பன் கோயிலுக்கு 8.15க்குவந்து சேர்ந்தோம். காலை உணவு. ஒய்வு.

பகல் 1.08 மணி எனது நண்பர் கவிஞர் கந்தசாமி அவர்கள் வந்திருந்து என்னை வரவேற்றார். ***"காசிஸ்ரீ பட்டம் வாங்கப் போய்க் கொண்டிருக் கின்றீர்கள் "*** என்றார். முனைவர் பட்டம் பெற்றதைவிட அரியதொரு பட்டத்தைப் பெறுவதற்காகப் பயணம் செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று அவர் சொன்னது எனக்கு மிகவும் மன மகிழ்ச்சி அளித்தது.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"
(அதிகாரம்:இனியவைகூறல் குறள் எண்:91)

இதுவரை நடந்து வந்த களைப்பு இந்த வார்த்தையால் நீங்கிப் புத்துணர்ச்சி உண்டானது. குருசாமி அவர்களிடம் கந்தசாமி ஆசிபெற்றுச் சென்றார். மதிய உணவு. ஓய்வு.



மாலை ஐயப்பன் வழிபாடு. இரவு உணவு. ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 22 கி.மீ.

இன்று 33ஆம் நாள் - ஆனி 13 (27.06.2014) வெள்ளிக் கிழமை.

நேற்று மடிவாலா ஐயப்பன் கோயில் இருந்து தாவரக்கரை ஐயப்பன் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். இன்று தாவரக்கரை ஐயப்பன் கோயிலில் (பெங்களூரு) இருந்து காலை 4.05 மணிக்கு பறப்பட்டு காலை 6.00 மணி அளவில் மேர்க்கிரி சர்க்கிள் (Mekhri Circle) சாலை வழியாக நடந்து சென்றோம். இந்தப் பாதையில் பயணம் செய்யும் போது வழிதெரியாமல் வந்து விட்டோமோ என்ற ஐயம் வந்து விட்டது. வழிகேட்பதற்காக வாகனஓட்டிகளை நிறுத்தக் கையைக் காட்டினோம். ஒருவர்கூட வண்டியை நிறுத்த வில்லை. மேம்பாலத்திலிருந்து கீழே இறங்கவும் வழியில்லை. நாங்கள் எட்டிப்பார்த்த இடத்தில் ஒரு பெண்தெய்வம் கோயில் இருந்தது. ***திக்குத் தெரியாமல் நிற்கிறோம், தாயே நீதான் கருணை செய்ய வேண்டும் என வேண்டிக் கொண்டோம்.*** அப்போது சாலையில் பைக்கில் (bike) சென்ற ஒருவரை நிறுத்தினோம். அதிசயமாக அவர் மட்டும் வண்டியை நிறுத்தி, நீங்கள் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கின்றீர்கள். இந்த மேம்பாலம் முடியும் போது நீங்கள் செல்லவேண்டி இடம் வந்துவிடும் என்று கூறிச் சென்றார். எங்களுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. அந்தப் பெண்தெய்வத்தின் கருணையை நினைந்து மீண்டும் வணங்கிக் கொண்டு எங்களது பயணத்தைத் தொடர்ந்தோம்.

"திக்கு அற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்பது உண்மை,

காலை 6.25 மணி அளவில் ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரம் வழியாகச் செல்லும் போது ஸ்ரீ ரமண மகரிஷியை நினைத்து வணங்கிக் கொண்டோம். காலை 6.38

மணி வழியில், பெங்களூர் நகரத்தார் வந்திருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களை வணங்கி ஆசி பெற்றனர்.

எலகங்கா ஐயப்பன் கோவிலுக்கு காலை 9.15 மணிக்கு வந்து சேர்ந்தோம். கோயில் தர்மகர்த்தா அவர்கள் சாலையில் நின்று வரவேற்பு அளித்தார். காலை உணவு. ***இன்றைய பயணம் சுமார் 22 கி.மீ.*** ஒய்வு. இன்றும் நாளையும் நாளைமறுநாளும் இங்கே தங்கல்.





இன்று 34ஆம் நாள் - ஆனி 14 (28.06.2014) சனிக் கிழமை.

பெங்களூரு எலகங்கா ஐயப்பன் கோயிலில் தங்கியிருந்தோம்.

பெங்களூர் வாசிகள் பலரும் வந்திருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களைச் சந்தித்த வண்ணம் இருந்தனர். குருசாமி அவர்களும் மிகவும் பொறுமையாக அவர்களது குறைகளைக் கேட்டறிந்து நல்வழிகாட்டி ஆசிவழங்கிய வண்ணம் இருந்தார்.

இன்று யாத்திரிகர்களுக்கு முழு ஓய்வு. யாத்திரிகர்கள் பலரும் தத்துவ விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர். தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பன் புலிமேல் அமர்ந்து வருவது போன்றதொரு சித்திரம் ஒன்று கோயிலில் வரையப்பட்டிருந்தது. தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பன் திருவருளை வேண்டிக் கொண்டோம்.

நாளையும் இங்கேயே தங்கல்.

இன்று 35ஆம் நாள் - ஆனி 15 (29.06.2014) ஞாயிற்றுக் கிழமை.

இன்றும் பெங்களூர் வாசிகள் பலரும் வந்திருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களைச் சந்தித்த வண்ணம் இருந்தனர். குருசாமி அவர்களும் மிகவும் பொறுமையாக நிதானமாக அவர்களது குறைகளைக் கேட்டறிந்து நல்வழிகாட்டி ஆசிவழங்கிக் கொண்டிருந்தார். நேற்றும் இன்றும் அதிகமான அடியார்கள் வந்து பார்த்துக் குருசாமியிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.



எனது மின்தமிழ் நண்பர் திரு.கந்தசாமி அவர்கள், எனது பேத்தி மற்றும் அவரது உறவினர்களுடன் இன்று (29.06.2014) மாலை எலகங்கா ஐயப்பன் கோயிலுக்கு வந்து யாத்திரிகர்களை சந்தித்து, குருஜி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றார் .

இன்று யாத்திரிகர்களுக்கு முழு ஓய்வு.

யாத்திரிகர்கள் பலரும் தத்துவ விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று 36 ஆம் நாள் - ஆனி 16 (30.06.2014) திங்கட் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, 27.06.2014 அன்று பெங்களூரு எலகங்கா ஐயப்பன் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். நேற்று முன்தினமும் நேற்றும் இங்கேயே தங்கியிருந்தோம்.

இன்று காலை தினசரி வழிபாடு முடிந்தவுடன் ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுப் பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 7.03 மணி அளவில் சுங்கச் சாவடியைக் கடந்து சென்றோம்.
காலை 8.38 மணி ஊருக்குள் நுழைந்ததும் திப்புசுல்தான் பிறந்த இடம் இருந்தது.



காலை 9.53 மணி வழியில் மிகப்பெரிய ஆஞ்சனேயர் உருவத்துடன் கூடிய கோயில் ஒன்று இருந்தது. குருசாமி பச்சைக்காவடி அவர்களும் யாத்திரிகர்கள் அனைவரும் சாலையோரம் நின்று வணங்கிக் கொண்டு நடந்தோம்.



காலை 9.57 மணி ஸ்ரீ சங்கர் விஜய் மரஅறுவை தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தோம். மரஅறுவை தொழிற்சாலையின் முதலாளி அவர்கள் ஊருக்குச் சென்றிருந்தார். அவரது வீட்டில் உள்ளோர் யாத்திரிகர்களை வரவேற்று, அவர்களது வீட்டின் மாடியில் யாத்திரிகர்கள் தங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.



அருகில் மிகப்பெரிய சைன மடம் (Shri Shri Nakoda Avanti 108 Parshwanath Jain Tirth Dham) உள்ளது. மாலை நேரத்தில் ஒரு சந்நியாசி காவி உடையுடன் குருசாமி அவர்களைக் காண வந்தார். அவர் இராமேசுவரத்திற்குப் பாதயாத்திரையாகச் செல்வதாகவும், அருகில் உள்ள சைனமடத்தில் தங்கிச் செல்லலாம் எனச் சென்றதாகவும், ஆனால் அவர்கள் நுழைவாயிலின் உள்ளேயே அனுமதிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டனர் என்றும், இங்கே யாத்திரிகர்களுடன் தங்கிக் கொள்ள அனுமதிக்குமாறும் கேட்டுக் கொண்டார். அதற்குக் குருசாமி அவர்கள் நாங்கள் காசிக்குச் சென்று கொண்டிருக்கிறோம் என்றார். உடனே அந்தச் சந்நியாசியும்

“காசிக்கு உங்களுடன் நானும் சேர்ந்து வருகிறேன்” என்று கூறினார். இந்த யாத்திரை புறப்படும்போது சேர்ந்தவர்கள் மட்டுமே இந்த யாத்திரையில் இருக்கின்றனர். இடையில் யாரையும் சேர்த்துக் கொள்வது கிடையாது என்று விளக்கமாக எடுத்துக் கூறி, சிறிதளவு உதவிகளைச் செய்து குருசாமி அவர்கள் அந்தச் சந்நியாசியை வழியனுப்பி வைத்தார்.

இன்றைய பயணம் சுமார் 21 கி.மீ.

இன்று 37 ஆம் நாள் - ஆனி 17 (01.07.2014) செவ்வாய்க் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று 30.06.2014 திப்புசுல்தான் பிறந்த ஊரான தேவனஹள்ளி வந்து சேர்ந்தோம். இன்று காலை 3.10 மணிக்குத் தினசரி வழிபாடு முடிந்தவுடன் ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுத் தேவனஹள்ளியில் இருந்து பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.

காலை மணி 6.00 அளவில் முதுகுர்கி என்ற ஊரைக் கடந்து சென்றோம். முதுகுர்கி (Mudugurki) என்றால் முதுமையான மலை என்ற பொருளாகுமா?

"விருத்த' என்றால் "முதுமை' என்றும், "அசலம்' என்றால் "மலை' என்றும் பொருள்படும். முதுமையான மலை உள்ள காரணத்தினால் ஊருக்கு “விருத்தாச்சலம்” என்ற காரணப் பெயர் உண்டாகியது என்பர். விருத்தாச்சலம் போன்று முதுகுர்கி என்பதும் முதுமையான மலையைக் குறிக்குமோ? என்ற சிந்தனையுடன் நடந்து சென்றேன்.

வரும் வழியில் மேற்கே தெரிந்த நந்தி மலையைக் கண்டு வணங்கிக் கொண்டோம்.



(Rameswaram to Varanasi Patha Yathra, Swamy PatchaiKavadi with Sri.Gopal Swamy, and Sri. Raghavendra of Sri Ayyappa Swamy Seva Trust, B.B.Road, Chickbalapur, 562 1015)

காலை மணி 6.50 அளவில் சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம். எலவாஹள்ளிவழியாக சிக்பலப்பூர் காலை 8.20 மணிக்கு வந்து சேர்ந்தோம். சிக்பலப்பூரில் அழகழகாக மண்பொம்மைகள் செய்து விற்பனைக்கு வைத்திருந்தனர்.

சிக்பலப்பூர் ஐயப்பன் அடியார்கள் கோயில் வாயிலில் நின்று வரவேற்பு அளித்தார்கள். காலை உணவு. திரு.K. நாகேஷ் தலைமையில் ஐயப்பன் பக்தர்கள் மதியம் அன்னதானம் வழங்கினர்.

ஒய்வு. ***இன்றைய பயணம் சுமார் 21 கி.மீ.***

இன்று 38ஆம் நாள் - ஆனி 18 (02.07.2014) புதன் கிழமை.

இன்று இரவு 3.10 மணிக்குத் தினசரி வழிபாடு முடிந்தவுடன் ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுப் பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.

காலை மணி 6.25 அளவில், ரெட்டிகோலார்ஹள்ளி ஊரின் பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து காலைநேர ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டுப் பாதயாத்திரையைத் தொடர்ந்தோம். இன்று யாத்திரிகர்கள் அனைவருமே மிகவும் மகிழ்ந்து பேசி நடந்து வந்தனர்.



காசிஸ்ரீ தாமோதரன் அவர்கள் குருசாமி அவர்களுடன் சேர்ந்து நடந்து வந்தார்.



காசிஸ்ரீ மோகன் அவர்களும், காசிஸ்ரீ தொப்பை என்ற கலியபெருமாள் அவர்களும், காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களும், காசிஸ்ரீ பஞ்சவர்ணம் அவர்களும், காசிஸ்ரீ சிவப்பா அவர்களும் ஒன்றாக நடந்து வந்து கொண்டிருந்தனர். காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் சற்று தொலைவில் வந்து கொண்டிருந்தார்.

காசிஸ்ரீ கலியபெருமாள் அவர்களும், காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களும் மகிழ்ந்து பேசி நடந்து வந்து கொண்டிருந்தனர். இவர்களுடன் காசிஸ்ரீ தொப்பை என்ற கலியபெருமாள் அவர்களும் ஒன்றாகச் சேர்ந்து பேசி நடந்தார்.

காசிஸ்ரீ அங்கமுத்து அவர்கள் குருசாமி பச்சைக்காவடி அவர்களுடன் சேர்ந்து வருவதற்காக சிறிது நேரம் நின்றார். இரண்டு கலியபெருமாள் சாமிகளும் பேசிக்கொண்டே நடந்து செல்லலாயினர்.



மதுரை காசிஸ்ரீ கந்தசாமி அவர்கள்தான் யாத்திரிகர்களில் மிகவும் மூத்தவர். அவரை யடுத்து காசிஸ்ரீ மாதவன் அவர்கள் மூத்தவர். இவர்கள் இருவரும் ஒன்றாக மகிழ்ந்து பேசிக்கொண்டே நடந்தனர்.



காசிஶ்ரீ நம்பிராஜன் அவர்களும், காசிஶ்ரீ சுப்பிரமணியன் அவர்களும் ஒன்றாக மகிழ்ந்து பேசிக்கொண்டே நடந்தனர்.

தும்களஹள்ளி அருகே மலையை வெட்டியெடுத்து நெடுஞ்சாலையை அகலப்படுத்தியுள்ளனர். பிரளயகாலத்தில் ஏற்பட்ட பெருவெடிப்பினால், பாறைகள் பிளவுபட்டு அதனூடே கடல்வெள்ளத்தினால் அடித்துவரப்பட்ட கடற்களிமண் படிந்து இறுகிப் பாறையாக மாறியுள்ளதையும், அந்தப் பாறைகளில் 45டிகிரி அளவிற்குச் சாய்ந்து இருப்பதையும் காண முடிந்தது.



8.06 மணி காசிஶ்ரீ காளைராசன், காசிஶ்ரீ அங்கமுத்து அவர்களும், காசிஶ்ரீ பஞ்சவர்ணம் அவர்களும் ஒன்றாக மகிழ்ந்து பேசிக் கொண்டே நடந்தனர்.



காலை மணி 8.25 அளவில் பெரச் சந்திரா வந்து சேர்ந்தோம்.

ஊரில் உள்ள முக்கிய பிரமுகர்
திரு.சுதாகர் ரெட்டி M.L.A. அவர்களது உறவினர் ஒருவர் அவரது மகனுடன் சாலையில் நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களை வரவேற்றனர். அவரது வீட்டிற்கு யாத்திரிகர்களை அழைத்துச் சென்றனர்.



8.32 மணிக்கு மற்றும் சிலரும் வந்து நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களை வரவேற்றனர். ***"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"*** என்று கணியன் பூங்குன்றனார் பாடிய பாடலுக்கு உதாரணமாகக் குருசாமி பச்சைக்காவடி அவர்களைக் கூறலாம். இராமேசுவரத்தில் இருந்து காசி வரை 2464 கி.மீ. வழி நெடுகிலும் எத்தனை யெத்தனையோ ஊர்கள், அத்தனை ஊர்களும் குருசாமி பச்சைக்காவடி

அவர்களுக்குச் சொந்தஊர் போன்றே இருந்தன. அந்த ஊரில் உள்ளோர் உறவினர்களாகவே யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்தனர்.

பெரச்சந்திரா அன்பரது வீட்டின் ஈசானியத்தில் வெள்ளெருக்கு வளர்த்து இருந்தனர். வீட்டிற்குள் வெள்ளெருக்கு வளர்ப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பெரச்சந்திராவில் வரவேற்பு வழங்கிய அடியாரது வீட்டிற்கு எதிரே உள்ள பள்ளிக்கூடத்தில் தங்கல்.

ஓய்வு. மாலைநேரத்தில் அடியார் வீட்டில் கூட்டுவழிபாடு. ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் சுமார் 20 கி.மீ.

இன்று 39ஆம் நாள் - ஆனி 19 (03.07.2014) வியாழக் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று பெரச்சந்திரா வந்து சேர்ந்து இருந்தோம்.

இன்று இரவு 2.45 மணிக்கு தினசரி வழிபாடு முடிந்தவுடன் ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு, பெரச்சந்திராவில் இருந்து புறப்பட்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம். பரகோடு வழியாக பாகேபள்ளிக்கு காலை மணி 10.15 க்கு வந்து சேர்ந்தோம். இன்றுடன் கர்நாடக எல்லை முடிகிறது. நாளையிலிருந்து ஆந்திரா மாநிலம் வழியாகப் பயணம் .



காலை 7.37 மணி வரும் வழியில் பரகோடு பேருந்து நிறுத்தத்தில் காலை உணவு. அருகில் சில தொழிலாளர் தொலைத்தொடர்பு இணைப்புப் பணிகள் செய்து கொண்டிருந்தனர், ஒரு முதியவரும் இருந்தார். அவர்களில் சிலர் திண்டுக்கல் என்றனர்.

காலை 8.11 மணிக்கு காலை உணவு.
குருஜி பச்சைக்காவடிஅவர்கள் தொலைத்தொடர்புப் பணியாளர்களையும் அழைத்து காலை உணவு வழங்கினார்.

காலை 9.51 மணி கடுமையான வெயில்.

காலை மணி 10.15 அளவில் பாகேபள்ளி கீதாமந்திர் வந்து சேர்ந்தோம். மாடியில் தங்கிக் கொள்ள வசதி செய்து கொடுத்திருந்தனர். நன்கு வசதியாக காற்றோட்டமாகத் தங்கினோம். ஓய்வு. குருசாமி பச்சைக்காவடி அவர்களும் காசிஸ்ரீ சரவணன் அவர்களும் பாகேபள்ளி சந்தைக்குச் சென்று காய்கறிகள் நிறைய வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தனர். பாகேபள்ளி கீதாமந்திரில் மதிய உணவு . ஓய்வு. தங்கல்.

இன்றைய பயணம் சுமார் சுமார் பயணம் 27 கி.மீ.

இன்று முதல் ஆந்திரா மாநிலத்தில் பயணம்

இன்று 40ஆம் நாள் - ஆனி 20 (04.07.2014) வெள்ளிக் கிழமை.

இன்று 04.07.2014 இரவு 3.00 மணிக்கு தினசரி வழிபாடு முடிந்தவுடன் ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு, ஆந்திரமாநிலத்தின் எல்லையில் கர்நாடக மாநிலத்தில் உள்ள பாகேபள்ளியில் உள்ள கீதா மந்திரில் இருந்து புறப்பட்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம். இரவு 5.00 மணி அளவில் கர்நாடக எல்லையைக் கடந்து ஆந்திரமாநில எல்லைக்குள் நடந்து சென்றோம்.

காலை 6.11 மணிக்கு வழியில் சாலையோரம் இருந்த பெட்ரோல்பங்கில் அமர்ந்து ரொட்டி தேநீர் சாப்பிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

காலை மணி 7.15 அளவில் புட்டபர்த்தி ஸ்ரீ சாய்பாபா கோயிலுக்குச் செல்லும் பிரிவுப்பாதை இருந்தது. ஸ்ரீ சாய்பாபாவை நினைத்து வணங்கிக் கொண்டே யாத்திரையைத் தொடர்ந்தோம். வழியில் உள்ள மற்றொரு பெட்ரோல்பங்கில் அன்னதானவண்டியை நிறுத்தியிருந்தனர். அங்கே காலை உணவு சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.





காலை 9.47 மணி புலகுருளபள்ளி (Pullagurlapalli) என்ற ஊருக்குச் சற்று முன்னதாக உள்ள ஒரு கிராமத்தில் (NH 44 - Andhra Pradesh 515241 - 13.922671, 77.691000) காசிஸ்ரீ சிவப்பாவின் சொந்தங்கள் பலரும் வசிக்கின்றனர். காசிஸ்ரீ சிவப்பாவும் யாத்திரிகர்களும் வருவதை அறிந்த ஊரார் பலரும் சாலையோரம் நின்று யாத்திரிகர்களை வரவேற்றனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவர்களை ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார்.

புத்தபள்ளி செல்லும் பிரிவு சாலை அருகே ஆற்றங்கரையோரம் ஒரு சிறிய ஆஞ்சனேயர் கோயில் இருந்தது. சிவப்பா மிகவும் பக்தியுடன் அந்த ஆஞ்சனேயசுவாமியை வணங்கிக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தார்.



காசிஸ்ரீ சிவப்பா அவர்களின் நண்பர் பாலசமுத்திரம் ஊர் எல்லையில் வந்து நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றார்.



பாலசமுத்திரம் எல்லையில் ஒரு சிறிய கோயில் சிதிலமடைந்து கிடந்தது. அங்கே மிகப் பெரிய ஆலமரமும் வேப்பமரமும் இருந்தன. அவற்றின் நடுவே நாகக் கன்னியை வைத்து வழிபாடு செய்கின்றனர்.



பகல் 11.00 மணி பாலசமுத்திரத்தில் காசிஸ்ரீ சிவப்பா அவர்களின் உறவினர்கள் பலரும் வந்திருந்து சிவப்பாவையும் யாத்திரிகர்களையும் வரவேற்றனர். ஜில்லா பரிசாத் மேல்நிலைப் பள்ளியில் (Zilla Parishad High School) தங்கினோம். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஆசிர்வதித்தார். மதிய உணவு. ஓய்வு.

பள்ளிக்கு நேர் எதிரே ஒரு மசூதி உள்ளது. மசூதியின் வாயிலில் ஆவுடையார் ஒன்று சிதைந்த நிலையில் கிடந்தது. அந்த ஆவுடையாரில் நந்தியின் சிற்பம் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த மசூதியானது பாலசமுத்திரம் கண்மாய் (அல்லது ஏரி)க் கரையில் இருந்தது. ***இன்றைய பயணம் சுமார் 28 கி.மீ.***

இன்று 41 ஆம் நாள் - ஆனி 21 (05.07.2014) சனிக் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று பாலசமுத்திரம் வந்து சேர்ந்து ஜில்லா பரிசாத் மேல்நிலைப் பள்ளியில் (Zilla Parishad High School) தங்கி இருந்தோம். இன்று இரவு 3.00 மணிக்கு தினசரி வழிபாடு முடிந்தவுடன் ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்து அருளுவது இனியே - காலை மணி 6.45 அளவில், நலகொண்டரயானபள்ளி (Nallagondrayanapalli) என்ற ஊரின் அருகே சென்று கொண்டிருக்கும்போது .....





நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்த சிலர் எதிரே வந்தனர். அவர்கள் சிறிது நேரம் நின்று, குருசாமி அவர்களிடம் யாத்திரை பற்றிக் கேட்டறிந்தனர். அவர்களுள் ஒருவரான அந்தக் கிராமத் தலைவரும் இருந்தார். அவர் கடந்த ஆண்டும் இதே இடத்தில் இதேநேரம் குருசாமியைச் சந்தித்து ஆசி பெற்றதை நினைவு கூர்ந்து, குருசாமியின் கால்கள் இரண்டையும் கட்டிப் பிடித்துக் கொண்டு, தனது தலையைக் குருசாமியின் பாதங்களில் வைத்துப் பெரிதும் வணங்கிக் கிடந்தார். குருசாமி அவர்களும் அடியார்கள் அனைவரையும் ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் கொடுத்தார். “சிக்கெனப் பிடித்தேன்..... எங்கெழுந்து அருளுவது இனியே” என்ற பாடல் வரிகள் என் நினைவிற்கு வந்தன.

காணாமல் போன செல்போன்

பெனுகொண்டா R.T.O செக்போஸ்ட்டில் காலை மணி 8.00 அளவில் காலைஉணவு. சிறிது நேரம் சென்றவுடன் யாத்திரையைத் தொடர்ந்தோம். மற்றபிற யாத்திரிகர்கள் சாப்பிட்டு முடித்தவுடன் நடக்கத் தொடங்கினர். என்னால் அவர்களைப்போல் அவ்வளவு வேகமாக நடக்க இயலவில்லை. அனைவருக்கும் கடைசியாக நடந்து சென்று கொண்டிருந்தேன். யாரோ கூப்பிடுவது போன்ற சப்தம். திரும்பிப் பார்த்தால் எல்லோருக்கும் முன்னால் செல்லும் காசிஸ்ரீ சிவப்பா எனக்கும் பின்னால் வந்து கொண்டிருந்தார். அவருக்காகச் சிறிது நேரம் நின்று கொண்டிருந்தேன். அவர் வந்து சேர்ந்ததும் அதிர்ச்சியாக ஏதேதோ தெலுங்கில் சொன்னார். காலை உணவு உண்ணும்போது, உறவினர்களிடம் பேசிவிட்டுக் கையில் வைத்திருந்த அவரது அலைபேசி (செல்போன்) காணாமல் போய்விட்டதாம். இதைக் கேட்ட நானும் எனது அலைபேசியில் இருந்து அவரது எண்ணை அழைத்துப் பார்த்தேன். அலைபேசியில் மணி அடிக்கிறது, ஆனால் யாரும் எடுத்துப் பேசவில்லை. எனவே சாப்பிட்ட இடத்தில்தான் செல்போன் கிடக்கிறது என்று சிவப்பா சொன்னார். எனவே இருவரும் சாப்பிட்ட இடத்திற்குத் திரும்பிச் சென்றோம்.



நாங்கள் இருவரும் அலைபேசியைத் தேடிச் செல்வதால், நாங்கள் வருவதற்குக் காலதாமதம் ஆகும் என்று காசிஸ்ரீ அங்கமுத்துசாமி அவர்களிடம் அலைபேசியில் தகவல் சொல்லிவிட்டு ஆர்.டி.ஓ. அலுவக வளாகத்திற்குச் சென்று சிவப்பாவின் அலைபேசியைத் தேடிப் பார்த்தோம். இப்போதும் மணி அடிக்கிறது. ஆனால் யாரும் எடுக்க வில்லை. சற்று முன் ஒரு லாரி வந்து சென்றது என்றும் ஒருவேளை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் என்று ஆர்.டி.ஓ. அலுவலகத்தின்ர் சொன்னார்கள். லாரியில் சென்றவர்கள் எடுத்திருந்தால் எப்படியும் உங்களது அலைபேசியைப் பெற்றுத்தருகிறோம் என்று உறுதி கூறினர். எங்களுடன் தொடர்பு கொள்வதற்காக எனது அலைபேசி எண்ணை வாங்கி வைத்துக் கொண்டனர். அவர்களிடம் சிவப்பா அதிகநேரம் பேசிக் கொண்டிருந்தார்.

இதற்குள் குருசாமி அவர்கள் அலைபேசியில் என்னை அழைத்தார். "ஏன் காலதாமதம் செய்கின்றீர்கள்? உங்களுக்காக அத்தனை யாத்திரிகர்களும் காத்துக் கிடக்கிறோம்" என்று சற்று கோபமாகப் பேசினார். அவரிடம் நடந்தனவற்றை யெல்லாம் சொன்னேன். விரைவாகத் திரும்பி வரும்படி குருசாமி அவர்கள் சொன்னார். ஆனால் என்னால் அவ்வளவு விரைவாக நடக்க இயலவில்லை. குருசாமி அவர்கள் அடிக்கடி அலைபேசியில் பேசிக் கொண்டே இருந்தார். விரைந்து வரும்படி சொல்லிக் கொண்டே இருந்தார்.



R.T.O செக்போஸ்ட்டில் பணியில் இருந்த அதிகாரிகள் சிவப்பாவிடம் ஒரு பூசணிக்காய் கொடுத்து வழியனுப்பி வைத்தனர். நானும் சிவப்பாவும் சிறிது நேரத்தில் மற்ற பிற யாத்திரிகர்களுடன் சென்று சேர்ந்து விட்டோம். குருசாமி அவர்கள் தன்னிடம் இதுபற்றித் தகவல் ஏதும் சொல்லவில்லையே என்று மிகவும் கோபித்துக் கொண்டார். காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களிடம் சொல்லிவிட்டுச் சென்றேன் என்ற பதிலைக் குருசாமி அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. இனிமேல் எது நடந்தாலும் அவரிடம் (குருசாமியிடம்) சொல்லவேண்டும் என எங்கள் இருவருக்கும் அறிவுரை கூறினார்.

ஆனால் சிவப்பாவின் முகம்தான் மிகவும் வாடிப் போயிருந்தது. அந்த அலைபேசி புதியது. நேற்று முன்தினம்தான் அவரது நண்பர் திரு. ராமு அவர்கள் அவருக்குப் பரிசாக வழங்கி இருந்தார். காசியாத்திரையின் போது பயன்படுத்துவதற்காக புதிய சிம்கார்டுடன் (SIM card with Roaming facility) வாங்கிக் கொடுத்திருந்தார். இரண்டே நாளில் விலை கூடுதலான செல்லைபோனைத் தொலைத்துவிட்டது குறித்து சிவப்பா பெரிதும் வருந்தினார். சாப்பிடும்போது கையில் வைத்துப் பேசிக் கொண்டிருந்தது எப்படிக் காணாமல் போனது? என்று மிகவும் வருந்தினார்.

சிவப்பாவின் அலைபேசியைத் தேடி அலைந்த காரணத்தினால் சுமார் அரைமணி நேரம் கூடுதலானது. வெயிலில் அனைவரும் காத்துக் கிடந்தனர். பெனுகொண்டா சிவன்கோயில் அருகே உள்ள மண்டபம் போய்ச் சேர்ந்தோம்.

மண்டபத்தில் இருந்து கொண்டு சிவப்பா அலைபேசியை அழைத்தால், இப்போதும் மணி அடிக்கிறது. யாரும் எடுக்கவில்லை. இதனால் அந்த அலைபேசியானது சாப்பிட்ட இடத்தில்தான் கிடக்கிறதோ? என்ற சந்தேகம்

சிவப்பாவிற்கு மீண்டும் வந்துவிட்டது. அதைத்தான் நன்றாகத் தேடிப்பார்த்து விட்டோமே, சாப்பிடும் இடத்தில் கிடப்பதற்கு வாய்ப்பே இல்லை என்றேன். ஆனால் சிவப்பாவின் வருத்தம் நீங்கவில்லை. அந்த லாரி ஓட்டுநர்தான் எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்றார். பொறுமையாய் இரு, என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சிவப்பாவினால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சிறிது நேரத்திற்குள் யாத்திரிகர்களில் ஒருவர் சிவப்பாவிடம் வந்து, அன்னதான வண்டியில் உள்ள எனது துண்டை எடுக்கப் போனேன், அப்போது அலைபேசி மணி அடித்தது, வண்டிக்குள் அலைபேசி மணி அடிக்கிறதே, எனத் தேடிப்பார்த்தேன். அப்போது உனது பைக்குள் இருந்து மணிச் சத்தம் கேட்டது என்று கூறிக் கொண்டோ சிவப்பாவிடம் அவரது அலைபேசியைக் கொடுத்தார்.

அந்த அலைபேசியைப் பார்த்ததும்தான் சிவப்பாவிற்று முகம் மலர்ந்தது. தன்னுடைய புதிய அலைபேசி தன்னிடம் வந்து சேர்ந்தது குறிந்து மிகவும் மகிழ்ந்தார். ஆனால் திரும்பத்திரும்பத் தான் சாப்பிடும் போது கையில் வைத்திருந்த அலைபேசி அந்த வண்டிக்குள் எப்படிச் சென்றது? என்று சந்தேகப்பட்டார். யாரோ யாத்திரிகர்களின் ஒருவர்தான் இவ்வாறு விளையாட்டாகச் செய்திருக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருந்தார். எது எப்படியோ, சிவப்பாவின் அலைபேசி காணாமல் போனது கிடைத்தது மனதிற்கு மகிழ்ச்சி அளித்தது.

பெனுகொண்டாவில் மதிய உணவு.

அதன்பின்னர் மதியம் சுமார் 1.00 மணி அளவில் பாதயாத்திரை புறப்படத் தயாரானோம். வழக்கமான வழிபாடுகளை முடித்துக் கொண்டு சுமார் 3.00 மணி அளவில் யாத்திரையைத் தொடர்ந்தோம். யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்த அன்பரும் எங்களுடன் வழிபாட்டில் கலந்து கொண்டு எங்களை வழியனுப்பி வைத்தார். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அந்த அடியாரை ஆசிர்வதித்தார்.



மதியம் 2.54 மணி. வரவேற்று உபசரித்த அன்பருக்குக் குருசாமி அவர்கள் விபூதி பிரசாதம் கொடுத்துக் கொண்டு விடைபெற்றார்.



மாலை 3.08 மணி பெனுகொண்டா கோட்டை வாயிலில் நிருபர்கள் இருவர் வந்துநின்று, பாதயாத்திரை தொடர்பான செய்திகளைக் கேட்டறிந்து கொண்டனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவர்களை ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார்.



மாலை 3.07 மணி காசிஸ்ரீ சிவப்பாவிற்குப் புதிய அலைபேசி வாங்கிக் கொடுத்திருந்த அவரது நண்பர் திரு ராமு அவர்கள் பெனுகொண்டா பேருந்து நிலையம் அருகே காத்திருந்தார். அவரிடம் சிவப்பா நடந்தனவற்றை எடுத்துக் கூறினார். நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.




மாலை 4.29 மணி கொடுரூ செல்லும் வழியில் சாலைகள் சந்திப்பில் அமர்ந்து மாலைநேரத்தில் ரொட்டி தேநீர் சாப்பிட்டுவிட்டுப் பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.



மாலை 4.37 மணி. பள்ளி முடிந்து சிறுவர்களும் சிறுமிகளும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் சிறிது நேரம் பேசியது மனதிற்கு மிகவும்

மகிழ்ச்சியாக இருந்தது. தெலுங்கு தெரியாத காரணத்தினால் அதிகநேரம் பேச இயலாமல் போனது சிறிது வருத்தமாகவும் இருந்தது.

மாலை 5.20 மணி கொடுஊரை மையமாகக் கொண்டு தெற்கிலும் வடக்கிலும் சுமார் 30 கி.மீ. நீளமும், கிழக்கிலும் மேற்கிலும் சுமார் 10 கி.மீ. அகலமும், சுமார் 80கி.மீ. சுற்றளவிற்குக் குன்றுகளின் மேல் கற்பாறைகள் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டது போன்று உள்ளன. இதனால் இது பண்டைக்காலத்தில் பாதுகாப்பு மிகுந்த மிகப்பெரிய கோட்டை அரணாக இருந்திருக்க வேண்டும். பிரளயத்தினால் ஏற்பட்ட பெருங்கடல்கோளால் இந்தக் கோட்டை அழிந்திருக்கலாம் என்ற சிந்தனையுடன் யாத்திரையைத் தொடர்ந்தேன்.





மாலை மணி 6.30 அளவில் கொடுஊரு (Gutturu) வந்து சேர்ந்தோம். ஊரார் வரவேற்று, ஊரின் நடுவில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று தங்க வைத்தனர். பள்ளி ஆசிரியர்களும் வந்திருந்து தேவையான தண்ணீர் வசதி செய்து கொடுத்தனர். அன்றைய தினம் இரவு அந்த ஊரில் திருவிழா ஒன்று

நடைபெற்றது. மிகவும் அசதியாக இருந்த காரணத்தினாலும், தெலுங்கு தெரியாத காரணத்தினாலும் திருவிழாவில் கலந்து கொள்ளவில்லை.



இன்றைய பயணம் சுமார் 33 கி.மீ .

இன்று 42 ஆம் நாள் - ஆனி 22 (06.07.2014) ஞாயிற்றுக் கிழமை.



காலை 3.25 மணிக்கு காலை வழிபாடை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு கொடுஊருவில் இருந்து புறப்பட்டோம்.வழியில், காலை மணி 6.40 அளவில் ஏரம்பள்ளி பேருந்து நிறுத்தத்தில் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம். காலை மணி 8.30க்கு பெனுபொளு (Penubolu) என்ற ஊரின் பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து காலை உணவு.



காலை 8.31 மணி. நேற்று இந்நேரம் அலைபேசி காணாமல் போனபோது இருந்த கவலை இப்போது சிவப்பாவிடம் காணப்படவில்லை. சமையற் கலைஞர், காளைராசன், சிவப்பா, அன்னதான வாகன ஓட்டுனர் ஆகிய நால்வரும் படம் எடுத்துக் கொண்டோம்.



காலை 9.34 மணி.. காலை உணவை முடித்துக் கொண்டு நடந்து செல்லும்போது, குருசாமி பச்சைக்காவடி அவர்களைத் தாண்டிச் சென்ற வண்டி ஒன்று நின்றது. அதிலிருந்து அடியார் ஒருவர் குடும்பத்தினருடன் இறங்கி வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களின் பாதங்களை வணங்கினார். குருசாமி அவர்கள் அந்தக் குடும்பத்தினரை ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார்.

அந்த அன்பரின் குடும்பத்தினரும் யாத்திரிகர்களுடன் சேர்ந்து நடந்து

வந்தனர். கங்கனபள்ளி என்ற ஊரின் அருகே பெருமாள் கோயிலுக்கு 10.00 மணிக்கு வந்து சேர்ந்தோம்.

கங்கனபள்ளிகோயில் நல்லவசதியாகவும் சுத்தமாகவும் இருந்தது. பழமையான கல்வெட்டுகளும், குடமுழுக்கு நடத்திய கல்வெட்டுகளும் நிறைந்து இருந்தன. கங்கனபள்ளி கோயில் வளாகத்தில் மதிய உணவு. மதிய உணவிற்குப் பிறகு 2.00 மணிக்கு யாத்திரை புறப்பட்டோம்.





மாலை மணி 4.10 அளவில் சாலையோரம் அமர்ந்து ரொட்டி தேநீர் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். மரூரு என்ற ஊருக்கு மாலை 5.00 மணிக்கு வந்து

சேர்ந்தோம். இங்குள்ள பள்ளி வளாகத்தில் தங்கினோம். ***இன்றைய பயணம் சுமார் 34 கி.மீ.***



இன்று 43ஆம் நாள் - ஆனி 23 (07.07.2014) திங்கள் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று ஆந்திராவில் மரூரு வந்து தங்கியிருந்தோம். இன்று காலை 3.25 மணிக்கு காலை வழிபாடை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு மரூரில் இருந்து புறப்பட்டோம். காலை 8.20 மணி வழியில் 8.30க்கு அனந்தபூர் சுற்றுச்சாலையில் காலை உணவு.



காலையில் இருந்தே கடுமையான வெயில். ராப்தாடு என்ற ஊரின் வழியாகச் சென்றோம். பகல் 11.06 மணி இஸ்கான் அமைப்பினரின் “ ஹரே ராமா, ஹரே

கிருஷ்ணா " இயக்கத்தினரின் கோயிலைக் கடந்து சென்றோம்.. காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களும் காசிஸ்ரீ சரவணன் அவர்களும் சேர்ந்து நின்று படம் எடுத்துக் கொண்டனர்.

அருகில் உள்ள சோமலதொட்டி ஆஞ்சநேயர் கோயிலுக்கு 11.10 மணிக்கு வந்து சேர்ந்து தங்கினோம். மதிய உணவு ஓய்வு.



இரவு 3.15 முதல் 11.15 முடிய 8மணிநேரம் தொடர்ந்து வேகாதவெயிலில் நடைப்பயணம். வேகமாக நடக்கும் சில யாத்திரிகர்கள் காலை மணி 10.30 அளவிலேயே வந்து சேர்ந்துவிட்டதாகத் தெரிவித்தனர். காலை நேரம் ஏறு வெயிலில் நடந்து வந்த காரணத்தினால் யாத்திரிகர்கள் அனைவரும் களைத்துப் போயிருந்தனர்.

மாலைநேரம் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு. இங்கு மாலை 6.00 மணி முதல் இரவு 9.30 வரை மின்தடை. மாலைநேரம் வழிபாடு முடித்த சிறிது நேரத்திற் கெல்லாம் அன்னதான வண்டியின் ஓட்டுநர் குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் வந்து, வண்டியின் ஆக்சிலேட்டர் வேலை செய்யவில்லை என்றும், இப்படியே வண்டியை ஓட்ட முடியாது என்றும் கூறினார். குருசாமி அவர்களும் ஊருக்குள் சென்று பழுதுநீக்குவதற்கான ஆட்களை அழைத்து வரும்படிச் சொன்னார். அவர்களும் வந்து, வண்டியின் பேணட்டைத் திருப்பிவைத்துக் கொண்டு புதிதாக ஒரு ஆக்சிலேட்டர் கேபிளை மாட்டினர். வண்டி இப்போது நன்றாக இயங்கியது. இதற்குப் பின்னர் அனைவரும் இரவு உணவு சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கச் சென்றனர்.

ஆனால் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் மட்டும் தூங்காமல் இருந்து, ஓட்டுநரையும் அழைத்துக் கொண்டு, வண்டி இருக்கும் இடத்திற்குச் சென்று வண்டியை வெளியே எடுக்கச் சொன்னார். ஓட்டுநரும் வண்டி நன்றாக ஓடுகிறது, வெளியில் எடுக்கத் தேவையில்லை என்று கூறி, வண்டியின் எஞ்சினை மட்டும் இயக்கிக் காண்பித்தார். நன்றாய் இருந்தால் சரிதான் என்று கூறிக்கொண்டே குருசாமி அவர்களும் வந்து படுத்துத் தூக்கிவிட்டார்.

ஓய்வு. ***இன்றைய பயணம் சுமார் 29 கி.மீ.***

இன்று 44 ஆம் நாள் - ஆனி 24 (08.07.2014) செவ்வாய்க் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று ஆந்திராவில் சோமலதொட்டியில் ஶ்ரீ ஆஞ்சநேயர் கோயிலில் வந்து தங்கியிருந்தோம்.

இன்று காலை 3.10 மணிக்கு காலை வழிபாடை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு இருந்து புறப்பட்டோம்.



காலை 6.16 மணி அன்னதானவண்டி வருவதற்குச் சற்று காலதாமதம் ஆகிவிட்டது. காலை மணி 6.15 அளவில், யாத்திரிகர்கள் பலரும் சாலையோரம் படுத்து அயர்ந்து தூங்கி விட்டனர். காலை மணி 7.00 அளவில் அன்னதான வண்டி வந்துவிட்டது. சாலையோரம் இருந்த பேருந்து நிறுத்தத்தில் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். வழியில் நான்குவழிச் சாலைக்காக, சாலையை அகலப்படுத்தும் போது, சிறுசிறு மலைகளை வெட்டி யெடுத்துள்ளனர். அந்த மலைகளில் பிரளயகாலத்தில் புடைபெயர்ந்த பாறைகள் நிறைந்து காணப்பட்டன. வழியில் 8.30க்கு கார்டின்னா என்ற ஊர் அருகே காலை உணவு.

ஒருவழிப்பாதையில் எதிரே வரும் இருசக்கர வாகன ஓட்டிகள்



நான்கு வழிச் சாலை அமைக்கும் போது, சாலையின் நடுவில் தடுப்புச் சுவர் எடுத்துள்ளனர். எனவே அருகேயுள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டுமெனில் ஒருவழிச் சாலையில் சுமார் 10 கி.மீ. தூரத்திற்கும் அதிகமான தூரம் பயணம்

செய்து சுற்றித் திரும்பி வரவேண்டியுள்ளது. இதைத் தவிர்க்க வாகன ஓட்டிகள் ஒருவழிச் சாலையில் எதிர்திசையில் வாகனங்களை ஓட்டி வருகின்றனர். நான்குவழிச்சாலை விரிவாக்கத்தால் தொலைதூரம் செல்லும் வண்டிகள் வசதியாக வேகமாக நிற்காமல் செல்கின்றன. ஆனால் அருகருகே உள்ள கிராமத்தினர் அடுத்துள்ள ஊர்களுக்கும், சாலையின் மறுபக்கம் அருகேயுள்ள ஊர்களுக்கும் செல்வதற்கு ஒருவழிச் சாலையில் நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே சாலை விதிகளை மீறி ஒருவழிச்சாலையின் எதிர்ப்பக்கம் வண்டியை ஓட்டி வருகின்றனர்.

கலிங்கத்துப் பரணி **-** தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் இடைப்பட்ட ஆறுகள் பற்றிக் கலிங்கத்துப் பரணியில் குறிப்புகள் உள்ளன. இதில் பெண்ணை ஆறும் குறிப்பிடப் பட்டுள்ளது.

“பாலா றுகுசைத் தலைபொன் முகரிப்
பழவா றுபடர்ந் தெழுகொல் லியெனும்
*நாலா றுமகன் றொரு**பெண் ணை**யெனும்*
நதியா றுகடந் துநடந் துடனே.
வயலா றுபுகுந் துமணிப் புனல்வாய்
மண்ணா றுவளங் கெழுகுன் றியெனும்
பெயலா றுபரந் துநிறைந் துவரும்
பேரா றுமிழிந் ததுபிற் படவே.
கோதா வரிநதி மேலா றொடுகுளிர்
பம்பா நதியொடு சந்தப்பேர்
ஓதா வருநதி யொருகோ தமையுடன்
ஒலிநீர் மலிதுறை பிறகாக”

(கலிங்கத்துப் பரணி - பாடல் வரி 56 - 58 -)

இன்று, காசி பாதயாத்திரையின் போது பெண்ணை ஆற்றைக் கடந்து ஆற்றின் வடகரையில் உள்ள பாமிடியை அடைந்தோம். வடபெண்ணை ஆற்றில் தண்ணீர் ஓடவில்லை, வரண்டு கிடந்தது.

பாமிடி என்ற ஊரில் பாண்டுரங்கன் விட்டலர் கோயிலுக்கு 10.10 மணிக்கு வந்து சேர்ந்தோம். கோயிலில் இரண்டாம் நாள் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. இன்று கருடவாகனத்தில் சுவாமி புறப்பாடு.



காலை 10.31 மணி பஜனை. வழிபாடு நடைபெற்றது... கோயிலில் மதிய உணவு. இரவு நேரம் கோயிலில் கதாகாலட்சேபம் நடைபெற்றது.



இன்றைய பயணம் சுமார் 27 கி.மீ.

இன்று 45ஆம் நாள் - ஆனி 25 (09.07.2014) புதன் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று ஆந்திராவில் பாமிடி பாண்டுரங்கன் விட்டலர் கோயிலுக்கு வந்து தங்கியிருந்தோம். நேற்று இரண்டாம் நாள் திருவிழா. இன்று மூன்றாம் நாள் திருவிழா.

கோயில் கல்யாண மண்டபத்திலேயே இன்றும் தங்கி இருந்தோம். முழு ஓய்வு. கோயிலில் வழிபாடு செய்துகொண்டோம். திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கோயிலின் இராஜகோபுர நுழைவாயில் திருமாலின் பத்து அவதாரங்களையும் சிற்பமாகச் செதுக்கியிருந்தனர். நிலையின் உச்சியில் அனந்தசயனப் பெருமாளின் சிற்பம் சிறியஅளவில் இருந்தது.

துவார பாலகர், ஆஞ்சனேயர், கருடன் முதலான திருமூர்த்தங்களும் அருமையாகத் தத்ரூபமாக இருந்தன. கோயிலின் உள்ளே நாகவழிபாடு சிற்பங்கள் இருந்தன.




மதியம் சாப்பிட காசிஸ்ரீ சிவப்பா மட்டும் வராமல், நன்றாகப் போர்வையைப் போர்த்திப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். மற்றபிற யாத்திரிகர்கள் சாப்பிடக் கூப்பிட்டபோது, முகத்தை மூடியிருந்த போர்வையைச் சிறிது விலக்கி, நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள். எனக்குச் சாப்பாடு வேண்டாம் என்று படுத்துக் கொண்டார். சிவப்பாவைத் தவிர நாங்கள் எல்லோரும் மதியம் சாப்பிட்டு முடித்து வந்து, சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது நான் சிவப்பா அருகில் சென்று, யாத்திரையின்போது பட்டினியாய் இருக்காதே என்று சொல்லி, அவரது கையைப் பிடித்துத் தூக்கினேன். அவரது உடல் நெருப்பாய்க் கொதித்தது. அதிகமான காய்ச்சல். உடனடியாகக் குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் தகவல் சொல்லி, காய்ச்சல் மாத்திரை கொடுத்துச் சாப்பிடச் சொன்னோம். மாத்திரை சாப்பிட்டு விட்டு மீண்டும் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டார். மாலை நேரம் ரொட்டி தேநீர். சிவப்பாவின் காய்ச்சல் குறையவில்லை.

காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் சிவப்பாவிடம் தெலுங்கில் பேசினார். மருத்துவரிடம் சென்று காண்பித்தால் நல்லது என்று தோன்றியது. குருசாமி அவர்களிடம் சொல்லிக் கொண்டு, தனசேகரன் அவர்கள் சிவப்பாவை அழைத்துச் சென்று அருகில் உள்ள மருத்துவரிடம் காட்டி வைத்தியம் பார்த்து அழைத்து வந்தார். இரவு உணவு. சிவப்பா சிறிதளவே சாப்பிட்டார். மூன்றாம் நாள் திருவிழாவில் இன்றைய இரவு பஜனையில் யாத்திரிகர்கள் சிலரும் கலந்து கொண்டனர். ஓய்வு.

இன்று 46ஆம் நாள் - ஆனி 26 (10.07.2014) வியாழக் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்றுமுன்தினம் பாமிடி என்ற ஊரில் பாண்டுரங்கன் விட்டலர் கோயிலில் உள்ள கல்யாணமண்டபத்திற்கு வந்து சேர்ந்து தங்கியிருந்தோம். இன்று இரவு மணி 3.30 அளவில் காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு பாமிடியில் இருந்து புறப்பட்டோம்.



காலை 6.29 மணி காசிஸ்ரீ சிவப்பாவிற்கு நேற்று இருந்த காய்ச்சல் இன்று சரியாகிவிட்டது. அவரும் யாத்திரையில் எங்களுடன் சேர்ந்து நடந்தார். நேற்று அவருக்கு இருந்த உடல்நிலையில் இன்று அவரால் நடக்க முடியாது என்று நினைத்திருந்தேன். ஆனால் எவ்விதமான சுகவீனமும் இல்லாமல் சிவப்பா அவர்கள் நல்லபடியாக நடந்து வந்தார்.

காலை மணி 7.00 அளவில் சாலைவரி வசூல்மையம் (Toll Plaza) அருகே சாலையோரம் ரொட்டி தேநீர் சாப்பிட்டுவிட்டு நடைப்பயணத்தை மேற்கொண்டோம். சிறிது நேரத்தில் கூட்டி என்ற ஊரில் மலைமேல் மிகப் பெரிய கோட்டை தெரிந்தது. மலைமேல் உள்ள கோட்டையை உற்றுப் பார்த்தபடியே நாங்கள் நடைப்பயணம் மேற்கொண்டோம்.

கடுமையான வெயில்.

வேகமாக நடப்பவர்கள் விரைவாக நடந்து சென்று விட்டனர். நாங்கள் சிலர் தொடர்ந்து 7மணிநேரம் நடப்பதால் மிகவும் களைத்துப் போனாம். மிகவும் மெதுவாக நடந்து சென்றோம்.

பேய்மிரட்டி *- காலை 8.50 மணி அப்போது காசிஸ்ரீ சரவணன் அவர்கள் சாலையோரம் இருந்த ஒரு செடியைக் காட்டி இதுதான் "பேய் மிரட்டி" என்று கூறினார். இதன் இலையைத் திரிபோல் சுருட்டி வைத்துத்*



தீபம் ஏற்றலாம் என்றார். உடனே நாங்கள் அந்தச் செடியின் இலைகள் சிலவற்றைப் பறித்து எடுத்து வைத்துக் கொண்டோம்.



பசுபள்ளி (Bachupalli) ஸ்ரீ பட்ட சூங்காளம்மன் கோயிலில் ஒரு மண்சிட்டியில் நல்லெண்ணை ஊற்றி இந்தப் பச்சையாக உள்ள இலையை அப்படியே திரிபோல் சுருட்டித் தீபம் ஏற்றினோம். தீபம்



அருமையாக ஒளிவிட்டு எரிந்தது. ஒருவிதமான சுகந்த வாசம் வீசியது. இதன் பெயர் ***ஜோதிவிருட்சம்*** *என்றும்* ***பெருந்தும்பை*** *என்றும் கூறுகின்றனர்.*

மந்தராலயம் செல்வதற்குப் பாதை இங்கிருந்து பிரிந்து செல்கிறது. ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமியை மனதில் நினைத்து வணங்கிக் கொண்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.

கூட்டி (Gooty) என்றால் கோட்டை என்று பொருளாம். சிறிய குன்றின் மேல் மிகப்பெரிய கோட்டை உள்ளது. நாங்கள் கூட்டி ஊருக்குள் போகாமல் புறவழிச்சாலை வழியாக நடந்து சென்றோம். காலை மணி 11.10 அளவில் பசுபள்ளி (Bachupalli) ஸ்ரீ பட்ட சுங்களம்மன் கோயில் (Sri Baata Sunkalmma Temple Sunkulamma Devalayam, సుంకులమ్మ దేవాలయం, https://goo.gl/maps/NPjFzLJo98y) வந்து சேர்ந்தோம். குரங்குகள் அதிகமாக இருந்தன. மாலைநேரம் அம்மனை வழிபாடு செய்து கொண்டோம். சாலையில் பயணம் செய்வோர் மிகுதியான எண்ணிக்கையில் இந்த அம்மனை வழிபட்டுச் செல்கின்றனர்.

மதிய உணவு. ஒய்வு. ***இன்றைய பயணம் சுமார் 27 கி.மீ.***

இன்று 47 ஆம் நாள் - ஆனி 27 (11.07.2014) வெள்ளிக் கிழமை.

இன்று இரவு மணி 3.30 அளவில் காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு கோயிலில் இருந்து புறப்பட்டோம்.

நான்குவழிச் சாலை அமைக்கும்போது சாலைகளின் நடுவே தடுப்புச் சுவர் அமைத்துள்ளனர். இதனால் அருகில் உள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், நீண்ட தொலைவு சென்று திரும்பி வரவேண்டியுள்ளது. இருசக்கர வாகன ஓட்டிகளும், விவசாயிகளும் அருகில் உள்ள இடங்களுக்குச் செல்ல உயிரைப் பணயம் ஒருவழிச்சாலையின் எதிர்புறம் பயணிப்பதைக் காண முடிந்தது.



தரமான சாலைகளும், தவறான சாவுகளும்



முன்பெல்லாம் ஒருவழிச்சாலையே ஒழுங்காக இருக்காது.

இப்பொதெல்லாம் நான்குவழிச் சாலை. ரூ.50, 100 என்று ஆங்காங்கே வரிகட்டினாலும் (Tollgate) சீராகப் பயணிக்க முடிகிறது. அதிலும் குறிப்பாகக் கனரக வாகனங்கள் முன்பெல்லாம் காசுமீரத்திலிருந்து 3220 கி.மீ. தூரம் பயணித்துக் கன்னியாகுமரி வரவேண்டும் என்றால் குறைந்தது 10 நாட்கள் ஆகும். ஆனால் இப்போதெல்லாம் குறைந்தது 3 நாட்களில் வந்து சேர்ந்து விடலாம். கனரகவாகத்தை விரைவாக ஓட்டிச் செல்வது எளிமையாகி விட்டது. நான்குவழிச் சாலைகள் அமைக்கப்பட்ட பின்னர் பொருள்போக்குவரத்து அதிகமாக நடைபெறுகிறது. இதனால் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து வருகிறது. வண்டிகள் சீரான வேகத்தில் சமமான பாதையில் இயக்கப்படுவதால் வண்டித்தேய்மானம் மிகவும் குறைந்து விடுகிறது. குறைந்த எரிபொருளில் அதிகத் தொலைவு செல்ல முடிகிறது. இதனாலும் பொருள் இழப்பு தவிர்க்கப்படுகிறது. இவ்வாறு வணிகம் பெருகுவதாலும், பொருள் இழப்புகள் தவிர்க்கப்படுவதாலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு நாடு வளர்ச்சியடைந்து வருகிறது.

வாகனங்கள் விரைவாகச் செல்ல ஏதுவாக, நான்குவழிச்சாலைகளில் அதிக இடையூறுகள் ஏற்பாடாமல் நடுவில் தடுப்பு அரண் அமைத்து விடுகின்றனர். இதனால் வாகனங்கள் எதிரெதிரே வருவது முற்றிலும் தவிர்க்கப்படுகிறது. சாலையில் வாகனங்கள் ஒன்றை யொன்று எதிர்த்து மோதிக்கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய் விடுகிறது. இதனால் பெரும் விபத்துக்களும், அதனால் உண்டாகும் உயிர் இழப்புகளும் பொருள் இழப்புகளும் தவிர்க்கப்படுகின்றன.

கனரக வாகன ஓட்டுநர்கள் எல்லாம் நான்குவழிச்சாலைகளினால் நன்மை அடைய, இருசக்கர வாகன ஓட்டுநர்களோ உயிரைப் பணையம் வைத்துப் பயணிக்கின்றனர் என்றால் அது மிகையாகாது. இருவழிச்சாலைகளின் நடுவே உள்ள தடுப்பு அரணைத் தாண்டிச் செல்ல முடியாமல் இருசக்கவாகனங்கும், மூன்று சக்கர வாகனங்களும் அருகில் உள்ள இடத்திற்கு அதிகதூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

அதிலும் குறிப்பாக அருகருகே உள்ள கிராமத்தினர் அடுத்துள்ள ஊருக்குச் செல்வதென்றால் நெடுந்தொலைவு பயணிக்க வேண்டியுள்ளது. அல்லது ஒருவழிப்பாதையில் எதிரே சாலைவிதிகளை மீறித் தவறாகப் பயணிக்க வேண்டியுள்ளது.





இதுபோன்ற இடங்களில் உள்ளவர்கள் தேவையில்லாமல் அதிகதூரம் பயணம் செய்வதைத் தவிர்த்து, ஒருவழிப்பாதையில் உயிரைப் பணையம் வைத்து ஒருவழிச் சலையில் எதிரே பயணிக்கின்றனர். ஆபத்து நிறைந்த பயணம் என்பது அவர்களுக்கு நன்கு தெரிகிறது. ஆனால்

வேறு வழியில்லாமல் இந்த ஆ(வி)பத்து நிறைந்த பயணத்தை நித்தமும் மேற்கொள்கின்றனர்.

எவ்வளவுதான் கவனமாக ஓட்டினாலும் அதிகாலை, சாயங்காலம், இரவு நேரங்களில் விபத்துகள் நடைபெற அதிகமாக வாய்ப்புகள் உள்ளன.



நகரங்களுக்கு அருகில் இணைப்புச்சாலைகள் (*service road)* உள்ளன . ஆனால் மற்ற எல்லா இடங்களிலும், நான்குவழிச்சாலை அருகில் உள்ள அனைவருக்கும் இதேநிலை தான். கிராம மக்கள் அருகில் இருக்கும் தங்களது விவசாய வேலைகளுக்காகவும், அருகில் உள்ள தங்களது கிராமங்களுக்குச் செல்வதற்காகவும் அதிகமான தொலைவு பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்கக் கிராம மக்கள் அன்றாடம் இதுபோன்று சாலைவிதிகளை மீறித் தங்கள் உயிரைப் பணையம் வைத்துச் சாலையைக் கடக்கின்றனர்.

ஏற்கனவே உள்ள சாலைகளை மாற்றாது புதிய நெடுஞ்சாலைகளை அமைத்திருக்கின்றனர். ஆனால் அருகில் உள்ள கிராமத்தினர் சாலைகளைக் கடக்க முடியாமல் தடுப்பு ஏற்படுத்தித் தடுத்துள்ளனர். இதனால் கிராமத்தினர் சாலையின் மறுபுரம் அருகில் உள்ள வயலுக்கோ மற்றொரு கிராமத்திற்கோ செல்லச் சுமார் 15 கி.மீ. பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நெடுந்தொலைவுப் பயணத்தைத் தவிர்த்து சாலையைக் கடந்து செல்வோர் விபத்துக்கு உள்ளாகின்றனர். கால்நடைகள் மிகுதியும் அடிபடுகின்றன :(
ஒவ்வொரு கிராமத்திலும் சாலையின் மறு பகுதிக்குச் செல்லும் வகையில் வசதிகள் செய்யப்படாமல் சாலைகளை அமைத்துள்ளனர்.

நான்குவழிச்சாலைகளால் கனரக வாகனங்களுக்கும் கார்களில் செல்வோருக்கும் நகரவாசிகளுக்கும் கனிசமான நன்மை. ஆனால் சாலையோரம் நடந்து செல்வோருக்கும், இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கும் கிராமத்தினருக்கும் பெருந் தீமையை உண்டாக்குகிறதோ? என்ற எண்ணம் தோன்றியது.

பியாபள்ளி (peapully) சோதனைச்சாவடி அருகே காலை 7.00 மணி அளவில் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம்.

இரவு மழை பெய்துள்ளது. இதனால் இதமான குளிர்ந்து காற்று வீசிக் கொண்டிருந்தது. நடைப்பயணம் இனிமையாக இருந்தது.

பியாப்பள்ளி வழியாக ஏணுகுமாரி (Zphs school, Enugumarri, Mettupalle,) என்ற ஊரில் புறவழிச் சாலை அருகே உள்ள ஜில்லா பரிசத் பள்ளிக்கூடத்திற்குச் சென்று கொண்டிருந்தோம். காலை மணி 8.50 அளவில் அந்தப் பள்ளிக் கூடத்தின் மாணவர்கள் விளையாட்டுத் திடலில் ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்தனர்.



காலை 8.52 மணி



காலை மணி 9. 10 அளவில் ஏணுகுமாரி (Zphs school, Enugumarri, Mettupalle,) ஜில்லா பரிசத் பள்ளிக் கூடத்திற்கு வந்து சேர்ந்தோம். மாணவர்களுக்கு மிகவும் நல்லமுறையில் மதியஉணவு வழங்கினர்.



மதியம் 2.50 மணி வகுப்புகள் முடிந்து மாணவர்கள் பள்ளியை விட்டுச் செல்லும் வரை மரத்தடியில் தங்கியிருந்தோம். பள்ளிமுடிந்து மாணவர்கள் சென்ற பின்னர் வகுப்பறைகளில் தங்கினோம். பாம்புகள் நிறைய உண்டு. எனவே கவனமாகத் தங்கியிருங்கள் என்று ஆசிரியர்கள் கூறிச் சென்றனர். எனவே யாத்திரிகர்கள் அனைவரும் அவரவருடைய டார்ச்லைட்களை எடுத்து வைத்துக் கொண்டு, வகுப்பறையின் சன்னல் கதவுகளை யெல்லாம் மூடிவிட்டுத் தூங்கினோம். சிலர் பள்ளிக்கூடத்தின் மேல்தளத்திற்குச் சென்று படுத்துத் தூங்கினர்.

நாள் முழுவதும் மின்சாரம் இல்லை. கும் இருட்டில் இரவு கழிந்தது. அலைபேசிகளுக்குப் பேட்டரி சார்ஜ் போடமுடியாமல் போனது. டார்ச்லைட் வெளிச்சத்தில் இரவு உணவு.

இன்றைய பயணம் சுமார் 22 கி.மீ.

இன்று 48 ஆம் நாள் - ஆனி 28 (12.07.2014) சனிக் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று ஏனுகுமாரி (Zphs school, Enugumarri, Mettupalle,) ஜில்லா பரிசத் பள்ளிக் கூடத்திற்கு வந்து சேர்ந்து தங்கியிருந்தோம்.

இன்று அதிகாலை 4.10 மணி அளவில் காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு ஏனுகுமாரி பள்ளிக்கூடத்தில் இருந்து பாதயாத்திரை புறப்பட்டோம்.

வழியில் காலை 7.00 மணி அளவில் கொத்தபள்ளி என்ற ஊர் அருகே காலை நேரம் ரொட்டி தேநீர் சாப்பிட்டோம்.



8.20 மணி



காலை 8.30க்கு உடுமலப்பாடு என்ற ஊருக்கு அருகே தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தத்தாத்ரேயர் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம்.
காலை உணவு.



எங்களைப் போல் ஒருவர் -

9.11 மணி அப்போது எங்களைப்போன்றே, காவி உடை அணிந்திருந்த சுவாமிஜி ஒருவர் வந்தார். எங்களது பயணம் பற்றி கேட்டு அறிந்து கொண்டார். அவர் 9 ஆண்டுகளுக்கு முன்னர் 12 சோதிர்லிங்கங்களுக்கும் பாதயாத்திரை மேற்கொண்டு வணங்கி வந்ததாகச் சொன்னார். உடனே குருஜி அவரது பாதங்களை வணங்கிக் கொண்டு, யாத்திரிகர்களையும் வணங்கிக் கொள்ளச் செய்தார். அவரும் பெரிதும் மகிழ்ந்து, யாத்திரிகர்கள் அனைவரையும் ஆசிர்வதித்தார். அவரது பயணத்தில் நடந்த சில அனுபவங்களைக் கூறி வியந்து பேசினார்.

யாத்திரிகர்கள் அனைவரும் அருள்மிகு தத்தாத்ரேயர் சந்நிதியில் வழிபாடு செய்து கொண்டோம். தங்கல். மதிய உணவு.

அர்ச்சகரின் அன்பு - மாலைநேரம் நல்ல மழை பெய்தது. குளிர்ந்த வாடைக் காற்று வீசியது. யாத்திரிகர்கள் கோயில் வளாகத்தில் படுத்துத் தூங்க முடியாத நிலை ஏற்பட்டது. உடனே கோயில் அர்ச்சகர், அவருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த வீட்டைக் காலிசெய்து அவரது வீட்டிலிருந்த பொருட்கள் எல்லாவற்றையும் வேறொரு அறையில் ஒதுக்கி வைத்து, யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தார்.

அருள்வாக்கு - இரவு மணி 8.00 அளவில் எல்லோரும் அயர்ந்து படுத்துவிட்டனர். அப்போது கோயிலுக்கு வந்த ஒருவர் குருசாமி அவர்களைப் பார்த்து ஆசி பெற வேண்டும் என்று என்னிடம் கேட்டார். தனது தாய் தந்தை மற்றும் மனைவி மகனுடன் குடும்பமாக வந்திருப்பதாகவும் கூறினார்.

எல்லோரும் படுத்துத் தூங்கிவிட்டார்களே என்று கூறினேன். எங்களது பேச்சுச் சத்தம் கேட்ட குருசாமி பச்சைக்காவடி அவர்கள் எழுந்து என்ன என்று

விசாரித்தார். அவர்களை அழைத்து ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் கொடுத்தார். 8 ஆண்டுகளுக்கு முன்னர் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் வழங்கிய அருள் வாக்குப்படியே தனக்கு இந்த மகன் பிறந்ததாக கூறி மனம் நெகிழ்ந்தார். அவரது தாய் தந்தையர் தங்களுக்குப் பேரன் பிறந்தது குருசாமி அவர்களின் திருவருளே என்றுகூறி குருசாமி பச்சைக்காவடி அவர்களின் கால்களைப் பிடித்து வணங்கிப் போற்றினர். குருசாமி அவர்களிடம் இது இங்குள்ள தத்தாத்ரேயர் திருவருளாகும் என்று கூறி அவர்களை ஆசிர்வதித்து மீண்டும் விபூதி பிரசாதம் கொடுத்தார்.

குருசாமி அவர்களிடம் இன்றைய தினம் நான் இங்கே வருகிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டார். 8 ஆண்டுகளுக்கு முன்பு பௌர்ணமி நாளில் கோயிலுக்கு வந்திருந்தேன். அப்போது எனக்குக் குழந்தையில்லை. தாங்கள் எனக்குப் பையன் பிறப்பான் என்றுகூறி ஆசிர்வதித்தீர்கள். அப்படியே மகன் பிறந்தான். அதிலிருந்து ஒவ்வொரு பௌர்ணமி நாளன்றும் இந்தக் கோயிலுக்கு வந்து கும்பிட்டுச் செல்கிறேன்.இன்று பௌர்ணமி. அதனால் கோயிலுக்கு வந்தேன். அன்னதான வண்டி கோயில்வாசலில் நிற்பதைப் பார்த்தேன். சுவாமிஜி வந்துள்ளார் என்பதை அறிந்து கொண்டேன். உடனே வீட்டிற்குச் சென்று மகன், கணவன், மாமியார், மாமனாரையும் உடன் அழைத்துக் கொண்டு வந்து தங்களிடம் ஆசி பெற வந்தேன் என்று கூறினார். இதைக் கேட்ட குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பெரிதும் மகிழ்ந்து, நடந்தன அனைத்தும் தத்தாத்ரேயர் திருவருளே ஆகும். அவரைத் தொடர்ந்து வழிபடுங்கள் உங்களது குடும்பம் மேன்மை அடையும் என்று கூறி ஆசிர்வதித்தார்.



ஒருவர் சமையல் செய்ய, இருவர் குரங்குகளை விரட்டிக் கொண்டிருந்தனர். கோயிலில் பக்தர்கள் கூட்டமும் இருந்தது, குரங்குகள் கூட்டமும் இருந்தது.

இன்றைய பயணம் சுமார் 20 கி.மீ.

இன்று 49ஆம் நாள் - ஆனி 29 (13.07.2014) ஞாயிற்றுக் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று ஆந்திராவில் உடுமலப்பாடு என்ற ஊரிலுள்ள தத்தாத்ரேயர் கோயிலுக்கு வந்து சேர்ந்து தங்கியிருந்தோம். இன்று இரவு மணி 3.10 அளவில் காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு பாதயாத்திரை புறப்பட்டோம்.



வழியில் 5.45 மணிக்கு காசி(வாரணாசி) 1453 கி.மீ . என்னும் பலகையை பார்த்ததும் யாத்திரிகர்கள் மகிழ்ச்சி அடைந்தனர் . லாடகிரி (Laddagiri) வேல்துருத்தி (Veldurthi) என்ற பெயர்கள் தமிழ்ப்பெயர்கள் போன்று ஒலித்தன. 7.10 மணிக்கு வேல்துருத்தி என்ற ஊர் அருகே காலைதேநீர் .

வழியில் வேல்துருத்தி ஸ்ரீ சாய் ஐயப்பா வெங்கடேசுவரர் திருக்கோயில் கோபுரம் கட்டிமுடிக்கப் பெற்று குடமுழுக்கு நடைபெறத் தயாரான நிலையில் இருந்தது. கோபுரத்தைக் கண்டு வணங்கிக் கொண்டோம்.





காலை 8.10க்கு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஒரு ஜீவசமாதியில் காலை உணவு. அன்னதான வண்டியைப் பார்த்ததும் ஒரு லாரி நின்றது. அதிலிருந்து ஒரு இளைஞர் இறங்கி வந்து யாத்திரிகர்களை நலம் விசாரித்தார். இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை செல்லும் செய்தி அறிந்து மிகவும் மகிழ்ந்து போனார். அவரது பெயர் நினைவில் இல்லை.

நான்குவழிச்சாலை விரிவாக்கத்திற்காகச் சாலையை அகலப்படுத்தும்போது சாலையோரம் இருந்த கோயில்களை அப்படியே பெயர்த்தெடுத்து அருகில் கட்டிக் கொடுக்காமல் கைவிட்டுள்ளனர். இடிக்கப்பட்ட கோயில்களைக் கண்டு மனம் இடிந்து போனது. கடற்களிமண்ணால் ஆன பாறைகள் உளிண்டகொண்ட அருகே மிகுதியாகக் கிடந்தன.



நெடுஞ்சாலை யிலிருந்து உளிண்டகொண்டா ஊருக்கு பிரியும் பாதைக் காட்டும் பெயர்ப்பலகையானது நெடுஞ்சாலைத் துறையினரால் வைக்கப்பட வில்லை. பெயர்ப் பலகை ஆங்கிலத்திலும் இல்லை, இந்தியிலும் இல்லை. இதனால் இந்தப் பெயர்ப் பலகையைச் சரியாகக் கவனியாது யாத்திரிகர்கள் பலரும் உளிண்டகொண்டா ஊரின் புறவழிச்சாலை வழியாக நெடுஞ்சாலை யிலேயே நடந்து சென்று விட்டனர். கடைசியாக வந்த நாங்கள் சிலர் மட்டும் பாதை தெரியாமல் நின்று கொண்டிருந்தோம். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் வந்து சேர்ந்து, ஏன் இங்கே நின்று கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார்.

பாதை தெரியாமல் நிற்கிறோம் என்று சொன்னோம். இதோ இதுதான் ஊருக்குள் செல்லும் பாதை, நாம் உளிண்டகொண்டா ஊருக்குள் சென்று அங்குள்ள பள்ளிக்கூடத்தில் தங்க வேண்டும் என்று குருசாமி கூறினார். உடனே புறவழிச்சாலை வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தவர்களுக்கு அலைபேசியில் தகவல் தெரிவித்து ஊருக்குள் வரச் சொன்னோம். மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் விபரம் அறிந்து கொண்டு அவரே ஒவ்வொரு யாத்திரிகரையும் நிறுத்தி ஊருக்குள் செல்லுமாறு கூறிச் சென்றார். முயல் ஆமை கதைபோல், எங்களை முந்திச் சென்ற அனைவரும் எங்களுக்குப் பிந்தி வந்து சேர்ந்தனர்.

உளிண்டகொண்டாவில் மலைமேல் ஒரு சிறு கோயில் உள்ளது. அடிவாரத்திலும் மிகவும் பழைமையான கோயில் ஒன்று உள்ளது..

காலை மணி 10.20க்கு உளிண்டகொண்டா ஊருக்கு வந்து சேர்ந்தோம். ஞாயிற்றுக் கிழமை என்பதால் பள்ளியில் யாத்திரிகர்கள் தங்குவதற்கென இரண்டு வகுப்பறைகளை ஒதுக்கிக் கொடுத்தனர். மின்வசதி செய்து கொடுத்தனர். மழைபெய்து பள்ளி வளாகத்தில் மழைநீர் தேங்கி இருந்தது. இந்தப் பள்ளிக்கூடம் “உண்டுஉறைவிடப் பள்ளி” எனத் தோன்றியது. இன்று ஞாயிற்றுக் கிழமை, பிள்ளைகளின் பெற்றோர்கள் பலரும் குடும்பத்துடன் பள்ளி வளாகத்தில் வந்து தங்கி இருந்தனர். அவரவர் வீட்டிலிருந்து கொண்டு வந்த மதியச் சாப்பாட்டைப் பிள்ளைகளுக்கு ஊட்டி விட்டனர். தாய்மார்கள் சிலர் அவர்களது பெண்பிள்ளைகளுக்கு தலைமுடியைச் சீவிச் சிங்காரித்து விட்டுக் கொண்டிருந்தனர். மாணவர் ஆசிரியர் பெற்றோர் அனைவரையும் மலர்ந்த முகத்துடன் காணமுடிந்தது.

யாத்திரிகர்கள் உடன் வரும் அன்னதான வண்டியின் சக்கரத்தில் காற்று இல்லாமல் இருந்தது. அதைக் கழற்றி எடுத்துச் சென்று சீர் செய்து கொண்டு வந்து மாட்டினர். மதிய உணவு . மாலை நேரத்தில் பலர் வந்து குருஜியிடம் அருள்வாக்கு கேட்டுச் சென்றனர். மாலைநேரத்தில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர் அனைவருக்கும் குருஜி சுடச்சுட “பூஸ்ட்” கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தினார். மாலைநேரத்தில் இன்று யாத்திரிகர்களுக்கும் “பூஸ்ட்” வழங்கப்பட்டது. தங்கல் . ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 28 கி.மீ.

இன்று 50ஆம் நாள் - ஆனி 30 (14.07.2014) திங்கள் கிழமை.

இன்று இரவு மணி 3.20 அளவில் காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு பாதயாத்திரை புறப்பட்டோம். வழியில் பெத்ததெருக்குரு என்ற ஊரில் சாலையோரம் பாரத் கேஸ் நிறுவனம் உள்ளது.

காலை 6.50 மணிக்கு பாரத் கேஸ் நிறுவன வளாக வாயில் அருகே ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.



பாரத்கேஸ் மொத்தமாக டேங்கரில் வாங்கிச் செல்வதற்காகத் தமிழ்நாட்டில் இருந்து பல லாரிகள் வந்து வரிசையில் நின்றன. தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த லாரி ஓட்டுநர்கள் பலரும் இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்று கொண்டிருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ந்து பெருமிதம் கொண்டனர். கர்னூல் ஊரின் அருகே, ஒரு சிறிய மணற் குன்றின்மேல் மிகப் பெரிய ஆஞ்சநேயர்கோயில் உள்ளது. தொலைவிலிருந்தே அந்த ஆஞ்சநேயரின் திருவுருவத்தைக் காணக் கூடிய அளவிற்குப் பெரியதொரு சிற்பமாக அமைத்திருந்தனர். ஸ்ரீ ஆஞ்சநேயரை வணங்கிக் கொண்டு பாதயாத்திரைத் தொடர்ந்தோம். 8.10மணிக்கு தேசிய நெடுஞ்சாலையில் காலை உணவு.



காலை 9.04 மணி



நேற்று நெடுஞ்சாலையிலிருந்து உளிண்டகொண்டா ஊருக்கு பிரியும் பாதையைச் சரியாகக் கவனிக்காது யாத்திரிகர்கள் பலரும் பாதைமாறி, நெடுஞ்சாலையிலேயே பயணம் செய்து மீண்டும் ஊருக்குள் வந்து சேர்ந்தனர். நேற்றுப்போல் இன்றும் நடந்துவிடக்கூடாது என்று, யாத்திரிகர்கள் அனைவரும் ஒன்றாகவே கர்னூல் சாலைகளில் பாதை மாறிவிடாமல் பயணம் செய்தனர். அன்னதான வண்டியின் கேபிள் சீர் செய்யப்பட்டது. கர்னூல் பைபாஸ் வழியாக சந்தோஷ் நகருக்குக் காலை 10.00மணிக்கு வந்து சேர்ந்தோம்.



புனித காசி யாத்திரையில் 50ஆவது நாளான இன்று கர்னூலில் சுவாமி விவேகானந்தா பள்ளியில் தங்கியிருந்தோம்.



இன்று பாதயாத்திரையின் 50ஆவது நாள் என்பதால் யாத்திரிகர்கள் அனைவரும் சேர்ந்து நின்று படம் எடுத்துக் கொண்டோம். இந்தப் படத்தை அண்ணன் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்கள் அவரது கேமிராவில் எடுத்தார். அதனால் இந்தப் படத்தில் அண்ணன் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்கள் இடம்பெறவில்லை. ஓய்வு. தங்கல்.

துங்கபத்ரா நதியின் தென்கரையில் கர்னூல் உள்ளது. துங்கபத்ரா நதியின் வடகரையிலிருந்து தெலுங்கானா மாநில எல்லை அமைந்துள்ளது.

இன்றைய பயணம் சுமார் 24 கி.மீ.

இன்று முதல் தெலுங்கானா மாநிலத்தில் பயணம்

இன்று 51ஆம் நாள் - ஆனி 31 (15.07.2014) செவ்வாய்க் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று கர்னூல் ஊரில் உள்ள சுவாமி விவேகானந்தர் பள்ளிக்கூடத்தில் வந்து தங்கியிருந்தோம்.

இன்று யாத்திரையில் அதிக தூரம் பயணம் செய்ய வேண்டிய நாள்.

இரவு மணி 2.25க்கு யாத்திரிகர்கள் எழுந்துவிட்டோம். மின்சாரம் இல்லை. 3.20 மணியளவில் காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு பாதயாத்திரை புறப்பட்டோம்.

அதிகாலை சுமார் 4..15 அளவில் துங்கபத்ரா நதியைக் கடந்து தெலுங்கானா மாநிலத்திற்குள் பயணம் செய்தோம். அதிகாலை 6.50 மணிக்கு ஜலபுரம் என்ற ஊர் அருகே பெட்ரோல்பங்கின் எதிர்புறம் சாலையோரம் அமர்ந்து ரொட்டி தேநீர் சாப்பிட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட தூரத்திற்கு சாலையின் ஓரங்களில் ஊர்கள் எதையும் காணமுடிய வில்லை, வியப்பாக இருந்தது. தென்னாடு

நோக்கிப் படையெடுத்த அன்னியப்படையினர் இந்தச் சாலைவழியாகச் செல்லும்போது, கிராம மக்களைப் பிடித்து அடிமைகளாக மாற்றிப் படைகளுக்குத் தேவையான எடுபிடி வேலைகளைச் செய்ய வைத்தனராம். அதனால் சாலையோரம் இருந்த கிராமங்கள் எல்லாவற்றையும் காலிசெய்து சாலையிலிருந்து சுமார் 4 அல்லது 5 கி.மீ தொலைவில் அமைத்துக் கொண்டனராம். இதனால் இந்தப் பகுதியில் சாலையோரம் கிராமங்கள் ஏதும் கிடையாது என்று சொன்னார்கள்.

காலை 04.09 மணி காசிஸ்ரீ சிவப்பா அவர்களுக்குக் கால் சுளுக்கு ஏற்பட்டு மருந்து தடவிக் கொண்டு யாத்திரையை தொடர்ந்தார்.



10.40 மணிக்கு கோதண்டபுரம் என்ற ஊர் வந்து சேர்ந்தோம். ஊரைக் கடந்துசென்றதும் சிறிது தொலைவில் சாலையோரம் ***அரிசி ஆலை*** ஒன்று இருந்தது. அங்கு சென்று தங்கினோம். அனைவருக்கும் பீன்ஸ் சூப் வழங்கப்பட்டது. யாத்திரிகர்கள் அனைவரும் விரும்பி கூடுதலாக கேட்டு வாங்கிச் சாப்பிட்டனர்.

அபலைப் பெண் - அப்போது, ஒரு பெண் 4 வயது மகனுடன் அங்கே இருந்தார். தமிழ் நன்றாகப் பேசினார். தான் வேடசந்தூர் என்றும் , தனது கணவன் இந்த ஊரில் வேலை பார்ப்பதற்காக வந்துள்ளார் என்றும், அவரைத் தேடிவந்ததாகவும் சொன்னார். ஆனால் அவர் இங்கு வேலை கிடைக்காத காரணத்தால் ஈரோடு சென்று விட்டதாக கூறுகின்றனர். தேடிவந்த கணவர் இல்லாத காரணத்தினால், திரும்பிச் செல்ல பணம் இல்லை என்று கூறி அந்தப் பெண் கண்ணீர் வடித்தார். குருசாமி அவர்கள், அந்தப் பெண்ணிற்கும் அவளது மகனுக்கும் ரொட்டி யும் பீன்ஸ்சூப்பும் கொடுக்கச் செய்தார். யாத்திரிகர்கள் தங்களால் இயன்ற பணத்தை வழங்கினார்கள். மனதிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. ஓய்வு. மதிய உணவு.

மதியம் 2.30க்கு குருஜி யாத்திரை வழிபாட்டைத் துவக்கினார். வழிபாடு முடிந்ததும் யாத்திரையைத் தொடங்கினோம்.



மாலை 4.50 மணிக்கு பீச்பள்ளி என்ற ஊரில் உள்ள ஸ்ரீராமர் கோயில் வந்து சேர்ந்தோம். இங்கு தங்குவதற்கு இரண்டு சிறிய அறைகள் ஒதுக்கிக் கொடுத்தனர். ஒரு அறைக்குள் நான்குபேர்களுக்கு மேல் தங்க இயலாது.

இதனால், *கிருஷ்ணா நதியின் தென்கரையில் ஆற்றங் கரையோரம் உள்ள சரசுவதி கோயிலில்* சென்று தங்கலாம் எனக்கூறி, அங்கே சென்று விசாரித்தனர். அங்கேயிருந்த நான்கு அறைகளை யாத்திரிகர்களுக்காக ஒதுக்கிக் கொடுத்தனர். மேலும் சமையல் செய்வதற்கும் வசதியான சமையல்கூடம் இருந்தது. எனவே மிகவும் வசதியாகச் சரசுவதி கோயிலில் தங்கினோம். யாத்திரிகர்கள் அனைவரும் மிகவும் அசதியாக இருந்தனர். ஓய்வு. தங்கல். நாளை முழுவதும் ஓய்வு. இங்கேயே தங்குதல்.

இன்றைய பயணம் சுமார் 50 கி.மீ.

இன்று 52ஆம் நாள் - ஆனி 32 (16.07.2014) புதன் கிழமை.

இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று கிருஷ்ணா நதியின் தென்கரையில் ஆற்றங்கரையோரம் உள்ள ஸ்ரீராமர் கோயிலிலுக்கு வந்து சேர்ந்து தங்கியுள்ளோம்.

கிருஷ்ணா நதிக்கரையின் தென்கரையில் கோயில் உள்ளது. மிகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் கோயில் உள்ளது. அமாவாசை முதலான விஷேட நாட்களில் மிகமிக அதிகமாகக் கூட்டம் இருக்குமாம். நாங்கள் சென்றிருந்த நாட்களில் கூட்டம் இல்லை. ஆற்றங்கரையில் சுமார் 50 பேருக்கு மேல் இருந்தனர், கூட்டம் இல்லை.

கிருஷ்ணா நதிக்கரையில் படித்துறைகள் மிகவும் நேர்த்தியாகக் கட்டப்பெற்றிருந்தன. மிகவும் ஆழமான நதியாக இருந்தது.



கிருஷ்ணாநதி மேல்ப்பாலம் மிகவும் உயரமாகக் கட்டப்பெற்றிருந்தது. பாலத்திற்கு மேற்குப் பகுதியில் ஆற்றின் தென்கரையில் கோயில் உள்ளது. பாலத்திற்குக் கிழக்கே ஆற்றின் நடுவே மிகச் சிறிய குன்று ஒன்றும், அதன் மேல் கோட்டை ஒன்றும் இருந்தது.



ஆற்றின் கரையில் கலைவாணி, நாகர், மற்றும் பூதேவி ஸ்ரீதேவி உடனாய திருமால் ஆகிய தெய்வங்களை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்கள் யாரேனும் தலைமுடி எடுத்துக் கொள்வதாய் இருந்தால், முடி இறக்கிக் கொள்ளுங்கள் எனக்

கூறினார். எனது தந்தையின் பெயர் கிருஷ்ணன் . எனவே பீச்பள்ளி, கிருஷ்ணா நதியின் கரையில் தந்தையை நினைந்து தலைமுடி காணிக்கை செலுத்திட விருப்பம் தெரிவித்தேன். குருசாமி அவர்களும் ஆசிவழங்கினார். மற்றும் சில யாத்திரிகர்களும் முடி இறக்கிக்கொள்ள வந்தனர். எல்லோரும் ஆற்றங்கரைக்குச் சென்றோம். ஆற்றின் கரை ஓரமாகத் தெளிவான தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. இருந்தாலும் இடுப்பளவிற்கு ஆழம் இருந்தது. தனியாகச் சென்று யாரும் குளிக்கக்கூடாது என்று கூறி, இரண்டு குழுக்களாகப் பிரித்துக் குளிக்கச் சொன்னார்.

மற்றவர்கள் குளிக்கும்போது நான் கரையோரம் இருந்த தெய்வங்களைப் படம் எடுத்துக் கொண்டிருந்தேன். அதில் மிகவும் பழையான நடுகல் போன்று ஒருகல் தெரிந்தது. சென்று பார்த்தால், அதில் ஒரு பழமையான பிள்ளையார் சிற்பம் இருந்தது. எழுத்துகள் ஏதும் இல்லை.

நான் அந்தப் பிள்ளையார் இருந்த கல்லின் அருகே நின்று கொண்டிருந்தேன். உள்ளூர்காரர்கள் யாரும் அந்தப் பிள்ளையாரைக் கண்டுகொள்ள வில்லை.

காட்சியருளிய கணேசர் -

ஆற்றின் கரையோரம் நாவிதர் முடி இறக்கிவிட்டார். எல்லோருக்கும் முடி இறக்கிக் கொண்ட பின்னர், கடைசியாகக் குருசாமி பச்சைக்காவடி அவர்களும் முடிஇறக்கிக் கொள்ள உட்கார்ந்தார். அப்போது எங்களை மட்டும் தன்னுடன் இருக்கச் சொல்லிவிட்டு மற்றவர்களை அறைக்குச் சென்றுவிடுமாறு கூறினார். எனவே நாங்கள் சிலர் மட்டும் குருசாமி அருகே நின்று கொண்டிருந்தோம். குருசாமியின் தலைமுடியை இறக்குவதற்கு நாவிதர் தயாரானபோது, குருசாமி அவர்கள் “ஆனைமுகத்தான் திருவடி போற்றி, உப்பிலியப்பன் திருவடி போற்றி” எனச் சொல்லி வணங்கிக் கொண்டார்.



பிள்ளையாரைக் கும்பிடுகிறார் என்பதால் பிள்ளையார் அருகில் நின்று கொண்டிருந்த நானும் உடனே சற்று விலகி நிற்றேன். இப்போது குருசாமி அவர்களுக்கு நேர் எதிரே அந்தப் பழமையான பிள்ளையார் காட்சி அருளினார். அவ்வளவுதான் குருசாமி அவர்கள் பெரிதும் வியந்து மகிழ்ந்து போனார். அந்தப் பிள்ளையார் அந்த இடத்தில் இருந்ததை நான் ஏற்கனவே பார்த்துவிட்ட காரணத்தினால் எனக்கு இது ஒன்றும் அற்புதமாகத்

தெரியவில்லை. ஆனால், கிருஷ்ணாநதிக்கரையில் முடி இறக்கும் முன்பு, தான் வேண்டிக்கொண்டவுடன் தனக்கு முன் தோன்றிப் பிள்ளையார் காட்சி அருளிச் செய்துவிட்டார் என்று குருசாமி பச்சைக்காவடி அவர்கள் மிகவும் மனம் நெகிழ்ந்து உருகிப் போனார்.

முடிஇறக்கிவிட்டு ஆற்றில் இறங்கிக் குளித்தோம். ஆற்றில் மணல் இல்லை. பெரிய பெரிய உருண்டைக் கற்களாக ஆறுமுழுவதும் கிடந்தன. ஆற்று நீரில் குளிக்கும் போது, உடல் எங்கும் மீன்கள் கடித்தன. குறிப்பாகக் கால் நகங்களை மீன்கள் கடித்துக் கொண்டே இருந்தன. மீன்கடிக்குப் பயந்தே வெகுவிரைவாகவே குளித்து எழுந்தோம்.

மொட்டையும் உத்திராட்சக் கொட்டையும் -

யாத்திரையின் போது, 15.06.2014 அன்று, சிவசக்தி பீடம் திரு மேகநாதன் அவர்கள் யாத்திரிகர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் உத்திராட்சம் கொடுத்துச் சிறப்புச் செய்தார். அவர் கொடுத்த உத்திராட்சம் அப்படியே இருந்தது. அதை எடுத்து, அண்ணன் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களிடம் கொடுத்துக் கழுத்தில் அணிந்து கொண்டேன். கிருஷ்ணா நதிக்கரையில், எனது தந்தை கிருஷ்ணன் அவர்களை நினைந்து முடியிறக்கிக் கொண்டு, முதன்முதலாக உத்திராட்சம் அணிந்து கொண்டேன். நானே நானா? என்று எனக்கே எனது படத்தைப் பார்த்து வியப்பாக இருந்தது.

யாத்திரிகர்கள் பலரும் கோயில் வளாகத்தில் நின்று படம் எடுத்துக் கொண்டோம்.




அன்னதான வண்டியின் ஓட்டுநர் அவர்களும் வண்டியின் அருகே நின்று படம் எடுத்துக் கொண்டார். மாலைநேரம் கோயிலில் யாத்திரிகர்கள் அனைவரும் வழிபாடு செய்து கொண்டோம். இராமேசுவரத்திலிருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்று கொண்டிருக்கிறோம் என்ற விபரம் அறிந்த அர்ச்சகர் பெரிதும் மகிழ்ந்தார். எங்களுக்காகச் சிறப்பு வழிபாடு செய்து வைத்தார்.

இன்று ஓய்வு நாள். அதனால் அனைவரும் கோயில் வளாகத்திலேயே தங்கியிருந்தோம்.

குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

இன்று 53 ஆம் நாள் - ஆடி 1 (17.07.2014) வியாழக் கிழமை.

பீச்சுபள்ளியில் இருந்து வில்லியம்கொண்டாவிற்குப் பயணம்.



26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று முன்தினம் கிருஷ்ணா நதிக்கரையோரம் உள்ள பீச்பள்ளி என்ற ஊரில் உள்ள ஸ்ரீராமர் கோயில் வந்து சேர்ந்து தங்கி இருந்தோம்.

இன்று இரவு மணி 2.30 அளவில் எழுந்து வழக்கமான காலை வழிபாடு செய்துவிட்டு, ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுக் கொண்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம். இரவு 3.10 மணிக்கு கிருஷ்ணாநதியைக் கடந்து சென்றோம். அந்நேரத்தில் ஒரு ரம்மியமான இயற்கைச் சூழல் நிழவியது.



தோமளபள்ளி (Thomala Palle) என்ற ஊரின் பேருந்து நிறுத்தத்திற்குக் காலை மணி 6.00 அளவில் யாத்திரிகர்கள் சிலர் வந்துசேர்ந்து விட்டனர். அப்படியே அயர்ந்து தூங்கியும் விட்டனர். அன்னதான வண்டி காலை மணி 6.30 அளவில் வந்து சேர்ந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 7.32 மணி. நதிவழி (Natevally) என்ற ஊரின் அருகே செல்லும்போது, அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் தங்கியிருங்கள் என்று குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அலைபேசி வழியாகத் தகவல் சொன்னார். எனவே யாத்திரிகர்கள் அனைவரும் சாலையோரம் அமர்ந்து ஓய்வு எடுத்தனர். சிறிது நேரத்தில் குருசாமி அவர்களும் வந்து சேர்ந்துவிட்டார். அதன்பிறகு அனைவரும் ஒன்று சேர்ந்து நடந்து சென்றோம்.



காலை மணி 8.00 அளவில், தேசிய நெடுஞ்சாலையில் மிரசபள்ளி (Mirasapalli) என்ற ஊரின் பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டோம். காலை 8.59 மணி வில்லியம்கொண்டாவில் ஒரு "உண்டு உறைவிடப் பள்ளி உள்ளது மாணவர்கள் இங்கேயே தங்கிப் படிக்கின்றனர். அதிகாலை நேரத்திலேயே வகுப்புகள் தொடங்கிவிடுகின்றன.



மாலைநேரம் விளையாட்டு வகுப்புகள்... மாணவ மாணவியர் இயல்பாகக் கூடி விளையாடுகின்றனர். இரவு நேரங்களில் நுண்கலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. வீட்டில் பெற்றோருடன் இருப்பது போன்று, இயல்பாக மாணவ மாணவியர் ஆசிரியர்களுடன் இருந்து கற்றுக் கொள்கிறனர். இந்தப் பள்ளிக்கூடம் ஒரு முன்மாதிரியான குருகுலப்பள்ளி போன்று செயல்படுகிறது.

இந்தப் பள்ளியில் ஓர் தமிழாசிரியரும் உள்ளார். தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகிறது. யாத்திரிகர்கள் தங்குவதற்காகப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகளை ஒதுக்கிக் கொடுத்தனர். மாலை ஓய்வு நேரத்தில் ஆசிரியர் சிலரும், மாணவ மாணவியர் பலரும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசிபெற்றனர். மதிய உணவு. ஓய்வு. தங்கல்.

இன்றைய பயணம் சுமார் 21 கி.மீ.

இன்று 54ஆம் நாள் - ஆடி 2 (18.07.2014) வெள்ளிக் கிழமை.



இரவு 3.00 மணிக்கு வழக்கம்போல் வழிபாடு செய்துவிட்டு, ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். காலை 9.40 மணிக்கு அட்டக்கல் என்ற ஊர் வந்து சேர்ந்தோம்.

இரவு 3.43 மணி மும்மலபள்ளி . காலை 6.00 மணிக்கு கொத்தகொட்டா (Kothakota, Telangana 509381) என்ற ஊரில் காய்கறிகள் வாங்கிக்கொண்டோம். காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் காய்கறிகளை மூட்டையாகக் கட்டித் தூக்கிக் கொண்டனர். நானும் சிறிதுநேரமாவது தூக்கிவருகிறேன் என்று கேட்டுப் பார்த்தேன், கொடுக்க மறுத்து விட்டனர்.

காலை மணி 6.30 அளவில் சாலையோரம் உள்ள ஒரு சிவன்கோயிலில் வந்து தங்கி ஓய்வு எடுத்தோம்.



கோயில் அர்ச்சகர் கோயில் முழுவதையும் கழுவிச் சுத்தம் செய்து சிவலிங்கம் நந்தி இவற்றிற்கு அபிஷேகம் செய்து வழிபாடு நடத்தினார். யாத்திரிகர்கள் சிலரும் வழிபாட்டில் கலந்துகொண்டோம். அன்னதான வண்டி வருவதற்குச் சற்று காலதாமதம் ஆகிக்கொண்டிருந்தது. யாத்திரிகர்கள் பலரும் கோயில் வளாகத்தில் படுத்துத் தூங்கிவிட்டனர்.



பூசைகள் முடிவடையுவும், காலை மணி 6.45 அளவில் அன்னதான வண்டி வந்து சேரவும் சரியாக இருந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். நாக்பூர் 608 கி.மீ//. அடிலாபாத் 415 கி.மீ.. ஹைதராபாத் 128 கி.மீ. என்ற தகவல்பலகையை யாத்திரிகர்கள் பலரும் படித்துப் பார்த்து மகிழ்ந்து நடந்தனர்.

காலை 7.44 மணி, வெல்தூர் (Veltoor) என்ற ஊரின் பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டோம். யாரோ ஒரு வழிப்போக்கர் அந்தப் பேருந்து நிலையத்தில் படுத்திருந்தார். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவருக்கும் காலைஉணவு வழங்கினார்.





காலை மணி 9.40 அளவில் அடகல் (Addakal) என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். சாலையோரம் உள்ள பள்ளியில் தங்கினோம். அன்பர் ஒருவர் வந்து யாத்திரிகர்களை வரவேற்றார். ஓய்வு.



காலை 10.25 மணி

இன்றைய பயணம் சுமார் 25 கி.மீ.

இன்று 55ஆம் நாள் - ஆடி 3 (19.07.2014) சனிக் கிழமை.

இரவு 2.40 மணிக்கு காலை வழிபாட்டை முடித்துக் கொண்டு ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு யாத்திரை புறப்பட்டோம்.



రామేశ్వరం టు కాశీ..!

"சாட்சி " 19.07.2014 தெலுங்கு இதழில் மகபூப்நகர் மாவட்டம் பிரிவில் பக்கம் 16இல் காசி யாத்திரை பற்றிய செய்தி வெளியாகி இருந்தது.

அதிகாலை மணி 5.00 அளவில் சாலையோரம் இருந்த ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட்டோம். 6.30க்கு சாலையோரம் அமர்ந்து ரொட்டி தேநீர் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். காலையில் பெருமழை வரப்போதுவது போன்று மேகங்கள் சூழ்ந்தன. ஆனால் மிகவும் சிறிதளவில் சாரல் மழை தூரியது.



காலை 7.06 மணி ஹைதராபாத் 100கி.மீ. என்ற மைல் கல்லைப் பார்த்து யாத்திரிகர்கள் அதனருகில் நின்று படம் எடுத்துக் கொண்டனர்.



7.07 மணி



காலை 7.16 மணி



காலை 8.00 மணிக்கு ஜனாம்பேட் என்ற ஊர் அருகே சாலையோரம் இருந்த பெட்ரோல் பங்கில் அமர்ந்து காலை உணவு.

புத்பூர் என்ற ஊர் வந்து சேர்ந்தோம்.
புத்தருடன் இந்த ஊருக்கு தொடர்பு உள்ளது , எனவே இப்பெயர் ஏற்பட்டுள்ளது என்றனர். 9.22 மணிக்கு புத்பூர் ஜில்லாபரிசத் பள்ளியில் தங்கினோம். பள்ளி நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனவே மரத்தடியில் தங்கினோம். பள்ளி ஆசிரியர்கள் சிலர் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் “ சாட்சி” பத்திரிக்கைச் செய்தியைக் கொடுத்து ஆசி பெற்றுச் சென்றனர்.

11.30 மணிக்கு வெண்டைக் காய் ரசம் யாத்திரிகர்களுக்கு வழங்கப்பட்டது.

பள்ளி வளாகத்தில் அரசமரத்தடியில் புத்தர் சிலை ஒன்று இருந்தது. புத்தர் நின்ற கோலத்தில் ஆசி வழங்கினார்.
மதிய உணவு. பள்ளியின் வரண்டாவில் அமர்ந்து யாத்திரிகர்கள் மதியஉணவு சாப்பிட்டோம். மாலைநேரம் பள்ளி முடிந்தவுடன் மூன்று வகுப்பறைகளை யாத்திரிகர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து தங்குவதற்கும் வசதி செய்து கொடுத்தனர். ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 25 கி.மீ.

இன்று 56ஆம் நாள் - ஆடி 4 (20.07.2014) ஞாயிற்றுக் கிழமை.

26.05.2014 அன்று இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமியை வணங்கிக் கொண்டு காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, நேற்று புத்பூர் என்ற ஊரில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு வந்து தங்கியிருந்தோம். இன்று இரவு 2.10 மணிக்கு தினசரிவழிபாட்டை முடித்துக் கொண்டு, ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுபிட்டுவிட்டு ராஜபூர் நோக்கிப் பயணம் புறப்பட்டோம். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டு இருந்தது.

காலை 6.00 மணிக்குச் சாலையோரம் இருந்த கடை வாயிலில் அமர்ந்து ஓய்வு எடுத்தோம். சிலர் அயர்ந்து தூங்கிவிட்டனர். அன்னதான வண்டி சுமார் 6.30 மணிக்கு வந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.



காலை 7.00 மணி சாலையோரம் இருந்த கோயிலைக் கும்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



ஜட்சேர்லா என்ற ஊர் அருகே காலை 7.50 மணிக்கு காலை உணவு. காலை 8.30 மணிக்கு ராஜ்பூர் என்ற ஊர் சென்று சேர்ந்தோம். 24 கி.மீ. பயணம். ஓய்வு. மதிய உணவு.

ராஜ்பூரில் தங்குவதாகத் திட்டம். ஆனால் 10 கி.மீ. தொலைவில் உள்ள பாலநகர் ஐயப்பன் கோயிலில் இருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாத்திரை பற்றிக் கேட்டறிந்தனர். பாலநகரில் உள்ள ஸ்ரீ ஐயப்பன் கோயில் புதிதாக கட்டி முடிக்கப் பட்டுள்ள தாகவும், அங்கு வந்து தங்குமாறும் கேட்டுக் கொண்டனர். ஸ்ரீ ஐயப்ப பக்தர்களின் விருப்பத்திற்கு இசைய அங்கே சென்று தங்கிக் கொள்ளளாம் எனக் குருசாமி அவர்கள் கூறினார். எனவே மதிய உணவு முடிந்தவுடன் மதியம் 1.45 மணியளவில் பாலநகர் நோக்கிப் புறப்பட்டோம்.


எங்கிருந்தோ மணல் அள்ளிக் கொண்டு வந்து சாலையோரம் கொட்டியிருந்தனர். இந்த வகையிலான மணல்திட்டுகள் சில மலைகளின் மேல் பொக்குப் பாறைகளாகப் படிந்திருப்பதையும், சில இடங்களில் கிரானைட் பாறைகளின் இடுங்களில் படிந்திருப்பதையும் காணலாம். பிரளயகாலத்தில் கடல்கோள் உண்டாகிக் கடற்கரையைக் கடந்த போது அடித்துவரப்பட்ட மணல் இது என்பது எனது கருத்து. மதியம் 2.00 மணிக்கு மேகங்கள் சூழ்ந்தன. சாரல் அடித்தது. யாத்திரிகர்கள் குடை பிடித்துக்கொண்டு நடந்தனர். ஆனால் எதிர்பார்த்தபடி கனமழை பெய்யவில்லை.

மாலை 3.45 மணிக்கு பாலநகர் ஐயப்பன் கோயிலைச் சென்று சேர்ந்தோம். ஸ்ரீ ஐயப்ப பக்தர்கள் கோயிலுக்கு வந்து யாத்திரிகர்களை வரவேற்று தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.



தங்குவதற்கு மிகவும் வசதியாக அனைத்து வசதிகளுடன் கோயில் கட்டப்பட்டுள்ளது. மாலை நேரத்தில் ரொட்டியும் தேநீரும். வழிபாடு. ஓய்வு. இரவு உணவு. தங்கல். ***இன்றைய பயணம் சுமார் 35 கி.மீ.***

இன்று 57 ஆம் நாள் - ஆடி 5 (21.07.2014) திங்கள் கிழமை.



இரவு 2.30 மணிக்கு தினசரிவழிபாட்டை முடித்துக் கொண்டு, ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுபிட்டுவிட்டு மதியம் மணி 11.30 அளவில் "பாலமாகுள Palamakul" என்ற ஊருக்குப் பயணம் புறப்பட்டோம். "All the roads lead to Rome" என்பார்கள். உண்மையில் பாரததேசத்தில் உள்ள ஒவ்வொரு ஊரும் ஒரு ரோம் நகரம் போன்றதாகும். இந்தியாவில் எந்தவொரு சாலையில் நடந்து சென்றாலும் அந்தப் பாதையானது அந்தஊரின் கோயிலின் வாயிலுக்கே சென்று சேரும். இந்தக் கோயிலில் கோபுரத்திற்கும் தேர்நிறுத்தத்திற்கும் இடையே சாலை அமைந்துள்ளது.

கோயில் வாயிலை அடையும் போது மிகவும் சரியாகக் காலை 6.00 மணி ஆகியிருந்தது. கோயில் திறந்திருந்தது. கோபுரத்தை வணங்கிக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

காலை மணி 6.15 அளவில் மிலினியம் டவுன்சிப் (Millenium township, Shadnagar, 509216) அருகே சாலையோரம் அமர்ந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்தோம். யாத்திரிகர்கள் சிலர் அயர்ந்து தூங்கிவிட்டனர். அன்னதான வண்டி சுமார் 6.45 அளவில் வந்து சேர்ந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

H.B.L. நகர் அருகே, காலை மணி 8.45 அளவில் சாலையின் மறுபக்கத்தில் இருந்த பெட்ரோல் பங்கில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டு முடித்தவுடன் குருசாமி பச்சைக்காவடி அவர்களும் காசிஸ்ரீ சரவணன் அவர்களும் கடைசியாக நடந்து வந்தனர். படத்தில் பெட்ரோல் பங்கில் இருந்து அன்னதான வண்டி வெளியே வருதைக் காணலாம்.



காலை மணி 10.50 அளவில் திம்மபூர் வந்து சேர்ந்தோம்.



மதியம் மணி 11.30 அளவில் "பாலமாகுள Palamakul" என்ற ஊருக்கு வந்து சேர்ந்து தங்கினோம். ***இன்றைய பயணம் சுமார் 34 கி.மீ.***

இன்று 58ஆம் நாள் - ஆடி 6 (22.07.2014) செவ்வாய்க் கிழமை.

பயணத் திட்டத்தில் சிறிது மாற்றமாக 21.07.2014 நேற்றே பால்மாகுல் என்ற ஊர் வந்து சேர்ந்து இருந்தோம் . இன்று காலை பால்மாகுல் ஊரில் இருந்து காலை 4.10 மணிக்குத் தினசரிவழிபாட்டை முடித்துக் கொண்டு, ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டு காகன்பேடு என்ற ஊருக்குப் பயணம் புறப்பட்டோம்.



சாலையோரம் அமர்ந்து காலையில் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.















சம்சாபாட் என்ற ஊர் வழியாக காகன்பேடு என்ற ஊரில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலுக்கு 8.50 மணிக்கு வந்து சேர்ந்தோம் .
காலை உணவு . ஓய்வு .



வழிநெடுகிலும் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டு இருந்தது.

இன்றைய பயணம் சுமார் 18 கி.மீ.

இன்று 59ஆம் நாள் - ஆடி 7 (23.07.2014) புதன் கிழமை.

அதிகாலை 4.10 மணிக்கு தினசரிவழிபாட்டை முடித்துக் கொண்டு, ரொட்டி ஹார்லிக்ஸ் சாப்பிட்டுபிட்டுவிட்டு காகன்பேடு ஶ்ரீ எல்லம்மா கோயில் இருந்து பயணம் புறப்பட்டோம்.



அன்பர்கள் இருவர் இருசக்கர வாகனத்தில் வந்துநின்று யாத்திரிகர்களை வரவேற்றனர்.



குளிர்ந்த காற்று வீசிக்கொண்டே இருந்தது.



சாலையோரம் அன்பர் ஒருவர் நின்று யாத்திரிகர்களை வரவேற்று வழிகாட்டி அழைத்துச் சென்றார்.



காசிஸ்ரீ சிவப்பாவின் நண்பர் திரு ராமு அவர்களும் அதிகாலையில் பேருந்தில் வந்து சேர்ந்து யாத்திரிகர்களை வரவேற்றார்.





தலைநகர் ஹைதராபாத் ஊர் வழியாக செகந்திராபாத் ஊரில் உள்ள குஜராத் சேவாமந்திர் 8.50 மணிக்கு வந்து சேர்ந்தோம். பள்ளி வளாகத்தில் இருந்த மண்டபத்தை யாத்திரிகர்கள் தங்குவதற்குக் கொடுத்தார்கள். காலை உணவு . ஓய்வு .

இன்றைய பயணம் முழுதும் ஹைதராபாத் நகரத்தின் உள்ளேயே இருந்தது . குருஜி பச்சைக்காவடியின் அன்பர் ஒருவர் மதியம் அன்னதானம் வழங்கினார் . ஓய்வு . தங்கல்.

இன்றைய பயணம் சுமார் 20 கி.மீ.

இன்று 60ஆம் நாள் - ஆடி 8 (24.07.2014) வியாழக் கிழமை.

ஹைதராபாத் செகந்திராபாத் நகரங்களில் வசிக்கும் நகரத்தார் பலரும் வந்து குருசாமி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.

செகந்திராபாத் ஊரில் உள்ள குஜராத் சேவாமந்திரில் தங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களின் நண்பர் திரு சரவணமுத்து ஐயா அவர்கள் செய்து கொடுத்திருந்தார். இரவு உணவும் அவரது உபயம். குஜராத் சேவாமந்திரில் தங்கி இருந்தோம். குஜராத் சேவாமந்திர் பொறுப்பாளர்கள் பலரும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர். அடுத்து வரும் 2015ஆம் ஆண்டு இராமேசுவரம் - காசி பாதயாத்திரையின் போதும் யாத்திரிகர்கள் அனைவரும் இங்கேயே வந்து தங்கிச் செல்ல வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். குருசாமி அவர்களும் அந்த வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக் கொண்டு 2015ஆம் வருடமும் யாத்திரையின் போது இங்கே வந்து தங்கிச் சென்றுள்ளார்.

யாத்திரிகர்களுக்கு முழு ஓய்வு. குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்குச் சிறிதும் ஓய்வில்லாமல் போனது. அன்பர்கள் பலரும் வந்து ஆசிபெற்றுச் சென்றனர்.

இன்று 61ஆம் நாள் - ஆடி 9 (25.07.2014) வெள்ளிக் கிழமை.

பயணத் திட்டத்தின்படி இன்று ஓய்வு நாள். செகந்திராபாத் ஊரில் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்க வேண்டும். ஆனால் அடுத்து வரும்11 நாட்களும் தொடர்ச்சியாக பயணம் உள்ளதால், இன்று ஓய்விற்குப் பதிலாக பயணம் மேற்கொள்ளலாம் எனவும், இந்த ஓய்வை 11 நாளில் ஒரு நாள் எடுத்துக் கொள்ளலாம் எனவும் முடிவானது. எனவே, பயணத்திட்டத்தில் ஒரு சிறு மாற்றமாக, இன்று ஓய்வு எடுக்காமல் யாத்திரை நடைபெற்றது. செகந்திராபத்தில் இருந்து நடைப்பயணம் மேற்கொண்டு அத்திவெளி சென்று சேர்ந்தோம்.

இரவு 2.30க்கு தினசரி வழிபாட்டை முடித்துக் கொண்டு, ரொட்டியும் ஹார்லிக்சும் சாப்பிட்டு விட்டு யாத்திரைக்குத் தயார் ஆனோம். அன்னதான வண்டியின் ஓட்டுநர் வண்டியில் வைத்திருந்த அலைபேசியைக் காணவில்லை எனத் தேடிக் கொண்டிருந்தார். கடைசிவரை அலைபேசியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ வண்டிக்குள் கையை விட்டு எடுத்துச் சென்றிருக்க வேண்டும் எனக் கூறினார். இதனால் யாத்திரை இரவு 3.16மணிக்குப் புறப்பட்டது.

இன்று காலையில் செகந்திராபாத்தில் சில யாத்திரிகர்கள் பாதை மாறி பயணம் செய்த காரணத்தால் 2 கி.மீ. சுற்றி வந்தனர் ...



இரவு மணி 5.13க்கு நாக்பூர் 474 கி.மீ. என்ற தகவல் பலகையைப் பார்த்து மகிழ்ந்து நடந்து சென்றோம்.

இன்று அதிகாலை கிழக்கில் சூரியனுக்கு மேல் பிறைச் சந்திரனும் அதற்கும் மேலே வெள்ளியும் இருந்தன. இதே போன்ற அமைப்பு 26.05.2014 அன்று இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்தில் நீராடி மண் சேகரிக்கும் போதும் இருந்தது .

சாலையில் நடந்து செல்லும்போது ஒரு கோயில் கோபுரம் கண்ணுக்குத் தென்பட்டது. அந்தக் கிராமதெய்வத்தை வணங்கிக் கொண்டு, இந்தக் கிராம எல்லைக்குள் யாத்திரிகர்களைக் காத்தருள வேண்டும் என்ற வேண்டிக் கொண்டு நடைப்பயணத்தை மேற்கொண்டோம். வழியில் காலை 6.30 மணியளவில் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.



காலை 8.30 மணிக்கு ஒரு சிறு சிவன் கோயிலில் காலை உணவு .



அதிகாலை 5.15 மணியளவில் நாக்பூர் 474 கி.மீ. என்று போட்டிருந்த மைல்கல்லைப் பார்த்தோம். காலை 9.00 மணியளவில், நாக்பூர் 475 கி.மீ., என்று எழுதப்பட்டிருந்த மையில்கல்[2] இருந்தது. இதைப் பார்த்த காசிஸ்ரீ அங்கமுத்து அவர்கள் அதிர்ந்து போனார். 4 மணிநேரத்தில் சுமார் 14 கி.மீ. நடந்திருப்போம். எனவே தொலைவு 14 கி.மீ. குறைந்து நாக்பூர் 460 கி.மீ. என்று இருக்க வேண்டும். ஆனால் 1 கி.மீ. கூடுதலாகி, நாக்பூர் 475 கி.மீ. என்று போட்டுள்ளதே என்று காசிஸ்ரீ அங்கமுத்து அவர்கள் வியந்து போனார். இதுவரை வந்த தொலைவையும் இன்றும் செல்லவேண்டிய தொலைவையும் பேசிக் கணக்குப் போட்டுக் கொண்டே காசிஸ்ரீ சரவணன் அவர்களுடன் நடந்தார்.



பகல் 11.12 மணி பிள்ளையார் சதுர்த்திக்காகப் பிள்ளையார் உருவங்கள் செய்து விற்பனைக்காக வைத்திருந்தனர். குருசாமி பச்சைக்காவடி அவர்களும்

---

[2] மையில்கல் = மையில் என்பது தொலைவைக் குறிக்கும் அளவு. இப்போது கி.மீ. என்ற அளவு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு முன்பு “மைல்” என்ற அளவு பயன்படுத்தப்பட்டது. இதனால் காசிஸ்ரீ அங்கமுத்து அவர்கள் “மைல்கல்” என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

காசிஸ்ரீ சரவணன் அவர்களும் அத்திவெளி பேருந்துநிறுத்தம் அருகே காய்கறிகள் வாங்கினர். அந்தக் காய்கறிகளைக் காசிஸ்ரீ சரவணன் அவர்கள் தலையில் சுமந்து கொண்டு வந்து அன்னதான வண்டியில் சேர்த்தார்.



பகல் 11.33 மணி கோயில் வளாகத்தில் பள்ளிக்கூடம் அமைத்துள்ளனர். சுதந்திர இந்தியாவில் உருவாக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள் மருத்துவமனைகள் பேருந்து நிலையங்கள் மற்றும் அரசுநிறுவனங்கள் அனைத்தும் அந்தந்த ஊரின் கோயில் இடங்களாகத்தான் உள்ளன. அந்த வகையில் அத்திவெளி கோயிலும், ஜில்லா பரிஷத் பள்ளியும் ஒரே இடத்தில் அடுத்தடுத்து உள்ளன.

இரவு யாத்திரிகர்கள் அனைவரும் அத்திவெல்லி கோயில் மண்டபத்தில் தங்கியிருந்தோம். ஓய்வு. ***இன்றைய பயணம் சுமார் 28 கி.மீ.***

குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

இன்று 62ஆம் நாள் - ஆடி 10 (26.07.2014) சனிக்கிழமை.

நள்ளிரவு நேரத்தில், அனைவரும் அயர்ந்து துங்கிக் கொண்டு இருக்கும் போது திடீரென்று கோயிலில் இருந்த மின்சார மத்தளம் ஒலிக்க ஆரம்பித்தது. அதன் பலத்த ஓசை கேட்டு அரக்க பரக்க அனைவரும் எழுந்து பார்த்தோம். யாத்திரிகர்கள் ஒருவர் வெளிச்சத்திற்காக விளக்குப்போடும் சுவிட்சிற்குப் பதிலாக மின்சார மேளத்திற்கான சுவிட்சை போட்டுவிட்டார்.

அப்போது நேரம் இரவு 2.20 மணி. இந் நிகழ்ச்சியால் அனைவரும் எழும்போதே மிகவும் கலகலப்பாக மகிழ்ந்து சிரித்தபடியே எழுந்தனர்.



தினசரி வழிபாட்டை முடித்துக் கொண்டு, ரொட்டியும் ஹார்லிக்சும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். அத்திவெல்லி கோயிலில் இருந்து மனோகராபாட் என்ற ஊர் வழியாக துப்ரான் என்ற ஊரை அடைந்தோம்.



காலை 6.29 மணி சாலையோரம் இருந்த பெட்ரோல்பங்கில் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டோம்.



காலை 6.51 மணி



7.37 மணி சாலையோரம் அமர்ந்து காலை உணவு.

இத்தனைபேர் காவிகட்டி நடத் செல்வதைக் கண்ட இருசக்கர வாகன ஓட்டி இருவர் முன்னால் சென்றுகொண்டிருந்த குருசாமியின் குறுக்கே சென்று பாதையை மறித்து நிறுத்தினர். குருசாமியின் உடன் சென்ற காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் யாத்திரை பற்றிய தகவல்களைச் சொன்னதும். நாங்கள் இருவரும் பத்திரிக்கையாளர்கள் எனக் கூறித் தங்களை அறிமுகம் செய்து கொண்டு, குருசாமி அவர்களிடம் ஆசி பெற்றுக் கொண்டு, குருசாமி பச்சைக்காவடி அவர்களைப் பேட்டி எடுத்துச் சென்றனர். காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள்

இராமேசுவரம் காசி பாதயாத்திரை தொடர்பான பயணத்திட்டத்தை அவர்களுக்குக் கொடுத்து, யாத்திரை தொடர்பான மேலும் சில செய்திகளைக் கூடுதலாகச் சொன்னார்.

காலை 9.20 மணி துப்ரான் ஊரில் வசித்து வரும் குருஜியின் அன்பர் ஒருவர் யாத்திரிகர்களை எதிர்கொண்டு அழைத்து அவரது புதிய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அவர் புதிதாக வீடுகட்டி முடித்து இருந்தார். இனிமேல்தான் கிரஹகப் பிரவேசம். யாத்திரிகர்கள் தங்குவதற்கான எல்லா வசதிகளும் உள்ளன. யாத்திரிகர்கள் அந்தப் புதிய வீட்டில் தங்கலாமா? எனக் கேட்டார். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் பெரிதும் மகிழ்ந்து புதிதாகக் கட்டி முடிக்கப்பெற்றுள்ள வீட்டில் தங்கிக் கொள்ளச் இசைவு தெரிவித்தார். மின்மோட்டார் போட்டு யாத்திரிகர்கள் அனைவரும் மோட்டார் தண்ணீரில் குளித்து மகிழ்ந்தனர்.

அதிதி அன்னம் ஏற்ற ஆடி அமாவாசை -

(அதிதி என்றால், இன்னாரென அறியப்படாத, அறியமுடியாத ஒருவர் என்று பொருள்). அந்த புதிய வீட்டில் அந்த அன்பரும் அவரது மனைவியும் ஒன்றாகச் சேர்ந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களை வணங்கினார்கள். குருசாமி அவர்களை ஆசிர்வதித்தார். இன்று “ஆடி அமாவாசை, அதிதி ஒருவருக்கு அன்னதானம் செய்வது சிறப்பு” என்று அந்தத் தம்பதியரிடம் குருசாமி சொன்னார்.

ஊருக்குப் புறத்தே புதிதாகப் பிளாட் போடப்பட்டு, அதில் புதிதாக வீடு கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு இந்த வெயிலில் யாரும் வருவதற்கு வாய்ப்பு இல்லையே. அதிதிக்கு எங்கே போவது? என்று அந்த அன்பர் குருசாமியிடம் வருந்திச் சொன்னார். மதியம் சாப்பாட்டு நேரம் ஆகிவிட்டது. யாத்திரிகர்கள் அனைவரும் மதிய உணவிற்காக வரிசையாக அமர்ந்தனர். அனைவருக்கும் உணவு பரிமாறிப்பட்டு “அரோகரா” சொல்லி முடித்துச் சாப்பிடத் துவங்கும் நேரத்தில், மிகவும் கிழித்த அழுக்கான சட்டையுடன் சாலையில் ஒருவர் வேகமாக நடந்து சென்று கொண்டிருப்பதைக் குருசாமி அவர்கள் கண்டு விட்டார்.

“அதோ சாலையில் நடந்து செல்லும் அதிதியை அழைத்து வாருங்கள்” எனச் சொன்னார். அந்த அதிதியோ வேகவேகமாகச் சென்று கொண்டிருந்தார். ஆனாலும் அன்பரின் மனைவியோ மிகவும் வேகமாக ஓடிச் சென்று, அவர் முன்நின்று, அவரைச் சாப்பிட வருமாறு அழைத்தார். அந்த அதிதியும் அழைப்பை ஏற்றுவந்தார். சம்மணம் கூட்டி உட்கார்ந்தார், மதியஉணவு சூடாக இருந்தது. ஆனால் சூடுசோறு அவருக்குச் சூடாகத் தெரியவில்லை. அப்படியே சுடச்சுடச் சாப்பிட்டார். அடியேன் அந்த அதிதி சாப்பிடும்போது குடிக்கத் தண்ணீர் எடுத்துக் கொடுக்கும் பாக்கியம் பெற்றேன். அதிதி ஏதும் பேசவே இல்லை. சாப்பிட்டு முடித்தவுடன், உணவு அளித்த அந்தத் தம்பதியரைக் கைகளால் ஆசிர்வதித்தார். அவ்வளவுதான் பழையே வேகத்தில் வேகவேகமாக நடந்து சென்றுவிட்டார். எல்லாம் வேகவேகமாக நடைபெற்றன. மாடியில் உள்ள அறையில், பேட்டரி சார்ஸ் போட்டு வைத்துவிட்டுச் சாப்பிட வந்த காரணத்தினால் என்னால் அலைபேசியை உடனடியாக எடுத்துப் படம் பிடிக்க முடியாமல் போனது.

அந்த அதிதி சம்மணம் கூட்டி உட்கார்ந்து மிச்சம் வைக்காமல் உணவு முழுவதையும் திருப்தியாக உணவு உண்டதைக் கண்ட எங்கள் அனைவருக்கும் மனதிற்கு நெகிழ்சியாகவும் வியப்பாகவும் இருந்தது.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அருளிச் சொன்னபடி, ஆடி அமாவாசை நாளான இன்று அதிதி ஒருவர் வந்து மதிய உணவு சாப்பிட்டுச் சென்ற காரணத்தினால், அந்தத் தம்பதியர் பெரிதும் மகிழ்ந்தனர். இவ்வாறு நடக்கும் என யாரும் எதிர்பார்க்கவே இல்லை. இதற்காக அந்த தம்பதியர் குருசாமி

அவர்களைப் பெரிதும் போற்றி வணங்கினர். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் இது உங்களது முன்னோர்களின் நல்லாசியால் விளைந்தது. இனிமேல் உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும், உங்களது பெண்குழந்தைகள் இருவரும் மருத்தும் படித்துச் சிறந்த மருத்துவர் ஆவார்கள் எனக்கூறி ஆசிர்வதித்தார். ஓய்வு.

இன்றைய பயணம் சுமார் 25 கி.மீ.

பயணத்திட்டத்தில் ஒரு சிறு மாறுதலாக, ஒருநாள் முன்னதாகவே, நேற்று துப்ரான் என்ற ஊருக்கு வந்து தங்கி இருந்தோம்.

இன்று 63ஆம் நாள் - ஆடி 11 (27.07.2014) ஞாயிற்றுக் கிழமை.

தின வழிபாட்டை முடித்துக் கொண்டு ரொட்டியும் ஹார்லிக்சும் சாப்பிட்டுவிட்டு இரவு 3.20 மணிக்கு யாத்திரையை தொடர்ந்தோம். வழியில் வழக்கம்போல காலை6.30க்கு தேநீர். மழை தூரிக் கொண்டே இருந்தது.



காலை 7.41 மணி

துப்ரான் ஊரில் இருந்து வாடியராம் என்ற ஊர் வழியாகச் செல்ல வேண்டும். ஆனால் முன்னே சென்ற யாத்திரிகர்கள் நெடுஞ்சாலையின் புறவழிச் சாலைவழியாகச் சென்று விட்ட காரணத்தினால், எல்லா யாத்திரிகர்களும் புறவழிச்சாலை வழியாகவே நடந்து சென்றோம். இதனால் நடைப்பயணத் தொலைவும் நேரமும் கூடுதலானது.

செங்குந்தா என்ற ஊரை அடைந்து விட்டோம். சாலையோரம் இருந்த R & B Guest House, Telangana 502255 கட்டிட வளாகத்தில் அமர்ந்து காலை உணவு.







காலை மணி 10.15 அளவில் நரசிங்கி என்ற ஊரைச் சென்று சேர்ந்தோம்.

பகல் 10.37 மணி குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அன்பர் ஒருவர் இந்த ஊரில் உள்ள திருமண மண்டபத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். மண்டபத்தின் மாடியில் யாத்திரிகர்கள் தங்கினோம். மதிய உணவு. ஓய்வு.

மாலைநேரம் மழை பெய்தது.மாலைநேரம் வழிபாடு. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம். வழிபாட்டிற்குப் பின்னால், குருசாமியின் முகம் சற்று வாட்டமாகக் காணப்பட்டது. சற்று கோபமாகவும் இருந்தார். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் இப்படிக் கோபமாக இருந்ததை அன்றுதான் நான் முதன்முறையாகப் பார்த்தேன்.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவருக்கு முன்னால் இருந்த ஒரு காங்கிரிட் தூணைப் பார்த்த படி, யாத்திரிகர்கள் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுப் சொல்லாமல், யாத்திரிகர்கள் யாருடைய முகத்தையும் பார்க்காமல், “இந்த யாத்திரையானது மிகவும் புனிதமானது, இதை நான் நடத்தவில்லை, இதைப் பிள்ளையார் நடத்துகிறார், யாத்திரையில் நடக்கும் ஒவ்வொருவரையும் பிள்ளையார் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார், யாத்திரிகர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும், என்னால் இயன்ற அளவிற்கு நல்லபடியாகச் செய்து கொடுத்து வருகிறேன், அன்னதான வண்டியில் ஒட்டப்பட்டுள்ள பிளக்ஸ் போர்டில் உள்ள பிள்ளையார் நடப்பதை யெல்லாம் பார்த்துக் கொண்டே வருகிறார்” என்று சொன்னார். அவ்வளவுதான், ***குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ஒரு தூணைப் பார்த்தபடி இந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார் அல்லவா, அந்தத் தூணில் கட்டப்பட்டிருந்த மின்சார பல்ப் (குண்டுபல்ப்) அப்படியே தீப்பிடித்து எரியத் தொடங்கியது.*** குருசாமியின் கோபச் சொற்கள் குண்டுபல்பை எரித்து விட்டன. ஒரு குண்டுபல்ப் தீப்பிடித்து எரிவதைப் பார்த்து அனைத்து யாத்திரிகர்களும் அதிர்ந்து பயந்து வியந்து போனோம்.

இதைப் பார்த்த எனக்குக் கவுசிக முனிவரின் கதை[3] நினைவிற்கு வந்தது. கவுசிக முனிவரின் கோபப்பார்வையால் கொக்கு எரிந்து சாம்பலானது என்ற புராணக்கதையை நம்பாமல் இருந்த எனக்குக் குருசாமியின் கோபப்பார்வை பட்ட குண்டுபல்ப் தீப்பிடித்து எரிவதை நேரில் கண்ட நானும் அதிர்ந்து போனேன்.

சற்றே சுதாரித்துக் கொண்டு, தீப்பிடித்து எரியும் பல்ப் சுவிட்சை அனைத்தோம். காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் தீப்பிடித்து எரிந்துபோன அந்த குண்டுபல்ப், ஹோல்டர், வயர் எல்லாவற்றையும் எடுத்து விட்டுப் புதிதாக வயர் இழுத்து மின்சார பல்ப் ஒன்றைப் போட்டார். யாத்திரிகர்கள் அனைவரும் இந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமல் மிகவும் அமைதியாக அப்படியே ஆடாமல் அசையாமல் அமர்ந்து இருந்தனர்.

“குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது” (அதிகாரம்:நீத்தார் பெருமை குறள் எண்:29). என்ற திருக்குறளுக்குப் பொருள் சேர்ப்பதாய் நிகழ்ந்தது இது. இரவு உணவு. ஓய்வு.
இன்றைய பயணம் சுமார் 30 கி.மீ.

குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

----

[3] “கவுசிக முனிவர் கடுந்தவம் செய்கிறார். அவர் தலைக்கு மேலேயுள்ள மரக்கிளையில் இருந்த கொக்கு ஒன்று எச்சமிட்டு விட்டது. அந்த எச்சம் அந்த முனிவரின் தலையில் விழுந்தது. இதனால் கோபம் கொண்ட முனிவர் கோபக்கண்களுடன் கொக்கைப் பார்த்தார். முனிவரின் கோபப்பார்வை பட்ட உடனேயே அந்தக் கொக்கு எரிந்து சாம்பலாகி விட்டது.”

காஞ்சி மகாப் பெரியவர் காசிக்குப் பாதயாத்திரையாக, 1934 ஆம் வருடம் சென்றுள்ளார்....

ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம் - பக்கம் 226... *இல் உள்ளபடி,*
...ஸ்வாமிகள் அவ்வப்பொழுது அருளி உபதேச மொழிகளைக் கேட்டவர்களுமான அந்நகர் மக்கள், 'இனித் தங்களுக்கு இத்தகைய வாய்ப்பு கிட்டுமோ?' என்ற மனக்கவலையுடன் ஆயிரக்கணக்கில் அன்று ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். ஸ்வாமிகள் ஒவ்வொருவருடனும் இரண்டொரு வார்த்தைகள் பேசி, அவர்கள் யாவருக்கும் மந்திராக்ஷதை தந்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். நகரத்திலுள்ள கோடீசுவரர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பல தொழில்களில் ஈடுபட்டவர்களும், ஏழை மக்களும் ஒருங்கே சேர்ந்து அன்று ஸ்வாமிகளை வழியனுப்பிய காட்சி என்றும் மறக்க முடியாததாகும். செகந்திராபாத்திலுள்ள பக்தர்களின் விருப்பப்படி ஸ்வாமிகள் அந்நகரத்தில் திவான் பகதூர் ராமகோபால் சேட்டின் பௌத்திரர் ஸ்ரீ கிஷன் சேட்டின் மாளிகையில் 23-ந் தேதி தங்கி, அவ்விடத்தில் பூஜையை முடித்துக்கொண்டு, நகர மக்களுக்குச் தரிசனம் கொடுத்துவிட்டு மறுநாள் அவ்விடமிருந்து புறப்பட்டார்கள்.

நைஜாம் ராஜிய வடபகுதியில் யாத்திரை
கோதாவரி ஸ்நானம்

1934-ஆவது வருடம் ஏப்ரல் மாதம் 24-ந்தேதி ஸ்வாமிகள் செகந்தராபாத்திலிருந்து புறப்பட்டு மேச்சல், தூப்ரான்,நரசிங்கி, பிக்னூர், காமரெட்டிபேட், இன்டல்வாய், டே ராஜபள்ளி மார்க்கமாகக் கோதாவரிக் கரையிலுள்ள சொண்ணா என்னும் இடத்திற்கு மே மாதம் 5-ந் தேதி விஜயமானார்கள். பம்பாய் மாகாணம் திரயம்பகம் என்னும் தலத்திற்கு அருகில், மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்ற இந்தக் கோதாவரி நதியானது நைஜாம் சமஸ்தானத்தின் வழியாகப் பாய்ந்து பின்னர் ஆந்திர தேசத்தில் பிரவேசித்து, அந்நாட்டைச் செழிப்புறச் செய்யும் ஓர் புண்ணியநதியாகும். மிகப் புனிதமான இந்த நதியில் ஸ்வாமிகள் அன்று நீராடி, வேதமோதிய அந்தணர்களுக்குத் தானங்களை வழங்கினார்கள். மறுநாள் ஸ்வாமிகள் அவ்விடமிருந்து புறப்பட்டு நீர்மல், அதிலாபாத், மார்க்கமாக மத்திய மாகாணத்தைச் சார்ந்த பொண்டல்வாடா என்னும் இடத்திற்கு மே மாதம் 15-ந் தேதி விஜயமானார்கள். இவ்விடங்களிளெல்லாம் மக்கள் ஸ்வாமிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொடுத்துப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளை நடத்தி அதுவரை கண்டிராத ஸ்வாமிகளின் சந்திரமௌளீஸ்வரர் பூஜையைக் கண்டு மகிழ்ச்சியுற்றனர். ஒவ்வொரு ஊரிலும் ஸ்வாமிகளின்... *தொடர்ச்சி பக்கம் 227....*

(குறிப்பு - பிக்னூரின் மேற்குப் பகுதியில் சித்தராமேஸ்வரம் என்ற பெயரில் மிகப் பிரசித்தி பெற்ற சிவன்கோயில் உள்ளது. இராமேசுவரத்தில் இருந்து சில முனிவர்கள் இங்கே வந்து இந்தச் சிவலிங்கத்தைப் பூசை செய்து வழிபட்டனர் என்றும், அதன் காரணமாகவே இந்தக் கோயில் சித்தராமேசுவரம் என்று அழைக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். வலையபட்டி சித்தர் பச்சைக்காவடி அவர்களின் இராமேசுவரம் காசி பாதயாத்திரையின் போது யாத்திரிகர்கள் அனைவரும் இன்று *ஆடி 12 (28.07.2014)* இந்தக் கோயிலில்தான் தங்கி வழிபட்டுச் சென்றோம்.)

காஞ்சி மகாப் பெரியவர் ஏப்ரல் மாதம் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் சென்ற அதே வழித்தடத்தில், வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் காசிபாதயாத்திரையும் அமைந்து இருந்தது. காஞ்சிப் பெரியவரின் திருவடிகளை நினைந்து வணங்கி, அந்த மகானின் திருவருளை வேண்டிக் கொண்டு, பெரியவரின் வழித்தடத்தில் நாங்களும் நடந்து சென்றோம்.

நேற்று *நரசிங்கி* என்ற ஊருக்கு வந்து தங்கி இருந்தோம்.

இன்று 64ஆம் நாள் - ஆடி 12 (28.07.2014) திங்கள் கிழமை.

தினசரி வழிபாட்டை முடித்துக் கொண்டு ரொட்டியும் ஹார்லிக்சும் சாப்பிட்டுவிட்டு இரவு 3.50 மணிக்கு நரசிங்கியில் இருந்து புறப்பட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 6.00 மணிக்கு, வழியில் சாலையோரம் இருந்த ஒரு சிறு குன்றின்மேல் அமைந்துள்ள தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பன் கோயிலைக் கண்டு வணங்கிக் கொண்டு சென்றோம். வழியில் வழக்கம்போல காலை 6.30 மணிக்கு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக்கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 7.36 மணி

யாத்திரிகர்கள் சாலையோரம் நடந்து செல்லும்போது, ரோந்துப் பணியில் இருந்த காவல்துறையினர் வந்து யாத்திரிகர்களை வழிமறித்து விசாரித்தனர். எங்கிருந்து வருகின்றீர்கள்? எங்கே செல்கின்றீர்கள்? எங்கே தங்குவீர்கள்? உங்களது குருசாமி யார்? உங்களது அலைபேசி எண் என்ன? என்பன போன்ற பல கேள்விகளைக் கேட்டனர். நீண்ட நேரத்திற்குப் பின்னர் எங்களது பதிலில் திருப்தி அடைந்தவர்களாகச் சென்றுவிட்டனர்.

சிறிது நேரம் கழித்து, அவர்களே மீண்டும் வந்து அவர்களது வண்டியை நிறுத்தி யாத்திரிகர்களின் வழியை மறித்தனர். எதற்காக மீண்டும் இவர்கள் வரவேண்டும்? என யாத்திரிகர்கள் அனைவரும் சற்று குழம்பிப் போயினர்.

ஆனால் அவர்களோ, வண்டியிலிருந்து ஒரு பெரிய பெட்டி நிறைய சுவை மிகுந்த ரொட்டிகளைக் கொடுத்துச் சிறப்புச் செய்தனர். இதைச் சற்றும் எதிர்பாராத யாத்திரிகர்கள் அனைவரும் வியந்து போனனோம். குருசாமி அவர்களிடம் சென்று கொடுங்கள் என்று சொன்னோம். உங்களது குருசாமி அவர்கள் சற்று தொலைவில் வந்துகொண்டிருக்கிறார், அவரிடம்தான் இதைக் கொடுத்தோம். அவர்தான் உங்களிடம் கொடுக்கச் சொன்னார். எனவே தயக்கம் ஏதுமில்லாமல் இந்த ரொட்டிப் பெட்டியை வாங்கிக் கொள்ளுங்கள் என்றனர்.
யாத்திரிகர்களிடன் மிகவும் அன்பு பாராட்டிய கடமை தவறாத கண்ணியமான காவலர்களுடன் படம் எடுத்துக் கொண்டோம். இன்றைய யாத்திரையின் சிறப்பு நிகழ்வாக இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.





காலை 7.59 மணி சாலையோரம் இருந்த பிகினூர் (Bhiknoor) பேருந்து நிறுத்தத்தில் காலை உணவு சாப்பிட்டோம்.



காலை 8.39 மணி யாரோ ஒரு வழிப்போக்கர் யாத்திரிகர்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, அவரும் வந்து பேருந்து நிறுத்தத்தின் படிக்கட்டில் உட்கார்ந்தார். குருசாமி அவர்கள் அந்த வழிப்போக்கருக்கும் காலை உணவு வழங்கினார்.

காலை 8.43 மணி தேசிய நெடுஞ்சாலையின் கிழக்குப் பக்கம் பிக்னூர் (Bhiknoor) உள்ளது. சாலையின் மேற்குப் பக்கம் சித்தராமேசுவரம் உள்ளது. எனவே யாத்திரிகர்கள் யாரும் பிக்னூர் செல்ல வேண்டாம். பிக்னூருக்குப் பாதை பிரியும் இடத்தில் இருங்கள், எல்லோரும் வந்து சேர்ந்தபின்னர் ஒன்றாகச் சேர்ந்து சித்தராமேசுவரம் கோயிலுக்குச் செல்லலாம் என்று குருசாமி அவர்கள் கூறினார்.

குருசாமி அவர்கள் சொன்னபடி, பிக்னூர் ஊருக்குச் செல்லும் பிரிவுச் சாலை ஆரம்பிக்கும் இடத்தில் யாத்திரிகர்கள் அனைவரும் வந்து நின்று கொண்டிருந்தனர். ஒரேயொரு யாத்திரிகர்கள் மட்டும் நெடுஞ்சாலையைக் கடந்து பிக்னூர் செல்லும் சாலையில் உள்ள விளக்குத்தூண் கீழே அமர்ந்து இருந்தார்.



காலை 8.59 மணி மற்ற பிற யாத்திரிகர்கள் திரும்பி வருமாறு அழைத்தவுடன் வந்து சேர்ந்து கொண்டார். இதனால் சற்று நேரம் பரபரப்பு நிலவியது. அந்த யாத்திரிகரும் வந்து சேர்ந்தவுடன் யாத்திரிகர்கள் அனைவரும் ஒன்றாகச் சித்தராமேசுரம் கோயிலுக்குப் பயணம் ஆனோம். தேவையில்லாமல் சாலையைக் கடக்க வேண்டாம் என அந்த யாத்திரிகருக்குக் குருசாமி அவர்கள் அறிவுரை வழங்கினார். லேசான தூரல். யாத்திரிகர்கள் சிலர் குடை பிடித்துக் கொண்டு நடந்தனர்.





காலை 9.20 மணி



காலை 9.27 மணி

காலை 9.30 மணிக்குச் சித்தராமேசுரம் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். கோயில் வளாகத்தில் குருக்கள் தங்கியிருக்கும் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டை யாத்திரிகர்கள் தங்குவதற்காக ஒதுக்கிக் கொடுத்தனர். அந்தக் கோயில் அர்ச்சகர் வந்திருந்து குருசாமி அவர்களிடம் நிறைய நேரம் பேசிக்

கொண்டிருந்தார். யாத்திரிகர்கள் குளிப்பதற்கும் துவைப்பதற்கும் வசதியாகத் தண்ணீர்த் தொட்டி கட்டி வைத்திருந்தனர். யாத்திரிகர்கள் அனைவரும் துவைத்துக் குளித்தனர்.

மதிய உணவு. சில யாத்திரிகர்கள் மதிய உணவிற்கு முன்பு கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தனர். சிலர் மாலை நேரத்தில் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தனர்.

சித்திராமேசுவரம்

இராமேஸ்வரத்திலிருந்து வந்த சித்தர்கள் வழிபட்ட காரணத்தால் "சித்த ராமேஸ்வரம் " என்று பெயர் உண்டானது என்றனர் . இக் காரணத்தால் இராமேஸ்வரத்திலிருந்து வந்த எங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தனர் .



வடக்கு பார்த்த கோபுரம் . கிழக்கு பார்த்த கோமுகம் . காசியில் உள்ளது போன்று, இங்கேயும் சிவலிங்கத்தைத் தொட்டு வழிபட அனைவரையும் அனுமதிக் கின்றனர் . கூட்டம் மிகவும் அதிகம் . அடியேன் வழிபட்ட போது ஆவுடை முழுவதும் வழிபாட்டு பொருட்களால் நிறைந்து இருந்தது . ஆவுடைக்குள் எனது கையை விட்டுப் பார்த்த போது, என்னால் சிவலிங்கத்தைத் தொட்டு உணர முடியவில்லை . சிவலிங்கம் தரையோடு தரையாக உள்ளது என்றனர் .

இன்றைய பயணம் சுமார் 20 கி.மீ.

காஞ்சி மகாப் பெரியவரின் திருவருளும், குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

காசிக்குக் காஞ்சி மகாப் பெரியவர் பாதயாத்திரையாக, 1934 ஆம் வருடம் சென்றுள்ளார்....

1934-ஆவது வருடம் ஏப்ரல் மாதம் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் ஸ்வாமிகள் செகந்தராபாத்திலிருந்து புறப்பட்டு மேச்சல், தூப்ரான், நரசிங்கி, பிக்னூர், காமரெட்டிபேட், இன்டல்வாய், டே ராஜபள்ளி மார்க்கமாகக் கோதாவரிக் கரையிலுள்ள சொண்ணா என்னும் இடத்திற்கு மே மாதம் 5-ந் தேதி சென்றுள்ளனர்.

காஞ்சி மகாப் பெரியவர் சென்ற அதே வழித்தடத்தில், வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் காசிபாதயாத்திரையும் அமைந்து இருந்தது.

நேற்று பிக்னூரில் உள்ள சித்தராமேசுவரம் கோயிலுக்கு வந்து சேர்ந்து தங்கி இருந்தோம்.

இன்று 65ஆம் நாள் - ஆடி 13 (29.07.2014) செவ்வாய்க் கிழமை.

தினசரி வழிபாட்டை முடித்துக் கொண்டு ரொட்டியும் ஹார்லிக்சும் சாப்பிட்டுவிட்டு இரவு 3.55 மணிக்கு சித்தராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டு யாத்திரையை தொடர்ந்தோம்.



காலை 6.47 மணி வழியில் சாலையோரம் உள்ள பெட்ரோல் பங்கில் காலை 6.30 மணிக்கு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

காஞ்சி மகாபெரியவர் 1934ஆம் வருடம் மேற்கொண்ட காசி பாதயாத்திரையின்போது காமரெட்டி **(Kamareddy)** ஊரின் வழியாகச் சென்றார் என்று அவரது பயணக் குறிப்பில் உள்ளது. யாத்திரிகர்கள் காமரெட்டி ஊர் வழியாகச் செல்லாமல், காமரெட்டி புறவழி நெடுஞ்சாலை வழியாகச் சென்றோம். இதனால் பயணதூரமும் பயண நேரமும் கூடுதலாகின.
8.15 மணிக்கு காலை உணவு.

மதியம் 1.00 மணிக்கு சதாசிவநகர் என்ற ஊரை அடைந்து விட்டோம்.



மதியம் 01.11 மணி குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அன்பரின் "ஸ்ரீ வாணி வித்யாலயம்" பள்ளிக் கூடத்தில் தங்கினோம். மதிய உணவு. ஓய்வு.



இன்றைய பயணம் சுமார் 38 கி.மீ.

இன்று 66ஆம் நாள் - ஆடி 14 (30.07.2014) புதன் கிழமை.



இன்று முழுதும் ஓய்வு. பள்ளி வளாகத்தில் பார்ப்பதற்கு அது ஒரு வீடு போன்று இருந்தது. ஆனால் அது ஒரு ஆலயம். மாலை நேரத்தில் யாத்திரிகர்கள் சிலர் சென்று வழிபாடு செய்து வந்தோம்.

காஞ்சி மகாப் பெரியவரின் திருவருளும், குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

இன்று 67 ஆம் நாள் - ஆடி 15 (31.07.2014) வியாழக் கிழமை.

இரவு 2.10 மணிக்கு யாத்திரைக்குத் தயார் ஆனோம். வழக்கம்போல் காலை வழிபாடு முடித்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு நடக்கத் தொடங்கினோம். *அதிகாலை மணி 5.34 அளவில் சாலையோரம் இருந்த காளி கோயிலைக் கண்டு வணங்கிக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.*
காலை 7.50 மணியளவில் சுங்கச்சாவடியைக் கடந்து சென்றோம்.





காலை 8.49 மணி



காலை 9.30 மணிக்கு டிச்பள்ளி ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம்.

நான்குவழிச்சாலை அமைக்கப்படுவதற்கு முன்பு, இந்தக் கோயிலில் கூட்டம் மிகவும் அதிகமாக இருக்குமாம். இந்தக் கோயிலைக் கடந்து செல்லும் அனைத்து வாகனங்களும் இங்கே நின்று செல்லுமாம். இப்போது ஒருவழிச் சாலையாக ஆகிவிட்டபடியால், கோயிலுக்கு என வருபவர்கள்கூட நெடுந்தொலைவு சுற்றி வரவேண்டியுள்ளது. எனவே இருசக்கர வாகனங்களில் வருவபர்கள் மட்டுமே கோயிலுக்கு வந்து செல்கின்றனராம்.



மதியம் 12.09 மணி
மாலை நேரத்தில் நல்ல மழை பெய்தது.
இன்றைய பயணம் சுமார் 23 கி.மீ.



இன்று 68ஆம் நாள் - ஆடி 16 (01.08.2014) வெள்ளிக் கிழமை.


இரவு 2.50 மணிக்கு யாத்திரைக்குத் தயார் ஆனோம். வழக்கம்போல் காலை வழிபாடு முடித்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு டிச்பள்ளி ஆஞ்சநேயர் கோயிலில் இருந்து யாத்திரை புறப்பட்டோம்.



காலை 5.57 மணி விடியும்போது கண்ணிற்குக் காட்சியளித்த கோபுரத்தையும் நந்தியையும் கண்டு வணங்கிக் கொண்டு நடையைத் தொடர்ந்தோம்.

காலை 6.43 மணி வழியில் சாலையோரம் அமர்ந்து, வழக்கம்போல காலை6.30க்கு ரொட்டி தேநீர். இத்தனை நாட்கள் இருந்து வந்த இதமான மேகமூட்டமான குளிர்ந்த பருவநிலை மாறி விட்டது. காலை 7.30 முதல் கடுமையான வெயில்





வழியில் காலை 7.52 மணிக்கு சாலையோரம் ஒரு ஐயப்பன் கோயிலைக் கண்டோம். 18 படி ஏறிச் சென்று ஸ்ரீ ஐயப்பனைக் கும்பிடுவது போன்று கோயிலை அமைத்துள்ளனர். அனைவரும் விரும்பிப் படம் எடுத்துக் கொண்டனர்.

காலை 8.02 மணிக்கு அன்னதான வண்டி வந்து விட்டது. சாலையோரம் உள்ள பெட்ரோல்பங்கில் அமர்ந்து, காலை 8.15 மணிக்குக் காலைஉணவு.



பகல் 11.04 மணி சாலையோரம் தமிழில் இருந்த பெயர்ப்பலகையை வியந்து பார்த்து மகிழ்ந்து போனோம்.





பகல் 11.23 மணி நான்குவழிச் சாலை அமைக்கப்பட்ட காரணத்தினால், அருகில் உள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டுமானால் அதிகதூரம் சுற்றி வரவேண்டியுள்ளது. இவ்வாறு அருகில் உள்ள இடத்திற்கு அதிகதூரம் சுற்றிவருவதைத் தவிர்த்து ஒருவழிச்சாலையில் எதிர்புறம் தவறாக வாகனம் ஓட்டி வருகின்றனர்.



11.46 மணி கிரானைட் மலையாகவும் இல்லாமல், மண்மலையாகவும் இல்லாமல், பொக்குப்பாறைகள் மலையளவு குவிந்து கிடந்தன. மலைக்கு மேலே உள்ளது ? பொக்குப்பாறை உருண்டைகள் மலையளவு குவிந்து கிடக்கின்றன. அந்த மலை மீது இந்தக் கோயில் உள்ளது. சிறு சிறு பாறைகளுக்கு இடையே ஆட்கள் நுழைந்து சென்று வேறு வழியாக வெளியே வந்து வேடிக்கை காட்டுகின்றனர்.



நண்பகல் 12.07 மணி. குரங்குகள் தொல்லை அதிகம், உணவுப் பொருட்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று உள்ளூர்வாசி ஒருவர் வந்து எச்சரித்தார். அவர் சொன்னது போன்றே, ஒரு குரங்கு வந்து பொட்டுக்கடலை டப்பாவை தூக்கிச் சென்றுவிட்டது. மற்றபிற யாத்திரிகர்கள் அனைவரும் நடந்து வந்த அசதியில் படுத்துவிட்டனர். சமையல் முடியும் வரை காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்கள் மட்டும் படுத்து ஓய்வு எடுக்காமல், குரங்குகள் வந்து சமையல் சாமான்களைத் தூக்கிச் செல்லாதவாறு பார்த்துக் கொண்டார். ஒரு குரங்கு மட்டும் ஓடிவிடாமல் எதிர்த்து நின்றது. ஜெய் ஸ்ரீ ராம்.





மதியம் 12.12 மணி. கடந்த வருடம் குருசாமி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்ற மாணவன் ஒருவன் விரைந்தோடி வந்து குருசாமி அவர்களை வணங்கி ஆசி பெற்றான். அவனைத் தொடர்ந்து அவனது நண்பர்கள் பலரும் வந்து குருசாமி

அவர்களிடம் அவர்களது எதிர்காலக் கல்வி பற்றிக் கேட்டறிந்தனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அந்த மாணவர்களை ஆசிர்வதித்தார்.
மதியம் 12.18 மணி அந்த ஊரில் வசித்து வரும் இந்த அன்பர் வந்து யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார். குருசாமியிடம் மிகவும் பயபக்தியாக நடந்து கொண்டார். மதியம் 12.15 மணிக்கு தக்காளி சூப் வழங்கப்பட்டது. 1.30 மதிய உணவு. ஓய்வு. மதியம் 1.30 மணிக்கு நல்ல மழை. மாலை நேரத்தில் பலரும் குடும்பத்தினருடன் வந்து குருசாமி அவர்களிடம் அருள்வாக்கு கேட்டுச் சென்றனர்.
பயண தூரம் 34 கி.மீ. இத்துடன் ஏற்ற இறக்கம் மிகுந்த மலைகள் முடிவடைந்தன. இத்தனை நாட்கள் இருந்து வந்த இதமான மேகமூட்டமான குளிர்ந்த பருவநிலை மாறி விட்டது.

இன்று 69ஆம் நாள் - ஆடி 17 (02.08.2014) சனிக் கிழமை.

பால்கொண்டாவிலிருந்து புறப்பட்டு மோன்டிகுட்டா (Mondigutta) என்ற ஊருக்குச் சென்று சேர்ந்தோம். இன்றைய பயண தூரம் சுமார் 43 கி.மீ.



இன்று இரவு 2.35 மணிக்கு யாத்திரைக்குத் தயார் ஆனோம். வழக்கம்போல் காலை வழிபாடு முடித்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு பால்கொண்டா ஸ்ரீ ஐயப்பன் கோயிலில் இருந்து யாத்திரை புறப்பட்டோம். சிறிது தொலைவில் ஸ்ரீ ராம்சாகர் அணைக்கட்டு. காலை 6.00 மணிக்கு கோதாவரி ஆற்றின் குறுக்கே பாலத்தின் வழியாக நடந்து சென்றோம். அணையிலிருந்து ஆற்றிற்குச் சிறிதளவே தண்ணீர் ஓடிக் கொண்டு இருந்தது. மிகவும் இதமான காற்று வீசியது..
இரவு 2.30 மணிக்கு யாத்திரை கிளம்பியது. நான்கு மணிநேரம் தொடர்ந்து நடந்த களைப்பு. காலை 6.30 மணிக்கு அன்னதான வண்டி வரும் என்று யாத்திரிகர்கள் அனைவரும் சாலையோரம் இருந்த பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தோம். ஆனால் இன்று பகல் முழுவதும் நடைப்பயணம் இருக்கின்றன காரணத்தினால், காலைஉணவு மற்றும் மதிய உணவு என இரண்டு வேளைகளுக்கான உணவுகளையும் தயாரித்துக் கிளம்ப அவர்களுக்குக் காலதாமதம் ஆகிவிட்டது. எனவே நாம் தொடர்ந்து நடப்போம், அன்னதான

வண்டி வரும்போது தேநீர் குடித்துக் கொள்வோம் என்று குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கூறினார். அதன்படி யாத்திரிகர்கள் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தனர்.



சாலையோரம் வயல்களுக்கு நடுவே ஒரு கோட்டை ஒன்று இருந்தது. காலை 7.00 மணி இருக்கும் போது சாலையோரம் இருந்த பெட்ரோல் பங்கில் யாத்திரிகர்கள் அனைவரும் சிறிது நேரம் ஓய்வு எடுத்தனர்.



காலை 8.40 மணிக்கு கடல் (KADTAL) ஸ்ரீ ஐயப்பன் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். வழிபாடு. காலை உணவு.



சிறிது நேரம் ஒய்வு. அதன்பின்னர் பகல் 11.15 மணி யளவில் அங்கிருந்து புறப்பட்டோம்.





பகல் 11.25 மணி பத்திரிக்கையாளர்கள் இருவர் வந்து யாத்திரை பற்றிய செய்திகளைக் கேட்டறிந்து குறிப்பு எடுத்துக் கொண்டு சென்றனர். காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் யாத்திரை பற்றிய செய்திகளைத் தெலுங்கில் நிருபர்களுக்கு விளக்கிக் கூறினார்.

கடல் ஸ்ரீ ஐயப்பன் கோயிலில் இருந்து காசி 1003 கி.மீ.

இந்தத் தகவல் பலகையைப் பார்த்த யாத்திரிகர்கள் பெரிதும் மகிழ்ந்து இதுவரை பாதயாத்திரை செய்துள்ள தொலைவு, இனிமேல் நடக்க வேண்டிய நாட்கள் பற்றித் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டே நடந்தனர்.



பகல் 11.29 மணி தேசிய நெடுஞ்சாலையானது நிர்மல் ஊருக்குள் சென்று, நிர்மல் காடு வழியாகச் சென்றுள்ளது. நான்கு வழிச்சாலை அமைக்கும் போது, நிர்மல் ஊருக்குள் செல்லாமல் பாதையை மாற்றி அமைத்துள்ளனர். மேலும்

மலைகளை வெட்டிச் சாலையை அகலப் படுத்தியுள்ளனர். இதனால் வாகனங்கள் எளிதாக மலையைக் கடந்து செல்கின்றன.



மதியம் 12.06 மணி



02.02 மணி நிலைபெட்ட (NeelaiPeta) பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து மதிய உணவு.. சிறிது நேரம் ஓய்வு. உச்சி வெயிலில் நிழல் கிடைப்பது அரிதாக இருந்தது. சிலர் உட்கார்ந்தபடியே தூங்கினர். சிலர் துண்டை விரித்துப் படுத்துத் தூங்கினர். சிலர் எதிரே உள்ள பேருந்து நிறுத்தத்திற்குச் சென்று ஓய்வு எடுத்தனர். ஆனால் அங்கேயும் சூரிய வெளிச்சம் நேரிடையாகப் பட்டதால், அவர்களால் படுத்துத் தூங்க இயலவில்லை.



மாலை 5.06 மணி பருகூபள்ளி (Burugupally) என்ற ஊரின் பேருந்து நிருத்தத்தில் ஓய்வு எடுத்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

மாலை 5.30 மணிக்கு மொன்டிகுட்டா (Mondigutta) கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். மலைகளுக்கு நடுவே கிராமம் அமைந்துள்ளது. அருகில் வேறு எந்த கிராமமும் இல்லை. சுமார் 10 கி.மீ. தொலைவு மலைக்கு ஊடே பயணம் செய்தால்தான் அடுத்துள்ள கிராமத்திற்குச் செல்ல முடியும். இயற்கையோடு ஒன்றி மக்கள் வாழ்கின்றனர். இங்குள்ள பள்ளிக்கூடத்தில் தங்கினோம். ஊரில் உள்ள சிறுவர் சிறுமியர் அனைவரும் வந்து கூடிவிட்டனர்.









மாலை 5.33 மணிக்கு தினசரி வழிபாடு முடிந்ததும் ரொட்டியும் தேநீரும். அங்கு நின்ற அனைத்துச் சிறுவர் சிறுமியருக்கும் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ரொட்டியும் தேநீரும் கொடுத்தார். சிலர் இரண்டு கைகளில் ரொட்டி வாங்கிக் கொண்டனர். நல்லபடியாகப் படிக்க வேண்டும் எனக் குழந்தைகளைக் குருசாமி ஆசிர்வதித்தார்.

இங்கு சாலையோரம் ஒரு சிமிண்ட் தொட்டியில் தண்ணீர் நிரப்பி வைத்துள்ளனர். யாத்திரிகர்கள் பலரும் சென்று உடல் குளிரக் குளிரக் குளித்தோம். இரவு உணவு. ஓய்வு.

03.08.2014 "சாட்சி" பத்திரிகையில் காசி யாத்திரை செய்தி



దేశ సంక్షేమం కోరుతూ సాధువుల పాదయాత్ర

నిర్మల్ పట్టణం, న్యూస్‌టుడే: దేశ సంక్షేమం కాంక్షిస్తూ తమిళనాడుకు చెందిన శ్రీవల్లియపట్టి శ్రీరామేశ్వరం శ్రీకాశి శ్రీపచ్చైకావడి ఆధ్వర్యంలో సాధువులు రామేశ్వరం నుంచి కాశీ వరకు చేపట్టిన పాదయాత్ర శనివారం నిర్మల్‌కు చేరుకుంది. 20 మంది సభ్యులున్న బృంద నాయకుడు ధనశేఖరన్ మాట్లాడుతూ యాత్ర వివరాలను వెల్లడించారు. గత మే 26న రామేశ్వరంలోని ఏకాంతరామర్ ఆలయం వద్ద ప్రారంభమైన పాదయాత్ర 110 రోజులపాటు కొనసాగుతుందన్నారు. తమిళనాడు, కర్ణాటక, ఆంధ్రప్రదేశ్, మహారాష్ట్ర, మధ్యప్రదేశ్, ఉత్తరప్రదేశ్ రాష్ట్రాలమీదుగా 2,464 కిలోమీటర్లు ప్రయాణిస్తామని పేర్కొన్నారు. మార్గమధ్యలో ఉన్న ఆలయాల్లో పూజ చేస్తూ నిత్యం సుమారు 25 నుంచి 30 కిలోమీటర్లు నడుస్తున్నట్లు చెప్పారు.

పాదయాత్ర నిర్వహిస్తున్న సాధువులు



இன்று 70 ஆம் நாள் - ஆடி 18 (03.08.2014) ஞாயிற்றுக் கிழமை.

இன்று இரவு 2.35 மணிக்கு யாத்திரைக்குத் தயார் ஆனோம். வழக்கம்போல் காலை வழிபாடு முடித்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு இரவு 3.00 மணிக்கு மொன்டிகுட்டா (Mondigutta) கிராமத்தில் இருந்து யாத்திரை புறப்பட்டோம். பெரிய மலைகளுக்கு இடையில் சாலை சென்றது. மிகப்பெரிய ஏற்றம். அங்கு பைரவள்ளி என்ற கிராமம். அதற்கு அடுத்து லிங்கோத் என்ற கிராமம். பெரிய மலைகளின் சரிவுகளில் உள்ள கிராமங்களில் தெருவிளக்குகள் எரிவது தெரிந்தது.



பேரிக்கான் (B) என்ற ஊர் அருகில் பகல் உணவு.



நெரிடிகுண்டாவில் தனியார் பள்ளியில் ஓய்வு , மதிய உணவு. 2.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டோம்.

லிக்சப்பூர் வந்து ஒரு ஏற்றம். அங்கிருந்து பார்த்தால் பெரிய மலைத்தொடர்கள் தூரத்தில் தெரிந்தன. சிறிது தூரத்தில் பள்ளத்தாக்கு, சாலையில் பெரிய இறக்கம். அங்கே குப்டி , தானம் என்ற இரண்டு கிராமங்கள். பிறகு மலை ஏற்றம். அங்கு தேநீர்.

தேவரு நாயக் தண்டா, சாத்நாயர் , இஸ்லாம்பூர் வழியாக இச்சோடா என்ற ஊர் எல்லையில் உள்ள "சார்ப் கார்டன் " என்ற கல்யாண மண்டபத்திற்கு மாலை 5.00 மணிக்கு வந்து சேர்ந்தோம். இன்றைய பயணம் முழுவதும் மலைகளுக்கு இடையே அமைந்தது.

ஏழையின் கண்ணீரும் இளநீரும் - இந்த மண்டபத்தில் அருகில் இளநீர் விற்றுக் கொண்டிருந்த ஒருவர் யாத்திரிகர்கள் அனைவருக்கும் இளநீரை இலவசமாகக் கொடுத்தார். இளநீர் வியாபாரியிடம் இலவசத்தை வாங்க விரும்பாமல் நாங்கள் பணம் கொடுத்த போது வாங்க மறுத்து விட்டார். 2013ஆம் ஆண்டு அவருடைய மகன் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்துள்ளார். அந்த வருடம் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பாதயாத்திரை வந்தபோது அவருக்கு இளநீர் கொடுத்து உபசரித்துக் கண்ணீர்விட்டுத் தனது துன்பநிலையைக் கூறியுள்ளார். குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அருள்வாக்குப்படி, ஆச்சரியமான முறையில் நோய்வாய்ப்பட்டிருந்த மகன் பிழைத்துக் கொண்டார் என்றும், குருசாமி பச்சைக்காவடி அவர்களின் ஆசியால்தான் இது நடந்தது என்றும் கூறினார். ஓய்வு. தங்கல்.

இன்றைய பயணம் சுமார் 37 கி.மீ.

இச்சோடா என்ற ஊர் எல்லையில் உள்ள "சார்ப் கார்டன் " என்ற கல்யாண மண்டபத்திற்கு வந்து தங்கி இருந்தோம்.

இன்று 71 ஆம் நாள் - ஆடி 19 (04.08.2014) திங்கள் கிழமை.
இன்று முழு ஓய்வு.



காலத்தாற் செய்த உதவி - இச்சோடாவில் வசிக்கும் அன்பர் ஒருவர் வந்து, யாத்திரிகர்களின் கிழந்துபோன பைகளை எல்லாம் வாங்கிச் சென்று தைத்துக் கொண்டுவந்து கொடுத்தார். யாத்திரிகர்கள் கேட்டுக் கொண்ட சிறுசிறு வேலைகளை எல்லாம் சலிப்பு இல்லாமல் செய்து கொடுத்தார். நிறைய மிக்சர் முருக்கு கொண்டுவந்து கொடுத்தார்.



மாட்டுச் சந்தை - மண்டபத்திற்கு அருகே ஆடுமாடு விற்பனைச் சந்தை கூடியிருந்தது. பெரிய அளவில் மக்கள் கூடியிருந்தனர். ஏராளமான ஆடு மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தன.

இட்லிக்கு ஆசைப்பட்டு -

யாத்திரிகர்கள் இட்லி சாப்பிட்டு வெகுநாட்களாகி விட்டன. மொத்தம் 25 பேர் சாப்பிடத் தேவையான இட்லிகளுக்கு மாவு ஆட்டுவது யார்? இரண்டுஇரண்டு பேர்களாகச் ஜோடி சேர்ந்து இட்லிமாவு ஆட்டுவது என்று முடிவானது. காசிஸ்ரீ சிவப்பாவும் காசிஸ்ரீ காளைராசனும் ஒருஜோடி. காசிஸ்ரீ சரவணனும் காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களும் ஒருஜோடி. காசிஸ்ரீ சுப்பிரமணியன் அவர்களும் காசிஸ்ரீ நம்பிராஜன் அவர்களும் ஒருஜோடி. காசிஸ்ரீ தொப்பை என்ற கலியபெருமாள் அவர்கள் யாருக்குக் கைவலித்தாலும், அவர்களுக்குப் பதிலாக மாவு ஆட்டினார். இப்படியாக இட்லிமாவு ஆட்டி முடித்தோம்.

முடிவாகக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் மாவுகரைத்துத் தருகிறேன், ஆட்டிய மாவு எல்லாவற்றையும் எடுத்து வாருங்கள் என்று கேட்டார். ஆனால் சமையல்காரரர் கொடுக்க மறுத்துவிட்டார். (மறுநாள் காலைப் பலகாரமாக இட்லி வரும் என அனைவரும் எதிர்பார்த்திருந்த நேரத்தில், இட்லிக்குப் பதிலாக ஊத்தப்பம் வந்தது.)



யாத்திரிகர்கள் பலரும் ஆடைகளைத் துவைத்துக் காயவைத்துக் கொண்டனர். அதிகாலையிலும் தூறல். பிற்பகல் 3.30 மணிக்கும்,இரவு 12.00 மணிக்கும் நல்ல மழை.

இன்று 72ஆம் நாள் - ஆடி 20 (05.08.2014) செவ்வாய்க் கிழமை.



தினவழிபாட்டை முடித்துக் கொண்டு 4.00க்கு இச்சோடா என்ற ஊரிலிருந்து யாத்திரையை தொடர்ந்தோம்.

காலை 6.40 மணி வாகன ஓட்டிகள் வண்டியில் இருந்தபடியே குடித்துவிட்டுப் பாட்டில்களைச் சாலையோரம் தூக்கியெறிந்து விட்டுச் செல்கின்றனர். தமிழ்நாட்டில் இராமேசுவரம் தொடங்கி, ஆந்திராவில் டோன்ரகான் (Dongragaon) வரை சாலையோரம் இது போன்ற மதுப்பாட்டில்களைக் காண முடிந்தது. மழை தூரிக் கொண்டிருந்தது. வழியில் டோன்ரகான் (Dongragaon) பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.





காலை 8.37 மணி. மலையும் மலை சார்ந்த பகுதியும் , வழி நெடுகிலும் இரண்டு பக்கமும் மலைத் தொடர்கள். ஒரு இடத்தில் சுமார் 30 அடி அளவிற்கு சாலை உயர்த்தப்பட்டது இருந்தது. இரண்டு இடங்களில் புலிகள் நடமாட்டம் உள்ள பகுதி என்ற அறிவிப்பு காணப்பட்டது.



காலை 9.19 மணி சீதாகுடி என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். மழைபெய்து ஈரமாக இருந்த காரணத்தினால் கோயிலில் அமர்ந்து சாப்பிட வசதியாக இடமில்லை. கோயில் வளாகத்திலேயே பள்ளிக்கூடம் இருந்தது. பள்ளிக்கூடம் வராண்டாவில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டோம்.



சாலைவழியில் வாழ்க்கைவழி காட்டுதல் - காலை 10.00 மணிக்கு சீதாகுடி என்ற ஊரிலிருந்து மாவாலா சென்று கொண்டிருக்கும்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த லாரி ஒன்று எங்களைக் கடந்துசென்று நின்றது. அதிலிருந்த ஓட்டுநர் இறங்கி வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுக் கொண்டார்.







11.30 மணிக்கு அடிலாபாத் அருகில் மாவாலா என்ற ஊரின் எல்லையில் உள்ள லெட்சுமி கல்யாண மண்டபம் வந்து அடைந்தோம். மதிய உணவு. ஓய்வு. வசதியாகப் படுத்துத் தூங்கினோம். போர்வை வேட்டி துணிகளைத் துவைத்து உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டோம். தங்கல்.

இன்றைய பயணம் சுமார் 29 கி.மீ.

இன்று 73ஆம் நாள் - ஆடி 21 (06.08.2014) புதன் கிழமை.

தெலுங்கானா மாநிலத்தில் அடிலாபாத்தில் வசிக்கும் குருஜி பச்சைக்காவடி அவர்களின் அடியார்கள் பலரும் வந்து பார்த்து ஆசிபெற்றுச் சென்றனர். யாத்திரிகர்கள் தங்குதவற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர்.



யாத்திரிகர்களுக்கு ***முழு ஓய்வு***. பலருக்கும் நடையன் (செருப்பு) தேய்ந்து விட்டன. குருசாமி பச்சைக்காவடி அவர்கள், அன்னதான வண்டியில் கட்டி வைக்கப்பட்டிருந்த புதிய நடையன்களை எடுத்துவரச் செய்து, தேவையானவர்களுக்குப் புதிய நடையன்களை வழங்கினார். இது போன்று, தேவைப்படுவோருக்கு எண்ணெய், குளியல் சோப்பு, சலவை சோப்பு, பற்பசை, டார்ச்லைட் பேட்டரி, புது வேட்டி, புதுச் சட்டை, படுக்கை விரிப்பு என எல்லாப் பொருட்களும் வழங்கப்பட்டன. யாத்திரிகர்களின் படுக்கை விரிப்புகள் மாறிவிடாமல் இருப்பதற்காக அந்தந்த யாத்திரிகர்களின் வரிசை எண்ணை காசிஸ்ரீ கலியபெருமாள் அவர்கள் பெயிண்டில் எழுதிக் கொடுத்தார்.



இன்று முதல்
மகாராஷ்டிரா மாநிலத்தில் பயணம்

நேற்று முழுவதும் மழை இல்லை.

இன்று 74 ஆம் நாள் - ஆடி 22 (07.08.2014) வியாழக் கிழமை.

இன்று தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.30 மணிக்கு மாவாலா லெட்சுமி கல்யாண மண்டபத்தில் இருந்து யாத்திரையை தொடர்ந்தோம்.





காலை 6.21 மணி வழியில் பேருந்து நிறுத்தம் ஒன்றில் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம். சாலையோரம் போரஜ் (BHORAJ) பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

காலை 7.20 மணிக்கு பைப்பர்வாடா (Piperwada) என்ற ஊர் வழியாகச் சென்றோம். சாலை விரிவாக்கத்திற்காகச் சாலையோரம் இருந்த இராமர்கோயிலை அகற்றிச் சற்று தள்ளி வைத்துள்ளனர். கோயிலை முழுவதுமாகப் புதிதாகக் கட்டி முடித்துள்ளனர். யாத்திரிகர்கள் அனைவரும் கோயில் முன் நின்று வணங்கிக் கொண்டோம்.







கோயிலில் காலை வழிபாடு முடித்துக் கொண்டு வீடு திரும்பிய அன்பர் ஒருவர் யாத்திரிகர்களைக் கண்டு வரவேற்றார். கோயிலில் தங்கிச் செல்வதற்கான வசதிகள் அனைத்தும் உள்ளன என்றார். ஆனால் திட்டமிட்டபடி யாத்திரிகர்கள் பாட்டன்பூரி செல்ல வேண்டியுள்ளது எனக்கூறி அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். சுங்கச்சாவடி அருகே சாலையோரம் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டோம்.

தமிழ்நாட்டிலிருந்து வரும் லாரி ஓட்டுநர் ஒருவர் வண்டியை நிறுத்தி, இந்த வழித்தடத்தில் யாத்திரிகர்களை இரண்டுமுறை பார்த்து விட்டதாகக் கூறி நலம் விசாரித்தார்.



காலை 8.21 மணி வழியில் மண்டகாடா என்ற சிற்றாறு ஓடியது. மண்டகாடா (MandaGada river) ஆற்றின் குறுக்கே செல்லும் போது, சில

யாத்திரிகர்கள் ஆற்றினை வணங்கிக் கொண்டனர். மண்டகாடு அல்லது மண்டைக்காடு என்ற இந்தப் பெயர் காடுமண்டிய இடம் என்ற காரணப்பெயரைக் கொண்டதா? என்ற ஐயம் எனக்கு.

அடுத்து சுமார் 2 கி.மீ. தொலைவில் பென்கங்கா (Pen Ganga River) என்ற ஆறு ஓடுகிறது.





பென்கங்கா ஆற்றின் தென்கரையில் தெலுங்கானா மாநில எல்லை முடிவடைகிறது. இந்த ஆற்றைக் கடந்து ஆற்றின் வடகரையிலிருந்து மகாராஷ்ட்டிர மாநில எல்லை ஆரம்பம் ஆகிறது. பென்கங்கா ஆற்றின் தென்பகுதியில் தெலுங்கானாவும் வடபகுதியில் மகாராஷ்டிராவும் உள்ளன. சில அடியார்கள் தரையில் விழுந்து ஆற்றையும் தெலுங்கானாவையும் வணங்கிக் கொண்டனர். மகாராஷ்டிர எல்லையில் இருந்து வந்து ஆற்றுக்குள் லாரிகளை

நிறுத்தி மணல் அள்ளிக் கொண்டிருந்தனர். ஆற்றில் களிமண் ஆறு போல் ஓடிக் காய்ந்து பாறையாக மாறியுள்ளதோ என்று கருதும்படியாக, இங்கே ஆற்றின் கீழே காணப்பட்ட பாறைகள் விசித்திரமாக அமைந்து இருந்தன.



காலை 9.07 மணி பென்கங்கா ஆற்றின் பாலத்தைக் கடந்ததும் மகாராஷ்ட்டிரம் மாநில எல்லை ஆரம்பம் ஆனது. அந்த இடத்தில் இருந்து தேசிய நெடுஞ்சாலை மிகவும் மோசமாக இருந்தது. எந்தவொரு வாகனமும் எளிதில் கடந்து செல்ல முடியாதபடி பெரும் பெரும் பள்ளங்கள் சாலையின் நடுவே இருந்தன.



வழிநெடுகிலும் சாலையோரம் முட்செடிகளும் மண்டி இருந்தன. சாலையில் நடப்பது கடினமாகவும் பாதுகாப்பு அற்றதாகவும் இருந்தது. மகாராஷ்டிரா மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சேறும் சகதியுமாகச் சாலை இருந்தது. சாலையில் நடந்து செல்வதே மிகவும் சிரமமாக இருந்தது.



பகல் 10.37 மணி கடும் வெயில். உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. காலை உணவு நேரத்தில், அன்னதான வண்டியில் இருந்து குடைகளை எடுத்து வைத்துக் கொள்ளாத காரணத்தினால் யாத்திரிகர்கள் அனைவரும் வெயிலில் நடந்து சென்றனர். பிம்பல்குடி என்ற ஊர் வழியாக காலை மணி 10.40 அளவில் பாட்டன்பூரி என்ற ஊரில் உள்ள ராமர்மந்திர் வந்து சேர்ந்து தங்கினோம். இங்குள்ள மின்மோட்டாரில் யாத்திரிகர்கள் பலரும் அலுப்புத் தீரக் குளித்தனர்.



இந்தக் கோயிலில் மாலைநேரத்தில் ஊரார் பலரும் ஒன்றுகூடி பஜனை செய்து வழிபாடு செய்தனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ஊராரை ஆசிர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார். மதிய உணவு. ஓய்வு. இந்த ஊரில் உள்ள தமிழ் அன்பர் ஒருவர் வந்து அடியார்களை வரவேற்று உதவிகள் செய்து கொடுத்தார்.

இன்றைய பயணம் சுமார் 34 கி.மீ.

இன்று 75ஆம் நாள் - ஆடி 23 (08.08.2014) வெள்ளிக் கிழமை.

இன்றுதினவழிபாட்டை முடித்துக் கொண்டு 3.30 க்கு பாட்டன்பூரி என்ற ஊரிலிருந்து யாத்திரையை தொடர்ந்தோம். வழியில் சாலையோரம் காலைக் குளியல். சாலையோரம் இருந்த சிறியதொரு கோயிலில் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டோம். இந்தக் கோயில் மிகவும் பழமையான கோயில் போன்று தோன்றியது. இராமாயணக் கதைநிகழ்ச்சிகளைச் சிற்பமாக ஒரு தூணில் செதுக்கியிருந்தனர். இராமாயணக் கதை முழுவதும் விளங்குமாறு நான்கு பக்கமும் நான்கு சிற்பங்கள் என 16 சிற்பங்களில் இராமாயணக் கதை சொல்லப்பட்டிருந்தது.







அருகில் கோபுரக் கலசம் போன்று ஒரு கல்லும் கிடந்தது.

தேநீர் குடித்துவிட்டு முடித்தவுடன் யாத்திரையைத் தொடர்ந்தோம். வழிநெடுகிலும் தேசிய நெடுஞ்சாலை மிகவும் மோசமாகவும் குறுகியதாகவும் இருந்தது. சாலையில் நடப்பது கஷ்டமாகவும் பாதுகாப்பு அற்றதாகவும் இருந்தது.







பிம்பல்குடி, சோனா என்ற ஊர்கள்வழியாக 8.00 மணிக்கு கீளாப்பூர் என்ற ஊர் வந்து சேர்ந்தோம். செகதாம்பாள் கோயில் உயரமான கருவறை விமானம். செகதாம்பாள் கோயிலில் தங்கினோம். 8.30 க்கு காலை உணவு.

பெரிய மண்டபம். ஓய்வு. திருவிழாக் காலங்களில் அடியார்கள் வந்து தங்கி வழிபடுவதற்கு அனைத்து வசதிகளும் உள்ளன. ஊர்ப் பெரியோர்கள் சிலர் வந்து குருசாமியிடம் ஆசி பெற்றுச் சென்றனர். இந்த ஊரில் உள்ள கரூர்தமிழ் அன்பர் வந்து அடியார்களை வரவேற்று யாத்திரிகர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார்.





<u>30 நிமிடத்தில் 100 சப்பாத்தி</u> - மாலைநேரத்தில் ஒரு சமையல்காரரை அழைத்துக் கொண்டு வந்தார். அந்தச் சமையல் காரர் மூன்று பாத்திரங்கள் மட்டுமே எடுத்துக் கொண்டார். அடுப்பில் குருமாவுக்கான பாத்திரத்தை வைத்து

அதில் காய்கறிகளை எடுத்துப் போட்டார். அது வெந்து கொண்டிருக்கும் போதே, 25 பேருக்கு எவ்வளவு கோதுமை மாவு தேவைப்படுமோ அவ்வளவு எடுத்துப் பிசைந்து தயாராக வைத்துக் கொண்டார். மாவைத் தட்டித் தட்டி அடுப்பில் காட்டிச் சுட்டு எடுத்தார். அவை அடுப்பில் இருக்கும்போதே, மாவை உருட்டி அதை வீசியெடுத்து அடுப்பில் சுடுவதற்குத் தயாராக வைத்துக் கொண்டார். இவ்வாறாக அரைமணி நேரத்தில் சுமார் 100 சப்பாத்தி தயாராகி விட்டது. அதிகமான பாத்திரங்களைப் பயன்படுத்தாமல், குறைவான நேரத்தில் ஒரேயொரு ஆள் 120 சப்பாத்திகள் செய்து சுவையான குருமாவும் தயார் செய்து யாத்திரிகர்களுக்கு வழங்கியதைக் கண்டு யாத்திரிகர்கள் அனைவரும் வியந்தனர். குருசாமி அவர்கள் அந்தச் சமையல்காரரைப் புகழ்ந்துகூறி ஆசிர்வதித்தார். கீளாப்பூரில் இன்று முழுவதும் மழை இல்லை , நல்ல வெயில். ***இன்றைய பயண தூரம் சுமார் 19 கி.மீ.***

இன்று 76ஆம் நாள் - ஆடி 24 (09.08.2014) சனிக் கிழமை.

இன்றுதினவழிபாட்டை முடித்துக் கொண்டு கீளாப்பூர் செகதாம்பாள் கோயிலில் இருந்து இரவு 2.30 மணிக்கு யாத்திரையை தொடர்ந்தோம். வழியில் மழை தூர ஆரம்பித்தது. காலை 6.00 மணிவரை மழை தூரிக்கொண்டே இருந்தது. குடை எடுத்துக் கொள்ளாத காரணத்தால் யாத்திரிகர்கள் அனைவரும் மழையில் நனைந்தபடியே நடந்தோம். வழியில் காலை 7.00 மணிக்கு சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீர் சாப்பிட்டுக் கொண்டு நடையைத் தொடர்ந்தோம். நான்குவழிச் சாலை பணிகள் பாதி நடைபெற்றும் நடைபெறாமலும் இருந்தன. இதனால் சாலையானது சிறிது தூரம் நன்றாகவும், சிறிது தூரம் மிகவும் மோசமாகவும் என மாறிமாறி இருந்தது. சாலையில் நடப்பது சிரமமாகவும் பாதுகாப்பு அற்றதாகவும் இருந்தது. ஆனால் தமிழ்நாடு போன்று இங்கு அதிகமான எண்ணிக்கையில் இந்த மாநிலத்தைச் சேர்ந்த வாகனங்களைச் சாலைகளில் காண இயலவில்லை. பயணிகள் போக்குவரத்து வாகனங்களையும் காண இயலவில்லை. வாகனங்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் ஓடியதால் குறுகலான சாலை அமைந்துள்ள இடங்களிலும் நாங்கள் மட்டுமே நடந்து சென்றோம்.



காலை 6.56 மணி. கரன்ஜி என்ற ஊரின் வழியாகச் செல்லும் போது மேம்பாலம் வழியாகக் கடந்து சென்றோம். மேம்பாலத்தைக் கடந்தவுடன் சாலையோரம் அமர்ந்து சிறிது நேரம் ஓய்வு.



காலை 7.56 மணி.. யாத்திரிகர்களில் மிகவும் மூத்தவரான காசிஸ்ரீ கந்தசாமி அவர்களுக்குக் கால்வலி உண்டானது. அதற்காக “ஜெல்” மருந்தை எடுத்துக் கொடுத்தவுடன் காலில் தடவிக் கொண்டார். யாத்திரிகர்கள் அனைவருக்கும் தேவையான ஜெல் மருந்து இருப்பில் உள்ளது என்றும், யாருக்குத் தேவைப்பட்டாலும் வாங்கிக் போட்டுக் கொள்ளுமாறும் யாத்திரிகர்களிடம் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் தெரிவித்தார். சிறிது நேரத்தில் கரன்ஜியில் வசிக்கும் குருசாமிபச்சைக்காவடி அவர்களின் அன்பர் இருவர் வந்து குருசாமியைச் சந்தித்து ஆசி பெற்றனர். யாத்திரிகர்களை அருகில் உள்ள அரசு விருந்தினர் விடுதிக்கு அழைத்துச் சென்று தங்க வைத்தனர். காலை 8.10 மணிக்கு விருந்தினர் விடுதியில் அமர்ந்து காலை உணவு. சிறிது நேரம் ஓய்வு. 11.30 மணியளவில் அங்கிருந்து பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.



மதியம் 01.05 மணி.. வழியில் மதிய உணவு. தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி நான்குவழிச் சாலையாக மாற்றும் போது மலைகளை வெட்டி எடுத்துள்ளனர். NH 44 (20.187873N, 78.667909E) இந்த இடத்தில் கடினமான பாறைகளுக்குக் கீழும் மேலும் மண் படிந்து இருப்பதை நன்கு காண முடிந்தது. பிரளயகாலத்தில் இதுபோன்ற புவியமைப்பு உருவாகி இருக்கலாம்.



வாட்கியில் ஸ்ரீ ராமர் கோயில் மாலை 4.00 மணிக்கு சாலையோரம் உள்ள ராமர் மற்றும் ஆஞ்சநேயர் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். இங்கிருந்து வாட்கி என்ற ஊர் சுமார் 4 கி.மீ தொலைவில் உள்ளது. ஸ்ரீ ராமர்கோயில் கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கட்டிடப் பணியை மேற்பார்த்துக் கொள்பவர் தங்குவதற்கென ஒரு அறை மட்டுமே இருந்தது. அதில் யாத்திரிகர்கள் அனைவரும் தங்கிக் கொண்டோம். மிகவும் பழமையான ஆஞ்சநேயர் சிற்பம் ஒன்று வழிபாட்டில் இருந்தது. இரவு உணவு. இரவில் மின்சாரமும் நின்றுவிட்டது. அதிகதொலைவு நடந்து வந்த காரணத்தினால் அனைவரும் அயர்ந்து தூங்கிவிட்டோம்.





இன்றைய பயணதூரம் சுமார் 37 கி.மீ.

இன்று 77ஆம் நாள் - ஆடி 25 (10.08.2014) ஞாயிற்றுக் கிழமை.

இன்றுதினவழிபாட்டை முடித்துக் கொண்டு ஸ்ரீ ராமர் கோயிலில் இருந்து இரவு 2.30 மணிக்கு யாத்திரையை தொடர்ந்தோம். நேற்று அதிகாலையில் மழையும் , பின்பு நல்ல வெயிலும் இருந்த காரணத்தால் எல்லோரும் கையில் குடை எடுத்துக் கொண்டோம். வழியில் காலை நேரத்தில் அன்னதான வண்டி வந்தவுடன் தேநீர் சாப்பிடலாம் என, வழியடைக்கப் பட்ட சாலையில் அமர்ந்து யாத்திரிகர்கள் ஓய்வு எடுத்தனர். சிலர் அப்படியே படுத்துத் தூங்கி விட்டனர். காலை 7.00 ஆகியும் அன்னதான வண்டி வரவில்லை. காலதாமதம் ஆகிறது எனக் குருசாமி அவர்கள் நடைப்பயணத்தைத் தொடரச் சொன்னார்.



குருசாமி அவர்கள் வழிகாட்டுதலின்படி அனைத்து யாத்திரிகர்களும் எழுந்து நடக்கத் தொடங்கினர். இரவு 2.30 மணிக்கு தொடங்கிய நடைப்பயணம். என்னிடம் இருந்த குடிதண்ணீர் தீர்ந்து விட்டது. அன்னதான வண்டி வந்து விடும் என்ற நம்பிக்கையில் சிறிதளவு இருந்த தண்ணீரையும் குடித்து விட்டேன். இப்போது மிகவும் தாகமாக இருந்தது. என்னுடன் பேசிக்கொண்டே நடந்து வந்த காசிஸ்ரீ சிவப்பாவிடமும் தண்ணீர் தீர்ந்து விட்டது. என்னைப்போல் மற்றவர்களும் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் தாகத்துடன் நடந்தனர்.

காலை 8.10 மணிக்கு அன்னதான வண்டி வந்து சேர்ந்தது. குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அன்னதான வண்டி ஓட்டுனரிடமும் சமையல்காரரிடமும் ஏன் காலதாமதம்? ஏன் அலைபேசியை எடுத்துப் பேசவில்லை? எனக் கேட்டுக் கொண்டிருந்தார்.

யாத்திரிகர்கள் அனைவருமே ரொட்டியைப் பற்றியோ, தேநீரைப் பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை. வண்டியிலிருந்த தண்ணீரைக் குடித்துத் தாகம் தீர்த்துக் கொண்டனர். சிலர் தண்ணீரைக் குடித்துக் கொண்டு நடக்கவும் தொடங்கி விட்டனர். குருசாமி அவர்கள் யாத்திரிகர்கள் அனைவரையும் அழைத்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுச் செல்லுமாறு சொன்னார். நேற்று தங்கியிருந்த இடத்தில் மின்சாரம் இல்லாத காரணத்தினால் பேட்டரிலைட் வெளிச்சத்தில் சமையல் செய்வதில் காலதாமதம் ஆகிவிட்டது என்றும், அலைபேசியிலும் பேட்டரி தீர்ந்து விட்டபடியால் அவர்களால் தகவல் சொல்ல இயலாமல் போனது என்றும் விளக்கம் கூறினார்.

குருசாமி சொன்னவுடன் அனைத்து யாத்திரிகர்களும் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம். வழிநெடுகிலும் தேசிய நெடுஞ்சாலை மிகவும் மோசமாகவும் குறுகியதாகவும் இருந்தது. ஐந்து வருடங்களாக இந்நிலை நீடித்து இருப்பதாக கூறினர். சாலையில் நடப்பது கஷ்டமாகவும் பாதுகாப்பு அற்றதாக வும் இருந்தது.



வாட்னர் என்ற ஊரின் எல்லையில் உள்ள மருத்துவமனை எதிரே, காலை 9.15 மணிக்கு உணவு. சாலையோரம் இருந்த கடையில் அமர்ந்து உணவு சாப்பிட்டோம்.



வாட்னர் ஊரில் இருந்து நான்குவழிச்சாலை நல்லபடியாக அமைக்கப்பட்டிருந்தது. பகல் 10.03 மணி - நல்ல வெயில். நீண்ட தொலைவு நடந்துவிட்ட காரணத்தினாலும், வெயிலில் தொடர்ந்து நடக்க இயலாத காரணத்தினாலும், யாத்திரிகர்கள் ஒருவர் சாப்பாடு வண்டியில் ஏறி அமர்ந்து குட்கி வந்து சேர்ந்தார்.

உச்சிவெயிலில் 11.30 மணியளவில் சாலையோரம் மிகப் பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தின் கீழே தெய்வங்களை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர். நாங்கள் சிலர் அந்த மரத்தின் நிழலில் தங்கிச் சற்று ஓய்வு எடுத்தோம். ஆச்சரியமாக, நண்பகல் 12.00 மணிக்கு சிறுசிறு மேகங்கள் கூடின. வெயில் குறைந்தது. நாங்களும் நடக்கத் தொடங்கினோம்.



முயல்களும் ஆமைகளும் தேசிய நெடுஞ்சாலை சாலையின் ஒருபுறம் குட்கி என்ற ஊரும், சாலையின் மறுபுறம் ஆர்வி என்ற ஊரும் உள்ளன. குட்கி ஊருக்குப் பெயர்ப் பலகை இல்லை. "ஆர்வி" என்ற ஊருக்கு மட்டுமே பெயர் பலகை வைத்து இருந்தனர். எனவே குட்கி இன்னும் தொலைவில் உள்ளது எனக் கருதி, முன்னால் வேகமாகச் சென்ற யாத்திரிகர்கள் பலரும் ஊரைக் கடந்து நெடுந்தூரம் நடந்து சென்று கொண்டிருந்தனர். மெதுவாக நடந்து வந்த நாங்கள் சிலர் மட்டும் மதியம் 12.40 மணிக்கு குட்கி என்ற ஊர் வந்து சேர்ந்தோம். எங்களுக்கு முன்னதாக நடந்தவர்களைக் காணாது, எங்கே இருக்கின்றீர்கள்? என அலைபேசியில் கேட்டபோது, நாங்கள் ஆர்வி ஊரைத்தாண்டி நடந்து சென்று கொண்டிருக்கிறோம் என்றனர். ஆர்விதான் குட்கி, குட்கிதான் ஆர்வி என்று விளக்கம் கூறி அவர்களைத் திரும்பி வருமாறு கூறினோம். அலைபேசி மணி அடித்தபோதும், காசிஸ்ரீ மோகன் என்ற பெரியகருப்பன் அவர்கள் கடைசிவரை அலைபேசியை எடுக்கவே இல்லை. அவர் மட்டும் நெடுந்தொலைவு நடந்து சென்றுவிட்டுத் திரும்பி வந்து சேர்ந்தார். முயல் ஆமை கதையாக இந்த நிகழ்ச்சி அமைந்து இருந்தது..



பகல் 12.36 மணி

ஈச்ச மரத்தின் ஓலையைக் குட்கி கிராமத்தில் வெயிலில் காய வைத்திருந்தனர். இந்த ஈச்ச ஓலையில் படுப்பதற்கான பாய் செய்யலாம். ஈச்சங்குச்சியில் கூடை செய்யலாம். நான் 1960-70 ஆம் ஆண்டுகளில் ஈச்சம்பாய், ஈச்சங்கூடை எல்லாம் திருப்பூவணத்தில் பார்த்துள்ளேன். இங்கே குட்கியில் இது இன்றும் பயன்படுத்தப்படுவதைக் கண்டு வியந்து போனேன். குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அன்பர் ஒருவர் வந்து யாத்திரிகர்களை வரவேற்று அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

தமிழ்நாட்டில் "எத்துச் சில்" என்ற விளையாட்டு உண்டு. தரையில் கட்டம் போட்டு, அதில் வட்டவடிவமான பானை ஓடுகளை காலால் எத்தி விளையாடும் விளையாட்டு. அந்த விளையாட்டை இந்தக் கிராமத்தில் சிறுவர் சிறுமியர் விளையாடிக் கொண்டிருந்தனர். மிகவும் வியப்பை அளித்தது.

குருசாமியின் அடியார் வீட்டில் தங்கினோம். வீடும் வயலும் அருகருகே இருந்தன. வீட்டில் கைவினைப் பொருட்கள் செய்து வைத்திருந்தனர். காதிகிராப்ட் நிறுவனத்தினர் வந்து இந்தப் பொருட்களை விற்பனைக்கு வாங்கிச் செல்வார்கள் என்று கூறினர்.

வெண்டைக்காய் சூப் வழங்கப்பட்டது. 1.30 க்கு மதிய உணவு. ஓய்வு. மாலை 5.00 மணிக்கு ரொட்டி , தேநீர். வழிபாடு. இரவு 7.00 மணியளவில், யாத்திரிகர்களுக்கு அந்த அடியாரின் வீட்டிலிலேயே சப்பாத்தி தயாரித்து வழங்கி உபசரித்தனர். சப்பாத்தியில் எண்ணெய் இல்லை. அடுப்பில் சுட்டு எடுத்தனர். சுவையாக இருந்தது. யாத்திரிகர்கள் அனைவரும் சாப்பாத்திகளை விரும்பி கேட்டு வாங்கி சாப்பிட்டனர்.

இன்றைய பயண தூரம் சுமார் 34 கி.மீ.



இன்று 78ஆம் நாள் - ஆடி 26 (11.08.2014) திங்கள் கிழமை.

இன்று தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.20 மணிக்கு குட்கி என்ற ஊரில் இருந்து யாத்திரையை தொடர்ந்தோம். குட்கி ஊரில் இருந்து நெடுஞ்சாலை நன்றாக நான்குவழிச் சாலையாக இருந்தது.

கிங்கன்காட் (Hinganghat, Maharashtra 442301) என்ற ஊருக்குப் புறவழிச்சாலை போடப்படவில்லை. ஊரில் நடுவே சாலை அமைந்துள்ளது. எனவே ஆங்காங்கே வழிகேட்டு விசாரித்துக் கொண்டு நடந்து வந்தோம். அதிகாலை நேரத்தில் சாலையில் அதிகமானவர்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தனர். ஒரு மேம்பாலம் அடைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒருவர் அந்த அடைக்கப்பட்டிருந்த மேம்பாலத்தில் நடந்து செல்லுமாறு எங்களுக்கு வழிகாட்டி உதவினார். அதனால் நாங்கள் விரைவாகவும் எளிதாகவும் அந்த ஊரைக் கடந்து வந்து விட்டோம். பாலம் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பாலத்திற்குக் கீழே நடந்து வந்தவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் காலதாமதமாக வந்து சேர்ந்தார்கள்.



காலை 6.15 மணி. வாரணாசி இன்னும் 777 கி.மீ. தொலைவில் உள்ளது என்பதை அறிந்து மகிழ்ந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.

வழியில் தேநீருக்காக யாத்திரிகர்கள் அனைவரும் காத்திருந்தோம். வழக்கம்போல் அன்னதானவண்டி சிறிது நேரம் காலதாமதமாக 7.00 மணிக்கு வந்து சேர்ந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.





காலை 7.48 மணி. பெங்களூர் 1008 கி.மீ. என்றிருந்த மைல்கல்லைக் கண்டு அனைவரும் படம் எடுத்துக் கொண்டோம்.

காலை 9.00 மணிக்கு ஜாம் என்ற ஊர் வந்து சேர்ந்தோம். இங்குள்ள பாரத்பெட்ரோலியம் அருகில் உள்ள பயணிகள் தங்கும் விடுதியில் தங்கினோம். அதன் உரிமையாளர் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களை வரவேற்றார். அந்த உணவகத்தில் தங்கியிருந்தோம்.



மதிய உணவிற்கு பின்பு 2.30 மணிக்கு வழக்கமான வழிபாட்டை முடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம்.



இராமேசுவரத்திலிருந்து காசிக்குப் பாதயாத்திரை செல்கிறோம் என்பதை அறிந்த அன்பர் ஒருவர் பெரிதும் வியந்து பாராட்டினார்.



மாலை 3.30 மணி இன்று காலை 'ஜாம்' என்ற ஊருக்கு வரும் போது வாரணாசி 777 கி.மீ. என்று மைல்கல் இருந்தது. வெகுதூரம் நடந்து ஜாம் வந்து சேர்ந்தோம். இப்போது மாலைநேரம் ஜாம் நகரையும் கடந்து வெகுதூரம் நடந்து வந்து விட்டோம். ஆனால் வாரணாசி 789 கி.மீ. என்று மைல்கல் இருந்து. தொலைவு குறையாமல் மைல்கல் 12 கி.மீ. கூடுதலாகக் காட்டியது. யாத்திரிகர்கள் அனைவரும் நெடுஞ்சாலையில் நடப்பட்டுள்ள இந்த மைல் அளவைக் கண்டு வியந்து, இது எப்படிச் சாத்தியமாகும் என நொந்துபோனார்கள்.

இன்றைய பயணத்தில் மேகமூட்டமாக இருந்தது. மழையும் இல்லை , வெயிலும் இல்லை.



மாலை 6.00 மணி அளவில் கண்டள என்ற ஊரை அடுத்துள்ள "கொறை" என்ற ஊரில் உள்ள "ஜகன்கபரி மாதா" கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். "வன நதி " என்ற ஆற்றின் தென் கரையில் ஊரும் கோயிலும் உள்ளன. இந்த ஊரில் இந்த ஆறு கிழக்கிலிருந்து மேற்காக ஓடுகிறது. குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அனுமதி பெற்று நாங்கள் மூவர் மட்டும் ஆற்றுக்குச் சென்றோம். ஆற்றில் மணல் இல்லை. ஆற்றில் அமைந்துள்ள பாறைகளின் அமைப்பு வினோதமாக இருந்தது.

முண்டுக் கற்களைக் கொண்டு கட்டிய தரை போன்று இயற்கையாக அமைந்திருந்தது.



தண்ணீர் சுத்தமாக குளிர்ச்சியாக இருந்தது. ஆற்றில் நீராடினோம். சூரிய மேற்கே ஆற்றில் மறைந்து கொண்டிருந்தது. அது காண்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இரவு 7.00 மணிக்கு ஊரார் பஜனை செய்து தீபிகாமாதாவை வழிபட்டனர். இரவு உணவு. ***இன்றைய பயண தூரம் சுமார் 36 கி.மீ.***

இன்று 79ஆம் நாள் - ஆடி 27 (12.08.2014) செவ்வாய்க் கிழமை.



தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.10 மணிக்கு "கொறை" என்ற ஊரில் இருந்து யாத்திரையை தொடர்ந்தோம். பம்கனி **(Bamhani)** என்ற ஊரின் அருகே இரயில்வே மேம்பாலம் அருகே இருந்த காட்டில் அதிகாலையில் ஆயிரக்கணக்கான பச்சைக்கிளிகள் கூட்டம் கூட்டமாக பறந்து சென்றன. காணக் கண்கோடி வேண்டும். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அருள்மிகு அன்னை மதுரை மீனாட்சியை நினைத்து வணங்கிக் கொண்டார்.

காலை 6.08 மணி பொர்கடி சுங்கச்சாவடி (Borkhedi Toll Plaza) அருகே சாலையோரம் அமர்ந்து ஓய்வு. யாத்திரிகர்கள் பலரும் தாகத்தினாலும் பசியினாலும் அயர்ந்து போய் இருந்தனர்.



அன்னதான வண்டி வருவதற்குக் காலதாமதம் ஆனது. குருசாமி பச்சைக்காவடி அவர்கள் வழிகாட்டுதலின்படி தொடர்ந்து நடக்கத் தொடங்கினோம். மதுரை காசிஶ்ரீ கந்தசாமி அவர்கள் கால்வலிக்குத் தொடர்ந்து மருந்து போட்டுக்கொண்டே யாத்திரையைத் தொடர்ந்தார்.





காலை 6.54 மணி

வழியில் ஜன்கேஸ்வர் (Jangeshwar) என்ற ஊரின் அருகே 7.30 மணிக்கு தேநீரும் ரொட்டியும் சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 9.30 மணிக்கு புட்டிபூரி என்ற ஊர் வந்து சேர்ந்தோம். குருசாமியின் அடியார் ஒருவர் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.
காலை உணவு.

இன்றைய பயணதூரம் சுமார் 25 கி.மீ.

காசி புனித பாதயாத்திரையில் ஓர் அற்புத நிகழ்ச்சி -

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, ஆடி 27 (12.08.2014) செவ்வாய்கிழமை மகாராஷ்டிர மாநிலம் கண்கட்டி (kankati) என்ற ஊரில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் இருந்து புறப்பட்டு சுமார் 25 கி.மீ. யாத்திரை மேற்கொண்டு புட்டிபூரி (Butibori) என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம்.

அந்த ஊரில் உள்ள மருத்துவர் ஒருவரின் மகனும் அவரது நண்பர்களும் சாலையோரம் நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களையும் யாத்திரிகர்களையும் வரவேற்றனர். அந்த மருத்துவருக்குச் சொந்தமான நீண்ட பெரிய அடுக்குமாடி வணிக வளாகம் சாலையோரம் இருந்தது. அந்தக் கட்டிடத்தில் தங்கினோம். கட்டிடப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மதிய உணவிற்குத் தேவையான காய்கறிகள், சமையல் எண்ணெய், குடிதண்ணீர் இவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தனர். குறிப்பாக மதுரை காசிஸ்ரீ கந்தசாமி அவர்களுக்கு வெற்றிலையும் பாக்கும் தேடிப்பிடித்து வாங்கி வந்து கொடுத்தனர்.

மாலைநேரத்தில் அந்தக் கட்டிடத்தின் உரிமையாளரான அந்த மருத்துவரும் அவரது நண்பர்கள் சிலரும் வந்து குருசாமி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றனர். நீண்ட நேரம் குருசாமி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த மருத்துவர் மிகப் பெருஞ் செலவில் இந்த வணிக வளாகத்தைக் கட்டியுள்ளார். முக்கால்வாசி வேலைகள் முடிவடைந்தநிலையில், உள்ளூர் அரசியல் வாதியிடமிருந்து மிரட்டல், அந்த இடத்தை தொழிற்சாலை வளாகமாக மாற்றித் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், அதனால் இந்தக் கட்டிடத்தை அரசு கையகப்படுத்தி இடிக்கப் போவதாகவும் கூறியுள்ளார். மருத்துவரும் நீதிமன்றத்தை நாடியுள்ளார். வாய்தா எல்லாம் வாங்கி முடித்தபின்னர், வழக்கறிஞர் இதை சட்டப்படி மாற்ற முடியாது என்று கூறியுள்ளார். தீர்ப்பும் அப்படியே வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுள்ளார். அங்கும் அரசுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.



இனி எந்தவொரு நாளிலாவது அரசு தரப்பில் ஆட்கள் வந்து கட்டிடங்களை இடித்துத் தள்ளுவார்கள் என்ற நிலை. அந்நாளில் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்றுள்ளார். இந்த ஊரில் சாலையோரம் உள்ள இந்தக் கட்டிடம் பயன்பாட்டில் இல்லாமல் சும்மா கிடந்துள்ளது. இங்கே சென்று யாத்திரிகர்களுடன் தங்கியுள்ளார். யாத்திரிகர்கள் வந்து கட்டிடத்தில் தங்கியுள்ள செய்தியை அருகில் நின்று கொண்டிருந்த ஒருவர் வழியாகச் சொல்லி அனுப்பி யுள்ளார். செய்தி அறிந்த அந்தக் கட்டிடத்தின் உரிமையாளரான மருத்துவர், நேரில் வந்து குருசாமி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

அப்போது, இந்தக் கட்டிடம் பெரும் பொருட் செலவில் கடன்வாங்கிக் கட்டப்பட்டுள்ளதையும், நீதிமன்றங்களில் அரசிற்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், எந்த நாளிலும் இந்தக் கட்டிடம் இடிக்கப்படலாம் என்ற தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

அது கேட்ட குருசாமி பச்சைக்காவடி அவர்கள், இங்கே எங்களைத் தங்கும்படிச் செய்தவர் பிள்ளையார் ஆவார். பிள்ளையார் எங்களை இங்கே தங்கச் சொல்லித்தான் நாங்கள் இங்கே தங்குகிறோம். நீங்களும் முழு நம்பிகையுடன் 108 நாட்கள் பிள்ளையாரைத் தினமும் வழிபாடு செய்து வாருங்கள். இந்தக் கட்டிடம் உங்கள் கையை விட்டுப் போகாது என்று கூறி ஆசீர்வதித்துள்ளார்.

நீதிமன்றங்கள் எல்லாம் கைவிரித்துவிட்ட இந்த இக்கட்டான நிலையில், எல்லாமும் முடிந்துவிட்டது என்ற நிலையில், இனிமேல் கட்டிடத்தை இடிப்பதுதான் பாக்கி என்ற நிலையில், குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கூறிய இந்தச் சொற்கள் மட்டுமே ஆதரவாக இருந்துள்ளன.

அரும்பாடு பட்டுக் கட்டிய கட்டிடம் இடிபடக்கூடாது, என் உழைப்பில் கட்டிய அந்தக் கட்டிடம் என்றும் என்னிடமே இருக்க வேண்டும் என்ற வேண்டுதலுடன் அந்த மருத்துவர் தினமும் பிள்ளையாரை வழிபட்டு வந்துள்ளார். கட்டிடத்தை இன்று இடிப்பார்கள், நாளை இடிப்பார்கள் என்று நாட்கள் நகர்ந்து கொண்டே சென்றுள்ளன. அரசியலில் திடீர் மாற்றமாக அந்த ஊரில் இருந்த மற்றொருவர் பதவியேற்க, அவர் அவருக்குச் சொந்தமான இடத்தில் தொழில்வளாகம் அமைக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி அதைக் கொண்டுபோய் அரசிடம் கொடுத்துள்ளார். அவரது கோரிக்கை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் கூறிய இடத்தில் தொழில்வளாகம் ஆரம்பிக்க அரசு உத்தரவு வழங்கிவிட்டது.

அரசின் இந்தப் புதிய ஆணையால், மருத்துவரின் இந்தக் கட்டிடம் இடிபடாமல் தப்பித்துவிட்டது. எல்லாமும் முடிந்துவிட்டன என்றிருந்த நிலையில் குருசாமி பச்சைக்காவடி அவர்களது வழிகாட்டுதலின்படித் தினமும் பிள்ளையாரை வழிபட்டதன் பலனாகத் தங்களது சொத்து மீண்டும் தங்களுக்கே வந்துவிட்டது என்று அந்த மருத்துவர் அகம் மகிழ்ந்து கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னாளில் அந்த மருத்துவரும் அவரது குடும்பத்தினரும் ஆனைமுகத்தானுக்கும் குருசாமிக்கும் அடியார் ஆகிவிட்டோம் என்றும் கூறி மகிழ்ந்தார்.

எல்லாம் ஆனைமுகத்தான் திருவருள். அனுதினமும் ஆனைமுகத்தானை வணங்குதல் செய்வோம்.



இன்று 80ஆம் நாள் - ஆடி 28 (13.08.2014) புதன் கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.10 மணிக்கு புட்டிபூரி என்ற ஊரில் இருந்து யாத்திரையை தொடர்ந்தோம்.





நாக்பூர் ஊருக்குள் நுழைந்ததும் சிறிது நேரம் ஓய்வு. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.









நாக்பூரில் வசித்து வரும் நகரத்தார் திரு முத்துக்கருப்பன் அவர்களும் அவரது மகனும் வழியில் வந்து யாத்திரிகர்களை வரவேற்றனர். காலை உணவு கொண்டுவந்து வழங்கினர்.

காலை உணவு முடிந்த பின், அவரது வீட்டிற்கு யாத்திரிகர்களை அழைத்துச் சென்றார். யாத்திரிகர்கள் சிலர் அவரது வீட்டிலும், சிலர் அருகில் உள்ள கோயிலிலும் வசதியாகவும் தங்கினோம். இன்றும் நாளையும் இவரது இல்லத்தில் தங்கியிருந்தோம். இந்த இரண்டு நாட்களிலும் இவரது இல்லத்திலேயே யாத்திரிகர்களுக்கு உணவு வழங்கிச் சிறப்புச் செய்தனர்.



இன்றைய பயணம் சுமார் 20 கி.மீ.

நேற்று நாக்பூர் வந்து சேர்ந்து நகரத்தார் அன்பரின் வீட்டில் தங்கி இருந்தோம்.

இன்று 81ஆம் நாள் - ஆடி 29 (14.08.2014) வியாழக் கிழமை.

இன்று ஒய்வு நாள். யாத்திரை நிறைவுபெற இன்னும் 30 நாட்களே உள்ளன. குருசாமி பச்சைக்காவடி அவர்கள், இந்த 30 நாட்களுக்கு என்னென்ன உணவுப் பொருட்கள் எவ்வளவு தேவைப்படும் என்று திட்டமதிப்பீடு செய்தார். அன்னதான வண்டியில் இருந்து அனைத்துப் பொருட்களையும் கீழே இறக்கி வைத்து, அவைகளில் 30 நாட்களுக்குத் தேவைப்படும் பொருட்களைப் பார்த்து வாங்கி வைத்துக் கொண்டார்.



இன்று சுதந்திரதினம்
பாதயாத்திரையின் 82ஆம் நாள் - ஆடி 30 (15.08.2014) வெள்ளிக் கிழமை.

நேற்றும் இன்றும் நாக்பூரிலேயே தங்கி இருந்தோம்.

யாத்திரிகர்கள் நாக்பூர் வந்து சேர்ந்துள்ளது பற்றியும், நாளை (16.08.2014) நாக்பூரிலிருந்து காசிக்கு யாத்திரை மேற்கொள்ள உள்ளது பற்றியும்,

காசி (வாரணாசி) மற்றும் யாத்திரை நாட்களில் தங்கும் இடங்களில் உள்ள அன்பர்களின் முகவரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பட்டன.



தபால் பணிசெய்வோர் தவிர்த்து, மற்றபிற யாத்திரிகர்கள் அனைவருக்கும் முழு ஓய்வு.

இன்று 83ஆம் நாள் - ஆடி 31 (16.08.2014) சனிக் கிழமை.

இன்று தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.30 மணிக்கு நாக்பூர் அன்பரின் வீட்டில் இருந்து யாத்திரையை தொடர்ந்தோம்.

வழியில் தேநீர்.



காலை 6.43 மணி



காலை 7.17 மணி சாய்பாபா கோயிலில் காலை உணவு.

காலை 8.55 மணி கன்கான் (Kanhan) என்ற ஊரிலிருந்து நிலக்கரி எடுத்துச் செல்லும் தொடரிகளைக் காணமுடிந்தது. சாலையெங்கும் நிலக்கரித் தூள்கள் பரவிக் கிடந்தன.

வழியில் குருதுவார் ஒன்று இருந்தது..

காலை 10.00 மணிக்கு இராமர் கோயிலுக்கு வந்து சேர்ந்து தங்கினோம். கோயில் அர்ச்சகர் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார். கோயிலுக்கு அருகே சமையல்கூடம் இருந்தது. குரங்குகள் அதிகம் காணப்பட்டன. மதிய உணவு. ஓய்வு.



மதிய உணவிற்குப் பின்னர் 3.11 மணிக்கு வழக்கமான வழிபாடு முடிந்ததும் யாத்திரையைத் தொடர்ந்தோம்.

மாலை 3.17 மணி வழியில் சுங்கச்சாவடி அருகே சில இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர். யாத்திரை செல்வதைக் கண்டதும் அருகில் வந்து விசாரித்தனர். இராமேசுவரம் காசி பாதயாத்திரை செல்கிறோம் என்ற தகவல் அறிந்ததும், அவர்களது காலணிகளைக் கழட்டிவிட்டுக் குருசாமி பச்சைக்காவடி அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். " உங்களது பூர்வீக சொத்து தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரும்" என்று கூறிக் குருசாமி அவர்களை ஆசிர்வதித்தார்.



மாலை 4.50 மணி அளவில், சாலையோரம் இருந்த "தாபா"வில் அமர்ந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்தோம். இங்கிருந்து காசி 700 கி.மீ. என்பதை அறிந்து யாத்திரிகர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.



சாலையோரம் இருந்த கடையில் அமர்ந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்தோம். இங்கிருந்து மன்சார் (Mansar) என்ற ஊர் 9 கி.மீ. தொலைவில் உள்ளது..

தும்ரிகார்டு என்ற ஊரைக் கடந்து மன்சார் என்ற ஊரின் எல்லையில் உள்ள அரிசி ஆலைக்கு வந்து சேர்ந்தோம். குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அடியார் இங்கே தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.' இரவு உணவு. தங்கல்.

இன்றைய பயணம் சுமார் 37 கி.மீ

இன்று 84ஆம் நாள் - ஆவணி 1 (17.08.2014) ஞாயிற்றுக் கிழமை.

இன்றுதினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.50 மணிக்கு தும்ரிகார்டு ஊரின் புறத்தே இருந்த அரிசி ஆலையில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 6.29 மணி வழியில் தேநீர். மண்சேர் என்ற ஊரில் இருந்து பயோனி வரை அடர்த்தியான காடு. *புலிகள் சரணாலயம் உள்ளது* காலை உணவு.



காலை 9.08 மணி. வழியில் அன்பர் ஒருவர் வண்டியை நிறுத்தி இறங்கி வந்து யாத்திரிகர் களுக்கு வாழைப்பழம் வழங்கினார். அவரும் காசிக்கு சென்று கொண்டு இருப்பதாகக் கூறினார். பல முறை முயன்றும் காசிக்குப் பாதயாத்திரையாகச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை யென்றும், நடந்து செல்லும் நீங்கள் எல்லோரும் பாக்கியவான்கள் என்றும் சொன்னார்.



காலை 10.17 மணி அடர்ந்த காடுகள் வழியாக இன்றைய பயணம் அமைந்திருந்தது. चोरबहुलि मोगरा சோர்பாஹுலி மோக்ரா என்றால் “திருடர்கள் நிறைந்த இடம்” என்று பொருள். இந்தப் பெயரும், புலிகள் நிறைந்த காடு என்ற செய்தியும் மனதிற்குச் சிறிதளவும் அச்சத்தைக் கொடுத்தது. ஆனால் நடைப் பயணத்தில் எந்தவிதமான அச்சமும் இல்லை. சாலை விரிவாக்கத்தினால் வாகனங்கள் அதிகமான எண்ணிக்கையில் சென்று கொண்டிருந்தன. चोरबहुलि मोगरा சோர்பாஹுலி மோக்ரா என்ற ஊர் வழியாக பயோனி என்ற ஊர் வந்து சேர்ந்தோம்.

11.25 மணிக்கு தும்ரிகார்டு கூட்டுறவு சங்கத்தில் மதிய உணவு. பயோனியில் தங்கல், ஓய்வு.

பயண தூரம் 24 கி.மீ இரவு உணவு. தங்கல்.

இன்று 85ஆம் நாள் - ஆவணி 2 (18.08.2014) திங்கள் கிழமை.

இன்று தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.20 மணிக்கு பயோனி ஊரின் புறத்தே இருந்த கூட்டுறவு சங்கத்திலிருந்து யாத்திரையை தொடர்ந்தோம். அடர்ந்த காட்டுக்குள் பயணிக்கும் போது விடிந்து விட்டது.



சந்தனமரத்தை வணங்கிய சிவப்பா - காலை 6.05 மணி அடர்ந்த காட்டின் நடுவே சாலையோரம் ஒரு சந்தனமரம் இருப்பதைக் கண்டோம். யாத்திரிகர்கள் பலரும் விரும்பிச் சந்தனமரத்திற்கு அருகில் நின்று படம் எடுத்துக் கொண்டோம்.



வழியில் காலை 6.15 மணிக்கு, டீலோபார் (Deolapar, Maharashtra 441401) என்ற ஊரின் அருகே நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு பிரிவுச் சாலையில் அமர்ந்து காலை தேநீர்.

மூத்த யாத்திரிகர் காசிஸ்ரீ கந்தசாமி (72) அவர்கள் கால்களில் மருந்து தடவிக் கொண்டார். வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டார்.



தமிழ்ப் பெண் கட்டிய தர்கா - மோர்பட்டா என்ற ஊரில் முகமதியர் தர்கா ஒன்று உள்ளது. அவுலியா சகிபீர் பாபா அவர்களுக்குத் தொண்டு செய்தும், வாழ்க்கைத் துணையாகவும் வாழ்ந்த இசுலாமியராக மாறிய தமிழ்ப்பெண் ஒருவரால் இந்த தர்கா கட்டப்பட்டு நிர்வாகம் செய்யப்பெற்றது என்று சொன்னார்கள். (Sakhi Peer Baba Dargah, AH43, Maharashtra 441401) அவர்களுடைய புகைப்படங்கள் எல்லாம் தர்காவில் இருந்தன.



தர்காவில் ஒரு பச்சைக்கிளி வளர்த்தனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அந்தக் கிளிக்கு வாழைப்பழம் வழங்கினார்.



தர்கா அருகில் உள்ள கட்டிடத்தில் காலை உணவு. தர்கா நிர்வாகிகள் யாத்திரிகர்களை அன்புடன் வரவேற்று தேநீர் வழங்கினார்கள். இங்கு தேநீர் தயாரிக்கும் அடுப்பு வினோதமாக இருந்தது. இரும்புக் கூடாரம் போன்று அமைத்து, அதற்குச் சிறு கதவு ஒன்றும் அமைத்து, அதனுள் தேநீரைச் சூடாக வைத்து இருந்தனர். காலைநேரத்தில் யாத்திரிகர்கள் சாப்பிடும் போது, குருசாமி பச்சைக்காவடி அவர்கள் தர்கா நிர்வாகி களையும் சாப்பிட வருமாறு அழைத்தார். அந்த அழைப்பை ஏற்றுத் தர்கா நிர்வாகிகளும் யாத்திகர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து அமர்ந்து யாத்திரிகளுக்கான காலை உணவைச் சாப்பிட்டு மகிழ்ச்சி தெரிவித்தனர். மோர்பட்டா என்ற ஊருடன் மகாராட்டிரம் எல்லை முடிகிறது. பயோனி என்ற ஊரில் இருந்து காவாசா வரை அடர்த்தியான காடு. புலிகள் சரணாலயம் உள்ளது. பயணத் திட்டத்தில் சிறு மாற்றமாக மோர்பட்டா வில் தங்காமல் அங்கிருந்து 7 கி.மீ. தூரத்தில் உள்ள கவாசா என்ற ஊருக்குச் சென்றோம்.

பாதயாத்திரையில் கூட வந்த வந்த பைரவர் - பாதயாத்திரையில் 10 கி.மீ. தூரத்திற்கும் மேலாக, ஒரு யாத்திரிகரைப் பின்தொடர்ந்து ஒரு நாயும் கூடவே நடந்து வந்தது. எவ்வளவோ விரட்டிப் பார்த்தும் போகவில்லை. 20 யாத்திரிகர்களில் வேறுயாருடனும் சேர்ந்து நடக்காமல், இந்த யாத்திகருடன் மட்டுமே சேர்ந்து நடந்து வந்தது. “காசிக்குப் போறேன், நானும் வாரேன்” என்று சிறுவர்களாக இருக்கும் போது விளையாடும் விளையாட்டு நினைவிற்கு வந்தது. கவாசா ஊரின் எல்லையில் மற்றபிற நாய்கள் வந்து சண்டை போட்டன. அதன்பின்னர் இந்த நாயைக் காணவில்லை.



இங்கிருந்து
மத்தியப் பிரதேச மாநிலத்தில் பயணம்



காலை 9.30 மணி

நடந்து வந்த பாதைக்கு நன்றி - அடர்ந்த காட்டின் நடுவே மத்தியப்பிரதேசம் எல்லை ஆரம்பமானது. பவந்ததி ஆற்றின் (Bawanthadi River) உபநதியாகச் சுமார் 30 அடி அகலத்தில் ஒரு சிறு காட்டாறு ஓடுகிறது. அந்த ஆற்றிற்கு ஒருபுறம் மகாராஷ்டிர மாநிலமும், மறுபுறம் மத்தியப்பிரதேச மாநிலமும் உள்ளன. யாத்திரிகர்களில் சிலர் நடந்துவந்த பாதைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மகாராஷ்டிரா மாநில எல்லையில் விழுந்து வணங்கினர். அதன் பின்னர் நதியை வணங்கிக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தனர். பயணத் திட்டத்தில் சிறு மாற்றமாக மோர்பட்டா வில் தங்காமல் அங்கிருந்து 7 கி.மீ. தூரத்தில் உள்ள கவாசா (Khawasa, Madhya Pradesh 480881) என்ற ஊர் வந்து சேர்ந்தோம்.

சண்டை போட்ட சமையல்காரர் - காலை 9.57 மணி கவாசா ஊரில் வனத்துறையினரின் சோதனைச்சாவடி உள்ளது. அதனருகே வண்டியை நிறுத்துமாறு யாத்திரிகர்களில் ஒருவர் அன்னதான வண்டியை நிறுத்தினார். குருசாமி சொல்லிய இடத்தில்தான் நாங்கள் வண்டியை நிறுத்துவோம், ஆளாளுக்கு வண்டியை எப்படி நிறுத்தலாம்? என்று சமையல்காரர் மிகவும் கோபம் கொண்டு அந்த யாத்திரிகருடன் சண்டைபோட ஆரம்பித்துவிட்டார்.



குருசாமி பச்சைக்காவடி அவர்களும், காசிஞீ சின்னக்கருப்பன் அவர்களும் அந்த இளைய சமையல்காரரைச் சமாதானப் படுத்தினார்கள்.

கவாசா தமிழர் - பகல் 10.12 மணி. கவாசாவில் ஈரோடு அன்பர் ஒருவர் டீ கடை வைத்துள்ளார். அவர் யாத்திரிகர்களை அன்புடன் வரவேற்றார். அருகில் உள்ள கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்தில் தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தார். பள்ளிக்கூடம் அருகில் இருந்தது. பகல் 12.00 மணிக்கு வெண்டைக் காய் சூப் வழங்கப்பட்டது.



குருவடியைத் தேடிய அடியார் - குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரையாக வந்து இன்றைய நாளில் மோர்பட்டாவில் தங்கியிருப்பார்கள் என்ற செய்தி அறிந்துள்ளார் குருசாமியின் அன்பர் ஒருவர். குருசாமி அவர்களைக் பார்த்து ஆசிபெற வேண்டுமென மோட்டார்பைக்கில் தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு கவாசா வழியாக மோர்பட்டா சென்றுள்ளார். யாத்திரிகர்கள் மோர்பாட்டாவில் தங்காமல் கவாசா சென்றுவிட்டனர் என்று கூறியுள்ளனர். எனவே அங்கிருந்து கவாசா திரும்பி வந்து குருசாமி அவர்களிடம் ஆசி பெற்றார். யாத்திரையின் போது அவரது வீட்டிற்கு வந்து தங்கிச் செல்லவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

பகல் 1.30 மணிக்கு மதிய உணவு. ஓய்வு. ***பயண தூரம் 22 கி.மீ.***



இன்று 86ஆம் நாள் - ஆவணி 3 (19.08.2014) செவ்வாய்க் கிழமை.

இரவு 3.00 மணிக்கு எழுந்து தினசரி வழிபாட்டை முடித்துக் கொண்டு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு 3.30 மணிக்கு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



இரவு 3.44 மணி



அதிகாலை 5.54 மணி அடர்ந்த காடுகளின் வழியாக நடந்து சென்றோம்.



காலை 8.42 மணி புலிகள் சரணாலயம் செல்லும் பாதை அருகே காலை 8.42 மணிக்குக் காலை உணவு.

நல்ல மழை பெய்தது. எங்களுக்கு முன் நடந்து சென்றவர்கள் இந்த பாரத் பெட்ரோல் பங்கில் தங்கி நிற்கவில்லை. அவர்கள் இந்த இடத்தைக் கடந்து சென்றிருந்தனர்.

மலைப்பகுதி முடிவடையும் இடத்தில் சாலையோரம் பெட்ரோல் பங்க் ஒன்று இருக்கிறது. மழை விடும் வரை அங்கே ஒதுங்கி நின்றோம்.



பகல் 11.13 மணி



பகல் 12.19 மணி கோபால்கஞ்ச் என்ற ஊரின் புறத்தே இருந்த சிவன் கோயிலில் வந்து தங்கினோம். ***இன்றைய பயணம் சுமார் 43 கி.மீ.***

இன்று 87ஆம் நாள் - ஆவணி 4 (20.08.2014) புதன் கிழமை.

மாற்றி அமைக்கப்பட்ட பயணத்திட்டப்படி, தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.00 மணிக்கு கோபால்கஞ்ச் என்ற ஊரின் புறத்தே இருந்த சிவன் கோயிலில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். வழிநெடுகிலும் பசுமையான வயல்கள் நிறைந்து காணப்பட்டன. ஓரிடத்தில் சில மான்கள் மேய்ந்து கொண்டிருந்தன. சியோனி பைபாஸில் தேநீர்.



பண்டோல் என்ற ஊர் பைபாஸில் உள்ள "சிங்" பெட்ரோல் பங்க் உரிமையாளர் வரவேற்றார். சிறிது நேரம் ஓய்வு. மதிய உணவு. சுமார் 2.30 மணி அளவில் யாத்திரையைத் தொடர்ந்தோம்.





கோரக்பூர் கிராமத்தினர் சார்பாக இருவர் இவ்வளவு தொலைவு வந்திருந்து வரவேற்றனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்தார்.

கோரக்பூர் அருகில் சாலையோரம் ஒரு குருதுவார் இருந்தது. யாத்திரிகர்கள் விரும்பி படம் எடுத்துக் கொண்டனர்.



கோரக்பூர் கிராமத்தினர் கிராமத்தில் இருந்து நெடுஞ்சாலைக்கு வந்துநின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களை மலர்தூவி வரவேற்றனர். குருசாமி அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதித்தார்.



நெடுஞ்சாலையில் இருந்து கோரக்பூர் கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர்.



ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் பெண்கள் நின்று மலர் தூவி வரவேற்பு அளித்தனர். அவர்களுக்கு அருள்வாக்குச் சொல்லி குருசாமி ஆசிர்வதித்தார்.



ஒருவருக்கு காலில் ஏற்பட்டிருந்த நோய்நீங்கிட வைத்தியம் கூறி ஆசிர்வதித்தார்.



தலைமைஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவரும் இவரது குடும்பத்தினர் அனைவரும் குருசாமி அவர்களையும் யாத்திரிகர்களையும் வரவேற்றார்கள்.



தனது மூத்த சகோதரனை வரவேற்பது போன்று அந்தக் குடும்பத்தினர் பெரிதும் மனம் நெகிழ்ந்து குருசாமி அவர்களை வரவேற்றனர். கோரக்பூர் கிராமத்திற்கு நாளை வருவதாகத்தான் பயணத் திட்டம்.

மாற்றியமைக்கப்பட்ட பயணத்திட்டத்தின்படி ஒரு நாள் முன்னதாகவே (20.08.2014) 5.00 மணிக்கு வந்து சேர்ந்தோம். 21.08.2014 & 22.08.2014 இரண்டு நாட்கள் ஓய்வு நாட்கள். இங்கேயே தங்கியிருந்தோம். அடியார் வீட்டில் இரவு உணவு , ஓய்வு.

இன்றைய பயண தூரம் சுமார் 38 கி.மீ

நேற்று 20.08.2014 கோரக்பூர் கிராமத்திற்கு வந்து சேர்ந்து இருந்தோம்.

இன்று 88ஆம் நாள் - ஆவணி 5 (21.08.2014) வியாழன் கிழமை.

இன்று முழு ஓய்வு நாள்.



இன்று 89ஆம் நாள் - ஆவணி 6 (22.08.2014) வெள்ளிக் கிழமை.

கோரக்பூர் கிராமத்தில் தங்கியிருந்தோம்.

அன்பைத் தவிர வேறொன்றும் அறியா நண்பர்களுடன் இன்றைய பொழுது இனிதே கழிந்தது.





இன்று 90ஆம் நாள் - ஆவணி 7 (23.08.2014) சனிக் கிழமை.

இரவு 3.00 மணிக்கு கோரக்பூரில் இருந்து புறப்பட்டோம்.



காலை மணி 6.15க்கு வெயின்கங்கா (bainganga https://en.wikipedia.org/wiki/Wainganga_River) நதிக்கரையில் உள்ள சாப்பரா (Chhapara) நகருக்கு வந்து சேர்ந்தோம். கோரக்பூர் வாழ் இளைஞர்கள் சாப்பரா வந்திருந்து நதிக்கரையில் நின்று யாத்திரிகர்களை வரவேற்றனர். ஆற்றின் குறுக்கே, இரும்பு சிமிண்ட் பயன்படுத்தப்படாமல், செங்கல்லும் சுண்ணாம்பும் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய பழமையான பாலம் ஒன்று இருந்தது.



காலை 6.26 மணி சாப்பரா (Chhapara) நகரில் வசிக்கும் கோரக்பூர் கிராமத்தினரின் உறவினர்கள் சாலையோரம் வந்து நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களை வரவேற்றனர். யாத்திரிகர்களை அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.



6.41 மணி அவரது இல்லத்தில் ரொட்டியும் தேநீரும் கொடுத்து உபசரித்தனர். வழிச் செலவிற்குச் சிறிது பொருளுதவியும் செய்தனர்.



குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அந்தக் குடும்பத்தினர் அனைவரையும் ஆசீர்வதித்தார்.



காலை 7.05 அளவில் இங்கிருந்து மதை கிராமம் நோக்கிப் புறப்பட்டோம்.



சாப்பரா (Chhapara) புறவழிச்சாலை வரை அந்த இளைஞர்கள் வந்து நின்று வழியனுப்பி வைத்தனர். இங்கிருந்து மலைகளின் நடுவே பாதை அமைந்து இருந்தது.



காலை 9.00 மணிக்கு மலைகளின் நடுவே அமைந்துள்ள பஞ்சாரிமாதா கோயிலுக்கு வந்து சேர்ந்தோம்.



கோரக்பூர் கிராம இளைஞர்கள் மூவரும் இந்தக் கோயிலுக்கும் வந்து சேர்ந்தனர்.





இங்கு மாதா வழிபாட்டுடன், இராம லெட்சுமணர்களை அனுமன் தன் தோளில் தூக்கிச் செல்வது போன்ற சிற்பமும் வழிபாட்டில் உள்ளது. இங்கு யாத்திரிகர்களும் வாகனஓட்டிகளும் தங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. சுத்தமான குடிநீர் வசதியும் உள்ளது.

காலை 9.48 மணி சிறிது தூரத்தில் சிறியதொரு காட்டாறு ஓடுகிறது. காலை 11.00 மணி அளவில் மதை என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்து இங்குள்ள பள்ளிக்கூடத்தில் தங்கி இருந்தோம்.

இன்றைய பயணம் சுமார் 32 கி.மீ.

இன்று 91ஆம் நாள் - ஆவணி 8 (24.08.2014) ஞாயிற்றுக் கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.30 மணிக்கு மதை என்ற ஊரில் உள்ள பள்ளியில்இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். சாமரூர் **(Sammarur)** என்ற ஊர் வரும் போது விடிந்து விட்டது. ஆயிரக்கணக்கான காகங்கள் ஒன்றாக பறப்பதைப் பார்க்க முடிந்தது. சுற்றிலும் மலைத்தொடர்கள் நிறைந்து காணப்பட்டன. பாதை ஏற்றமும் இறக்கமுமாகவே இருந்தது. 13 கி.மீ. பயணத்திற்கு பின்னர் ஒரு மலை ஏற்றத்தின் உச்சியில் உள்ள அனுமன் கோயிலில் தேநீர். அந்த இடத்தை தாண்டியதும் பெரும் பள்ளத்தாக்குகளும், சிறு ஓடைகளும் தென்பட்டன. அங்கிருந்த கிராமத்தில் காலை உணவு.



காலை 7.12 மணி



காலை 8.00 மணி குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அடியார் ஒருவர் யாத்திரிகர்கள் நடந்து வந்து கொண்டிருப்பதை அறிந்து அவரது மோட்டார்பைக்கில் குருசாமியைக் காண வந்தார். துமா (Dhuma धूमा) என்ற ஊரின் புறவழிச்சாலை ஆரம்பமாகும் இடத்தில் உள்ள "சாய் தாபா"வில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும், அங்கே அனைவரும் வந்து தங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். வந்திருந்த அடியாருடன் யாத்திரிகர்கள் அனைவரும் சாலையோரம் இருந்த பள்ளிக்கூட வாயிலில் அமர்ந்து காலை

உணவு சாப்பிட்டோம். அதன்பிறகு குருசாமி அந்த அடியவரை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.



10.15 மணிக்கு துமா (Dhuma धूमा) என்ற ஊரின் புறவழிச்சாலை ஆரம்பமாகும் இடத்தில் "சாய் பெட்ரோல் பங்க்" அருகில் உள்ள "சாய் தாபா" வந்து சேர்ந்தோம். ஒரு யாத்திரிகர் மட்டும் சற்று சேர்வடைந்து, ஶ்ரீ துல்கதேவ் ஜி மகராஜ் சந்நிதியில் (Shri Dulhadev Ji Maharaj, श्री दूल्हादेव जी महाराज) சிறிது நேரம் தங்கி இளைப்பாறிவிட்டுக், கால தாமதமாக வந்து சேர்ந்தார்.



10.15 மணி குருசாமி பச்சைக்காவடியின் அடியார் சாய் தாபாவில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார். நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பினால் யாத்திரிகர்கள் பலரும் அயர்ந்து படுத்துவிட்டதைக் கண்ட அவர் விரைந்து சென்று அனைவருக்கும் "குளோப்ஜாமுன்" வாங்கி வழங்கினார்.

காலிஃபிளவர் சூப் வழங்கப் பட்டது. ஓய்வு. மதிய உணவு. தங்கல்.

மாலை நேரத்திற்குப் பிறகு மின்விளக்கு வெளிச்சத்திற்கு ஏராளமான சிறுசிறு கருப்பு வண்டுகள் ஆயிரக்கணக்கில் பறந்து வந்து தாபா எங்கும் பரந்து கிடந்தன. இரவு உணவிற்கு முன் அந்த வண்டுகளை எல்லாம் கூட்டி அள்ளினார்கள். அதன்பின்னரே யாத்திரிகர்கள் படுத்துத் தூங்கினோம்.
இரவு முழுவதும் கடை (தாபா) திறந்து இருந்தது. பயணிகள் பலர் வந்து உணவு சாப்பிட்டுச் சென்றனர்.
இன்றைய பயண தூரம் சுமார் 29 கி.மீ.

காசி இன்னும் 520 கி.மீ. உள்ளது.

இன்று 92ஆம் நாள் - ஆவணி 9 (25.08.2014) திங்கள் கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.15 மணிக்கு மௌகான் என்ற ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 6.16 மணி வழி நெடுகிலும் அடுத்தடுத்து அமைந்திருக்கும் மலைத்தொடர்களின் வழியாக சாலை சென்றது. "ல" வடிவ வளைவுகளுடன் சாலை ஏற்ற இறக்கமாக இருந்தது.


जय जय
बनजारी
माता



காலை 6. 40 மணியளவில் வழியில் சாலையோரம் உள்ள மசூதி அருகே அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம். காலை 7.50 மணியளவில் சாலையோரம் இருந்த தாபாவில் உள்ள மரத்தடியில் அமர்ந்து காலை உணவு.

வயிறு உபாதையால் வண்டியில் ஏறிய யாத்திரிகர் - மலை இறக்கத்தில் களைப்பு அடைந்து சோர்ந்துபோன யாத்திரிகர் ஒருவர் காலை உணவிற்குப் பின்னர் அன்னதான வண்டியில் ஏறி அமர்ந்து சுக்ரி வந்து சேர்ந்தார். இராமேசுவரம் - காசி பாதயாத்திரைப் பயணம் மிகவும் புனிதமானது. எனவே தேவைப்பட்டால் கூடுதல் நேரம் ஓய்வு எடுத்து மெதுவாக நடந்து வாருங்கள், நடப்பதைத் தவிர்த்து வண்டியில் ஏறி வரவேண்டாம்" என குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அறிவுரை கூறினார். தாபாவில் விற்பனை செய்யப்படுவன யாத்திரையின்போது உடலுக்கு ஒத்துக் கொள்ளாது. கடைகளில் எதையும் வாங்கிச் சாப்பிடாதீர்கள் என்றும் குருசாமி அவர்கள் அறிவுரை கூறினார்.



பணம் கொடுத்த பத்திரிக்கையாளர் - காலை மணி 8.50 இருக்கும். மலை முகட்டின் இறக்கத்தில் இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவர் எங்களிடம் வழிச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள் எனக்கூறி 500 ரூபாய் கொடுத்து சென்றார். தன்னையொரு பத்திரிக்கையாளர் என்று அறிமுகம் செய்து கொண்டார். இதுபோன்றதொரு நீண்ட நெடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க, இராமேசுவரம் காசி என்ற இரண்டு பெரிய வழிபாட்டுத் தலங்களிடையே பாதயாத்திரை மேற்கொண்டுள்ள யாத்திரிகர்களைக் காண்பதே தனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றார். காசிஸ்ரீ சரவணன் அவர்கள் அந்தப் பணத்தைக் குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் கொடுத்து, பத்திரிக்கையாளர் விசாரித்துச் சென்ற விபரத்தையும் கூறினார். சாலையோரம் அத்திமரம் ஒன்று இருந்தது. யாத்திரிகர்கள் சிலர் அத்திப் பழங்களை எடுத்து வைத்துக் கொண்டனர்.

பங்கரை என்ற ஊர் வழியாக சுக்ரி என்ற ஊரின் கிராம அலுவலகத்திற்கு 11.00 மணிக்கு வந்து சேர்ந்து தங்கினோம். இங்கிருந்து காசி 499 கி.மீ.



பகல் 10.14 மணி

யாத்திரிகர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகே மிகவும் பழைமையான கோயில் உள்ளது. கோயில் அர்ச்சகர் அருகேயுள்ள ஓட்டு வீட்டில் வசித்து வருகிறார். யாத்திரிகர்களுக்கு வழிபாடு செய்து வைத்தார். கிராம அலுவலுகக் கட்டிடத்திற்குள் யாத்திரிகர்கள் அனைவரும் தங்கும் அளவிற்குப் போதுமான இடவசதி இல்லை. சில யாத்திரிகர்கள் அலுவலகத்தின் அருகேயுள்ள கோயில் வளாகத்தில் உள்ள மிகப்பெரிய அரசமரத்தடியில் படுத்துச் சிலர் ஓய்வு எடுத்தனர். அந்த அரசமரத்தடியில் மதிய உணவு. ஓய்வு. இன்று இங்கே தங்கினோம்.

தாயைத் தேடிய தனையன்கள் - இரவு 7.00 மணி அளவில் இருசக்கர வாகனத்தில் இருவர் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களை வணங்கினர். ஒரு படத்தைக் காண்பித்து, அந்தப் படத்தில் இருப்பது அவர்களது தாயார் என்றும், அவரைக் காணவில்லை என்றும், வழியில் யாத்திரிகர்கள் யாரேனும் எங்களது தாயாரைக் கண்டீர்களா? என்றும் கேட்டனர். நாங்கள் இன்று மௌகானில் இருந்து சுக்கிரி வரை நடந்து வந்துள்ளோம். தங்களது தாயாரைப் பார்க்க வில்லை. “உங்களது தாயார் இன்னும் 10 நாட்களுக்குள் கிடைப்பார்” என குருசாமி அவர்களை ஆசிர்வதித்தார்.

இன்றைய பயண தூரம் சுமார் 27 கி.மீ.

இன்று 93ஆம் நாள் - ஆவணி 10 (26.08.2014) செவ்வாய்க் கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.15 மணிக்கு சுக்ரி என்ற ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். மோஹை என்ற ஊர் வழியாக நர்மதா நதிக்கரையில் உள்ள நர்மதா தில்வாராகாட் என்ற ஊருக்கு 10.30 மணிக்கு வந்து சேர்ந்தோம். வழி நெடுகிலும் அடுத்தடுத்து அமைந்திருக்கும் மலைத்தொடர்களின் வழியாக சாலை சென்றது. "ல" வடிவ வளைவுகளில் சாலை இறங்கியது. செங் குரங்குகள் நிறைந்து காணப்பட்டன.



விடியும்போது ஒருவர் மாட்டுவண்டி ஓட்டிக் கொண்டு வந்தார். பார்ப்பதற்குத் தமிழர் போன்று தோற்றம். அவருடன் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. காலை மணி 6.10க்குச் சாலையோரம் சிறிது நேரம் ஓய்வு.

காலை 7.00 மணிக்கு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம்.

8.31 மணி வழியில் உள்ள சிவன் கோயிலில் காலை உணவு. மிகவும் பழைமையான சிவலாயம். அர்ச்சகர் அங்கிருந்த குரங்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தார். அருகில் யாத்திரிகர்கள் தங்கிச் செல்வதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கடுமையான வெயில். அனைவரும் குடை பிடித்துக் கொண்டோம்.



காலை 10.00 மணிக்கு, மலை இறக்கத்தின் முடிவில் நர்மதா ஆற்றங்கரையை வந்து அடைந்தோம்.



நர்மதை ஆற்றைத் தடுத்து அணைகட்டி, தண்ணீரைச் சிமிண்ட் கால்வாய்கள் வழியாகக் கொண்டு சென்று பாசனம் செய்கின்றனர். நர்மதை ஆற்றின் தெற்கே உள்ள சிமெண்ட் கால்வாய் இந்த இடத்தில் ஆற்றின் குறுக்கே போடப்பட்டுள்ள தூம்பு வடிவக் கால்வாய் வழியாக ஆற்றைக் குறுக்காகக் கடந்து

சென்று ஆற்றின் வடகரையில் உள்ள நிலங்களுக்குச் செல்கிறது. ஆற்றுநீர் ஆற்றின் குறுக்கே பாய்ந்தோடும் தூம்பின் மேலே சாலை அமைத்துள்ளனர். ஒரே பாலத்தைத் தண்ணீர்ப் பாசனத்திற்கும், சாலைப் போக்குவரத்திற்கும் பயன்படும் வகையில் வடிவமைத்துக் கட்டியுள்ளனர்.

காசிஸ்ரீ சரவணன் அவர்கள் தண்ணீர் பாய்ந்து வந்த கால்வாயைக் காணோம்? என்று பாலத்தின் மேல் நின்று தேடினார். அந்தக் கால்வாய் அந்தச் சாலையின் கீழே அமைந்துள்ளது என்பதை அறிந்து வியந்து பார்த்தார்.

காஞ்சி மகாப் பெரியவர் சீயோனி, மண்டோல், சப்ரா, லக்னோடும், துமா, சுக்ரீ, பர்க்கீ, இவ்வூர்களின் மார்க்கமாக 1934-ஆவது வருடம் ஜுலை மாதம் 3-ந் தேதி ஜபல்பூரை அடைந்துள்ளார்கள். ஜுலை 3-ந் தேதி முதல் 6-ந் தேதி வரையில் ஸ்வாமிகள் நான்கு நாட்கள் ரயில்வே காலனியில் தங்கியிருந்துள்ளார். ஸ்வாமிகள் நர்மதை நதி கௌரி கட்டத்தில் விதிப்படி சங்கல்பம் செய்து கொண்டு நீராடியுள்ளார். (ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம் .... பக்கம் 230)

"புனிதமான கங்கை நதி கிழக்கு நோக்கிச் செல்கிறது. நர்மதை மேற்கு நோக்கிச் செல்கிறது. மகாநதி தெற்கிலிருந்து வடக்கே செல்கிறது. பல நதிகள் பல திசைகளில் ஓடுகின்றன. எல்லாம் முடிவில் கடலில் கலக்கின்றன. சேரும் இடம் ஒன்றே. அதைப்போல் நாம் பலவழிகளில் இறைவனை வழிபடுகிறோம். பாதைகளில் வேற்றுமை உள்ளன. ஆட்கொள்ளும் வஸ்து ஒன்றே. பல வழிகளில் இறைவனை அடைய நாம் முயற்சிக்கலாம். ஆனால் வேற்று வழிகளில் செல்கையில் ஒற்றுமையை மறந்து கடவுளின் ஏகத்வத்தைக் கைவிடக்கூடாது. வேற்றுமையை நினைத்தால் ஆனந்தம் இல்லை." என்று காஞ்சி மகாப் பெரியவர் கூறியருளியுள்ளார்.
(ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம் .... பக்கம் 390)

மேற்கு நோக்கிப் பாய்ந்து செல்லும் நர்மதையையும் காஞ்சி மகாப்பெரியவரையும் நினைந்து வணங்கிக் கொண்டேன். ஆற்றைக் கடந்து அங்குள்ள விருந்தினர் இல்லத்திற்குச் சென்று சேர்ந்து தங்கினோம். காலிஃபிளவர் சூப் வழங்கப்பட்டது.



பகல் 10.37 மணி

குருசாமியின் அடியார்கள் அனைத்து ஏற்பாடுகளையும் நன்றாக செய்திருந்தனர். ஓய்வு. மாலை 3.30 மணிக்கு நர்மதை ஆற்றிற்கு அனைவரையும் குருசாமி அழைத்துச் சென்றார். ஆற்றங்கரையில் குருசாமி பச்சைக்காவடி அவர்களும் மற்றும் சில யாத்திரிகர்களும் முடியிறக்கிக் கொண்டனர். அனைவரும் நர்மதையில் தீர்த்தம் ஆடிக் கரையில் உள்ள கோயில்களில் வழிபாடு செய்து கொண்டோம்.

நர்மதை ஆற்றில் யாரும் சோப்புப் போட்டுக் குளிக்கவோ துணி துவைக்கவோ அனுமதியில்லை. ஆற்றங்கரை மிகவும் சுத்தமாக இருந்தது. ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தின் மீது பயணம் செய்வோர், அவர்களது வாகனங்களை நிறுத்தி விட்டு, நர்மதை ஆற்றில் மலர்களைத் தூவி வழிபாடு செய்வதைக் காண முடிந்தது.

நாங்கள் தீர்த்தமாடிய இடத்திற்குக் கிழக்கே பழைய பாலம் ஒன்று அப்படியே இருந்தது. அதில் பலரும் நடைப்பயிற்சி மேற்கொண்டிருப்பதைக் காண முடிந்தது.



இரவு 7.10 மணியளவில் யாத்திரிகர்கள் தங்கியிருந்த விருந்தினர் மாளிகைக்கு அடியார்கள் பலரும் வந்து குருசாமி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.

இன்றைய பயண தூரம் 29 கி.மீ.

இங்கிருந்து காசி 473 கி.மீ.

இன்று 94ஆம் நாள் - ஆவணி 11 (27.08.2014) புதன் கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு 2.15 க்கு நர்மதா தில்வாராகாட் என்ற இடத்தில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். அந்த அர்த்தசாமி நேரத்திலும் கோரக்பூர் அன்பர்கள் நேரில் வந்து யாத்திரிகர்களை வழி அனுப்பி வைத்தனர்.

ஜபல்பூர் பைபாஸ் வழியாக பனகர் என்ற ஊருக்கு 9.10 க்கு வந்து சேர்ந்தோம். 2.13 மணி மலை ஏற்ற இறக்கம் இல்லை , சமவெளி யாக உள்ளது. 6.17 மணி வழியில் தேநீர் ,



காலை 7.47 மணி



காலை 7.56 மணி

அமுல் - பால்பண்ணை - பனகர் ஊருக்கு முன் 2 கி.மீ. தூரத்தில் இருந்த "கியூலாரி" என்ற ஊரில் எருமை மாட்டு பண்ணைகள் மிகவும் அதிகமாக இருந்தன. ஒருசில பண்ணைகளில் 100க்கும் மேற்பட்ட எருமைமாடுகளைக் காண முடிந்தது.



காலை 8.29 மணி வழியில் உள்ள அனுமன் கோயிலில் காலை உணவு. கோதுமை உப்புமாவில் எண்ணெய்யை அதிகமாக ஊற்றிவிட்டார். எனவே யாத்திரிகர்கள் பலரும் குறைவாகவே சாப்பிட்டனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் தலைமைச் சமையல்காரை அழைத்துப் பேசினார். இந்த யாத்திரை சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால் அதற்குச் சாப்பாடு சரியாக இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.



காலை 8.42 மணி. பணாகர் (Panagar, पनागर) ஊரில் உள்ள குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அடியார் ஒருவர் ஊர் எல்லையில் வந்து நின்று யாத்திரிகர்களை வரவேற்று, அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.



ஜைனர்களின் புகழ்பெற்ற கோயிலான ஶ்ரீ 1008 நேமிநாத் திகம்பர் ஜெயின் கோயில் இந்த ஊரில் அமைந்துள்ளது. (Shree 1008 Neminath Digamber Jain Mandir, Near Fuhara Chowk, Panagar, Jabalpur, Madhya Pradesh 483220) சாலையில் நடந்து செல்லும் போது, வணங்கிக் கொண்டு நடைப் பயணத்தைத் தொடர்ந்தோம்.



காலை 9.10 மணி



காலை 9.17 மணிக்கு அடியாரின் இல்லத்திற்கு வந்து சேர்ந்தோம். அவர் யாத்திரிகர்கள் தங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நன்றாக செய்து கொடுத்தார்.

பணாநகரில் நகரத்தார் வீடு - நாங்கள் தங்கியிருந்து வீடானது அப்படியே செட்டிநாடு வீடுகளை போன்றதொரு அமைப்பில் கட்டப்பட்டிருந்தது. வீட்டின் முன் மிகப் பெரிய திண்ணை, முகப்பு (வரவேற்பறை), வளவு (புழங்கும் இடம்), வளவு முற்றம் மற்றும் வீட்டின் அறைகளை கொண்டதாகும், சாப்பிடும் இடம், சமையலறை, கொல்லை என அமைந்திருந்தது.





காலை 9.29 மணி. குருசாமியின் அடியார்கள் பலரும் வந்திருந்து ஆசிபெற்றனர். காலை 9.36 மணி. காலிஃபிளவர் சூப் வழங்கப்பட்டது. ஓய்வு.

இன்றைய பயண தூரம் 30 கி.மீ. -----------

இன்று 95 ஆம் நாள் - 28.08.2014 ஆவணி 12

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.15 மணிக்கு பணாகரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். காந்திகிராமம் ஊர் வழியாக குனேறு என்ற ஊருக்குக் காலை 9.50 மணிக்கு வந்து சேர்ந்தோம். காலையில் சூரியன் உதித்ததில் இருந்து கடுமையான வெயில். காலை 6.30 மணிக்கு,, வழியில் சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம்.



காலை 6.55 மணிக்கு ஹிரன் (Hiren) நதியைக் கடந்து சென்றோம். நதியின் வடகரையில் சாலையின் மேற்கே இந்த முனிவர் சிற்பம் உள்ளது. அருகே ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்து மைல்கல் ஒன்று கண்ணில் தென்பட்டது.



காலை 7.32 மணி. இராமாயணக் காட்சிகளைச் சிற்பங்களாக வைத்து வழிபாடு செய்து வருகின்றனர். இங்கு அனுமனை வழிபாடு செய்கின்றனர். இந்தக் கோயில் வளாகத்தில் காலை உணவு.



காலை 7.53 மணி. பரமக்குடி இராமநாதபுரம் யாத்திரிகள் இருவரும் சேர்ந்து நின்று படம் எடுத்துக் கொண்டனர். அப்போது இவர்களைப் போன்றே நண்பர்கள் இரண்டுபேர் மிகவும் கஷ்டப்பட்டு காசிக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களிருவரும் சேர்ந்து நின்று படம் எடுத்துக் கொண்டனர்.



காலை 9.35 மணி. குனேறு (Gunahru, Madhya Pradesh) என்ற ஊரில் உள்ள குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அடியார்கள் தேசிநெடுஞ்சாலையில் வந்து நின்று மலர்மாலை அணிவித்துக் குருசாமி அவர்களை வரவேற்று வழி நெடுக வெடிகள் வெடித்து வரவேற்று அவர்களது கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர்.



ஊருக்குள் நுழையும் போது, கிராமத்தினர் வெடிவெடித்துத் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் குருசாமி பச்சைக்காவடி அவர்களையும் யாத்திரிகர்களையும் வரவேற்றனர்.



அடியார் ஒருவரது இல்லத்தில் குருசாமி அவர்களுக்கும் ஒவ்வொரு யாத்திரிகர்களுக்கும் பாத பூஜை செய்து வரவேற்பு அளித்தனர்.





காலை 9.44 மணி.





காலை 9.53 மணி.. ஆதீனங்களில் குருவழிபாடு செய்வது போன்று, குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்கு நெற்றியில் விபூதி அணிவித்துத் தலையில் வில்வம் வைத்து, குருவந்தனை பாடித் தீபம் காட்டி வழிபட்டனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார். அதன்பின்னர் அனைவருக்கும் இனிப்பு மிக்சர் பழங்கள் தேநீர் வழங்கி மகிழ்ந்தனர்.

காலை 10.16 மணி. அருகேயுள்ள குளத்தின் மேற்குக் கரையில் உள்ள கோயிலுக்குச் சென்று தங்கினோம். யாத்திரிகர்கள் தங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நன்றாகச் செய்து கொடுத்தனர்.

கோயிலில் குருசாமியின் படத்தையும் வைத்து ஊரார் வழிபட்டு வருவதைக் கண்டு வியந்து போனோம். காரணம் கேட்ட போது, 2007 ஆம் ஆண்டில் மாந்திரீகன் ஒருவனால் கிராமத்தில் அடிக்கடி துர்மரணங்கள் நிகழ்ந்தைக் கதையாகக் கூறினர். தினமும் யார் வீட்டிலோ யாரோ ஒருவர் இறந்து கொண்டிருந்திருக்கிறார். பொழுது விடிந்ததும் வீட்டை விட்டு வெளியே வந்தால் ஏதேனும் ஒரு மரணச் செய்தியும் அழுகுரலும் கேட்டபடி இருந்துள்ளது. நாளை யார்வீட்டில் யார் மரணம் அடைவார்களோ என்ற பயத்தில் ஊரார் வாழ்ந்துள்ளனர். அப்போது குருசாமி அவர்கள் காசிக்கு நடைப்பயணமாகச் சென்று கொண்டிருக்கும் செய்தியை அறிந்த கிராமத்தினர் சிலர் குருசாமி பச்சைக்காவடி அவர்களை நேரில் சந்தித்து தங்களது ஊருக்கு எழுந்தருள வேண்டுமென வேண்டிக் கொண்டுள்ளனர். குருசாமி அவர்களும் ஊராரின் வேண்டுகோளை ஏற்று இங்கு வந்து தங்கியுள்ளார்.

உங்களது ஊரில் முதன் முதலாகத் துர்மரணம் நிகழ்ந்த நாட்களில், ஊருக்குப் புதிதாக வெளி நபர்கள் யாரேனும் வந்து தங்கிச் சென்றார்களா? என்று கேட்டுள்ளார். ஆமாம் ஒரு மந்திரவாதி வந்திருந்தான், அவனை விரட்டி விட்டோம். அவன் இந்த ஊரணியின் மறுகரையில் உள்ள மூங்கில் மரத்தடியில் தங்கியிருந்தான் என்று ஊரார் பதில் சொல்லியுள்ளனர். ஊராரை அழைத்துக்கொண்டு குருசாமி அவர்கள் அந்த மந்திரவாதி தங்கியிருந்த மூங்கில் புதருக்குச் சென்று பார்த்த போது, அங்கே மந்திரவாதி இல்லை. இவனை இந்த இடத்தில் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன என்று சிலர் சொல்லியுள்ளனர். அது கேட்ட குருசாமி அவர்களும் இந்த இடத்தில்

தன்னிடம் இருந்த விபூதியைத் தூவி வழிபாடு செய்துள்ளார். இது நடந்த மறுநாளில் இருந்து கிராமத்தில் துர்மரணங்கள் நிகழ்வது நின்றுவிட்டது. கிராமத்தினர் பயமின்றிப் பழைய இயல்பு நிலையில் வாழத் தொடங்கினர். சில நாட்கள் சென்றபின்னர் அந்த மந்திரவாதி சாலையோரம் மரணமடைந்து கிடந்ததைக் கிராமத்தார் ஒருவர் பார்த்துள்ளார்.

குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அருளாசியால், தங்களது கிராமத்தில் ஏற்பட்ட துர்மரணங்கள் நீங்கின என்றும், அதனால் இவரே எங்களுக்குக் கண்கண்ட தெய்வம் என்றும் கிராமத்தார் வழிபடுகின்றனர். கோயிலில் பிள்ளையாருக்கு அருகில் குருசாமி பச்சைக்காவடி அவர்களின் படத்தை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

பகுத்தறிவாளிகளுக்கு இது ஒரு மூட நம்பிக்கை.
ஆனால், குனேருமோசாம் கிராமத்தினருக்கு இது முழு நம்பிக்கை.

குனேருமோசாம் - மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஓர் ஊர். தேசிய நெடுஞ்சாலை எண் 7, சபல்பூர் - டியோரி க்கு இடையே, சாலையிலிருந்து மேற்கே உள்ளது.



செங்கற்களால் வீடு போன்ற வடிவத்தில் கோயிலில் கட்டியிருந்தனர். சிலர் மாடிக்குச் சென்று படுத்துத் கொண்டோம். நாளையும் கோயிலில் ஓய்வு. மாணவர்கள் பலரும் வந்து குருசாமி அவர்களுடனும் யாத்திரிகர்களுடனும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.



குஸ்தி போட்டுப் பிள்ளையாரைக் கும்பிடுகின்றனர் - இங்கு வருடந்தோரும் பிள்ளையார்சதுர்த்திக்கு முதல்நாள் மாலைநேரத்தில் குஸ்தி போட்டிகளை நடத்துகின்றனர். விடிந்தால் விநாயகர் சதுர்த்தி .விளையாட்டு மைதானத்தைக் கிளறி வைத்திருந்தனர். அதைப் பார்ப்பதற்கு கபடி விளையாட்டு மைதானம் போல் இருந்தது. என்ன விளையாட்டு என் விசாரித்த போது "அஹாடா" (aakhada) என்றனர். எங்களில் யாருக்கும் இந்தச் சொல்லின் பொருள் தெரியவில்லை. மாலை 4.00 மணிக்கு கூட்டம் கூட ஆரம்பித்தது. யாத்திரையாக வந்து தங்கியிருந்த நாங்களும் விளையாட்டை வேடிக்கை பார்க்கச் சென்றோம். ஊரார் எங்களை வரவேற்று இருக்கைகள் கொடுத்து அமரச் செய்து வெற்றி வீரர்களுக்கான பரிசுகளை எங்கள் கைகளால் வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.



போட்டி ஆரம்பமான போதுதான் அது "மல்யுத்தம்" என்று தெரிந்தது. 7 வயது சிறுவர் முதல் 30 வயது இளைஞர் வரை பங்கேற்றனர். முதலில் பயிற்சியின் போது பயன் படுத்தும் பொருட்களை வைத்து பூஜை செய்து அவரவர் ஆசான்களை வணங்கிக் கொண்டனர். பரிசு பொருளை கூட்டத்தினரிடம் காட்டி, பரிசை வென்றிட வருமாறு அழைப்பு விடுக்கின்றனர். போட்டியாளர் (முதல் இருவர்) களத்தில் இறங்கிய உடன் போட்டி துவங்கி விடுகிறது. போட்டிக்கு 2, 3, 5 நிமிடங்கள் என நேரம் ஒதுக்கப் படுகிறது.

முதுகில் மண் ஒட்டுமாறு எதிராளியை கீழே தள்ள வேண்டும் . முதுகில் மண் ஒட்டியவர் தோற்றவர் ஆவார். குறிப்பிட்ட நேரத்திற்குள் யாரும் வெற்றி தோல்வி அடைய வில்லை என்றால் , போட்டி சமன் என்று அறிவிக்கப்படுகிறது.

போட்டியாளர் இருவரும் விருப்பம் தெரிவித்தால் போட்டி மீண்டும் நடை பெறுகிறது. போட்டிகள் மிகவும் கடுமையாகவும் விறுவிறுவுப்பாக இருந்தன. வெற்றி வீரர்களுக்கு பாதயாத்திரிகர்கள் பரிசுகளை வழங்கினர். வீரர் களை ஊக்கப்படுத்தும் வகையில் பணப்பரிசுகளும் யாத்திரிகர்களால் வழங்கப்பட்டன. அன்பர் ஒருவரது வீட்டில் இரவு உணவு. அவரது வீடு முழுவதும் பசுமாடுகள் நிறைந்து இருந்தன. ***பயணதூரம் தூரம் 31 கி.மீ.*** ***இங்கிருந்து காசி 414 கி.மீ.***

இன்று 96 ஆம் நாள் - 29.08.2014 ஆவணி 13

முழு ஓய்வு நாள். கோயிலில் சூரியன் அனுமன் நாகம் முதலான சிற்பங்களை வைத்திருந்தனர். கிராமத்தினர் பலரும் கூட்டம்கூட்டமாக வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றனர். எல்லோரும் அவரவர் வீடுகளுக்குச் சாப்பிட வருமாறு அழைப்பு விடுத்தனர். கோயிலுக்கு அருகில் இருந்த அன்பர் வீட்டிற்கும் சற்று அருகேயுள்ள மற்றொரு அன்பர் வீட்டிற்கும் குருசாமி அவர்கள் யாத்திரிகர்களை அழைத்துச் சென்றார். இவர்களது வீட்டில் உள்ள பூஜை அறைகளில் எல்லாம் குருசாமி பச்சைக்காவடி அவர்களின் படமும் வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டு யாத்திரிகர்கள் அனைவரும் வியந்து போனாம்.

இவர்களது வீட்டில் வழிபாடு செய்தோம். வழிபாடு முடிந்த பின்னர் உணவு. ரொட்டி சாப்பாடு எல்லாமும் குண்டோதர பூதத்திற்கு வைத்தது போன்று நிறையநிறைய வைத்தனர். சாப்பிட்டு முடித்ததும் பழங்கள் கொடுத்தனர். ஒவ்வொருவருக்கும் சுமார் 1/4 லிட்டர் அளவிற்குப் பால் கொடுத்தனர். சாப்பிட்டு முடிப்பதற்குப் போதும் போதும் என்றாகி விட்டது.







இந்த ஊரார் ஒவ்வொரு ஆண்டும் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் இராமேசுவரம் - காசி பாதயாத்திரை மேற்கொள்ளும் போது, தங்களது ஊருக்கு அழைத்துச் சென்று தங்கவைத்து உபசரிக்கின்றனர். ஊர்க் கோயிலின் உள்ளேயும், கிராமத்தினரின் ஒவ்வொரு வீட்டின் பூசையறையிலும் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் படத்தை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.



யாத்திரிகர்கள் இந்தக் கிராமத்தில் தங்கியிருந்த இரண்டு நாட்களிலும் ஒவ்வொருவர் வீட்டிற்கும் அழைத்துச் சென்று விருந்து உபசரித்தனர். ஆவணி 12 மற்றும் 13 (28, 29.08.2014) ஆகிய இரண்டு தினங்கள் யாத்திரிகர்கள் இங்கே தங்கிச் சென்றோம்.





இன்று 97 ஆம் நாள் - 30.08.2014 ஆவணி 14 சனிக்கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.15 மணிக்கு குனேறுவில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். வறட்சியான வானிலை. அதிகாலையில் இருந்தே கடுமையான வெயில்.



காலை 6.40 மணி.. வழியில் ஸ்லீம்னாபேடு (Sleemanabad) என்ற ஊரில் தேநீர். இங்கு புகழ்பெற்ற ஜெனகோயில் உள்ளது. வணங்கிக் கொண்டு யாத்திரையைத்

தொடர்ந்தோம். வழிநெடுக உள்ள ஊர்களில் பிள்ளையார் வழிபாடு சிறப்பாக நடைபெறுவதைக் காண முடிந்தது. காலை 8.00 மணிக்கு டியோரி (Teori) என்று ஊருக்கு வந்து சேர்ந்தோம்.



தங்குவதற்கு இடமின்றித் தவித்தோம் - கடந்தவருடம் இங்கு தங்குதற்காகக் வசதி செய்து கொடுத்த அடியாரைத் தேடி அலைந்தோம். சுமார் 20 நிமிடத் தேடலுக்குப் பின்னர் அவரது வீட்டைக் கண்டுபிடித்து அங்கே சென்றால் அவர் இல்லை. வீட்டில் இருந்தவர்களிடம் அவரது தொலைபேசி எண்ணைப் பெற்று, அவருடன் தொடர்பு கொண்ட போது, அவர் வேறொரு ஊரில் இருப்பதாகவும், மதியம் வந்துவிடுவதாகவும், ஊரில் உள்ள பழைய ஊராட்சிமன்றக் கட்டிடத்தில் தங்குமாறும் கூறினார். எனவே அங்கு சென்றோம். செல்லும் வழியில் ஜெயின் கோயில் இருந்தது. வணங்கிக் கொண்டு நடந்து சென்றோம்.



காலை 8.41 மணி. ஒரு கடையில் ஒருவர் சீவல்பாக்கு தயாரித்துக் கொண்டு இருந்தார். யாத்திரிகர்களில் காசிஸ்ரீ மதுரை கந்தசாமி அவர்கள் எப்போதும் சீவல் பாக்கு போடுபவர். யாத்திரையின் போது போடுவதற்கு என்றே மதுரையிலிருந்து நிறைய பாக்குப் பொட்டலங்களைக் கொண்டு வந்திருந்தார்.

அருகில் ஒரு சிறிய டீக்கடை இருந்தது. தமிழ்நாட்டில் டீக்கடையில் வடையும் விற்கின்றனர். இந்த ஊரில் டீக்கடையில் வடைக்குப் பதிலாகச் ஜிலேபி விற்கின்றனர். வடையைக் காணோம். எல்லோரும் சர்வசாதாரணமாகச் ஜிலேபி எடுத்துச் சாப்பிடுகின்றனர். அருகில் பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர்.



காலை 8.54 மணி மணிக்கு டியோரி ஊர் பழைய ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தோம். இந்தக் கட்டிடம் பயன்படுத்தப்படாமல் மூடி வைக்கப்பெற்று சில வருடங்கள் ஆகியிருந்தது. ஓரே தூசியும் குப்பையுமாக இருந்தது. ஒட்டடை அடித்துக் கூட்டிப் பெருக்கிக் கழுவி விட்டால் மட்டுமே அங்கு தங்கமுடியும். யாத்திரிகர்கள் அனைவருக்கும் மிகவும் பசியோடு இருந்தனர். எனவே இந்தக் கட்டடித்தின் முன் உள்ள இடத்தில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டோம்.

இன்று ஒருநாள் பொழுது இந்த ஊரில் தங்க வேண்டும். எங்கே தங்குவது? யாரிடம் சென்று கேட்பது? என்று குருசாமி பச்சைக்காவடி அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பலரிடமும் விசாரித்துக் கொண்டிருந்தார். ஆனால் உருப்படியான வழிகாட்டுதல் ஏதும் கிடைக்கவில்லை. யாத்திரிகர்கள் அனைவரும் மிகவும் களைப்பாகவும்

சோர்வாகவும் அமர்ந்து இருந்தனர். சிறிது நேரம் சென்றால் உட்கார்ந்து இருக்கும் இந்த இடத்திற்கும் வெயில் வந்து விடும். என்ன செய்வதென்று தெரியாத நிலை.

காலை 9.38 மணி. சாலையின் மறுபுறத்தில் இருந்த மிகவும் பழமையான மரத்தில் உள்ள பட்டுப்போன கிளையில் இரண்டு அண்டிரில் பறவைகள் அமர்ந்து இருந்தன. மற்றபிற பறவைகள் எல்லாம் இரை தேடிச் சென்றிருக்க, இந்தக் கடுமையான வெயிலில் இந்த இரண்டு பறவைகள் மட்டும் தனித்து இருந்தன. அவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் அருகில் இருந்த டீக்கடையில் விசாரித்தார். சிறிது தூரத்தில் ஒரு பெட்ரோல் பங்க் உள்ளது, அதனருகில் தாபா இருந்த கட்டிடம் ஒன்றும் உள்ளது. சென்று கேட்டுப்பாருங்கள் என்று அந்த டீக்கடைக்காரர் சொன்னார். அதைக் கேட்ட காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள், காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களுடன் அந்தப் பெட்ரோல் பங்கிற்குச் சென்று, அந்தத் தாபா கட்டிடத்தில் தங்குவதற்கு அனுமதி பெற்று வந்தனர்.



காலை 10.27 மணி... அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டு, அந்தப் பாரத் பெட்ரோல் பங்க் அருகே உள்ள தாபா கட்டிடத்திற்கு சென்று தங்கினோம். மிகவும் வசதியாக இருந்தது. பெட்ரோல் பங்க் ஊழியர் ஒருவர் வந்து மின்விசிறி மின்விளக்கு இவற்றைச் சீர் செய்து கொடுத்தார். ஓய்வு.

புழுங்கலரி பச்சரிசியாக மாறியது எப்படி ? யாத்திரிகர்கள் அனைவரும் பயணக் களைப்பினால் படுத்துத் தூங்கி விட்டனர். மதிய சாப்பாடு செய்து கொண்டிருந்த சமையல்காரர் வேகவேகமாக வந்து குருசாமியிடம் புழுங்கலரிசி இன்றோடு தீர்ந்துவிட்டது. நாளைக்கு அரிசி வேண்டும் எனச்

சொல்லிவிட்டு வேகவேகமாச் சென்று விட்டார். அருகில் இருந்த என்னைக் குருசாமி அவர்கள் அழைத்து, நாம்தான் யாத்திரைக்குத் தேவையான புழுங்கலரியைக் கணக்குப் பார்த்து நாக்பூரில் வண்டியில் ஏற்றி வைத்தோமே, அது எப்படி இல்லாமல் போகும்? நீ சென்று பார்த்து வா, என்றார்.

வண்டி முழுதும் தேடிப்பார்த்தால், பச்சரிசி மூடைகள் இருந்தன, ஆனால் புழுங்கலரிசி இல்லை. இதைக் கேட்ட குருசாமி அவர்கள் காசிஸ்ரீ அங்கமுத்து மற்றும் காசிஸ்ரீ சரவணன் இருவரையும் அழைத்து வண்டியில் ஏறித் தேடிப்பார்க்கச் சொன்னார். வண்டியில் பச்சரிசி இரண்டு மூடைக்குப் பதிலாக நான்கு மூடைகள் இருந்தன. ஆனால் புழுங்கலரிசி மூடை இல்லை. “ப அரிசி” என்று எழுதியது, சிறிது கோடு நீண்டு “பு அரிசி” என்று எழுதப்பட்டுள்ளது. இதனால் இரண்டுமூடை புழுங்கல் அரிசிக்குப் பதிலாக, இரண்டுமூடை பச்சரிசி கூடுதலாக இருந்தது தெரியவந்தது.

புழுங்கலரிசி கொடுத்த பிள்ளையார் - இந்த யாத்திரையின் போது எப்போதும் குருசாமி அவருக்கு அருகே ஒரு பிள்ளையார் படத்தையும் உப்பிலியப்பன் பெருமாள் படத்தையும் வைத்துக் கொள்வார். விநாயகர் அகவலும், பெருமாள் போற்றியும் தினவழிபாட்டில் பாடப்பெறும். படுத்துத் தூங்கும்போதும் இந்தத் தெய்வங்களின் படத்திற்கு அருகேதான் படுத்துத் தூங்குவார். எழுந்தவுடன் பிள்ளையாரை வணங்கிக் கொண்டுதான் கண் விழித்துப் பார்ப்பார்.

இன்றும் குருசாமி அவர்கள் படுத்திருந்த இடத்திற்கு அருகே பிள்ளையார்படமும் பெருமாள் படமும் இருந்தன. புழுங்கலரிசிக்குப் பதிலாகப் பச்சரிசி மூடையை ஏற்றி வைத்துவிட்டனர் என்ற தகவல் அறிந்து குருசாமி அவர்கள் பெரிதும் மனம் வருந்தினார். 96 நாட்கள் நல்லமுறையில் எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் யாத்திரை நடைபெற்று வந்தது. ஆனால் இன்று புழுங்கல் அரிசி இல்லாமல் பச்சரிசிச் சோறு போட முடியுமா? யாத்திரிகர்களுக்குப் பச்சரிசிச் சோறு ஒத்துக் கொள்ளுமா? இந்தப் பகுதியில் புழுங்கல் அரிசியும் கிடைக்காதே என்று வருந்தினார்.

“பிள்ளையாரைக் கும்பிட்டே இந்த யாத்திரையை நடத்துகிறேன். இது பிள்ளையாரால் நடத்தப்படும் யாத்திரை” என்று சொல்லிப் பிள்ளையார் அருகில் உள்ள விபூதியை எடுத்துப் பூசிக் கொண்டார். அந்த நொடிப் பொழுதில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர், வேகவேகமாக ஓடிவந்து குருசாமியின் கால்களில் விழுந்து வணங்கினர். குருசாமி அவர்களுக்கும் விபூதி பிரசாதம் கொடுத்தார். குருசாமி வந்தவரை அடையாளம் கண்டு கொண்டு, “நீங்கள்தானே இந்த ஊரின் கிராமத் தலைவர்” என்று கேட்டார். “ஆமாம் ஆமாம்” என்று சொன்னபடி, வந்த இருவரில் ஒருவர் மட்டும் குருசாமி அவர்களிடன் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க, மற்றொருவர் சென்று அவரது வண்டியில் கட்டப்பெற்றிருந்த இரண்டு அரிசி மூடைகளை அலேக்காகத் தூக்கி வந்து பிள்ளையார்படத்திற்கு முன் வைத்தார்.

இதைக் கண்ட குருசாமி அவர்கள், இது என்ன? என்று கேட்டார். அவர்கள் இது “பாயில்டு ரைஸ்” என்றனர். இரண்டு புழுங்கலரிசி மூடைகளைக் கண்ட குருசாமி அவர்கள் பெரிதும் வியந்து போனார். இங்கே புழுங்கலரிசி கிடைக்காதே, நீங்கள் இதை எங்கே வாங்கினீர்கள்? என்று கேட்டார். கடந்த வருடம் நீங்கள் யாத்திரை வரும் போது, புழுங்கலரிசிதான் சாப்பிடுவோம் என்று சொன்னீர்கள், அதனால் இந்த வருடம் நாக்பூர் சென்று அங்கு தமிழர்கள் அரிசி வாங்கும் கடைக்குச் சென்று வாங்கி வந்தேன் என்றார் அந்த கிராமத் தலைவர்.

குருசாமி அவர்களுக்குப் பெரிதும் வியப்பாக இருந்தது. எது எப்படியோ, "பிள்ளையாரிடம் கேட்டது கேட்டபடி நொடிப்பொழுதில் கொடுத்து விட்டார்" என்று மனம் நெகிழ்ந்து போனார். மீண்டும் மீண்டும் பிள்ளையாரைப் பார்த்துக் குருசாமி அவர்கள் கும்பிட்டுக் கொண்டே இருந்தார். ***"..... அற்புதம் நிறைந்த கற்பக் களிறே....."*** என்று தினமும் பாடி வணங்கும் 'விநாயகர் அகவல்' பாடல்வரி நினைவிற்கு வந்தது. விநாயகர் அகவல் பாடலின் ஒவ்வொரு வரியும் வாழ்ந்து உணர்ந்து பாடப்பட்டுள்ளன என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

கிராமத் தலைவரைக் குழப்பிய பயணத் திட்டம் - குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அனுப்பிய கடிதங்கள் எல்லாமும் கிடைக்கப் பெற்றன என்றும், ஆனால் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி நீங்கள் நாளைக்குத்தானே இங்கு வருவதாக உள்ளது? நீங்கள் ஒருநாள் முன்கூட்டியே வருவது எனக்குத் தெரியாது. நீங்கள் அனுப்பி வைத்த பயணத்திட்டப்படி நீங்கள் அனைவரும் நாளைக்குத்தான் வருவீர்கள் என்று இருந்தேன் என்றார். பாதயாத்திரைப் பயணத்திட்டத்தில் ஒவ்வொரு நாளும் தேதியை அடுத்துப் புறப்படும் ஊரின் பெயரும், அதையடுத்துத் தங்கும் ஊரின் பெயரும் போடப்பட்டுள்ளது. இன்று குனேறுவில் இருந்து புறப்படுவதால், 30.08.2014 என்ற தேதிக்கு அருக்கில் குனேறு ஊரின் பெயரும், அதையடுத்துத் தங்கும் இடத்தில் டியோரி ஊரின் பெயரும் இடம் பெற்றுள்ளன. நாளை 31.08.2014 அன்று டியோரியில் இருந்து புறப்படுகின்ற காரணத்தினால், 31.08.2014 அருகில் டியோரி என்ற பெயரும், அதை யடுத்து நாளை தங்கவுள்ள கட்னி என்ற ஊரும் இடம் பெற்றுள்ளன. பயணத்திட்டத்தில் 31.08.2014 அருகில் டியோரி என்று எழுதப்பட்டிருந்த காரணத்தினால் நாளைதான் இங்கு வருவீர்கள் என்று கருதி, இன்று வெளியூர் சென்றிருந்தேன் என்று சொன்னார் அந்தக் கிராமத் தலைவர். எது எப்படியோ? தங்குதவற்கு நல்ல இடம் கிடைத்து விட்டது. நீங்களும் புழுங்கல் அரிசி கொண்டு வந்து கொடுத்து விட்டீர்கள். எல்லாம் பிள்ளையாரின் செயல் என்று கூறி, குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கிராமத் தலைவருக்கும் அவருடன் வந்தவருக்கும் விபூதி பிரசாதம் கொடுத்து ஆசிர்வதித்தார்.



பெட்ரோல் பங்கில் உள்ள மின்மோட்டாரில் யாத்திரிகர்கள் அனைவரும் களைப்புத் தீரக் குளித்தோம். அருகில் இருந்த ரோஜாச் செடி அருகே அமர்ந்து அனைவரும் படம் எடுத்துக் கொண்டோம். யாத்திரிகர்கள் தனித்தனியாக எடுத்துக்கொண்ட அவரவர் படங்கள் இந்த நூலின் முதற்பகுதியில் யாத்திரிகர்கள் அறிமுகப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

தலைமைச் சமையல்காரரும் படம் எடுத்துக் கொண்டார்.
மாலை நேரத்தில் பெட்ரோல் பங்கின் ஊழியர் இருவர் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.
வழிநெடுக உள்ள ஊர்களில் பிள்ளையார் வழிபாடு நடைபெறுவதைக் காண முடிந்தது. வறட்சியான வானிலை. கடுமையான வெயில்.

இன்றைய பயண தூரம் 27 கி.மீ.

இங்கிருந்து காசி 388 கி.மீ. தூரத்தில் உள்ளது. இன்னும் இரண்டு வாரப் பயணத்தில் காசிக்குச் சென்றுவிடுவோம் என்ற எண்ணம் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.

இன்று 98 ஆம் நாள் - 31.08.2014 ஆவணி 15

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.15 மணிக்கு டியோரி (Teori) என்ற ஊரில் இருந்துயாத்திரையைத் தொடர்ந்தோம். பெப்ரான் என்ற ஊர் வழியாக 7.30 க்கு கட்னி என்ற ஊர் வந்து சேர்ந்தோம். காலை 6.50 க்கு வெயில் கடுமை. வறட்சியான வானிலை.



வழியில் தேநீர். இரு சக்கர வாகனத்தில் சென்ற இருவர் இறங்கிவந்து யாத்திரிகர்களை வணங்கிச் சென்றனர்.



தேநீர் முடிந்து செல்லும் போது பெரிய மாமரம் ஒன்றில் செம்பூத்து பறவையின் குரல் கேட்டு குருசாமி வணங்கிக் கொண்டார். ஆனால் பறவையைப் பார்க்க இயலவில்லை.

இந்தப் பறவையைப் பார்ப்பதும் இதன் குரலைக் கேட்பதும் நல்ல சகுனம் என்று கூறினார். சாலையோரம் சிறிது நேரம் நின்று, பெரிதும் முயன்று அந்தப் பறவையைத் தேடிப் பார்த்தார். ஆனால் அந்தப் பறவையைப் பார்க்க இயலவில்லை.

குருசாமி கைகூப்பி வேண்டிக் கொண்டு நடக்கத் துவங்கினார். அந்நேரத்தில் செம்பூத்து பறவை அடர்த்தியான அந்த மாமரத்திலிருந்து குருசாமியின் தலைக்கு மேலே பறந்து சென்றது. குருசாமி அதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து மீண்டும் வணங்கிக் கொண்டார்.

கட்னியில் உள்ள குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அன்பர் ஒருவர் அவரது நண்பர் ஒருவருடன் ஊர் எல்லையில் நின்று குருசாமியின் பாதம் பணிந்து யாத்திரிகர்களை வரவேற்று உடன் அழைத்து சென்றார்.





வழியில் மான்கள் சரணாலயம் ஒன்று இருந்தது.



திருமண மண்டபத்தை யாத்திரிகர்கள் அடைந்தவுடன் மலர் மாலை அணிவித்து மரியாதை செய்து வரவேற்றார்.





தலைமைச் சமையல்காரர், துணைச் சமையல்காரர், சமையல் உதவியாளர் ஆகிய மூவருக்கும் மாலை மரியாதை செய்து வரவேற்றனர்.

அன்னதானவண்டியின் வாகன ஓட்டுநருக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்து வரவேற்றனர். காலை உணவு. தங்கல். ஓய்வு.





இன்றைய பயண தூரம் சுமார் 18 கி.மீ. இங்கிருந்து காசி 371 கி.மீ. தூரத்தில் உள்ளது. நாளை ஓய்வு. (பயணத் திட்டப்படி ***அடுத்த ஓய்வு நாள் காசியில்***) குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

இன்று 99 ஆம் நாள் - 01.09.2014 ஆவணி 16

இன்று கட்னியில் தங்கியிருந்தோம். ஓய்வு.



கட்னியில் வாழும் அடியார்கள் பலரும் வந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றனர்.



மாலை நேரம் சூரியன் மறையும் வரை வெயில் கடுமையாக இருந்தது.



குருசாமி அவர்கள் முதன்முதலாக இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொண்டிருந்த போது, கட்னியில் இந்த அடியார் வீட்டில் தங்கியுள்ளார். அந்த

வீட்டிற்கு மட்டும் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு சென்று வந்தார்.



யாத்திரிகர்கள் பலரும் ஒன்றாகக் கூடி அமர்ந்து தத்துவ விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர்.



பல்வேறு விதமான காய்கறிகளுடன் சுவையான உணவு. ஓய்வு.

இன்று 100 ஆம் நாள் - 02.09.2014 ஆவணி 17 செவ்வாய்கிழமை.

தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.15 மணிக்கு கட்னி என்ற ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். காலை 4.00 மணிக்கு தூறல் ஆரம்பித்து 6.00 மணிக்கு நல்ல மழை பெய்தது. அனைவரும் குடை பிடித்துக்கொண்டு நடந்தோம். சமவெளி. வளமான பூமி.



இதில் पाटाल का सन्यसे என்று எழுதப்பெற்றுள்ளது. पाटाल (படைல்) என்ற சொல் பாதசாரி (pedestrian) என்று பொருள் கொள்ளலாமா? पाटाल का सन्यसे என்றால் “பாதசாரியாகச் செல்லும் சந்நியாசி” என்று பொருள் கொள்ளலாமா? “பாதாளத்தின் சன்யாசி” என்று எழுதியுள்ளது எனவும் இதை வாசித்து அளித்துள்ளனர்.

N.H.7 தேசிய நெடுஞ்சாலை இன்னும் முழுமையாக விரிவுபடுத்தப்படவில்லை. சாலைஆங்காங்கே குண்டுங்குழியுமாக இருந்தது. நடந்து செல்லும்போது சாலையின் ஓரங்களில் களிமண் வழுக்கியது. நூற்றுக்கணக்கான பசு மாடுகள் ஆங்காங்கே சாலையில் படுத்துக் கிடந்தன. சாலை வளைவு நெளிவு இன்றி நேர் கோட்டில் இருந்தது. இருமருங்கிலும் நீண்ட நெடிய மலைத்தொடர்கள் உள்ளன. சாலையின் ஓரங்களில் மிகவும் பழமையான முது மரங்கள் நிறைந்துள்ளதைக் காண்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்தோம்,
எல்லோரும் ஒருதாய்ப் பிள்ளைகள்".

கெம்தலை (Kemtalai) என்ற ஊரின் வழியாக காலை மணி 7.00 அளவில் சென்றோம். இந்த ஊரில் சமையல் எரிபொருள் "லீக்கோ"கரி தயாரிக்கும் சிறு தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன. நிலக்கரி போன்றதொரு அடுப்புக்கரி (லீகோ) உற்பத்தி செய்கின்றனர். இந்த லீகோ அடுப்புக்கரி 1964-68 ஆண்டுகளில் எங்களது வீட்டில் பயன்படுத்தியதைப் பார்த்துள்ளேன்.



லீகோ அடுப்புக்கரி தயாரிப்பில் ஈடுபட்டிருந்த இருவர் அதிகாலை நேரத்தில் எங்களைப் பார்த்தனர்.

அதில் ஒருவர் வேகவேகமா ஓடிச் சென்று ரொட்டியும் மிக்சரும் வாங்கிக் கொண்டு வேகவேகமாக ஓடி வந்து யாத்திரிகர்களிடம் கொடுத்தார். இருவரும் யாத்திரிகர்களின் பாதங்களை வணங்கி மகிழ்ந்தனர்.



யாத்திரிகர்கள் நடந்து செல்லும் போது தலைக்குமேலே இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிட்டனர். அவர்கள் இருவரும் மனம் கசிந்து உருகி யாத்திரிகர்களை வணங்கியதை மற்றபிற யாத்திரிகர்கள் கவனித்திருக்க வாய்ப்பில்லை. படம் எடுப்பதற்காக நான் பார்த்த போது, அவர்கள் தலைக்குமேலே குப்பிய கையுடன் நிற்பதைக் கண்டதும் மனம் மிகவும் நெகிழ்ந்து போனேன். வழியில் ரொட்டியும் தேநீரும்.



காலை 8.56 மணி வழியில் சாலையோரம் இருந்த கிராம தெய்வக் கோயில் வளாகத்தில் காலை உணவு.



காலை 10.17 மணி. மத்தியப்பிரதேசத்தில், பதரகதா (पथरहटा, Patharahata) என்ற ஊரில் நவராத்திரி விழாவின் போது வழிபாட்டிற்காகத் துர்க்கையின் வடிவங்களை ஓர் இளைஞர் செய்து கொண்டிருந்தார். தமிழ்நாட்டில்

பெரியபெரிய பிள்ளையார்சிலைகளைச் செய்தவற்காகப் "பிளாஸ்டர் ஆப் பாரிஸ்" பயன்படுத்துகின்றனர். ஆனால் இங்கே கம்பு வைக்கோல் களிமண் என்ற மூன்றையும் பயன்படுத்தி இயற்கையான முறையில் சுற்றுச்சுழலுக்குச் சிறிதும் பாதிப்பு இல்லாத வகையில் பெரிய பெரிய துர்க்கை பொம்மைகளைச் செய்கின்றனர்.



காலை 10.37 மணி.. எக்கரவாரா என்ற ஊர்கள் வழியாக, பகாரியா என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம்.



காலை 11.25 மணி. பகாரியா கிராமத்தில் உள்ள அடியார் ஒருவர் சாலையோரம் நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களையும், யாத்திரிகர்களையும் வரவேற்று அழைத்துச் சென்றார்.



மதியம் 02.33 மணி பகரியா கோயில் வளாகத்தில் ஓய்வு. கோயில் இடத்தில் பள்ளிக்கூடம் உள்ளது. கோயில் வளாகமே பள்ளி மாணவர்களின் விளையாட்டுத்திடலாகப் பயன்படுத்தப்படுகிறது. மதிய உணவு. உணவிற்குப் பிறகு, மதியம் 2.30 மணிக்கு அங்கிருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். மாலை 5.10 மணிக்கு அம்தரா என்ற ஊர் வந்து சேர்ந்தோம். மாலையிலும் பெருமழை பெய்தது. அம்தராவில் உள்ள அன்பர் ஒருவர் யாத்திரிகர்களை வரவேற்று தங்குவதற்கு இடம் கொடுத்தார். இரவு உணவு. ஓய்வு.



இல்லையென மாட்டார் இசைந்து - கனமழை பெய்தது. சாலையில் ஓடிய மழைநீர் யாத்திரிகர்கள் தங்கியிருந்த இடத்திற்குள் வந்துவிட்டது. சணல் சாக்குகளைக் கொண்டு வந்து மழைநீர் தேங்கி நின்ற இடங்களில் போட்டார்கள். அதனால் அந்த அறையில் படுத்திருந்த யாத்திரிகர்கள் அடுத்துள்ள அறையில் படுத்திருந்த யாத்திரிகர்களுடன் ஒண்டி முண்டிப் படுத்துக் கொண்டனர். நானும் காசிஸ்ரீ சிவப்பாவும் சாலையோரம் இருந்த ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலுக்குச் சென்று தங்கமுடியுமா? எனச் சென்று பார்த்தோம். ஆனால் கோயில் பூட்டப்பட்டிருந்து. கோயில் அருகே இருந்த வீட்டின் வெளித் திண்ணையில் படுத்துக் கொள்ள அனுமதி கேட்டோம். அவர்கள் வீட்டின் கதவைத் திறந்துவிட்டு, வீட்டிற்குள் உள்ள முன் அறையில் படுத்துக் கொள்ளச் சொல்லி மேஜைமின்விசிறி ஒன்றை வைத்து வசதி செய்து கொடுத்தனர். நாங்கள் இருவரும் அந்த வீட்டிலேயே படுத்துத் தூங்கிக் காலையில் 2.00 மணிக்கு எழுந்து அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு மற்ற யாத்திரிகர்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம். மழை தூறிக்கொண்டே இருந்தது ***பயண தூரம் 44 கி.மீ.*** ***இங்கிருந்து காசி 328 கி.மீ.***

இன்று வெற்றி நடைபோடும் 101 ஆம் நாள் - 03.09.2014 ஆவணி 18

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 1.00 மணிக்கு முன்பே எழுந்து 2.00 மணிக்கு தினவழிபாட்டிற்கு கூடி விட்டனர். ஆனால் தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது. குருசாமி அவர்கள் 3.00 மணிக்கு ஆரம்பிக்கலாம் என்று கூறி ஓய்வு எடுத்தார். சரியாக 2.50 க்கு மழை நின்று விட்டது. தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 3.15 மணிக்கு அம்தாரா என்ற ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். சாலை வளைவு நெளிவு இன்றி மைகார் வரை நேர் கோட்டில் இருந்தது. இருமருங்கிலும் நீண்ட நெடிய மலைத்தொடர் தொடர்ந்து தெரிந்தன.



சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம். MP Birla Cement தொழிற்சாலை தொலைவில் தெரிந்தது.



சாலை விரிவாக்கம் செய்யப்பட வில்லை. இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் வந்தால் ஓரமாக ஒதுங்கிச் செல்வது சிரமமாக இருந்தது. மழைநீரால் சாலையின் ஓரங்களில் களிமண் வழுக்கியது.



சாலையோரம் இருந்த கோயில் வளாகத்தில் அமர்ந்து, யாத்திரிகர்கள் அனைவரும் காலை உணவு சாப்பிட்டுவிட்டுச் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தோம். சமையல்காரர்கள் மூவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது சாலையில் தன்னந்தனியாகக் கணவனும்

மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் அனுமதிபெற்று, காசிஸ்ரீ தனசேகரன் அவர்கள் அந்தத் தம்பதியினரை அழைத்து வந்து அமரச் செய்து அவர்களுக்குக் காலை உணவு வழங்கினார். அவர்கள் மிகவும் மகிழ்ந்து சாப்பிட்டனர்.



காலை 10.00 மணிக்கு மைஹார் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். மைஹார் என்ற பெயர் மைகார் (மை+கார்) என்றால் “கருமையான மழைமேகம்” என்று பொருளாகுமா? இங்கு மாலை நேரத்திலும் இரவு நேரத்திலும் நல்ல மழை பெய்தது. ஊர் எல்லையில் உள்ள "பஞ்சாபி தாபா" முதலாளி யாத்திரிகர்களை வரவேற்று அவரது தாபாவில் தங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார்.

காலையில் வந்து நம்முடன் சாப்பிட்டுச் சென்ற தம்பதியர் யார்? அவர்களது பெயர் என்ன? ஊர் எது? எங்கே செல்கின்றனர்? ஏன் வந்தார்கள்? அவர்கள் சாப்பிட்டுவிட்டு என்ன சொல்லிச் சென்றார்கள்? என்ற விசாரணையில் சமையல் உதவியாளருடன் யாத்திரிகர்கள் ஈடுபட்டனர். மதிய உணவு. ஓய்வு. இரவு உணவு. ஓய்வு.

இரவு மணி 9.40 அளவில் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தோம். அப்போது அரசியல்வாதி ஒருவர் வாகனத்தில் வந்து இறங்கிக் குருசாமி அவர்களைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டார். அவருடன் வந்திருந்தோரின் பேச்சுச் சத்தம் கேட்டுக் குருசாமி அவர்கள் எழுந்து விட்டார். வந்திருந்தவரை வரவேற்று விபூதி பிரசாதம் கொடுத்தார். பாராளுமன்றத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் எனக் குருசாமி அவரை ஆசீர்வதித்தார்.

மாலை, இரவு நல்ல மழை. ***இன்றைய பயண தூரம் சுமார் 24 கி.மீ.***
இங்கிருந்து காசி 300 கி.மீ.

இன்று 102 ஆம் நாள் - 04.09.2014 ஆவணி 19 வியாழக் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 1.00 மணிக்கு முன்பே எழுந்து 2.00 மணிக்கு தினவழிபாட்டிற்கு கூடி விட்டனர். தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரவு 2.10 மணிக்கு மைஹாரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம். மொகாரிகட்ரா என்ற ஊருக்கு மாலை 6.30 மணிக்கு வந்து சேர்ந்தோம்.

காலை மணி 6.50 க்குச் சாலையோரம் அமர்ந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டோம். காலை 7.15 மணி ஆகிவிட்டது. அன்னதான வண்டி வருவதற்குக் காலதாமதம் ஆனது.



காலை 8.32 மணி. சாலையில் மாடுகள் நிறைந்து காணப்பட்டன. கனமழை பெய்து இருந்த காரணத்தினால் சாலையின் ஓரங்களில் தண்ணீர் தேங்கி இருந்தது. இரண்டு பக்கமும் வாகனங்கள் வந்தால், சாலையில் நடந்து செல்வது பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. சாலையில் இருந்து ஒதுங்கி நடந்தால் வழுக்கிவிடும் அபாயம் இருந்தது.



காலை 8.43 மணி யாத்திரிகர்கள் சிலர் பாதுகாப்புக் கருதிக் கையில் பிரம்பை ஊன்றிக் கொண்டு நடந்து வந்தனர்.

காலை 8.45 மணிக்கு அமரபாட்டன் (अमरपाटन Amarpatan) என்ற ஊரின் எல்லையில் உள்ள கோயில் வளாகத்தில் அமர்ந்து சாப்பிட்டோம்.



காலை 9.15 மணிக்கு காலை உணவு சாப்பிட்டு முடிந்துவுடன் பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 9.32 மணி.



காலை 10.04 மணி. பெட்டோல் பங்கில் அடியார் ஒருவர் குருசாமி அவர்களை அடையாளம் கண்டுகொண்டு நலம் விசாரித்தார். காலை 11.00 மணிக்கு மேல் மழை தூர ஆரம்பித்தது. 11.40 மணிக்குக் கக்ரா என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். அங்குள்ள பள்ளிக்கூடத்தில் அமர்ந்து ஓய்வு.



12.10 மதியம் பள்ளியில் இரண்டு ஆசிரியைகள் மட்டுமே இருந்தனர். இரவு இந்தப் பள்ளிக்கூடத்தில் தங்கிச் செல்ல கேட்டோம். அவர்கள் யாத்திரிகர்கள் தங்குவதற்கு அனுமதி மறுத்துவிட்டனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், நாங்கள் பெண்கள், எங்களுக்கு இதெல்லாம் தெரியாது. நீங்கள் இங்கே தங்க வேண்டும் என்றால் எங்களுக்கு மேலேயுள்ள அதிகாரிகளின் அனுமதி வேண்டும் என்று கூறிவிட்டனர். மழை தூறிக் கொண்டே இருந்தது.கனமழை பெய்யப் போவது போன்று அருகில் உள்ள ஒரு சிறு குன்றின் உச்சியில் மேகங்கள் கூடி இருந்தன.

காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களும், காசிஸ்ரீ தனசேகரன் அவர்களும் கக்ரா கிராமத்திற்குச் சென்று இங்கு தங்குவதற்கு ஏதேனும் இடங்கள் உள்ளனவா? என விசாரித்தனர். நாங்கள் தங்கியிருந்து இடத்திலிருந்து சிறிது தொலைவில் உள்ள வீட்டிற்குச் சென்று இவர்கள் இருவரும் யாத்திரிகர்கள் தங்குவதற்கு அனுமதி கேட்டுள்ளனர். இராமேசுவரம் காசி பாதயாத்திரை என்பதை அறிந்த அந்த வீட்டின் உரிமையாளர் மிகவும் மகிழ்ந்து அனுமதி கொடுத்துள்ளார்.

யாத்திரிகர்கள் அனைவரும் அந்த அன்பரின் வீட்டிற்குச் சென்று சேர்ந்தோம். நாங்கள் அனைவரும் அந்த வீட்டிற்குச் சென்று சேர்ந்து, வீட்டின் முகப்பில் உள்ள சிறு கோயிலில் கும்பிட்டு முடித்ததுதான் தாமதம், கனமழை பெய்யத் தொடங்கியது. ஒரு சில நிமிட நேரம் காலதாமதம் ஆகியிருந்தாலும் கனமழையில் மாட்டிக் கொண்டிருப்போம்.



மதியம் 2.10 மணி. அந்த வீட்டின் உரிமையாளர் யாத்திரிகர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். மாலை 4.00 மணிக்கு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு, அங்கிருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



மாலை 4.54 மணி. சாலையில் சகதி அதிகமாக இருந்த காரணத்தினால், யாத்திரிகர்களின் வேட்டியெல்லாம் சகதியாகிப் போனது. மாலை மணி 6.30க்கு மொகாரிகட்ரா என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். இங்குள்ள குருசாமியின் அடியார் ஒருவர் யாத்திரிகர்களை வரவேற்று அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்தார். இரவு உணவு. ஓய்வு.

இன்றைய பயண தூரம் சுமார் 49 கி.மீ.

நேற்று 04.09.2014 மொகாரிகட்ரா என்ற ஊருக்கு வந்து சேர்ந்து தங்கியிருந்தோம்.

இன்று 103 ஆம் நாள் - 05.09.2014 ஆவணி 20 வெள்ளிக் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 3.00 மணிக்குத் தினவழிபாட்டை முடித்துக் கொண்டு மொகாரிகட்ரா ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



வழியில் காலை 6.30 மணிக்கு, ரீவா நகர் எல்லை ஆரம்பமாகும் இடத்தில் உள்ள வளைவு அருகே சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். ரீவா நகரின் உள்ளே செல்லாமல் புறவழிச்சாலை வழியாகச் சென்றோம். பீகர் (Beehar River) ஆற்றைக் கண்டு வணங்கிக் கொண்டோம். கங்கையின் உபநதியான இந்த நதி தெற்கில் இருந்து வடக்கு நோக்கிப் பாய்ந்து சென்று கங்கையில் கலக்கிறது. இந்த நதியில் சிலர் மீன்பிடித்தும் குளித்தும் விளையாடிக் கொண்டும் இருந்தனர்.

காலை 11.30 மணி அளவில் சல்பத்திரி ஆசிரமம் வந்து சேர்ந்தோம். கோயில் அர்ச்சகர் யாத்திரிகர்களை வரவேற்றார். ரீவா வாழ் அன்பர்கள் சிலர் வந்து

குருசாமி அவர்களைக் கண்டு ஆசிபெற்றனர். 11.45 மணிக்கு அனைவருக்கும் சூப் வழங்கப்பட்டது.



நண்பகல் 11.58 மணி இரண்டு யாத்திரிகர்கள் மட்டும் கால தாமதமாக வந்து சேர்ந்தனர். குருசாமி அவர்களிடம் காரணம் கேட்டார். பீகர் நதியில் தீர்த்தமாடி வருவதாகத் தெரிவித்தனர். " உள்ளூர் காரனுக்குப் பேய் பயம். வெளியூர் காரனுக்கு தண்ணீர் பயம்" உங்கள் இருவருக்கும் இந்தி தெரியாது. நீங்கள் நதியில் குளிக்கும் போது ஆழம் தெரியாத இடத்தில் மாட்டிக் கொண்டால், "காப்பாற்றுங்கள்" என்று இந்தியில் சொல்லத் தெரியாது. நீங்கள் போய் தெரியாத ஊரில் ஆற்றில் குளிக்கலாமா? எனக் கடிந்து கொண்டார்.

மாலை 6.30 மணிக்கு இங்குள்ள சாளக்கிராம சிவலிங்கத்திற்கு வழிபாடு நடைபெற்றது. யாத்திரிகர்கள் சிலர் வழிபாட்டில் கலந்து கொண்டு வணங்கிக் கொண்டோம். கையில் வைத்திருந்த டார்ச்லைட்டைக் காணவில்லை என்று யாத்திரிகர்கள் ஒருவர் தேடிக் கொண்டிருந்தார். அவரவர் அலைபேசி குடை டார்ச்லை இவைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுமாறு குருசாமி கூறினார்.

இன்றைய பயண தூரம் சுமார் 30 கி.மீ.

இன்று 104 ஆம் நாள் - 06.09.2014 ஆவணி 21 சனிக் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 3.00 மணிக்குத் தினவழிபாட்டை முடித்துக் கொண்டு சல்பத்திரி ஆசிரமத்தில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்ட மைல்கல் ஒன்று சாலையோரம் இருந்தது. இதில் ரீவா 9 கி.மீ. என எழுதப் பெற்றிருந்தது.



முதுமையான வேப்பமரத்தின் கீழே, சிதிலமடைந்த சிற்பத்தூணின் ஒரு பகுதியை வைத்து வழிபாடு செய்கின்றனர். அதில் இசைக் கருவிகளை வாசித்தபடி நடனமாடும் நான்கு சிற்பங்கள் இருந்தன. மரத்தின் அடியில் நாட்டுப் பசுமாடுகள் கட்டப்பட்டிருந்தன.

இந்த இடத்தைப் பார்க்கும் போது, எங்களது கிராமத்து வீடும், அகநானூற்றுப் பாடலும் நினைவிற்கு வந்தன.
"வய வாள் எறிந்து வில்லின்நீக்கிப்
பயநிரை தழிஇய கடுங்கண் மழவர்
அம்பு சேட்படுத்து வன்புலத்து உய்த்தெனத்
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பின்
கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்கு உண்டவான்கண் அகல் அறை" (அகநானூறு 309)
சாலையோரம் அமர்ந்து ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு நடைப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

சொட்டாங்காய் அல்லது சொட்டாங்கல் விளையாட்டு -

மத்தியப்பிரதேசம் ரீவா நகரத்திலிருந்து காசி செல்லும் வழியில் உள்ள “கற்சுழியன்” என்ற ஊர் உள்ளது. இந்த ஊரின் பெயர் தமிழ்ப் பெயர்போன்று உள்ளது.

இந்த ஊரில் இரண்டு குழந்தைகள் “சொக்கட்டாங்காய்” விளையாடிக் கொண்டிருந்தனர்.



சொக்கட்டாங்காய், சொட்டாங்காய் அல்லது சொக்கட்டாங்கல் சொட்டாங்கல் என்ற இந்த விளையாட்டு. தமிழகத்தில் வீட்டில் இருக்கும் பெண்கள் விளையாடும் விளையாட்டு ஆகும். இந்த விளையாட்டை மத்தியப்பிரதேசம் ரீவா நகரத்திலிருந்து காசி செல்லும் வழியில் உள்ள “கற்சுழியன்” என்ற ஊரில் உள்ள

பெண்குழந்தைகள் விளையாடுவதைக் பார்த்ததும், ஆச்சரியமாக இருந்தது எனக்கு.



இங்கிருந்து காசி 200 கி.மீ.



இந்த ஊரின் சாலையோரம் காலைநேரத்தில் தேநீரும் ரொட்டியும் சாப்பிட்டோம்.

இந்த ஊரின் பெயரானது கற்சுழியன் என்று உள்ள காரணத்தினாலும், இந்த ஊரின் குழந்தைகள் சொக்கட்டாங்காய் விளையாடுகின்ற காரணத்தினாலும், இந்த ஊரில் நாட்டியமுத்திரைகள் கொண்ட தூண்சிற்பம் கிடப்பதாலும், இந்த ஊரானது பண்டைக்காலத்தில் தமிழரின் ஊராக இருந்திருக்குமோ?

இன்றைய பயண தூரம் சுமார் 40 கி.மீ.

இரகுநாத்கஞ்ச் வந்து சேர்ந்து தங்கியிருந்தோம்.

இன்று 105 ஆம் நாள் - 07.09.2014 ஆவணி 22 ஞாயிற்றுக் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 3.00 மணிக்குத் தினவழிபாட்டை முடித்துக் கொண்டு இரகுநாத்கஞ்ச் ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 6.39 மணி. நான்குவழிச்சாலைக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மழை பெய்திருந்த காரணத்தினால் சாலை முழுவதும் சேறும் சகதியுமாக இருந்தது. ஆங்காங்கே பெரும் பள்ளங்களில் சேற்றுநீர் தங்கியிருந்தது. செருப்புப் போட்டும் நடக்க முடியவில்லை. செருப்பு போடாமலும் நடக்க முடியவில்லை. சாலையோரம் கொட்டிக் குவித்து வைக்கப்பட்டிருந்த சரளைக் கற்களின் மேல் நடக்கவும் முடியவில்லை. ஒவ்வொரு அடியும் எடுத்து வைப்பதற்குச் சிரமமாக இருந்தது.

சில இடங்களில் சாலைகள் போடப்பட்டிருந்தன. காலை 7.14 மணி அளவில் சாலையோரம் அமர்ந்து ஓய்வு. அன்னதான வண்டி வரக் காலதாமதம் ஆனது. நடந்து வந்த களைப்பு அசதி. தேநீர் கிடைக்காமல் போனது.

யாத்திரிகர்கள் சிலர் கால்களுக்கு மருந்து தடவிக் கொண்டனர்,



காசியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் ஒருவர் வண்டியை நிறுத்திவிட்டு யாத்திரிகர்களை நலம் விசாரித்தார். சாலை நெடுக இவ்வாறுதான் சேறும் சகதியுமாக உள்ளது, கவனமாக நடந்து செல்லுங்கள் எனக் கூறினார்.

காலை மணி 7.50க்கு அன்னதான வண்டி வந்து சேர்ந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுவிட்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். சாலையில் ஏதோ ஒரு வண்டி பழுதடைந்து நின்றுவிட்டதாகவும், அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு நீண்ட நேரம் வரமுடியாமல் வரிசையில் வண்டிகள் எல்லாம் நின்று கொண்டிருந்தன என்றும் கூறினர்.

சாலையோரம் இருந்த குடிநீர் அடிகுழாயில் யாத்திரிகர்கள் அனைவரும் கால்கைகளைக் கழுவிக் கொண்டு நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம்.



காலை 8.10 மணி. மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. இருசக்கர வாகனத்தில் பயணம் செய்வோர் மிகவும் சிரமப்பட்டு வண்டிகளை ஓட்டிச் செல்வதைக் காண முடிந்தது.



காலை 8.15 மணி. ***சிறுவர்கள் கோலிக்குண்டு விளையாடிக் கொண்டிருந்தனர்***. காசிஸ்ரீ சிவப்பா அவர்களுடன் சேர்ந்து சிறிது நேரம் விளையாடிவிட்டு வந்தார். இந்த இடத்திலிருந்து காசி 177 கி.மீ.

காலை 8.46 மணி. மௌகஞ் வாசிகள் பலரும் யாத்திரிகர்களைத் தேடி வந்து விட்டனர்.



மலர் தூவி குருசாமி பச்சைக்காவடி அவர்களை வரவேற்றனர். குருசாமி பச்சைக்காவடி அவர்களை ஆசீர்வதித்தார்.

காலை 8.48 மணி. குருசாமி பச்சைக்காவடி அவர்கள், தேடிவந்து வரவேற்றவர்களை அழைத்து யாத்திரிகர்கள் காலைஉணவு சாப்பிட்டுவிட்டு நடந்து வருவோம், நீங்கள் உங்களது வானத்தில் முன்னதாகச் செல்லுங்கள் எனக் கூறி அனுப்பிவைத்தார்.





யாத்திரிகர்கள் மிகவும் மெதுவாக நடந்து வந்து மணி 9.05க்கு அன்னதான வண்டி நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். மௌகஞ் ஊருக்குச் செல்லும் சாலையோரம் உட்கார்ந்து சாப்பிட இடவசதி ஏதும் கிடைக்கவில்லை. அன்னதான வண்டியின் நிழலில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டு முடித்தோம்.

காலை 9.31 மணி. சுள் என்று வெயில் அடித்தது. உச்சந்தலை அடுப்புப்போல் கொதித்தது. அந்த வேகாத வெயிலில் நடந்து சென்றோம்.

பகல் 11.20 மணிக்கு மௌகஞ் வந்து சேர்ந்தோம். ஊரார் சிலர் சாலையோரம் நின்று யாத்திரிகர்களை வரவேற்று அழைத்துச் சென்றனர்.







11.30 மணிக்கு மௌகஞ் ஊரில் உள்ள "ஸ்ரீ ராம் ஜானகி" கோயிலுக்கு (श्री राम जानकी मंदिर) வந்து சேர்ந்தோம்.

மருத்துவர் திரு. இராஜேந்திரன் அவர்களும் அவருடைய நண்பர்கள் பலரும் வந்திருந்து யாத்திரிகர்களை வரவேற்றனர்.

ஸ்ரீ ஜானகி சமேத ராமரை வணங்கிக் கொண்டு, அருகில் உள்ள கட்டிடத்திற்குச் சென்று தங்கினோம். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் யாத்திரிகர் சிலரும் இந்தக் கோயிலில் தங்கினர்.



சமையல் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. மதிய உணவு. மாலை 5.15 மணிக்கு ஸ்ரீ ஜானகிராமர் கோயிலின் பட்டாச்சாரியார் சிறப்பு வழிபாடு செய்து வைத்தார்.



மாலை 6.21 மணி.. மௌகஞ்ச் வாழ் அன்பர்கள் பலரும் வந்திருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களிடம் ஆசி பெற்றனர். இரவு உணவு. ஓய்வு.

இன்றைய பயண தூரம் சுமார் 25 கி.மீ.



இன்று 106 ஆம் நாள் - 08.09.2014 ஆவணி 23 திங்கள் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 3.00 மணிக்குத் தினவழிபாட்டை முடித்துக் கொண்டு மௌகஞ் ஊரில் இருந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.

காலை 6.20 மணி. சுமார் 10அடி விட்டம் கொண்ட அரசமரம். அதனடியில் ஒரு பிள்ளையார்கோயில். சாலை விரிவாக்கத்திற்காக இந்த விருட்சத்தை வெட்டிவிடாமல் இருக்க வேண்டும் என்ற வேண்டுதலுடன் நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம்.

காலை 6.49 மணி. மரங்கள் நிறைந்த வயல்களில் ஏராளமான பச்சைக்கிளிகள் பறந்து திரிந்தன. பச்சைக்கிளிகளின் கூட்டத்தைக் கண்டதும் "மீனாட்சி மீனாட்சி" என்று குருசாமி அவர்கள் கும்பிட்டுக் கொண்டார்.

காலை 7.14 மணி. நீண்ட நேரம் ஆகியும் அன்னதான வண்டி வருவதற்குக் காலதாமதம் ஆனது. ஓய்ந்து இருந்த யாத்திரிகர்கள் இருவர் படுத்துத் தூங்கி விட்டனர். மற்றவர்கள் மிகவும் களைத்து அயர்ந்து போய் அமர்ந்து இருந்தனர்.



காலை 7.45 மணிக்கு அன்னதான வண்டி வந்து சேர்ந்தது. யாத்திரிகர்கள் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு நடைப்பயணத்தைத் தொடர்ந்தோம்.



காலை 8.20 மணி. தமிழ்நாட்டில் கிராமங்களில் இருந்தது போன்று, மூங்கில் வேய்ந்து நாட்டுஓடு போடப்பட்ட வீடு ஒன்றைச் சாலையோரம் கண்டோம்.

கையால் எட்டி முகக்கும் அளவில் கிணற்றில் தண்ணீர் நிறைந்து காணப்பட்டது. யாத்திரிகர்கள் இதை ஆச்சரியமாகப் பார்த்துச் சென்றோம். இந்த இடத்திலிருந்து காசி 150 கி.மீ.

காலை 9.15 மணிக்குச் சாலையோரம் அமர்ந்து காலைஉணவு.



காலை 10.30 மணிக்கு அனுமானா வந்து சேர்ந்தோம். பாதயாத்திரையாக வருகிறார்கள் என்ற செய்தியை அறிந்த ஒரு பெரியவர் அனுமானா ஊர் எல்லையில் நின்று யாத்திரிகர்களுக்குத் தண்ணீர் வழங்கி வரவேற்றார்.
ஊரார் அனுமன் கோயிலில் வரவேற்பு வழங்கினர்.





காலை 10.48 மணி. அனுமான் கோயில் பட்டாச்சாரியார் தேசிய நெடுஞ் சாலைக்கு வந்து நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களையும் யாத்திரிகர்களையும் வரவேற்று கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.

பாதை காட்டிய பாட்டி **-** அனுமன் கோயிலுக்கு யாத்திரிகர்கள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தோம். சாலையின் ஓரத்தில் பலகாரம் விற்றுக் கொண்டிருந்து ஒரு பாட்டி என்னிடம் நீங்கள் எல்லாம் எங்கு செல்கின்றீர்கள்? என்று கேட்டார். இராமேசுவரத்திலிருந்து பாதயாத்திரையாகக் காசிக்குச் செல்கிறோம் என்று சொன்னேன். அவ்வளவுதான், அந்தப் பாட்டி எழுந்து ஓடோடி வந்து, ஏதேதோ இந்தியில் சொல்லி, நடந்து செல்லும் யாத்திரிகர்களை வழிமறித்துத் தடுத்து நிறுத்தி, வந்தவழியே திரும்பிச் செல்லுமாறு கையைக் காட்டினார். அவர் என்ன சொல்ல வருகிறார் எனச் சரியாக எங்களுக்கு விளங்கவில்லை. ஆனால் திரும்பிப் போகுமாறு கூறுகிறார் என்பது மட்டும் விளங்கியது. நான் பேசுவது அவருக்குச் சரியாகப் புரியவில்லை, அவர் சொல்வது எனக்குச் சரியாகப் புரியவில்லை.

அப்போது அந்த ஊர் அன்பர் ஒருவர் வந்து அந்தப் பாட்டியிடம் விளக்கம் சொன்னார். இந்தப் பாதையானது காசிக்குப் போகும் பாதையில்லை, காசிக்குப் போக வேண்டுமென்றால், நீங்கள் வந்தவழியே திரும்பிச் சென்றால், மெயின்ரோடு வரும், அதில் வலதுபுறமாகத் திரும்பிச் செல்லவேண்டும். அதுதான் காசிக்குச் செல்லும் பாதை, எனவே திரும்பிச் செல்லுங்கள் என்று பாட்டி கூறுகிறார் என்ற விளக்கினார். அந்தப் பாட்டியிடம் நாங்கள் காசிக்குத்தான் சென்று கொண்டிருக்கிறோம். ஆனால் இன்று இங்குள்ள அனுமான் கோயிலுக்குச் சென்று அங்கே தங்கி ஓய்வு எடுப்போம். நாளை காலை நேரத்தில் புறப்பட்டுக் காசிக்குப் பயணத்தைத் தொடர்வோம் என்று விளக்கமாகச் சொன்னோம். இந்த விளக்கத்தைக் கேட்ட அந்தப் பாட்டியின் பதட்டம் தணிந்து, அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். யாத்திரிகர்களை வணங்கிக் கொண்டு, அவரது கடைக்குச் சென்று வியாபாரத்தைக் கவனிக்கச் சென்று விட்டார். பாதை காட்டிய பாட்டிக்கு நன்றி சொல்லிக் கொண்டு அனுமன் கோயிலுக்குச் சென்று சேர்ந்தோம்.

யாத்திரிகர்கள் அனுமான் கோயிலில் தங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.



மாலை 05.37 மணி ஊரார் பலரும் வந்திருந்து குருசாமி பச்சைக்காவடி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றுச் சென்றனர்,
இன்றைய பயண தூரம் சுமார் 26 கி.மீ.
நாளை காலை உத்தரப்பிரதேசத்தில் நுழைகிறோம்.
காசி 142 கி.மீ. தொலைவில் உள்ளது.

இன்று முதல்
உத்தரப் பிரதேச மாநிலத்தில் பயணம்

இன்று 107 ஆம் நாள் - 09.09.2014 ஆவணி 24 செவ்வாய் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 3.00 மணிக்குத் தினவழிபாட்டை முடித்துக் கொண்டு மத்தியப்பிரதேசத்தில் உள்ள ஹனுமானா என்ற ஊரில் இருந்து புறப்பட்டோம். இந்த ஊரின் எல்லையில் உத்திரப்பிரதேசம். அதிகாலையில் விடியும் நேரம் உத்திரப்பிரதேச மாநில எல்லைக்குள் நுழைந்தோம். அப்போது ஹனுமானா ஸ்ரீகிருஷ்ணர் கோயில் பூசாரி அவர்கள் எங்களுக்கு எதிரே நடந்து வந்துகொண்டிருந்தார். அவர் வசிக்கும் ஊர் உத்திரப்பிரதேச எல்லைக்குள் உள்ளது. ஆனால் அவர் பூசை செய்யும் ஹனுமானா என்ற ஊர் மத்தியப்பிரதேச எல்லைக்குள் உள்ளது. இவர் தினமும் நடந்தே கோயிலுக்குச் சென்று திரும்புகிறோர். பாரததேசம் இவர்போன்ற புண்ணிய ஆத்மாக்களால்தான் ஆன்மிகபூமியாகத் திகழ்கிறது. அவரிடம் ஆசிபெற்றுக் கொண்டு எங்களது யாத்திரையைத் தொடர்ந்தோம். அவரும் ஹனுமானா நோக்கி நடக்கலானார்.





மிகச் சிறிய குன்று. அதில் பாறைகளுக்கு மேலே மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. பாறைக்கு நடுவே ஒரு சிறிய குகை..... அந்தக் குகைக்கு உள்ளே ஏதோ ஒரு தெய்வத்தை வைத்து வணங்கி வருகின்றனர். அங்கே அமர்ந்து அனைவரும் காலை உணவு சாப்பிட்டோம். குன்றின் அருகே ஒரு பாறை மட்டும் சிவலிங்க வடிவில் இருந்தது. அதற்கு பொட்டிட்டுப் பூவைத்து வழிப்போக்கர்கள் வணங்கி வருகின்றனர். யாத்திரிகர்கள் பலரும் அந்தச் சிவலிங்கத்தின் அருகில் சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்தனர். அன்னதான வண்டியின் ஓட்டுநர்

அவர்களும் உடன் அமர்ந்து படம் எடுத்துக் கொண்டார். மலைப்பாதையில் தங்கிச் செல்வதற்கு வசதியாக இருந்தது.





மத்தியப்பிரசேதம் அனுமானா ஊரைச் சேர்ந்த அன்பர் ஒருவர் அவரது ஜீப்பில் உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஊருக்குச் சென்று கொண்டிருக்கும் போது குருசாமி பச்சைக்காவடி அவர்களும் யாத்திரிகர்களும் மலைவழிப்பதையில் நடந்து செல்வதைப் பார்த்து விட்டு, வண்டியை நிறுத்திவிட்டு, குடும்பத்தினருடன் வந்து குருசாமியை வணங்கிக் கொண்டார்.



தேங்காய் நெற்று ஒன்றைக் குருசாமியிடம் கொடுத்து வணங்கிக் கொண்டனர். குருசாமி அவர்களும் பெரிதும் மகிழ்ந்து அவரது குடும்பத்தினரை ஆசிர்வதித்து வழியனுப்பி வைத்தார்.



மலையைவிட்டுக் கீழே இறங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு திருப்பத்தில் ஒரு சிறிய கோயில் ஒன்று உள்ளது. அதில் சாது ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். காசிஸ்ரீ தொப்பை என்ற கலியபெருமாள் அவர்கள் அவரிடம் ஆசிபெற்றுக்கொண்டார்.

மலைத் தொடரின் அடிவாரத்தில் மோகோரை (Mahugari) என்ற ஊரில் ஆற்றின் தென்கரையில் உள்ள ***துர்கை, அனுமன் கோயிலில் தங்கி இளைப்பாறினோம்.*** மாலை நேரம் இங்கிருந்து புறப்பட்டோம்.



வழியில் சேவடி நதியை வணங்கிக் கொண்டு அந்தப் புண்ணிய நதியைக் கடந்து சென்றோம்.





நவராத்திரி விழாவிற்காக குச்சியில் வைக்கோல் சுற்றிக் களிமண்ணால் பூசித் துர்க்கை பொம்மைகள் செய்து கொண்டிருந்தனர்.

குக்கர் வெடித்தது

பரோதா (Belan Baraudha), என்ற ஊருக்குச் சென்று சேர்ந்தோம். அங்குள்ள பயணியர் விடுதியில் தங்கினோம். மின்சாரம் இல்லை. விரைவாகச் சமையல் செய்து முடிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தீ சுவாலையை மிகவும் அதிகமாகக் கூட்டி வைத்து அதில் குக்கரை மூடிவைத்துச் சமையல் செய்யத் தொடங்கினார் சமையல்காரர். சில நிமிட நேரங்களில் குக்கர் வெடித்துவிட்டது. குக்கர் அருகே இருந்த தூண் தடுத்துவிட்ட காரணத்தினால் யாருக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்பட வில்லை. உடனடியாக அன்னதான வண்டியிலிருந்து வெறொரு குக்கரை எடுத்து வந்து உணவு தயாரிக்கப்பட்டது. இரவு உணவு. ஓய்வு.

இன்றைய பயண தூரம் சுமார் 31 கி.மீ.
காசி 109 கி.மீ. தொலைவில் உள்ளது.

இன்று 108 ஆம் நாள் - 10.09.2014 ஆவணி 25 புதன் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் இரவு 3.00 மணிக்குத் தினவழிபாட்டை முடித்துக் கொண்டு தொடர்ந்தோம்.



காலை 6.14 மணி. நடந்து செல்லும் போது வாரணாசி (காசி) 100 கி.மீ. என்ற மைல் கல்லைப் பார்த்து யாத்திரிகர்கள் அனைவரும் மகிழ்ச்சி யடைந்தோம். காசிஸ்ரீ தொப்பை என்ற கலியபெருமாள் அவர்கள் அந்த மைல்கல் அருகே நின்று படம் எடுத்துக் கொண்டார்.

காலை 7.00 மணிக்கு ரொட்டியும் தேநீரும். சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். காலை 7.44 மணி துளசி ((Tulsi) என்ற ஊரைக் கடந்து சென்றோம். அந்தப் பெயர் தமிழ்ப் பெயரோ என்ற ஐயம் எங்களுக்கு உண்டானது.





அதிகாலையில் இருந்தே கடுமையான வெயில். காலை 8.30 மணிக்கு நடக்க முடியாத அளவிற்கு வெயில் சுள்ளென அடித்தது. குடை எடுத்துக் கொள்ளாதவர்கள் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு நடந்து வந்தனர்.

காலை 9.30 மணிக்கு சாலையோரம் இருந்த பெட்ரோல் பங்க் வளாகத்தில் அமர்ந்து உணவு சாப்பிட்டுக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தோம். வெயில் கடுமையாக அடித்தது.



காலை 11.30 மணிக்குச் சமோகரா வந்து சேர்ந்தோம். குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அன்பர் வரவேற்று அவரது இல்லத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்குத் தேவையான வசதிகளைத் செய்து கொடுத்தார். இவரது வீட்டின் மாடியில்

அருள்மிகு ஸ்ரீ கிருஷ்ணர் கோயில் உள்ளது. வீடு கீழே, கோயில் மாடியில். யாத்திரிகர்கள் அனைவரும் மேலே மாடியில் கிருஷ்ணனர் கோயிலில் தங்கினோம். கடுமையான வெயில், வெக்கைக் காற்று வீசிக் கொண்டே இருந்தது.





இன்றைய பயண தூரம் சுமார் 32 கி.மீ.

காசி 78 கி.மீ. தூரத்தில் உள்ளது.

இன்று 109 ஆம் நாள் - 11.09.2014 ஆவணி 26 வியாழக் கிழமை.

யாத்திரிகர்கள் அனைவரும் 11.09.2014 அன்று தினவழிபாட்டை முடித்துக் கொண்டு காலை 2.00 மணிக்கு சமோகரா என்ற ஊரில் இருந்து பாதயாத்திரயை தொடர்ந்தோம். விடியும்போது காசி சென்று சேர்ந்துவிடுவோம் என்ற நினைப்பில் காசியை நோக்கிக் கால்களும் நடக்க ஆரம்பித்தன....

24 மணி நேரத்தில் 76 கி.மீ. நடைப்பயணம் -

பயணத் திட்டத்தின்படி இன்று சமோகராவில் இருந்து புறப்பட்டு 41கி.மீ. பயணம் செய்து சுனார் என்ற ஊரைச் சென்றடைந்து, அங்கே தங்கியிருந்து, நாளை ஆவணி 27 (12.09.2014) சுனாரில் இருந்து யாத்திரை புறப்பட்டு 35 கி.மீ. பயணம் செய்து காசிக்குச் சென்று சேர்வதாகத் திட்டம். ஆனால் இன்று இரவு சுனாரில் தங்கிச் செல்லாமல் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு மொத்தம் 76 கி.மீ. தூரத்தையும் முடித்து விடுவோம் என குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கூறினார். குருசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படித் தொடர்ந்து நடந்து காசியைச் சென்று சேர்ந்து விடுவதெனத் தெய்வங்களை வணங்கிக் கொண்டு சமோகராவிலிருந்து யாத்திரை புறப்பட்டோம். கடந்த 108 நாட்களாக, இதுநாள் வரையும் யாத்திரிகர்களை முன் அனுப்பி வைத்துவிட்டு எல்லோருக்கும் கடைசியாகக் குருசாமி அவர்கள் நடந்து வருவார். இன்று இந்த நடைமுறைக்கு மாறாக குருசாமி அவர்கள் வேகமாக எல்லோருக்கும் முன்னே நடந்து சென்றார். இதனால் யாத்திரிகர்களும் "நான் முந்தி நீ முந்தி" என்று அனைவரும் வேகமாக நடந்தனர்.

சாலையோரம் இருந்த பள்ளிக்கூட வளாகத்தில் சிறிது நேரம் ஓய்வு. காலை 6.30 மணி ஆகியும் அன்னதான வண்டி வரவில்லை.



76 கி.மீ. பயணம் செய்து காசி சென்று சேர்ந்து விடவேண்டும் என்பதே இன்றைய பாதயாத்திரையின் இலக்கு. எனவே தேநீருக்காகக் காத்திருக்காமல் நடந்து செல்வோம், தேநீர் வரும்போது குடித்துக் கொள்வோம் எனக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கூறினார்கள். யாத்திரிகர்கள் புனித காசியை மனதில் நினைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தனர். யாத்திரை தொடர்ந்தது.

துர்கையம்மன் கோயில் ஒன்று இருந்து சிதிலமடைந்துள்ளது. தூணில் இருந்து ஒரேயொரு சிற்பத்தை மட்டும் எடுத்து வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

காசிஸ்ரீ மாதவன் அவர்கள் நடந்து செல்லும் பாதையில் பார்த்த ஊர்களின் பெயர்களையும் நிகழ்ச்சிகளையும் ஒரு சிறு நாட்குறிப்பில் எழுதிக் கொண்டு வந்தார்.



காலை 7.08 மணி காலையோரம் வாரணாசி (காசி) 60 கி.மீ. என்ற மைல்கல்லைப் பார்த்து யாத்திரிகர்கள் பெரிதும் மகிழ்ந்து யாத்திரையைத் தொடர்ந்தோம்.



காலை 7.26 மணி அன்னதான வண்டி வந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் வந்த காரணத்தினால், சாலையோரம் இருந்த தேநீர் கடை அருகில் தங்கிச் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தோம். காலை 7.30 மணிக்கு, அன்னதான வண்டி வந்து சேர்ந்தது. ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டு பாதயாத்திரையைத் தொடர்ந்தோம்.

இன்று 109 ஆம் நாள் - 11.09.2014 ஆவணி 26 வியாழக்கிழமை.

இன்று காலை 8.15 அளவில் உத்திரப்பிரதேச மாநிலத்தில் பத்ரி (Pandri Shivgarh 231304) என்ற ஊரின் வழியாகச் சுனார் (चुनार, Chunar) செல்லும் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தோம்.

யாதும் ஊரே யாவரும் தமிழர்.... பத்ரியில் (Pandri Shivgarh) சாலைவழியாக நடந்து சென்று கொண்டிருந்தேன். வேகமாக நடப்போர் எல்லாம் எனக்கு முன்னே சென்று கொண்டிருந்தனர். ஓரிருவர் எனக்கும் பின்னே வந்து கொண்டிருந்தனர். நான் நடந்து செல்வதைச் சாலையோரம் உள்ள கடையில் உட்கார்ந்தபடி ஒரு மீசைக்காரரர் பார்த்துக் கொண்டிருந்தார். என்னை அவரிடம் வருமாறு சைகை காட்டிக் கூப்பிட்டார். நான் அவரைப் பொருட்படுத்தாது நடந்து கொண்டிருந்தேன். உடனே அவர் எழுந்து வந்து என்னிடம் ஏதேதோ கேட்டார், ஏதேதோ சொன்னார்.



“இராமேசுவரம் - காசி பாதயாத்திரை. 109ஆவது நாள் பயணம்” என்பதை மட்டும் இந்தியில் சொன்னேன். அதைக் கேட்ட அவர் தனது மீசையை முறுக்கிக் காட்டி ஏதேதோ சொன்னார். என்னிடம் ஏதேதோ கேட்டார். “உடல் பலமும், மனவளமும் மனிதனுக்குத்தேவை, ஆன்மிகம் வழிபாடு தேவையற்றது” என்று சொல்கிறார் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

மீசைக்கு மீசைதான் சரியாகும் என்று என் மனதில் பட்டது. அதனால், எங்களுடன் பாதயாத்திரை வந்து கொண்டிருந்த காசிஸ்ரீ 'தொப்பை' என்ற கலியபெருமாள் அவர்கள் வரும்வரை, அங்கேயே நின்று அமைதியாக அவரது இந்திப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவரும் மீசையை மட்டும் முறுக்கி கொண்டே ஏதேதோ இந்தியில் சொல்லிக் கொண்டே இருந்தார்.

நண்பர் காசிஸ்ரீ தொப்பைசாமி அவர்கள் எனது அருகில் வந்தும், அவரை அழைத்து உங்களது மீசையை முறுக்கிக் காட்டுங்கள் எனச் சொன்னேன். தொப்பைசாமி அவரது மீசையை முறுக்கிக் காட்டியதுதான் தாமதம், அந்த மீசைக்காரரர் எங்கள் மீது அளவுகடந்த அன்பு கொண்டார். பெரிதும் மகிழ்ந்து நெகிழ்ந்து போனார். ஏதேதோ இந்தியில் சொல்லிக் கொண்டே இருந்தார். அன்பும் மனிதமும் எங்களைச் சகோதரர்களாக மாற்றிவிட்டன.

எங்களைக் காசிக்கு அழைத்துச் சென்ற எங்களது குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அருகே வந்துவிட்ட காரணத்தைக் கூறி அந்தப் பத்ரி மீசைக்காரரிடம் விடைபெற்றுக் கொண்டு காசியை நோக்கி நடக்க ஆரம்பித்தோம்.

முறுக்கு மீசைக்கு இவ்வளவு மதிப்பா? காவிக்கு இல்லாத மதிப்பு மரியாதை முறுக்கிய மீசைக்கு இருப்பதைக் கண்டு வியந்து போனோம். 31 கி.மீ. பயணம் செய்தபின், காலை 9.10 மணிக்குச் சாலையோரம் அமர்ந்து காலை உணவு. சில நிமிட நேரங்கள் ஓய்வு. காலை 9.52 க்கு அங்கிருந்து புறப்பட்டோம். 10.08 மணி ***இங்கிருந்து காசி 50 கி.மீ.***



40 கி.மீ. பயணம், மதியம் 12.30 மணிக்கு ***சுனார் (चुनार, Chunar)*** என்ற ஊர் வந்து சேர்ந்தோம். சீனாக்களிமண் பொருட்கள் சுனாரில் மிக அதிகமாக உற்பத்தி

செய்யப்படுகின்றன.



மதியம் 1.00 மணிக்கு மதிய உணவு. சிறிது நேரம் ஓய்வு. மதியம் 12.40 மணி யாத்திரிகர்கள் அனைவரும் படுத்துத் தூங்கி விட்டனர். குருசாமி பச்சைக்காவடி அவர்கள் ஓய்வெடுக்க இடம் கிடைக்காமல் போனது. மதியம் 2.15 க்கு யாத்திரையைத் தொடர்ந்தோம்.



பகல் 2.29 மணி நடக்க ஆரம்பித்த சிறிது நேரத்தில் மழை தூர ஆரம்பித்தது. இதனால் யாத்திரிகர்கள் வேகம் குறைந்தது.
46 கி. மீ. பயணம். மாலை 3.40 மணிக்கு ரொட்டியும் தேநீரும்.



மாலை 4.11 மணி சாலையானது சேறும் சகதியுமாக இருந்தது. இதனால் யாத்திரிகர்களின் உடைகள் எல்லாம் சகதி படிந்தது. வேகமாகச் சென்ற ஒரு லாரியின் டயர் சாலையில் தேங்கி இருந்த தண்ணீரைச் சிதறிச் சென்றது. இதனால் இரண்டு யாத்திரிகர்கள் உடலிலும் சகதி படிந்தது.



58 கி. மீ. பயணம், மாலை 6.15 மணிக்கு பக்ரா (बघेरा, Baghera)என்ற ஊரைக் கடந்து சென்றோம். மழை தூறிக்கொண்டே இருந்தது.

இரவு 7.00 மணிக்கு சேர்பூர் என்ற ஊர் வந்து சேர்ந்தோம். சேர்பூர் என்ற ஊரின் பெயருக்கு இந்தியில் என்ன பொருள் என்று தெரியவில்லை. ஆனால் யாத்திரிகர்கள் அனைவரும் சேறும் சகதியுமாகச் "சேர்பூர்" சாலைகளில் நடந்து சென்றோம். இங்குள்ள பள்ளிக்கூடத்தில் ஓய்வு. விரைவாகச் செல்லும் யாத்திரிகர்கள் முன்கூட்டியே பள்ளிக்கூட வளாகத்திற்குச் சென்று தங்கியிருந்தனர்.

இருட்டி விட்டது. நானும் இன்னும் சில யாத்திரிகர்களும் நடந்து சென்று கொண்டிருந்தோம். எங்களுக்கும் பின்னால் இன்னும் சில யாத்திரிகர்கள் நடந்து வந்து கொண்டிருந்தனர். மழை தூறிக்கொண்டே இருந்தது. குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு எந்த இடத்தில் வந்து கொண்டிருக்கின்றீர்கள் என்று தகவல் கேட்டுக் கொண்டே இருந்தார். யாத்திரிகர்களில் மிகவும் மூத்தவர் மதுரை காசிஸ்ரீ கந்தசாமி அவர்கள் மட்டும் மிகவும் காலதாமதமாக வந்து சேர்ந்தோர். உடல் சோர்வடைந்திருந்தார்.

8.00 மணிக்கு இரவு உணவு. உணவிற்குப் பின் இரண்டு மணி நேரம் ஓய்வு.

10.00 மணிக்கு வழிபாடு முடிந்தவுடன், ***விடியும்போது காசி சென்று சேர்ந்துவிடுவோம் என்ற நினைவுடன் காசியை நோக்கிக் கால்களும் நடக்க ஆரம்பித்தன.... இரவு முழுவதும் நடந்து கொண்டே இருந்தோம்.***

ஆனால் எங்களுக்கு முன்பே எங்கள் அனைவரது மனதும் காசியைச் சென்று சேர்ந்து விட்டன,

----

இன்று 110 ஆம் நாள் - 12.09.2014 ஆவணி 27 வெள்ளிக் கிழமை.

68 கி.மீ. பயணம் செய்து நள்ளிரவு 00.30 மணிக்கு நாராயன்பூர் என்ற ஊர் வந்து சேர்ந்தோம். தேநீர்.

சில இடங்களில் கங்கையின் குளிர்ச்சியான காற்று வீசியது. சில இடங்களில் கங்கையில் தண்ணீர் ஓடும் சலசலப்பைக் கேட்க முடிந்தது. ஓரிரு இடங்களில் மழைத்தண்ணீர் தேங்கி நின்றது, அந்த இடங்களில் நடந்து செல்வது மிகவும் சிரமமாக இருந்தது.

72 கி.மீ. பயணம். ராம்நகர் வந்து சேர்ந்தோம், தேநீர்.

மிதவைப் பாலம் வழியாகச் செல்ல முடியாது என்று கூறிவிட்டனர்.

திரு.சின்னக்கருப்பன் மற்றும் திரு. தனசேகரன் இருவரும் சிரமம் மேற்கொண்டு நேரில் சென்று பார்த்து வந்து இதை உறுதி செய்தனர். எனவே இரும்புப் பாலம் வழியாக கங்கையைக் கடந்து பயணித்தோம். அன்னதான வண்டி இரும்புப் பாலம் வழியாகச் செல்ல காவல்துறையினர் அனுமதி மறுத்து விட்டனர்.

எனவே குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அன்னதான வண்டியைத் அலகாபாத் பைபாஸில் வரச் சொல்லித் திரும்பி அனுப்பிவிட்டார். யாத்திரிகர்களில் மிகவும் மூத்தவரான மதுரை காசிஸ்ரீ கந்தசாமி அவர்கள் மிகவும் சோர்வுற்று இருந்த காரணத்தினால், அவரை அன்னதான வண்டியில் ஏறி வரச்சொன்னார். மற்றபிற யாத்திரிகர்கள் அனைவரும் இரும்புப் பாலம் வழியாக பயணம் மேற்கொண்டோம்.

கங்கையைக் கடக்கும் முன், கங்கைக்கரையில் யாத்திரிகர்களை நிறுத்தி வைத்து, குருசாமி அவர்கள் மாதா கங்கையையும், அருள்மிகு காசிவிசுவநாதர் மற்றும் எல்லா தெய்வங்களையும் போற்றி வழிபாடு செய்தார்.

பாலத்தின் கீழே ரயில்வண்டி செல்ல, பாலத்தின் மேலே யாத்திரிகர்கள் அனைவரும் மாதா கங்கையையும், காசிமாநகர் தெய்வங்களையும் வணங்கிக் கொண்டு ***கங்கையைக் கடந்து சென்றோம்***. நேற்று சமோகரா அருள்மிகு ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலில் இருந்து புறப்பட்டு 26 மணி நேரப் பாதயாத்திரையில் சுமார் 80 கி.மீ. நடந்து 110 நாள் பாத யாத்திரையின் நிறைவாக, ஆவணி 27 (12.09.2014) வெள்ளிக் கிழமை இரவு மணி 4.50 க்கு அருள்மிகு காசி விசுவேசுவரர் சந்நிதி வாயிலில் நின்று வணங்கிக் கொண்டோம்.

பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர், அவரவர் குலதெய்வம் மற்றும் இஷ்ட தெய்வங்கள், இராமேசுவரம் அருள்மிகு பர்வதவர்த்தினி இராமநாதசாமி, வழிநெடுகிலும் இருந்த கிராம தெய்வங்கள், அருள்மிகு காசி விசுவநாதர், அருள்மிகு அன்னபூரணி, அருள்மிகு காசி விசாலாட்சி முதலான அனைத்துத் தெய்வங்களின் திருவருளாலும், குருசாமி பச்சைக்காவடி அவர்களின் குருவருளாலும் இராமேசுவரம் - காசி பாதயாத்திரை நிறைவுற்றது.

சுசில் சினிமா தியேட்டர் அருகே சாலை ஓரத்தில் ஓய்வு.

இன்று வெள்ளிக்கிழமை சுபஹோரை நேரத்தில் காலை 6.00 மணிக்கு காசி நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்திற்குள் சென்று சேர்ந்தோம்.



சத்திர நிருவாகத்தினர் மேளதாளங்கள் முழங்கக் குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் மற்றும் சமையல்

பணியாளர், வாகன ஓட்டுநர் அனைவருக்கும் ***பொன்னாடை போர்த்தி, மாலை மரியாதை செய்து வரவேற்று உபசரித்தனர்.***

அன்னதானவண்டியில் இருந்த பொருட்கள் அனைத்தும் எடுத்துவரப்பெற்று அவரவர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.
சத்திரத்தில் காலை உணவு. ஓய்வு. மதிய உணவு. ஓய்வு.

மாலை 4.30 க்கு குருஜி பச்சைக்காவடி அவர்கள் தலைமையில் யாத்திரிகர்கள் அனைவரும் கங்கைக்குச் சென்று வழிபாடு செய்து தீர்த்தமாடி, இராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்தில் எடுத்த மணலைக் கங்கையில் சேர்த்தோம்.

பலர் முடி காணிக்கை செலுத்தினர். மாலை நேரத்தில் கங்கா ஆராதனை பார்த்தோம். சத்திரத்தில் இரவு உணவு. ஓய்வு.

மாலையில் கங்கா ஸ்தானம். கங்கா ஆரத்தி வழிபாடு.



அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவேசுவர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் மற்றும் காசி உறை தெய்வங்களின் திருவருள் சித்திப்பதாக…

காசியில் அவசியம் தரிசனம் செய்ய வேண்டிய தெய்வங்கள் யாவை?

குருஜி பச்சைக்காவடி அவர்கள் தலைமையில் வைகாசி 12 (26.05.2014) திங்கள்கிழமை அன்று இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு புனித பாத யாத்திரையை துவக்கி வைகாசி 26 (11.09.2014) இரவு காசி எல்லைக்கு வந்து சேர்ந்தோம்.

காசிக்குப் பாதயாத்திரையாகச் செல்கிறோம். காசியில் வணங்க வேண்டிய தெய்வங்கள் யாவை? என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

எனக்கு ஏற்பட்ட இந்த ஐயத்துக்கு ஒவ்வொருவரும் பலவாறு பதில் சொன்னார்கள்.

இராமேஸ்வரம் காசி புனித பாதயாத்திரிகர்களுள் ஒருவரான சென்னை திரு.D. தனசேகரன் அவர்கள், விழுப்புரம் கைலாசகுருக்கள் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இது பற்றி கேட்டார்.

அவரும், "விசுவேசுவம் மாதவம் துந்திம் தண்டப்பாணிக்க பைரவம் வந்தே காசிம் குகாம் கங்காம் பவானி மணிகர்ணிகாம்" என்று கூறினார்.

1) விசுவேசுவம் = காசி விசுவேசுவரன்
2) மாதவம் = காசி மாதவப் பெருமாள்
3) துந்திம் = விசுவேசுவர் சந்நிதிக்கு எதிரே உள்ள துந்திவிநாயகர்
4) தண்டபாணி = பைரவர் கோயில் அருகில் உள்ள முருகன்
5) பைரவம் = காலபைரவர்
6) வந்தே காசிம் = தண்டபாணி கோயில் அருகில் உள்ள காசிமாதா
7) குகாம் = தண்டபாணி கோயில் அருகில் உள்ள குகைக் கோயில்
8) கங்காம் = கங்கை ஆறு
9) பவானி = விசு வேசுவர் அருகில் உள்ள அம்மன்
10) மணிகர்ணிகாம் = மணிகர்ணிகைத் தீர்த்தம்

இத் தெய்வங்களுடன் சோலிமாதாவையும் சேர்த்து 11 தெய்வங்களைக் காசியில் 11 நாட்கள் தங்கியிருந்து வழிபட வேண்டும் என்று விளக்கம் அளித்தார்.

இன்று 111 ஆம் நாள் - 13.09.2014 ஆவணி 28 சனிக் கிழமை.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் தங்குவதற்கு ஒருவர் மட்டும் தங்கும்படியான அறை ஒன்றையும், பாதயாத்திரிகர்கள் தங்குவதற்கு ஒரு பெரிய அறை ஒன்றையும் சத்திர நிர்வாகிகள் ஒதுக்கிக் கொடுத்தார்கள். பாதயாத்திரிகர்கள் தங்குவதற்கு வாடகை இல்லை. அனைவருக்கும் மூன்று நேரமும் உணவும் இலவசமாக வழங்கினார்கள்.

நாளை ஞாயிற்றுக் கிழமை அலகாபாத் சென்று திருவேணி சங்கமத்தில் தீர்த்தமாடி வரலாம் எனக் குருசாமி அவர்கள் கூறினார் திருவேணி சங்கமத்தில் கங்காதீர்த்தம் பிடித்துவருவதற்கான ஏற்பாடுகளைக் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களும் காசிஸ்ரீ சரவணன் அவர்களும் செய்தார்கள்.

திருவேணி சங்கமத்திலிருந்து இந்த இரண்டு குடங்களிலும் தீர்த்தம் பிடித்து இராமேசுவரம் எடுத்துச் சென்று அபிஷேகம் செய்ய வேண்டும். அதனால் இதற்கென இரண்டு செப்புப் பானைகளையும் அவற்றிற்கான பிரிமனைகளையும், இந்தப் பானைகளைப் பத்திரமாக வைப்பதற்கென ஒரு மரப்பெட்டியையும் தயாராக எடுத்து வைத்திருந்தார் குருசாமி அவர்கள்.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பாதயாத்திரையாக வந்தவர்களின் பெயர் வயது மற்றும் முகவரிகளைச் சரிபார்த்து எடுத்துக் கொண்டு, காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு காசிதேவஸ்தானம் அலுவலகத்தில் கொண்டுபோய்க் கொடுத்துவந்தார்.





யாத்திரிகர்களைப் பார்ப்பதற்காகவும், காசியில் வழிபாடு செய்வதற்காகவும் யாத்திரிகர்களின் குடும்பத்தினர் பலரும் காசிக்கு வந்திருந்து நகரவிடுதியில் அறைகள் எடுத்துத் தங்கியிருந்தனர்.

எனது மைத்துனர் திரு முத்துப்பாண்டி அவர்களும் தங்கை கலையரசியும் வந்திருந்தனர். அவர்கள் இருவரும் குருசாமி பச்சைக்காவடி அவர்களைச் சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டனர்.



குருசாமி அவர்களிடம் ஆசி பெற்றபின்னர், யாத்திரிகர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றனர். குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

இன்று 112 ஆம் நாள் - ஆவணி 29 (14.09.2014) ஞாயிற்றுக் கிழமை.

அதிகாலை 5.00 மணிக்குக் குருசாமி பச்சைக்காவடி அவர்களது தலைமையில் யாத்திரிகர்கள் அனைவரும் வாடகை வாகனங்களில் அலகாபாத் பயணம் ஆனோம்.



அலகாபாத் செல்லும் வழியில் காலை 7.30 மணிக்கு அனைவரும் தேநீர் சாப்பிட்டுக் கொண்டோம். காலை 9.30 மணிக்கு ***பிரயாகை நகரத்தார் சத்திரம் சென்று சேர்ந்தோம்.***



காலை 9.24 மணி



காலை 9.43 மணி சத்திர நிர்வாகிகள் குருசாமி பச்சைக்காவடி அவர்களையும் யாத்திரிகர்களையும் வரவேற்று உபசரித்தனர். குருசாமி அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து விபூதி பிரசாதம் வழங்கினார். அனைவருக்கும் சத்திரத்தில் காலை உணவு.





திரிவேணி சங்கமம் - மூன்று படகுகளில் ஏறி மூன்றுநதிகளும் சேரும் இடத்திற்குச் சென்று தீர்த்தம் ஆடினோம். கங்கையில் புதுப்புனல் வந்து

கொண்டு இருந்தது. யமுனையில் பச்சை நிறத்தில் தண்ணீர் ஓடியது. சரசுவதி பூமிக்குள்ளே இருந்து வெளிவந்து கங்கை யமுனையுடன் இங்கே ஒன்று சேர்கிறது. அந்த இடத்தில் படகுகளை நிறுத்தி, படகுகளுக்கு இடையே கயிற்றைக்கட்டி, அதில் பலகை ஒன்றை இணைத்து, அந்தப் பலகையில் நம்மை நிற்கச் செய்து, திரிவேணி சங்கமத்தில் இறக்கி விடுகின்றனர். பலகையில் நின்றுகொண்டு கயிறைப் பிடித்தபடி மூழ்கித் தீர்த்தமாடினோம். நீரின் அடிப்பகுதியில் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. அந்தக் குளிர்ச்சியான தண்ணீரானது பூமிக்குள் இருந்து மேலே வரும் சரசுவதி நதியின் நீராகும் என்று கூறினர். எல்லோருக்கும் இது போன்று திரிவேணி சங்கமத்தில் தீர்த்தமாடினோம்.

குருசாமி அவர்கள் அனைவருக்கும் ஆளுக்கொரு தீர்த்தக் குடுவைகளை (plastic cane) வாங்கிக் கொடுத்திருந்தார். அதில் கங்கா தீர்த்தம் பிடித்து வைத்துக் கொண்டோம்.

1.48 மணி காசிஸ்ரீ சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களது மூத்த மகன் திரு.சி. ஐயப்பன் அவர்கள் அலகாபாத் நகரில் வசித்து வருகிறார். அவர் யாத்திரிகர்களை அவரது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். அவரது அழைப்பைக் குருஜி அவர்கள் ஏற்றுக் கொண்டு, யாத்திரிகர்களைத் திரு ஐயப்பன் அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஆச்சி திருமதி சரோஜாசின்னக்கருப்பன் அவர்களும், காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களது மகன் திரு ஐயப்பன் அவர்களும், திருமதி சாந்தி ஐயப்பன் அவர்களும், தம்பதி சமேதராக அவர்களது இல்லத்தின் வாயிலில் நின்று வரவேற்றனர்.

திரு ஐயப்பன் அவர்களும், திருமதி சாந்தி ஐயப்பன் அவர்களும் தம்பதி சமேதராகக் குருசாமி அவர்களுக்குப் பாதபூஜை செய்து வழிபட்டு வரவேற்றனர்.



குருசாமி அந்தத் தம்பதியரையும் அவரது குடும்பத்தினரையும் ஆசிர்வதித்தார்.



மதியம் 2.11 மணி மதிய உணவு சிறப்பாக சுவையாக இருந்தது. குடும்பத்தினர் அனைவரும் அன்புடன் உணவு பரிமாறினர்.

அலகாபாத்தில் திரு.சி. ஐயப்பன் அவர்களது இல்லத்தில் இருந்து மாலை 3.20 க்கு புறப்பட்டோம்.



மரத்தடிப் பிள்ளையார் - வழியில் மாலை 5.20க்கு தேநீர் சாப்பிட்டோம். அந்த தேநீர்க் கடையருகே சாலையோரம் மரத்தடியில் பிள்ளையாரையும் சாலக்கிராமக் கற்களைப் போன்ற சில கற்களையும் வைத்து வழிபாடு செய்திருந்தனர். இவை சாதாரண கூலாங்கற்களா? அல்லது சாலக்கிராமக்

கற்களா? என ஆராய்ந்து பார்க்க நேரம் கிடைக்காமல் போனது. இரவு 8.00 மணிக்கு காசி மாநகர் வந்து சேர்ந்தோம். காசியில் நல்ல மழை பெய்து தெருவில் தண்ணீர் நிறைந்து ஓடிக் கொண்டிருந்தது. சத்திரத்தில் இரவு உணவு.


இரவு 10.40 மணிக்கு அருள்மிகு விசுவேசுவர் அர்த்தசாம வழிபாடு நிவேத்திய பிரசாதம் கொண்டு வந்து குருசாமி அவர்களிடம் வழங்கினார்கள். குருசாமி அவர்களும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் " என்று அந்தப் பிரசாதத்தை யாத்திரிகர்களுக்கும் பகிர்ந்து அளித்தார். எல்லாம் அருள்மிகு காசி விசுவேசுவர் திருவருள் மேன்மை.

மெய்யப்பர்கள் அனைவருக்கும் அருள்மிகு காசி விசுவேசுவர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் மற்றும் காசி உறை தெய்வங்களின் திருவருளும், குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும் சித்திப்பதாக...

இன்று 113 ஆம் நாள் - ஆவணி 30 (15.09.2014) திங்கள் கிழமை.

இராமேசுவரம் காசி பாதயாத்திரை செய்த யாத்திரிகர்கள் அனைவருக்கும் காசிஸ்ரீ பட்டம் பெறுவதற்காகக் காசி தேவஸ்தானம் அலுவலகத்திற்குச் செல்வதற்குத் தயாராக இருந்தோம். காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களால் யாத்திரிகர்களது பெயரும் வயதும் முகவரியும் மீண்டும் ஒருமுறை சரிபார்க்கப்பட்டது.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பெற்றுள்ள காசிஸ்ரீ பட்டங்களைக் காசி தேவஸ்தான அலுவலரிடம் காண்பிப்பதற்காக எடுத்து வைத்துக் கொண்டார்.



மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவேசுவர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக...


இன்று 114 ஆம் நாள் - ஆவணி 31 (16.09.2014) செவ்வாய்க் கிழமை.

குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்களை காசி அருள்மிகு விசாலாட்சி கோயிலுக்கு அழைத்துச் சென்றார். யாத்திரிகர்கள் அனைவரும் அன்னையை வழிபட்டு உய்வு அடைந்தோம். இக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்றது. திருப்பணிகள் மற்றும் கும்பிஷேகம் தொடர்பான கல்வெட்டுகள் கோயிலில் உள்ளன.





மாலை 4.53 மணி



"*நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீலஸ்ரீ விசாலாட்சி கோயில்த் திருப்பணி செய்து பிலவங்க வருடம் தை மாதம் 25ஆம் நாள் கும்பாஅபிஷேகம் நடத்தியது*"

(குறிப்பு - நாட்டுக்கோட்டை நகரத்தாரால் காசி விஸ்வநாதர் கோயில் அருகே புதிய இடம் வாங்கி தமிழக கட்டிடகலையில் கி.பி1893இல் விசாலாட்சி கோயில் கட்டப்பபட்டது. இக்கோயிலுக்கு பிலவ ஆண்டு தை மாதம் 25ஆம் நாள்(கி.பி1908இல்) நாட்டுக்கோட்டை நகரத்தாரால் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் நிர்வாகத்தில் உள்ளது. சோமலெ (1963). ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர வரலாறு. பக். 40.)
ஸ்ரீ காசி விசாலாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகம்
விரோதகிருது ஆண்டு ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (01.11.1971) திங்கள் கிழமை நடைபெற்றுள்ளது.

குரோதன ஆண்டு கார்த்திகைத் திங்கள் 7ஆம் நாள் (22.11.1985)இல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றுள்ளது.



பிரமாதி வருடம் ஐப்பசி மாதம் 24ஆம் நாள் (10.11.1999) புதன் கிழமை திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது.



ஸ்ரீ விஜய ஆண்டு சித்திரை மாதம் 4ஆம் நாள் (17.04.2013) புதன்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.





மெய்யன்பர்கள் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவேசுவர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக...

இன்று 115 ஆம் நாள் - புரட்டாசி 1 (17.09.2014) புதன் கிழமை.

காலையில் அருள்மிகு காசிவிசுவநாதர் வழிபாடு. கூட்டம் கூடுதலாக இருந்தது. யாத்திரிகர்கள் கூடுதலாகச் சிறிது நேரம் சந்நிதியில் நின்று வழிபாடு செய்ய அனுமதித்தனர். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் யாத்திரிகர்களும் அருள்மிகு காசிவிசுநாருக்கு அவரவர் கைகளால் அபிஷேகம் செய்து வழிபாடு செய்துகொண்டனர்.





மதிய உணவிற்குப் பின்னர் பலரும் காசியில் பொருட்கள் வாங்குவதற்குச் சென்றனர். தீர்த்தம் உத்திராட்சம் சிறியவிக்கிரகங்கள் மற்றும் பல வழிபாட்டுப்

பொருட்களும், காசியில் செய்யப்படும் தோசைக்கல் முதலான பொருட்களும் நகரத்தார் சத்திரத்திரத்திலும் தரமாகவும் விலை குறைவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

யாத்திரிகர்களும் யாத்திரிகர்களின் உறவினர்களும் நகரத்தார் சத்திரத்திற்கும், கடைவீதிக்கும் சென்று பொருட்கள் வாங்கிக் கொண்டனர்.

காசியில் துணிமணிகள் விலை மலிவு. நுணுக்கமாக விலை விசாரித்து வாங்கினால் மிகவும் இலாபம். காசியிலிருந்து தொடர்வண்டி புறப்படும் நேரத்தில் ஒருவர் வேகவேகமாக வந்து இரண்டு 5அடி உயர சூட்கேஸ்களை ஏற்றினார். நல்லவேளை வண்டி நகரும்போதே அவரும் ஏறிவிட்டார். அவருக்கு உதவி செய்த காரணத்தினால் என்னுடன் நட்புடன் பேசினார். அவர் கும்பகோணம் என்றும் காசிக்கு வந்து சேலைகள் வாங்கிச் செல்வதாவும் கூறினார். ஏ.சி. வண்டியில் பயணம் செய்து இவற்றை வாங்கிச் செல்கின்றீர்களே? உங்களுக்கு இலாபம் கிடைக்குமா? என்று கேட்டேன். காசியில் சேலைகள் மிகவும் விலை மலிவு, இந்த இரண்டு சூட்கேஸ்களில் உள்ள சேலைகளை விற்றால் போதும், ஒரு வருட வியாபரத்திற்குச் சமம் என்றார். கடைகள் தெரிந்து, துணிகளின் தரம் தெரிந்து, அவற்றின் விலை தெரிந்து வாங்கினால், காசியில் சேலைகள் மிகமிக விலை மலிவு. ஏ.சி.யில் பயணம் செய்தால் பொருட்கள் பாதுகாப்பாக இருக்கும் என்றார்.

மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவேசுவர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக...

இன்று 116 ஆம் நாள் - புரட்டாசி 2 (18.09.2014) வியாழக் கிழமை.

பல்குனி ஆற்றின் கரையில் உள்ள புனித விஷ்ணு கயாவில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டும் என அதிகாலையில் எழுந்து யாத்திரிகர்கள் பலரும் இன்று கயாவிற்குப் பயணம் ஆனோம். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் மற்றும் சில யாத்திரிகர்களும் காசியிலேயே தங்கியிருந்தனர்.



வண்டியில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டே பயணம் செய்தோம். காசி முதல் கயா வரையில் சுமார் 250 கி.மீ. தொலைவிற்கும் சிமிண்டில் நான்குவழிச் சாலை அருமையாகப் போட்டுள்ளனர். அலுப்பில்லாத பயணம். திடீரென வண்டியின் வேகம் வெகுவாகக் குறைந்தது. கண் விழித்துப் பார்த்தால் 7.30 (ஏழரை) மணி. ஏழரைபோல் லாரி ஒன்று எதிரே வந்து கொண்டிருந்தது. நல்லவேளை ஓட்டுநர் திறமையால் தப்பித்தோம்.

அதிர்ச்சியிலிருந்து மீண்டு, சற்று நன்கு முழித்துப் பார்த்தால், எங்களது வண்டியின் ஓட்டுநர் வண்டியை வலதுபக்க (ஒருவழி)ச் சாலையில் ஓட்டி வருகிறார் என்பது புரிந்தது. ஒருவாராக அவருக்குப் புரியும்படிப் பேசி, வண்டியை இடபுறம் உள்ள சாலையில் செலுத்தச் செய்து பயணத்தைத் தொடர்ந்தோம்.



பகல் 10.00 மணிக்கு கயாவில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தோம்.



பகல் 10.02 மணி.. சத்திர நிர்வாகி எங்களை வரவேற்றார். எங்களுக்கான காலை உணவை எடுத்து வைத்திருந்தினர். சிலர் தர்ப்பணம் கொடுத்தபின்னர் சாப்பிட்டுக் கொள்ளலாம் எனக் காலை உணவு சாப்பிட வில்லை. சத்திரத்தில்

தங்குவதற்கும் குளிப்பதற்கும் துவைப்பதற்கும் வசதிகள் இருந்தன. 10.30 மணிக்கு பல்குனி ஆற்றிற்குத் தர்ப்பணம் கொடுப்பதற்காகச் சென்றோம். சத்திரத்தில் இருந்து பாண்டாக்களுக்கு அலைபேசியில் பேசித் தகவல் சொல்லிவிடுகின்றனர். எனவே தர்ப்பணம் கொடுப்பதற்குப் பாண்டாக்களைத் தேட வேண்டிய அவசியமில்லை.





பகல் 11.41 மணி. தர்பண காரியங்கள் செய்வதற்காக தென்னிந்தியருக்கு தனியாக இடவசதி உள்ளது. உடுப்பி பட்கள் செய்து

வைக்கிறார்கள். தென்னிந்தியருக்கு ஏற்பாடு செய்யும் பண்டாக்கள் அருமையாகத் தமிழ் பேசுகிறார்கள். தர்ப்பணம் செய்யும் இடத்தில் தமிழர் கூட்டம் அதிகம் இருந்தது. கயாவில் தர்ப்பணம் செய்யும்போது அம்மாவுக்காகத் தனியாக 12 பிண்டங்கள் வைக்கின்றனர். அப்பொழுது தாயானவள் அவளது குழந்தைகளுக்காக என்னென்ன வேதனைகளை அனுவித்திருப்பாள் என்று விவரித்து, தனக்காகப் பட்ட ஒவ்வொரு வேதனைக்கும் ஒவ்வொரு பிண்டம் வைக்கும்போதும் நம் விழிகளில் தானாகவே நீர் பெருக்கெடுக்கும்.

கயாவிலும் பத்ரியிலும் ஸ்ராத்தம் செய்தபோதும், வருடாவருடம் செய்யும் "வர்ஷச்ராத்தம்" விடுபடக்கூடாதென்றும், அதனைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்றும் பாண்டா விளக்கம் கூறினார்.

பகல் 12.36 மணி பல்குனி ஆறு தெற்கிலிருந்து வடக்காகப் (உத்தரவாகிணியாகப்) பாய்ந்து செல்கிறது. ஏராளமானோர் அவரவர் முன்னோர் பொருட்டுத் தர்ப்பணம் கொடுத்துக் கொண்டிருந்தனர். தர்ப்பணம் கொடுத்தபின்னர் இங்குள்ள விஷ்ணு கோயிலில் அட்சயவடத்தில் வழிபாடு செய்துகொண்டோம்.

இங்கிருந்து புறப்பட்டு ஹரித்வார் வழியாக பத்ரி சென்று, அங்கும் அலக்னந்தா கரையில் ஸ்ராத்தம் செய்கின்றனர். பிரம்ம கபாலத்தில் பிண்டம் கொடுக்கலாம் என்றனர். ஆனால் நாங்கள் அதற்கான ஏற்பாடுகளுடன் வரவில்லை. இன்றே காசிக்குத் திரும்பிச் செல்ல வேண்டி இருந்த காரணத்தினால் நாங்கள் அலக்னந்தா செல்லவில்லை.

நகரத்தார் சத்திரத்தில் மதிய உணவு.

அதன்பின்னர் புத்தகயா சென்று வழிபாடு செய்து கொண்டோம்.

அங்கிருந்து பயணமாகி காசிக்குத் திரும்பி வந்து சேர்ந்தோம்.




மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவேசுவர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக...

காசிஶ்ரீ பட்டம் பெறுதல்

இன்று 117 ஆம் நாள் - புரட்டாசி 3 (19.09.2014) வெள்ளிக் கிழமை.

தினசரி காலைவழிபாட்டை முடித்து, காலை உணவு சாப்பிட்டு முடித்ததோம். சுப ஓரை நேரம் தொடங்கியதும் சுமார் 10.00 மணிக்குக் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு காசிதேவஸ்தான அலுவலகத்திற்குச் சென்றார்.


TITLE OF AWARDS AS
KASHI SHREE VALAYAPATTI SHREE
RAMESHWARAM SHREE KASHI SHREE
RAMESHWARAM TO KASHI PADAYATRA
FOR THE WELFARE OF THE INDIANS AS A WHOLE

12-09-2014

KASHI SHREE BATCHAI KAVADI OF VALAYAPATTI
IN PUDUKKOTTAI DISTRICT IN TAMIL NADU
UNDERTOOK PADAYATRA ELEVENTH TIME
FROM RAMESHWARAM TO KASHI PADAYATRA.

UNDER HIS LEADERSHIP TWENTY DEVOTEES
STARTED THEIR PADAYATRA FROM RAMESHWARAM
ON 26-05-2014 AND REACHED KASHI VISHWANATH TEMPLE
AT VARANASI ON 12-09-2014 IN UTTAR PRADESH STATE.

THIRU **K.KALAIRAJAN** (Age 57)
OF KARAIKUDI
SHIVGANGAI DISTRICT IN TAMILNADU
PARTICIPATED IN THIS PADAYATRA IS AWARDED

KASHI SHREE

BY THE CHIEF EXECUTIVE OFFICER OF
SHREE KASHI VISHWANATH TEMPLE,
VARANASI IN UTTAR PRADESH STATE.

CHIEF EXECUTIVE OFFICER
SHREE KASHI VISHWANATH TEMPLE,
VARANASI IN UTTAR PRADESH STATE.

காசி தேவஸ்தான அலுவலகத்தின் நிர்வாக முதன்மைச் செயல்அலுவலர் அவர்கள் வெறொரு பணி காரணமாகச் சென்றிருந்தார். குருசாமி பச்சைக்காவடி அவர்களும், காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களும் அவர் பணியில் இருக்கும் இடத்திற்குச் சென்று பார்த்து வந்தனர். மதியம் 12.30 மணி ஆகிவிட்டது. யாத்திரிகர்கள் வந்து காத்திருப்பதைத் தொலைபேசி வழியாகத் தகவல் தெரிவித்தனர். அதற்கு அவர், யாத்திரிகர்களை மதியம் சாப்பிட்டுவிட்டு வருமாறும், அதற்குள் தானும் திரும்பி வந்து விடுவதாகவும் கூறினார். எனவே குருசாமி பச்சைக்காவடி அவர்கள் யாத்திரிகர்ளை அழைத்துக் கொண்டு சத்திரத்திற்கு வந்து மதிய உணவு சாப்பிட்டுவிட்டு மீண்டும் தேவஸ்தான அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்.

‘காசி தேவஸ்தான அலுவலகத்தின் நிர்வாக முதன்மைச் செயல்அலுவலர் அவர்கள்’ மதிய உணவு நேரத்திற்குப் பின்னர் அலுவலத்திற்கு வந்திருந்தார். மதியம் 1.00 மணி முதல் 3.00 மணிவரை சுபஓரை நேரம் என்பதால், அந்த சுபஓரை நேரத்தில் குருசாமி பச்சைக்காவடி அவர்களை முதலாவதாக அழைத்துக் காசிஸ்ரீ பட்டம் வழங்கினார்.

குருசாமி பச்சைக்காவடி அவர்களைத் தொடர்ந்து யாத்திரிகர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்களுக்கு உரிய “காசிஸ்ரீ” பட்டத்தை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

அந்த நிமிடத்தில் இருந்து யாத்திரிகர்கள் அனைவரும் அருள்மிகு காசி விசுவநாதார், அருள்மிகு காசி விசாலாட்சி, அருள்மிகு காசி அன்னபூரணி மற்றும் காசியில் உறைந்துள்ள அனைத்துத் தெய்வங்களின் திருவருளால் “காசிஸ்ரீ” என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் ஆனோம்.

குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்கு இது 11ஆவது பாதயாத்திரை யாகும். எனவே அவருக்கு இதற்கு முன்னர் வழங்கப் பெற்றுள்ள 10 சான்றிதழ்களையும் சரிபார்த்து, அந்தப் பத்துச் சான்றிதழ்களையும் ஒன்றாக்கி, அத்துடன் இந்த 11ஆவது பாதயாத்திரையும் சேர்த்து மொத்தமாக ஒரே சான்றிதழாகக் காசிஸ்ரீ பட்டம் வழங்கினார். இதனால் குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்கு வழங்கப்பெற்ற காசிஸ்ரீ சான்றிதழில் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பெற்ற காசிஸ்ரீ பட்டங்கள் தொடர்பான வாசகம் இடம் பெற்றிருந்தது.

இராமேசுவரம் - காசி பாதயாத்திரை மேற்கொண்ட யாத்திரிகர்கள் அனைவரும் பெரிதும் மகிழ்ந்து, குருசாமி பச்சைக்காவடி அவர்களையும் முதன்மைச் செயல்அலுவலர் அவர்களையும் வணங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

தினசரி இரவு வழிபாட்டை முடித்து, இரவு உணவு சாப்பிட்டு முடித்த பின்னர், யாத்திரிகளும், சமையல் பணியாளர்களும், உறவினர்களும் குருசாமி பச்சைக்காவடி அவர்களுடன் அமர்ந்து புகைப்படம் எடுத்து மகிழ்ந்தோம்.



இரவு 8.17 மணி
மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக.....

காசி புனித பாத யாத்திரை நிறைவு நாள்

இன்று 118 ஆம் நாள் - புரட்டாசி 4 (20.09.2014) சனிக் கிழமை.

யாத்திரிகர்களும் உறவினர்களும் காசிமாநகரில் உள்ள சிறப்பான இடங்களுக்கு அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப பல கோயில்களுக்கும் சென்று வழிபட்டு வந்தனர் .

காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் உள்ள பிர்லா விஸ்வநாதர் கோயில் (பிர்லா மந்திர்). சங்கட் மோட்சன் - ஆஞ்சநேயர் கோயில். இங்கு சுத்தமான நெய்யில் சுவையான லட்டு விற்பனை செய்கின்றனர். துளசிதாசரின் 'மானஸ் மந்திர்'. துர்க்கா குண்ட் (துர்க்கை கோயில்). ஹனுமான் காட்டிலுள்ள சிவன் கோயில் முதலான இடங்களுக்குச் சென்ற வந்தனர்.









குடிமாதா (சோழி மாதா) கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்துகொண்டு நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்தோம். மதிய உணவு.

காசியில் காலபைரவர் வழிபாடு **-** மாலை 3.20 மணிக்கு யாத்திரிகர்கள் அனைவரும் காசி நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தில் இருந்து புறப்பட்டு பாத யாத்திரையாக 2 கி. மீ. தூரத்தில் உள்ள கால பைரவர் கோயில் சென்று வழிபாடு செய்து, அருள்மிகு காலபைரவரின் திருவருளைப் பெற்றோம்.

இத்துடன் இராமேசுவரம் - காசி பாதயாத்திரை இனிதே நிறைவு பெற்றது.

நாளை இரவு தொடர்வண்டியில் இராமேஸ்வரம் பயணம் .
24.09.2014 அன்று இராமேஸ்வரம் கோயிலில் புனித கங்கை அபிஷேகம் வழிபாடு.

இந்த யாத்திரையில் மானசீகமாக என்னுடன் பயணித்த அன்பர்கள் அனைவருக்கும் திருவருள் சித்திப்பதாக .

அருள்மிகு திருப்பூவணநாதர் மின்னாள் திருவருளைச் சிந்தித்து, குருஜி பச்சைக்காவடி அவர்களின் பாதம் பணிந்து ,
அருள்மிகு காசி விசுவேசுவர், காசி விசாலாட்சி, காசி அன்னபூரணி, காசி காலபைரவர் மற்றும் காசி உறை தெய்வங்களின் திருவருள்
சித்திப்பதாக .....

இன்று 119 ஆம் நாள் - புரட்டாசி 5 (21.09.2014) ஞாயிற்றுக் கிழமை.

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, 110 நாட்கள் பயணம் செய்து, 12.09.2014 அதிகாலை கங்கையைக் கடந்து காசிமாநகர் வந்து சேர்ந்து காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் 10 நாட்களாகத் தங்கியிருந்து வழிபாடுகள் செய்து கொண்டிருந்தோம். நேற்று அருள்மிகு காலபைரவர் கோயிலுக்குப் பாதயாத்திரை சென்று வழிபாடு செய்து எங்களது பாதயாத்திரையை நிறைவு செய்தோம்.



இராமேசுவரம் திரும்புதல் -

இன்று 119 ஆம் நாள் - புரட்டாசி 5 (21.09.2014) ஞாயிற்றுக் கிழமை. குருசாமி பச்சைக்காவடி அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் அன்னதானவண்டியில் திரும்பி வருவதாகவும், மற்றபிற யாத்திரிகர்கள் அனைவரும் காசி-இராமேசுவரம் தொடரியில் பயணம் செய்வதாகவும் குருசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

அதன்படி மற்றபிற யாத்திரிகர்கள் அனைவரும் மாலை 7.00 மணிக்குக் காசியில் இருந்து இராமேசுவரத்திற்குப் பயணம். நேற்று மாலை நேரத்தில் காலபைரவரைக் கும்பிட்டுவிட்ட காரணத்தினால் இனிமேல் அருள்மிகு காசி விசுவநாதர் உட்பட, காசியில் உள்ள பிற கோயில்களுக்குச் செல்ல வேண்டாம் எனக் குருசாமி அவர்கள் அறிவுரை வழங்கினார்.

காசியில் உள்ள கடைகளுக்குச் சென்று அவரவருக்கு வேண்டிய திண்பண்டங்களையும் மற்றபிற பொருட்களையும் வாங்கி மூடையாகக் கட்டி வைத்துப் பயணத்திற்கு அனைவரும் ஆயத்தமானார்கள். தொடரியில்

படுக்கைக்குக் கீழே வைப்பது போன்று மிகவும் குறைவான உயரத்தில் மூடையாகக் கட்டி வைத்தனர்.

கீழே கடைகள், மாடியில் ஸ்ரீ பிரகஸ்பதி கோயிலும் இருந்தது. கோயில் இடத்தில் கடையா? கடையின் மாடியில் கோயிலா? என்ற சிந்தனைகளுடன் கடைவீதியில் காசிஅல்வா, தேன்நெல்லி, காசி லட்டு, காசி மிட்டாய், அப்பளம் மற்றும் விளையாட்டுப் பொருட்களை வாங்கி வந்தோம்.

ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திரத்தில் பயணத்தின்போது சாப்பிடுவதற்குத் தேவையான உணவைப் பொட்டலமாகக் கட்டிக் கொடுத்தனர். பயணத்தின்போது இந்த உணவுப் பொட்டலங்கள் பசியைப் போக்கின.

மாலை 6.00 மணிக்குச் சுபஹோரை நேரத்தில் யாத்திரிகர்கள் ஆட்டோக்களில் பயணம் செய்து காசி தொடரி சந்திப்பு நிலையத்தை அடைந்தோம். சரியான நேரத்தில் வண்டி புறப்பட்டது. எல்லோரும் அவரவர் உறவினர்களுக்குத் தொலைபேசி வாயிலாக அவரவர் வருகையைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். “காசிஸ்ரீ” என்ற பட்டத்துடன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக.....

ஞாயிறு, 20 செப்டம்பர், 2020

காசி பாதயாத்திரை 120 ஆம் நாள் - புரட்டாசி 6 (22.09.2014)

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, 7 மாநிலங்கள் வழியே, 110 நாட்களில் சுமார் 2510 கி.மீ. நடந்து, 12.09.2014 அதிகாலை கங்கையைக் கடந்து காசிமாநகர் வந்து சேர்ந்து, காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் 10 நாட்களாகத் தங்கியிருந்து, தெய்வங்களை வணங்கி வந்தோம்.

இராமேசுவரம் திருப்புதல் -

நேற்று புரட்டாசி 5 (21.09.2014) அன்று காசியிலிருந்து தொடரியில் இராமேசுவரம் பயணம் ஆனோம்.

இன்று 120 ஆம் நாள் - புரட்டாசி 6 (22.09.2014) திங்கள் கிழமை.

நாங்கள் தொடரியில் பயணம் செய்து கொண்டிருந்தோம்.

குருசாமி அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் காசியில் இருந்து புறப்பட்டு அன்னதான வண்டியில் சாலைவழியாக வந்து கொண்டிருந்தனர். வரும் வழி நெடுகிலும் பாதயாத்திரையின் போது யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்த அன்பர்கள் அனைவருக்கும் காசித் தீர்த்தமும் விபூதி பிரசாதமும் வழங்கிக்கொண்டு வந்து கொண்டிருந்தார். அவ்வப்போது எங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நலம் விசாரித்துக் கொண்டார்.

காசி - இராமேசுவரம் தொடர் வண்டியில் உணவு வசதி இல்லை. ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திரத்தில் பயணத்தின்போது சாப்பிடுவதற்குத் தேவையான உணவைப் பொட்டலமாகக் கட்டிக்

கொடுத்திருந்தனர். பயணத்தின்போது இந்த உணவுப் பொட்டலங்கள் பசியைப் போக்கின. ஆங்காங்கே கிடைத்த உணவுகளை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு பயணத்தில் இருந்தோம்.

பயணத்தின்போது பாதயாத்திரையாகச் சென்று தங்கியிருந்த ஊர்கள் ஏதேனும் வருகிறதா? என ஆர்வமாகக் கேட்டறிந்து கொண்டும், நடைப்பயணத்தின் போது நடைபெற்ற பலவேறு நிகழ்ச்சிகளையும் பேசி ஆராய்ந்து கொண்டே பயணம் மேற்கொண்டிருந்தோம்.

நாளை செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்குச் சென்னை சென்று சேர்வோம். மாலை 6.00 மணிக்குத் திருச்சிராப்பள்ளியும், இரவு 8.30 மணிக்குக் காரைக்குடியும், நள்ளிரவு நேரத்தில் இராமேசுவரமும் சென்று சேர்வோம். புதன்கிழமை காலையில் இராமேசுவரத்தில் வழிபாடு.

மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக.....

திங்கள், 21 செப்டம்பர், 2020

இன்று காசி பாதயாத்திரை - 121 ஆம் நாள், புரட்டாசி 7 (23.09.2014)

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, 7 மாநிலங்கள் வழியே, 110 நாட்களில் சுமார் 2510 கி.மீ. நடந்து, 12.09.2014 அதிகாலை கங்கையைக் கடந்து காசிமாநகர் வந்து சேர்ந்து, காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் 10 நாட்களாகத் தங்கியிருந்து வழிபாடுகள் செய்து வந்தோம்.

இன்று 121 ஆம் நாள் - புரட்டாசி7 (23.09.2014) செவ்வாய்க் கிழமை

இராமேசுவரம் திரும்புதல் - நேற்றும் இன்றும், காசி-இராமேசுவரம் தொடர்வண்டியல் இராமேசுவரத்திற்குப் பயணம் செய்து கொண்டிருந்தோம்.

குருசாமி அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் காசியில் இருந்து புறப்பட்டு அன்னதான வண்டியில் சாலைவழியாக வந்து கொண்டிருந்தனர். வரும் வழி நெடுகிலும் பாதயாத்திரையின் போது யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்த அன்பர்கள் அனைவருக்கும் காசித் தீர்த்தமும் விபூதி பிரசாதமும் வழங்கி வந்தனர். குருசாமி அவர்கள் அவ்வப்போது எங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நலம் விசாரித்துக் கொண்டார்.

காலை 6.46 மணிக்குத் தொடர்வண்டி ஆந்திரா மாநிலம் நெல்லூர் வந்து சேர்ந்தது. காசிஸ்ரீ சிவப்பா அவர்கள் அடுத்து கூடூர் சந்திப்பு (GUDUR JN) வந்ததும் இறங்கிக் கொள்வதாகவும், அங்கிருந்து பேருந்தில் அவரது ஊருக்குச் செல்வதாகவும் கூறினார். அவர் எங்களுடன் இராமேசுவரம் வருவதற்கு விருப்பம் தான், ஆனால் இராமேசுவரத்தில் இருந்து மீண்டும் அவரது ஊருக்குத் திரும்புவதற்குத் தோதான பேருந்து வசதியோ, தொடர்வண்டி வசதியோ இல்லாத காரணத்தினாலும், அவருக்குச் சரியாகத் தமிழ் பேச வராத காரணத்தினாலும் அவர் கூடூரில் இறங்கிக் கொள்வதாகக் கூறினார். பின்னர் ஒருநாள் அவர் தனது நண்பருடன் சேர்ந்து இராமேசுவரம் வந்து வழிபாடு செய்து கொண்டு திரும்பிக் கொள்வதாகவும் கூறினார்.

காலை 8.16 மணிக்குத் தொடர்வண்டி கூடூர் வந்து சேர்ந்தது. காசிஸ்ரீ சிவப்பா அவர்கள் குருசாமி பச்சைக்காவடி அவர்களின் அனுமதி

பெற்று, கூடூர் சந்திப்பில் இறங்கிக் கொண்டார். யாத்திரிகர்கள் அனைவரும் அவரை வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

காலை 11.00 மணிக்கு சென்னை எழும்பூர் வந்து சேர்ந்தோம். காசிஸ்ரீ மாதவன் அவர்கள் யாத்திரிகர்கள் அனைவருக்கும் சாப்பாடும் தண்ணீரும் கொண்டு வந்து கொடுத்தார்கள். காசிஸ்ரீ தனசேகரன் அவர்களின் துணைவியார் திருமதி தனசேகரன் அவர்கள் யாத்திரிகர்கள் அனைவருக்கும் ரொட்டியும் தேநீரும் குளிர்பானங்களும் வழங்கினார்கள்.

மாலை 6.00 மணிக்குத் தொடர்வண்டி திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தது. காசிஸ்ரீ அங்கமுத்து அவர்களின் நண்பர்கள் பழங்களும் தண்ணீரும் வாங்கிக் கொடுத்தனர்.

இரவு 8.30 மணிக்குக் காரைக்குடியில் காசிஸ்ரீ காளைராசன் அவர்களது சம்பந்தி திரு. பழனியப்பன் அவர்கள் யாத்திரிகர்கள் அனைவருக்கும் இரவு உணவும் தண்ணீரும் பழங்களும் வழங்கினார்.

நள்ளிரவுக்கு மேல் இராமேசுவரமும் சென்று சேர்வோம். நாளை புதன்கிழமை காலையில் இராமேசுவரத்தில் வழிபாடு.

மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருள் சித்திப்பதாக.....

இன்று காசி பாதயாத்திரை நிறைவு - 122 ஆம் நாள், புரட்டாசி 8 (24.09.2014)

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் - காசி பாதயாத்திரை. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, 7 மாநிலங்கள் வழியே, 110 நாட்களில் சுமார் 2510 கி.மீ. நடந்து, *12.09.2014 அதிகாலை கங்கையைக் கடந்து காசிமாநகர் சென்று சேர்ந்தோம்.* காசியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் 10 நாட்களாகத் தங்கியிருந்து வழிபாடுகள் செய்து வந்தோம். புரட்டாசி 5 (21.09.2014) ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணிக்குக் காசி-இராமேசுவரம் தொடர்வண்டியில் இராமேசுவரத்திற்குத் திரும்பினோம்.

குருசாமி அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் அன்னதான வண்டியில் காசியில் இருந்து புறப்பட்டு சாலைவழியாக வந்து கொண்டிருந்தனர். வரும் வழி நெடுகிலும் பாதயாத்திரையின் போது யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்த அன்பர்கள் அனைவருக்கும் காசித் தீர்த்தமும் விபூதி பிரசாதமும் வழங்கி வந்து கொண்டிருந்தார். அவ்வப்போது எங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நலம் விசாரித்துக் கொண்டார்.

இன்று 122 ஆம் நாள் - புரட்டாசி8 (24.09.2014) புதன் கிழமை

23.09.2014 நள்ளிரவு 12.00 மணிகடந்து 30 நிமிடங்கள் ஆகிவிட்டது.
24.09.2014 மணி 00.30 ஆகும் போது இராமேசுவரம் வந்து சேர்ந்தோம்.

திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் சார்பாகத் திரு முத்துப்பாண்டி அவர்களும், திரு முத்துக்குமாரசாமி அவர்களும், திரு ஞானபண்டிதன் அவர்களும் மற்றும் பலரும் இராமேசுவரம் வந்திருந்து யாத்திரிகர்கள் ஒவ்வொருவருக்கும் சால்வை அணிவித்து வரவேற்றனர்.





பரமக்குடியிலிருந்து சில அன்பர்கள் சிலர் வந்திருந்து யாத்திரிகர்களை வரவேற்றனர்.

அதிகாலையில் இராமேசுவரத்தில் தீர்த்தமாடி, அருள்மிகு இராமநாதசாமியையும், அருள்மிகு மலைவளர்காதலி (பர்வத வர்த்தினி) அன்னையையும் வணங்கிக் கொண்டோம். யாத்திரிகர்கள் திருவேணி சங்கமத்தில் இருந்து கொண்டு வந்து கொடுத்த தீர்த்தத்தால் சுவாமிக்கும் அம்பாளுக்கும் காலைநேர அபிஷேகம் செய்தனர்.

காலை 8.18 மணிக்குக் காலைஉணவு. மதுரை காசிஸ்ரீ கந்தசாமி அவர்கள் யாத்திரிகர்கள் அனைவருக்கும் காலையுணவு வழங்கினார்.வழிபாடு செய்து உய்வடைந்தோம்.

காலை உணவு முடிந்த பின்னர் யாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அவரவர் ஊர்களுக்குச் செல்ல ஆயத்தம் ஆனார்கள். மதுரை காசிஸ்ரீ கந்தாமி அவர்களை அழைத்துச் செல்ல அவரது குடும்பத்தினர் வந்திருந்தனர்.

பரமக்குடி காசிஸ்ரீ பஞ்சவர்ணம், காசிஸ்ரீ கந்தசாமி மற்றும் இராமநாதபுரம் காசிஸ்ரீ தாமோதரன் இவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்தனர். திருச்சிராப்பள்ளி காசிஸ்ரீ அங்கமுத்து, காசிஸ்ரீ கலியபெருமாள், இவர்கள் திருச்சி செல்லும் பயணிகள் வண்டியில் மதியம் புறப்பட்டுச் செல்லத் தயாராக இருந்தனர். பாண்டிச்சேரி தொப்பை என்ற கலியபெருமாள், மற்றும் சென்னை காசிஸ்ரீ தனசேகரன் இருவரும் மாலைநேரத்தில் புறப்படும் சென்னை விரைவு வண்டியில் புறப்படத் தயாராக இருந்தனர்.

திருவெறும்பூர் காசிஸ்ரீ சண்முகவேலு அவர்கள் இரவு நேரத்தில் புறப்படும் சென்னை விரைவு வண்டியில் திருச்சிக்குப் புறப்படத் தயாராக இருந்தார்.



காலை 8.20 மணி காரைக்குடி அண்ணன் காசிஸ்ரீ சின்னக்கருப்பன் அவர்களும், நானும் காரைக்குடிக்குப் புறப்படத் தயார் ஆனோம். எனது அண்ணனும் தம்பியும் தம்பிமகனும் இராமேசுவரம் வந்திருந்து எங்கள் இருவரையும் காரைக்குடிக்கு அழைத்துச் சென்றனர்.

எங்களுடன் நின்று கொண்டிருந்த, எனது மைத்துனர் திருப்பூவணம் திரு முத்துப்பாண்டி அவர்களிடமும், சென்னை காசிஸ்ரீ தனசேகரன் அவர்களிடமும், திருப்பூவணம் திரு முத்துக்குமாரசாமி மற்றும் திருப்பூவணம் ஞானபண்டிதன் இவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு, மகிழுந்தில் காரைக்குடிக்குப் பயணம் ஆனோம்.

மதியம் 1.00 மணிக்குக் காரைக்குடி வந்து சேர்ந்தோம்.

24.05.2014 அன்று காலை வழிபாடு செய்து கொண்டு உணவு சாப்பிட்டுவிட்டு வீட்டிலிருந்து யாத்திரைக்காகக் புறப்பட்டு, இறையருளால் பாதயாத்திரையை நிறைவு செய்து இராமேசுவரத்தில் மீண்டும் வழிபாடு செய்து, நான்கு மாதங்கள் கழித்து, இன்று 24.09.2014 அன்று மதியம் வீட்டிற்கு வந்து சேர்ந்து வழிபாடு செய்து கொண்டு மதிய உணவு சாப்பிட்டோம்.

இறையருளால் இராமேசுவரம்-காசி பாதயாத்திரையும், காசி-இராமேசுவரம் தொடர்வண்டியில் பயணமும் இனிதே நிறைவுற்றன.

அன்னதான வண்டியில் திரும்பி வந்து கொண்டிருக்கும் குருசாமி பச்சைக்காவடி அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் 06.10.2014 அன்று காரைக்குடி வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.



மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருளும், இராமேசுவரம் அருள்மிகு மலைவளர்காதலி உடனாய இராமநாதசுவாமியின் திருவருளும் சித்திப்பதாக.

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் - காசி பாதயாத்திரை.

123 ஆம் நாள் - புரட்டாசி 9 (25.09.2014) வியாழக் கிழமை.

குருசாமி பச்சைக்காவடி ஐயா அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் அன்னதான வண்டியில் காசியில் இருந்து புறப்பட்டு சாலைவழியாக வந்து கொண்டிருந்தனர். வரும் வழி நெடுகிலும் பாதயாத்திரையின் போது யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்த அன்பர்கள் அனைவருக்கும் காசித் தீர்த்தமும் விபூதி பிரசாதமும் வழங்கி வந்து கொண்டிருந்தார். இவ்விருவரையும் தவிர்த்த மற்றபிற பாதயாத்திரிகர்கள் அனைவரும் நேற்று இராமேசுவரத்தில் அபிஷேகம் செய்து கொண்டு இராமேசுவரம் - காசி பாதயாத்திரையை நிறைவு செய்து அவரவர் வீடுகளுக்குத் திரும்பினோம்.

124 ஆம் நாள் - புரட்டாசி 10 (26.09.2014) வெள்ளிக் கிழமை.

அன்னதான வண்டியில் திரும்பி வந்து கொண்டிருக்கும் குருசாமி பச்சைக்காவடி அவர்களும், காசிஸ்ரீ சரவணன் அவர்களும் 06.10.2014 அன்று காரைக்குடி வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

125 ஆம் நாள் - புரட்டாசி 11 (27.09.2014) சனிக் கிழமை.

அவரவர் வீடுகளில் இராமேசுவரம் - காசி பாதயாத்திரை நிறைவு வழிபாடு செய்து கொண்டோம்.

126 ஆம் நாள் - புரட்டாசி 12 (28.09.2014) ஞாயிற்றுக்கிழமை.

யாத்திரிகர்கள் சிலர் அவரவர் குலதெய்வ கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்து கொண்டதாகத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தனர்.

127 ஆம் நாள் - புரட்டாசி 13 (29.09.2014) திங்கள் கிழமை.

யாத்திரிகர்கள் சிலர் அவரவர் குலதெய்வ கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்து கொண்டதகாகத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தனர்.

128 ஆம் நாள் - புரட்டாசி 14 (30.09.2014) செவ்வாய்க் கிழமை.

உற்றார் உறவினர் சுற்றத்தார் பலரும் வந்து பார்த்து நலம் விசாரித்துக் காசி தீர்த்தமும் பிரசாதமும் பெற்றுச் சென்றனர்.

129 - 133 ஆம் நாட்கள் - புரட்டாசி 15 முதல் 19 முடிய (01.10.2014 - 05.10.2014).

உற்றார் உறவினர்கள் சுற்றத்தார் பலரும் வந்து பார்த்து நலம் விசாரித்துக் காசி தீர்த்தமும் பிரசாதமும் பெற்றுச் செல்கின்றனர் எனச் சில யாத்திரிகர்கள் தொலைபேசியில் தகவல் தெரிவித்தனர். அன்னதான வண்டியில் திரும்பி வந்து கொண்டிருக்கும் குருசாமி பச்சைக்காவடி அவர்களும், காசிஸ்ரீ சரவணன்

அவர்களும் 06.10.2014 அன்று காரைக்குடி வந்து சேர்வார்கள் என எதிர்பார்த்து இருந்தோம்.

134 ஆம் நாள் - புரட்டாசி 20 (06.10.2014) திங்கள் கிழமை.

பாதயாத்திரை நடைபெற்றபோது வழி நெடுகிலும் யாத்திரிகர்களை வரவேற்று உபசரித்த அன்பர்கள் அனைவருக்குக் காசித் தீர்த்தமும் விபூதி பிரசாதமும் வழங்கிக் கொண்டே குருசாமி அவர்கள் அன்னதான வண்டியில் திரும்பி வந்து கொண்டிருந்தார். இன்று புரட்டாசி 20 (06.10.2014) மாலைநேரம் வைரவன்பட்டிக்கு வந்து சேர்ந்தனர். இரவு இங்கே தங்கியிருந்தனர். நாளை அதிகாலை வைரவன்பட்டியிலிருந்து புறப்பட்டு இராமேசுவரம் சென்று அருள்மிகு பர்வதவர்த்தினி உடனாய இராமநாதசுவாமிக்குக் கங்காதீர்த்த அபிஷேகம் செய்து வழிபாடு.

135 ஆம் நாள் - புரட்டாசி 21 (07.10.2014) செவ்வாய்க் கிழமை.

காசி பாதயாத்திரை நிறைவு வழிபாடு -

இன்று இராமேசுவரத்தில் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் காசிஸ்ரீ சரவணன் அவர்களையும், காசிஸ்ரீ காளைராசன் அவர்களையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றார். அருள்மிகு இராமநாதசுவாமியையும் பர்வதவர்த்தனி அம்பாளுக்கும் கங்காதீர்த்த அபிஷேகம் செய்து வழிபாடு செய்து கொண்டார்.

மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருளும், இராமேசுவரம் அருள்மிகு மலைவளர்காதலி உடனாய இராமநாதசுவாமியின் திருவருளும் சித்திப்பதாக.....

வழிபாடு முடிந்தபின்னர், காசிஸ்ரீ சரவணன் அவர்கள் இராமேசுவரத்திலிருந்து பேருந்தில் அவரது ஊருக்குப் பயணமானார். குருசாமி பச்சைக்காவடி அவர்களும் காசிஸ்ரீ காளைராசன் அவர்களும் இராமேசுவரத்திலிருந்து அன்னதானவண்டியில் புறப்பட்டு கோட்டையூர் வந்து சேர்ந்து காளைராசன் வீட்டில் தங்கியிருந்தனர்.

இன்று 136 ஆம் நாள் - புரட்டாசி 22 (08.10.2014) புதன்கிழமை

இன்று பிள்ளையார்பட்டியில் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் அபிஷேகம் செய்து வழிபாடு செய்துகொண்டார். காசிஸ்ரீ சின்னக்கருப்பன் செட்டியார் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து கொண்டர்.

மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு கற்பகவிநாயகர், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருளும், இராமேசுவரம் அருள்மிகு மலைவளர்காதலி உடனாய இராமநாதசுவாமியின் திருவருளும் சித்திப்பதாக.....

இன்று *137* ஆம் நாள்*,* புரட்டாசி *23 (09.10.2014)வியாழக் கிழமை.*

இன்று 09.10.2014 அன்று பொன்னமராவதி வலையபட்டியில் குருசாமி பச்சைக்காவடி அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்று மலையாண்டி கோயிலில் வழிபாடு செய்து கொண்டார்.



இத்துடன் இராமேசுவரம் காசி பாதயாத்திரையும், அதன் தொடர்ச்சியான அனைத்து வழிபாடுகளும் நிறைவுற்றன. மெய்யன்பர் அனைவருக்கும் குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு கற்பகவிநாயகர், அருள்மிகு காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காசி உறை தெய்வங்கள், மற்றும் காலபைரவர் திருவருளும், இராமேசுவரம் அருள்மிகு மலைவளர்காதலி உடனாய இராமநாதசுவாமியின் திருவருளும் சித்திப்பதாக.....

காசிஸ்ரீ, முனைவர், நா. ரா. கி. காளைராசன்

https://kasi-pathayathrai-kalairajan.blogspot.com/



வலையபட்டி சித்தர்
காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்களின்
இராமேசுவரம் - காசி
புனித பாதயாத்திரையில் எனது அனுபவங்கள்
பயணக்கட்டுரை நிறைவு

காசிஸ்ரீ, முனைவர், நா. ரா. கி. காளைராசன்

காசி பாதயாத்திரையில் ஓர் அதிசயம்
ஆனால் உண்மை,
அனைத்தும் ஆனைமுகத்தான் அருள்

வெள்ளி, 25 செப்டம்பர், 2020

காசி புனித பாதயாத்திரையில் ஓர் அற்புத நிகழ்ச்சி -

வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களின் 11ஆம் ஆண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமியை வணங்கிக் கொண்டு 26.05.2014 அன்று காசி-பாதயாத்திரையைத் தொடங்கி, ஆடி 27 (12.08.2014) செவ்வாய்கிழமை மகாராஷ்டிர மாநிலம் கண்கட்டி (kankati) என்ற ஊரில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் இருந்து புறப்பட்டு சுமார் 25 கி.மீ. யாத்திரை மேற்கொண்டு புட்டிபூரி (Butibori) என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம்.

அந்த ஊரில் உள்ள மருத்துவர் ஒருவரின் மகனும் அவரது நண்பர்களும் சாலையோரம் நின்று குருசாமி பச்சைக்காவடி அவர்களையும் யாத்திரிகர்களையும் வரவேற்றனர். அந்த மருத்துவருக்குச் சொந்தமான நீண்ட பெரிய அடுக்குமாடி வணிக வளாகம் சாலையோரம் இருந்தது. அந்தக் கட்டிடத்தில் தங்கினோம். கட்டிடப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மதிய உணவிற்குத் தேவையான காய்கறிகள், சமையல் எண்ணெய், குடிதண்ணீர் இவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தனர். குறிப்பாக மதுரை காசிஸ்ரீ கந்தசாமி அவர்களுக்கு வெற்றிலையும் பாக்கும் தேடிப்பிடித்து வாங்கி வந்து கொடுத்தனர்.

மாலைநேரத்தில் அந்தக் கட்டிடத்தின் உரிமையாளரான அந்த மருத்துவரும் அவரது நண்பர்கள் சிலரும் வந்து குருசாமி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றனர். நீண்ட நேரம் குருசாமி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த மருத்துவர் மிகப் பெருஞ் செலவில் இந்த வணிக வளாகத்தைக் கட்டியுள்ளார். முக்கால்வாசி வேலைகள் முடிவடைந்தநிலையில், உள்ளூர் அரசியல் வாதியிடமிருந்து மிரட்டல், அந்த இடத்தை தொழிற்சாலை வளாகமாக மாற்றித் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், அதனால் இந்தக் கட்டிடத்தை அரசு கையகப்படுத்தி இடிக்கப் போவதாகவும் கூறியுள்ளார். மருத்துவரும் நீதிமன்றத்தை நாடியுள்ளார். வாய்தா எல்லாம் வாங்கி முடித்தபின்னர், வழக்கறிஞர் இதை சட்டப்படி மாற்ற முடியாது என்று கூறியுள்ளார். தீர்ப்பும் அப்படியே வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுள்ளார். அங்கும் அரசுக்குச் சதாகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

இனி எந்தவொரு நாளிலாவது அரசு தரப்பில் ஆட்கள் வந்து கட்டிடங்களை இடித்துத் தள்ளுவார்கள் என்ற நிலை. அந்நாளில் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்றுள்ளார். இந்த ஊரில் சாலையோரம் உள்ள இந்தக் கட்டிடம் பயன்பாட்டில் இல்லாமல் சும்மா கிடந்துள்ளது. இங்கே சென்று யாத்திரிகர்களுடன் தங்கியுள்ளார். யாத்திரிகர்கள் வந்து கட்டிடத்தில் தங்கியுள்ள செய்தியை அருகில் நின்று கொண்டிருந்த ஒருவர் வழியாகச் சொல்லி அனுப்பி யுள்ளார். செய்தி அறிந்த அந்தக் கட்டிடத்தின் உரிமையாளரான மருத்துவர், நேரில் வந்து குருசாமி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

அப்போது, இந்தக் கட்டிடம் பெரும் பொருட் செலவில் கடன்வாங்கிக் கட்டப்பெற்றுள்ளதையும், நீதிமன்றங்களில் அரசிற்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், எந்த நாளிலும் இந்தக் கட்டிடம் இடிக்கப்படலாம் என்ற தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.



அது கேட்ட குருசாமி பச்சைக்காவடி அவர்கள், இங்கே எங்களைத் தங்கும்படிச் செய்தவர் பிள்ளையார் ஆவார். பிள்ளையார் எங்களை இங்கே தங்கச் சொல்லித்தான் நாங்கள் இங்கே தங்குகிறோம். நீங்களும் முழு நம்பிகையுடன் 108 நாட்கள் பிள்ளையாரைத் தினமும் வழிபாடு செய்து வாருங்கள். இந்தக் கட்டிடம் உங்கள் கையை விட்டுப் போகாது என்று கூறி ஆசீர்வதித்துள்ளார்.

நீதிமன்றங்கள் எல்லாம் கைவிரித்துவிட்ட இந்த இக்கட்டான நிலையில், எல்லாமும் முடிந்துவிட்டது என்ற நிலையில், இனிமேல் கட்டிடத்தை இடிப்பதுதான் பாக்கி என்ற நிலையில், குருசாமி பச்சைக்காவடி அவர்கள் கூறிய இந்தச் சொற்கள் மட்டுமே ஆதரவாக இருந்துள்ளன.

அரும்பாடு பட்டுக் கட்டிய கட்டிடம் இடிபடக்கூடாது, என் உழைப்பில் கட்டிய அந்தக் கட்டிடம் என்றும் என்னிடமே இருக்க வேண்டும் என்ற வேண்டுதலுடன் அந்த மருத்துவர் தினமும் பிள்ளையாரை வழிபட்டு வந்துள்ளார்.

கட்டிடத்தை இன்று இடிப்பார்கள், நாளை இடிப்பார்கள் என்று நாட்கள் நகர்ந்து கொண்டே சென்றுள்ளன. அரசியலில் திடீர் மாற்றமாக அந்த ஊரில் இருந்த மற்றொருவர் பதவியேற்க, அவர் அவருக்குச் சொந்தமான இடத்தில் தொழில்வளாகம் அமைக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி அதைக் கொண்டுபோய் அரசிடம் கொடுத்துள்ளார். அவரது கோரிக்கை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் கூறிய இடத்தில் தொழில்வளாகம் ஆரம்பிக் அரசு உத்தரவு வழங்கிவிட்டது.

அரசின் இந்தப் புதிய ஆணையால், மருத்துவரின் இந்தக் கட்டிடம் இடிபடாமல் தப்பித்துவிட்டது. எல்லாமும் முடிந்துவிட்டன என்றிருந்த நிலையில் குருசாமி பச்சைக்காவடி அவர்களது வழிகாட்டுதலின்படித் தினமும் பிள்ளையாரை வழிபட்டதன் பலனாகத் தங்களது சொத்து மீண்டும் தங்களுக்கே வந்துவிட்டது என்று அந்த மருத்துவர் அகம் மகிழ்ந்து கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னாளில் அந்த மருத்துவரும் அவரது குடும்பத்தினரும் ஆனைமுகத்தானுக்கும் குருசாமிக்கும் அடியார் ஆகிவிட்டோம் என்றும் கூறி மகிழ்ந்தார். எல்லாம் ஆனைமுகத்தான் திருவருள். அனுதினமும் ஆனைமுகத்தானை வணங்குதல் செய்வோம்.

குருசாமி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்களது குருவருளும், அருள்மிகு ஆனைமுகத்தான் திருவருளும், அருள்மிகு காசிவிசுவநாதர் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

பாதயாத்திரையும், புளியும் வேம்பும் .



இவற்றின் இலைகளை ஆய்ந்து சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு வேக வைக்க வேண்டும். அந்தத் தண்ணீர் சூடாக இருக்கும் போது துண்டை நனைத்து எடுத்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். கால் மூட்டு வலிக்குச் சிறந்த வைத்தியம்.

வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது போன்று, மாதம் ஒருமுறையாவது புளியஇலையையும் வேப்பயிலையையும் போட்டு வேகவைத்து இளஞ்சூட்டில் குளிக்கலாம். உடல் அசதி ஓடிப்போய் விடும்.

காசிஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் 2013ஆம் ஆண்டு இராமேசுவரத்திலிருந்து காசிக்குப் பாதயாத்திரை செய்தார். இராமேசுவரத்திலிருந்து புறப்பட்டு புதுக்கோட்டை வரும்போது கால்கள் இரண்டும் வீக்கம் ஆகிவிட்டன. திருச்சியோடு பாதயாத்திரையை முடித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தார். ஆனால் யாத்திரைக்கு வந்திருந்த சமையல்காரர் வேப்பயிலை புளியயிலையை வேக வைத்து ஒத்தடம் கொடுத்துள்ளனர். இப்படி ஒத்தடம் கொடுத்துக் கொண்டே தினமும் நடந்து சென்றார். இராமேசுவரம் காசி பாதயாத்திரையை நிறைவு செய்தும் விட்டார்.

வேப்பயிலையும் புளியயிலையும் இருக்கும் போது மூட்டுவலி கால்வீக்கம் உடல்அசதி என்றால் கவலைப்படவே வேண்டாம்.

தென்னமரக்குடி எண்ணெய்



எனக்கு நான்கு வருடங்களாக இடதுகால் மூட்டில் வலி இருந்து வந்தது. அதை மூன்றே நாட்களில் குணமாக்கி விட்டார். 2014ஆம் ஆண்டு எனது குருசாமியான வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் 20 அடியார்களை அழைத்துக் கொண்டு இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொண்டார். இந்த 20 யாத்திரிகர்களுள் நானும் ஒருவன். அலுவலகத்தில் அமர்ந்தே வேலைசெய்து பழக்கப்பட்ட எனக்கு இந்த 123நாட்கள் பாதயாத்திரை மிகுந்த உடல்வலியை ஏற்படுத்தியது. பாதயாத்திரையின் இடையே, எனது இடதுகால் மிகவும் வலித்தது. ஆனாலும் தொடர்ந்து நடந்து எனது பாதயாத்திரையை நிறைவு செய்தேன். 2014ஆம் ஆண்டைத் தொடர்ந்து குருசாமி பச்சைக்காவடி அவர்கள் 2015ஆம் ஆண்டு நடத்திய இராமேசுவரம் காசி பாதயாத்திரையில் கலந்து கொண்டு நாக்பூரிலிருந்து காசிக்குப் பாதயாத்திரை செய்தேன். அடுத்தடுத்த வருடங்களில், 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் குருசாமி பச்சைக்காவடி அவர்கள் பிள்ளையார்பட்டியிலிருந்து தொடங்கி பழமுதிர்சோலை திருப்பரங்குன்றம் திருச்செந்தூர் பழனி சுவாமிமலை திருத்தணிகை என அறுபடைவீடுகளுக்கும் 60 நாட்களில் 1157 கி.மீ. பாதயாத்திரை மேற்கொண்டார்கள். அப்போது குருசாமி பச்சைக்காவடி அவர்களுடன் நானும் அறுபடைவீடு பாதயாத்திரை மேற்கொண்டேன். எனது இடதுகால் முட்டியில் வலி இருந்தபோதும், காலை நேராக நீட்ட முடியாதபோதும் 2014, 2015, 2016, 2017 ஆண்டுகளில் பாதயாத்திரை செய்து, இறையருளாளும் குருவருளாளும் பாதயாத்திரைகளை நல்லபடியாக நிறைவு செய்து வழிபாடு செய்து வந்தேன். எனது இடதுகாலை நேராக நீட்டமுடியாமல் சிரமப்படுகிறேன் என்பதை அறிந்த குருசாமி பச்சைக்காவடி அவர்கள் என்னை திருவாரூர் சென்று கோயில்அருகே வடக்குவடம்போகி தெருவில் உள்ள AKR தென்னமரக்குடி வைத்தியரைப் பார்க்குமாறு அறிவுறுத்தினார். நானும் வைத்தியர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர் மருத்துவமனையில் இருக்கும் விபரம் அறிந்துகொண்டு நேரில் சென்றேன். எனது கால்களைப் பரிசோதித்த பின்னர், எனது இடதுகால் மூட்டில் வலி இருந்த இடத்தில் ஒருரூபாய் நாணயங்கள் சிலவற்றை வைத்துக் கட்டிவிட்டார். மூன்றாவது நாள்

கட்டைப் பிரித்த பின்னர் தென்னமரக்குடி எண்ணெய்யைப் பயன்படுத்துமாறு கூறினார்.

மூன்றாவது நாள் கட்டைப் பிரிக்கும் போது, என்னால் எனது இடதுகாலை நன்றாக நேராக நீட்ட முடிந்தது. வலியில்லை. இதுநாள் வரை இந்தவலி மீண்டும் வரவேயில்லை. மருத்துவருக்கு எனது நன்றி.
தை 6 (201.01.2020) செவ்வாய்க்கிழமை

தென்னமரக்குடி என்பது வைத்தியரின் முன்னோர்கள் வாழ்ந்த கிராமத்தின் பெயர். இவரது முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக வைத்தியம் செய்து வருகின்றனர். நான் வைத்தியம் பார்த்துக் கட்டுப் போட்டுக் கொண்டு வெளியே வரும்போது மருத்துமனையில் நான்கைந்துபேர் வைத்தியத்திற்காகக் காத்திருந்தனர். பொது மக்களிடம் இந்த வைத்தியசாலை பிரபலமடைந்துள்ளதைக் காண முடிந்தது. இணையத்தில் தென்னமரக்குடி எண்ணெய் என்ற பெயரில் இப்போது வேறுசிலரும் எண்ணெய் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

<u>பின்னிணைப்பு</u>

நகரத்தார் தர்மங்களும் நானும்

வணக்கம். இவையெல்லாம் நகரத்தார்களின் தர்மத்தினால் எனக்கு விளைந்தன.

(1) எனது முன்னோர்கள் தேவகோட்டை நகரத்தாரிடம் பணியாற்றியவர்கள். (2) எனது துவக்கக் கல்வி கல்லல் நகரத்தார் பள்ளி. (3) உயர்கல்வி மதுரை தியாகராஜர் கல்லூரி. (4) ஆன்மிக அறிவு பெற்றது திருப்பூவணம் ஸ்ரீவேதாந்த மடம். (5) வேலைவாய்ப்பு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம். (6) அழகப்பா பல்கலைக்கழகத்தில் எனக்குப் பணிநியமன் வழங்கியவர் மேனாள் துணைவேந்தர் மாண்புமிகு இராதா. தியாகராஜன் அவர்கள். (7) காரைக்குடியில் முதன்முதலில் என்னையையும் ஒரு பிள்ளையாகப் பாவித்து நான் வசிக்க வீடு கொடுத்தது கண்டரமாணிக்கம் பழனியப்பன் செட்டியார். (8) திருப்பூவணம் கோயில் திருப்பணிகள் தேவகோட்டை நகராத்தார். (9) திருப்பூவணம் ஆடித்தபசு மண்டபம் புணர்நிர்மானம் மற்றும் கும்பாபிஷேகம் திருப்பணிகள் பேராசிரியர்.இராம.திண்ணப்பன் ஐயா அவர்கள். (10) ஸ்ரீபொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் தலைவர் பேராசிரியர், இராம. திண்ணப்பன் ஐயா அவர்கள். துணைத்தலைவர் தேவகோட்டை (இருப்பு மதுரை) திரு பழ. சோமசுந்தரம் அவர்கள். (11) காளையார்கோயில் தலபுராணம் புத்தகம் வெளியிடப் பெரிதும் உதவியாய் இருந்தவர் மாண்புமிகு தேவகோட்டை ஜமீன்தார் அள. அரு. சோம. நாராயணன் ஐயா அவர்கள், (12) எனது முதுகலை பட்டப்படிப்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகம். (13) எனது முனைவர் பட்ட ஆய்விற்கு காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் முன்னாள் முதல்வர் அம்மா நா.வள்ளி அவர்கள். (14) எனது இல்லம் அமைந்துள்ளது நகரத்தார் வசிக்கும் கோட்டையூர். (15) வழிபடு தெய்வங்களின் பாடல்களை வழங்கியவர் கருப்பணசாமியாடி ஐயா மீனவன் அவர்கள். (16) காசியாத்திரைக்கான இந்த வாய்ப்பை நல்கியது பொன்னமராவதி வலையபட்டி காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்கள். எனது நல்வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி எனக்கு நல்வழி காட்டி வருபவர் புதுவயல் (இருப்பு காரைக்குடி) காசிஸ்ரீ சுப. சின்னகருப்பன் அவர்கள்.

இறைவன் அருளிய வண்ணம், இவ்வாறாக எனது வாழ்க்கை நகரத்தார்களின் தர்மத்துடன் தொடர்புடையதாகவே உள்ளது. அறம் வளர்க்கும் நகரத்தார் சமுதாயத்திற்கு என்றென்றும் அடியேன். நன்றி உடையேன்.

அன்பன்

காசிஸ்ரீ, முனைவர், நா. ரா. கி. காளைராசன்

நூலாசிரியர் குறிப்பு

குல தெய்வம் – அருள்மிகு பூரணை புஷ்கலை உடனாய புலிக்கரை ஐயனார், கண்டாங்கிபட்டி, தமராக்கி.

காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்*,*



28A, குருநாதர்கோயில் தெரு, கோட்டையூர் - 630 106

தொடர்பு எண் - 94435 01912, 824 826 6418,

மின்னஞ்சல் - kalairajan26@gmail.com

பிறந்த நாள் - 26.10.1957

பூர்வீகம் – தமராக்கி, சிவகங்கை மாவட்டம்.

பிறந்த ஊர் – காளையார்கோயில், சிவகங்கை மாவட்டம்

வளர்ந்த ஊர் – திருப்பூவணம், சிவகங்கை மாவட்டம்

முன்னோர் புலம் பெயர்ந்த ஊர் – மாரநாடு கிராமம், சிவகங்கை மாவட்டம்.

முன்னோர் புலம் பெயர்ந்த நாடு – மயன்மார் (பர்மா), யங்கோன் (ரங்கோன்) மற்றும் யோராஞ்சி கிராமம் (தட்டோன் மாவட்டம் இன்னின் (Yinnyein) கிராமம் அருகில்),

கல்வித் தகுதி

B.Sc. (Mathematics), மதுரை தியாகராசர் கல்லூரி,

M.A., (Tamil), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

M.Phil., (Tamil), திருப்பூவணநாதர் கோயில் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.

Ph.D., (Tamil), திருப்பூவணப் புராணம் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.

அலுவலகப் பணி - துணைப்பதிவாளர், (விருப்பப் பணிஓய்வு நாள் 30.04.2015), அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

காசி பாதயாத்திரை - வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரைகள்.

(1) இராமேசுரம் காசி பாதயாத்திரை (காசிஸ்ரீ பட்டம்). 24.05.2014 அன்று இராமேசுரம் கோயிலில் இருந்து புறப்பட்டு 12.09.2014 அன்று காசி விசுவநாதர் கோயில் வழிபாடு. 110 நாட்கள் நடைப் பயணம்.

காசிஸ்ரீ பட்டம் - யாத்திரையின் நிறைவாக புரட்டாசி 3 (19.09.2014) வெள்ளிக் கிழமையன்று காசிதேவஸ்தான அலுவலகத்தில், காசி தேவஸ்தான அலுவலகத்தின் நிர்வாக முதன்மைச் செயல்அலுவலர் அவர்களால் ***“காசி ஸ்ரீ” பட்டம்*** வழங்கப் பெற்றது. (2) 20.04.2015 அன்று இராமேச்சுரத்தில் இருந்து புறப்பட்டு காசி பாதயாத்திரை சென்று கொண்டிருந்தார். காரைக்குடியிலிருந்து நாக்பூருக்குத் தொடர்வண்டியில் பயணம் செய்து, 19.07.2015 அன்று நாக்பூருக்குச் சென்றடைந்து இந்தப் பாதயாத்திரையில் சேர்ந்து கொண்டு காசி பாதயாத்திரை. 25.08.2015 அன்று காசியை அடைந்து விசுவநாதர் கோயில் வழிபாடு. 38 நாட்கள் நடைப் பயணம்.

அறுபடைவீடு பாதயாத்திரை - வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரை. பிள்ளையார்பட்டியிலிருந்து புறப்பட்டு, பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருச்செந்தூர் அறுபடைவீடு பாதயாத்திரை –

1) 53 நாட்கள் (07.04.2016 முதல் 30.05.2016 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்,
2) 60 நாட்கள் (08.06.2017 முதல் 06.08.2017 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்.

மதுரை மானாமதுரை ஆன்மிகப் பாத யாத்திரைகள் - (1) மானாமதுரை வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் தலைமையில், மதுரையிலிருந்து வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை 3 நாட்கள் (2014, மாசி பூரணை) .
(2) மதுரையிலிருந்து வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை 3 நாட்கள் (2015, மாசி பூரணை).

ஆன்மிகப் பணி

1) திருப்பூவணம் கோயிலில் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் இணைச்செயலாளர்,
2) திருப்பூவணம் ஆடித்தபசு மண்டபம் திருப்பணி ஒருங்கிணைப்பாளர்,
3) சக்குடி கோயில் புனர்நிர்மாணம் துவக்கிடத் தூண்டுதலான பணிகள் செய்தமை.
4) *ஆராய்ச்சி அமைப்பாளர், திருவிளையாடற் புராண ஆராய்ச்சி மையம், மதுரை*

எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்



1) திருப்பூவணக் காசி - திருப்பூவணம் திருக்கோயில் அமைப்பும் சிறப்பும் மற்றும் திருக்கோயில் தொடர்பான பாடல்கள், திருப்பூவணமானது எவ்வாறு காசியிலும் சிறந்தது என்பதற்கான விளக்கங்கள் உள்ளன. இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவியுடன் அச்சிடப்பெற்று 24-09-2007 அன்று திருப்பூவணம் கோயிலில் தவத்திரு குன்றக்குடிப் பொன்னம்பல அடிகளார் அவர்களால், மானாமதுரை வேதியரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள் முன்னிலையில் வெளியிடப்பெற்றது.

2) திருப்பூவணப் புராணம் - 1620 ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்துப் பாடப் பெற்ற திருப்பூவணப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் நாள் (15.03.2009) அன்று திருப்பூவணம் கோயிலில் மானாமதுரை வேதியரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்களால் வெளியிடப் பெற்றது. ஐயா பட்டமுத்து அவர்கள் முதற்ப் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்.



இந்நூலாசிரியரின் இணைய நண்பர் திரு.சீறினிவாசன் அவர்களது பெருமுயற்சியால் இணையதளத்தில் திருப்பூவணப் புராணம் (thirupoovana-puraanam) வெளியிடப்பெற்றுள்ளது.

3) பொழில் திகழும் பூவணம்- திருப்பூவணம் தொடர்பான அனைத்து விபரங்களையும் தொகுத்து திருப்பூவணம் கோட்டை வழக்கறிஞரும், பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் மேனாள் செயலாளருமான திரு.சண்முகநாதன் அவர்களது பொருளுதவியுடன் இந்நூல் சிறு கையேடாக வெளியிடப் பெற்றுள்ளது.

4) காளையார்கோயில் தலபுராணம் (கதைச்சுருக்கம்). காளையார்கோயில் தலபுராணம் பங்குனி 13 (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பெற்றது. தேவகோட்டை ஜமீன்தார் அள.அரு.சோம.நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்கள் மற்றும் ஸ்ரீகாசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் முன்னிலை வகித்தனர். தேவகோட்டை இலக்கியமேகம் ஸ்ரீனிவாசன் அவர்கள் நூலை அறிமுகம் செய்தார். ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளைத் தலைவர் தேவகோட்டை பேராசிரியர் இராம. திண்ணப்பன் அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். காளையார்கோயில் பரம்பரை ஸ்தானிகம் திரு. காளீசுவர குருக்கள் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.



அவரைத் தொடர்ந்து தேவகோட்டை உ.மு.பழ.ராம.பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், காசிஸ்ரீ சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களும், சென்னை உமாபதிப்பகம் திரு.இராம. லெட்சுமணன் செட்டியார் அவர்களும் மற்றும் திருக்கானப்பேர் அன்பர் குழுவின் தலைவர் பாஸ்கரன் அவர்களும், செயல்தலைவர் வெல்டிங் ஏ.கண்ணன் அவர்களும், சிவனடியார் கா. தவமணி அவர்களும், சிவகங்கை ஈசாயோகா மையம் திரு.மாயன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். திருக்கானப்பேர் சூர்யா கண்ஸ்ட்ரக்சன்ஸ் டி.என். கருணாநிதி அவர்கள் நன்றி கூறினார்.

5) <u>கள்ளழகர் வரலாறும், சித்திரைத் திருவிழா நேரடி வர்ணிப்பும் (ஓலைச்சுவடியில் உள்ளபடி)</u>



“கள்ளழகர் வரலாறும், சித்திரைத் திருவிழா நேரடி வர்ணிப்பும் - மின்னூல்” பங்குனி 4 (17 மார்ச் 2021), புதன்கிழமை, காலை 10.30 மணிக்கு, அழகப்பா பல்கலைக் கழகக் கருத்தரங்கக்கூடத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் வெளியிடப்பட்டது. மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் நா. இராஜேந்திரன் அவர்கள் மின்னூலைப் பெற்றுக் கொண்டு தலைமையுரை வழங்கினார்.

6) எழுத்தில், பிழைத்திருத்தத்தில், அச்சில் உள்ள நூல்கள்
1) திருப்பூவண நாதருலா (மூலமும் உரையும்), 2) திருஆப்புடையார் புராணம், 3) காளையார்கோயில் புராணம் (மூலமும் உரையும்), 4) காளையார்கோயில் கல்வெட்டுகள், 5) திருவாடானைப் புராணம், 6) சூரைமாநகர் புராணம் (மூலமும் உரையும்), 7) மருதூர் அந்தாதி (ஓலைச் சுவடியில் உள்ளபடி). 8) ***உலகம் உருவானது எப்படி? கடல்கொண்ட குமரி - கங்கன் கங்கை கடல்வெள்ளம்,*** புவியியல் புத்தகம். 9)நாட்டரசன்கோட்டை ஸ்ரீ கண்ணுடையம்மன் பேரில் களியாட்ட மகத்துவச் சிந்து (1908)

ஒலிக் குறுந்தகடுகள் வெளியீடு . திருப்பூவணம் தேவாரப்பாடல்கள் அடங்கிய ஒலிக்குறுந்தகடும், திருப்பூவணப் புராணக் கதைகள் அடங்கிய குறுந்தகடும் என இரண்டு குறுந்தகடுகள் இந்நூலாசிரியரால் வெளியிடப் பெற்றுள்ளன.



திருப்பூவணப் புராணம் ஒலிப்பதிவு குறுந்தகடு வெளியிடுதல்
வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் வெளியிட
காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் நா.வள்ளி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

கட்டுரைகள் - முனைவர் கி. காளைராசன் அவர்களது படைப்புகளை ஆன்மிகம், ஆன்மிக அறிவியல் மற்றும் திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவருடைய கட்டுரைகள் தினபூமி, தினமலர், மஞ்சரி, தமிழ் மாருதம், செந்தமிழ்ச் செல்வி, ஓம்சக்தி, மெய்கண்டார், கண்ணியம் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. சமீபத்தில் வெளியான கட்டுரை - “கீழடியில் கிடைத்தனவும், கிடைக்காதனவும்” (தினமலர் 18.08.2020)



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் திரு. இளங்கோ முன்னிலையில், பேராசிரியர் இராம.திண்ணப்பன் செட்டியார் அவர்களிடமிருந்து, திருப்பூவணம் பதிகங்களை ஓதுவார் திரு. முத்துக்குமார் அவர்களது குழுவினருடன் சேர்ந்து பாடிய ஒலிப்பதிவு குறுந்தகட்டைத் திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. செந்தில் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

ஆன்மிகக் கட்டுரைகள் - 1) "ஐயாவிடம் சொல்லிவிட்டேன் அவர் பார்த்துக்கொள்வார்" காரைக்குடி-கோட்டையூர் அருகில் உள்ள வேலங்குடி கிராமத்தில் வீற்றிருந்து அருளும் சொற்கேட்ட விநாயகரின் திருவருள் பற்றியது.
2) "என்பிழை பொறுப்பாய் எம்மானே" திருப்பூவணத்தில் சிவபெருமான் பார்வதி தேவிக்கு வரம் அருளியது.
3) "பாவம் போக்கும் பூவணம்" திருப்பூவணத் திருத்தலத்தின் பெருமைகள் குறித்து எழுதப் பெற்றது.
4) "சித்தர் வடிவில் சிவபெருமான்" 36ஆவது திருவிளையாடற் புராணம் - சித்தர் வடிவில் சிவபெருமான் திருப்பூவணத்தில் எழுந்தருளி இரசவாதம் செய்தருளியது.
5) "ஆற்றின் குறுக்கே 1008 லிங்கம்" திருப்பூவணத்தில் திருக்கோயில் எதிரே ஓடும் வைகை ஆற்றில் லிங்கங்கள் புதையுண்டிருப்பது பற்றிய கட்டுரை.
6) "கல்லா? கடவுளா? " கல்லால் ஆன வடிவங்கள் எப்படிக் கடவுள் போன்று செயல்பட முடியும் என்பதற்கான விளக்கம்.
7) "சாமி என்ன சாப்பிடவா செய்கிறார்? " கடவுளுக்குப் படைக்கப்படுபவை அவரை எவ்வாறு சென்றடைகின்றன என்பதற்கான விளக்கம்.

ஆன்மிக அறிவியல்
கட்டுரைகள் - 8) "சிவனும் பெருமாளும் ACயும் DCயும்" (இறைவடிவங்களும் மின்சாரத்தின் வடிவங்களும் ஒன்றாய் உள்ளன என்று விளக்கும் கட்டுரை).
9) "ஆடல்வல்லானே அறிவியல் இறைவன் (தனி ஊசல் விதிகளுக்கு ஏற்ப ஆடல்வல்லானின் (நடராசரின்) ஆட்டம் உள்ளது" என்ற விளக்கக் கட்டுரை)


10) “விஞ்ஞானத் தொலைகாட்சிப்பெட்டியும் மெய்ஞ்ஞானக் கோயில்களும்” - தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள காட்சிக் குழாயின் (Picture Tube) வடிவமும் செயலும் நடராசரின் வடிவத்துடனும் செயலுடனும் ஒத்து இருப்பதை விளக்கும் கட்டுரை.

11) “மதுரைக்கு வந்த சுனாமி” - பிரளயகாலத்தில் சுனாமி ஏற்பட்டு நான்கு முறை மதுரைக்கு வந்துள்ளது என்பதைத் திருவிளையாடற் புராணம் கொண்டு விளக்கும் கட்டுரை.

திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்

12) “வள்ளுவரும் வாஸ்துவும்” திருக்குறளின் பாயிர அதிகார அமைப்பு முறையானது வாஸ்து இலக்கணப்படி உள்ளது என்பதை விளக்கும் கட்டுரை

வரிசைஎண்	திசை	திசை அதிபதி	குறள் அதிகாரம்
1.	கிழக்கு	இந்திரன்	கடவுள் வாழ்த்து
2.	மேற்கு	வருணன்	வான் சிறப்பு
3.	தெற்கு	எமன்	நீத்தார் பெருமை
4.	வடக்கு	(குரு)குபேரன்	அறன் வலியுறுத்தல்



13) “திசைதெய்வங்களைத் தொழும் திருவள்ளுவர்” திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களும் திசை தெய்வங்களை வணங்கி எழுதப்பெற்றுள்ளன என்பதை விளக்கும் கட்டுரை.

14) “ஆனை முகத்தானே(னோ) ஆதிபகவன்” - முதற் குறளில் குறிப்பிடப்பெற்றுள்ள "ஆதிபகவன்" என்பது விநாயகப் பெருமானையே குறிக்கும் என்பது பற்றியது.

15) “குறளிலும் சோதிடம்” இராகு கேது இவற்றின் சோதிட அமைப்பில் ஐந்தாவது . குறள் எழுதப்பட்டுள்ளது என்பதை விளக்கும் கட்டுரை


16) “திருக்குறளில் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர் யார்?” என்பது பற்றிய விளக்கம்


17) “குறள் கூறும் இறைவன்” பத்தாவது குறளில் கூறப்பெற்றுள்ள இறைவன் அனந்த சயனப் பெருமாளாகும்.

18) “அமரருளும் ஆரிருளும்” குறள் 121 பற்றிய புதிய சிந்தனை விளக்கம்.

19) “தெய்வந் தொழாள்? ” குறள் 55 பற்றிய புதிய சிந்தனை விளக்கம்.

புவியியல் கட்டுரைகள்
புவியியல் கட்டுரைகள்










1. கங்கன் என்ற 2000 கி.மீ. விட்டம் கொண்ட நெருப்பு விண்கோள் பூமியில் மோதிப் பூமியைத் துளைத்துப் பூமியின் உள்ளே சென்றதால் இமயமலை (Rim) உருவாகி உள்ளது !
2. கங்கன் என்ற விண்கோள் பூமியில் மோதிப் பூமியைத் துளைத்து உள்ளே சென்றபோது ஏற்பட்ட அதிர்வினால் பூமியின் சுமார் 75% சிதறிட, மீதமுள்ள 25% மேற்பரப்பு கண்டங்களாகப் பிளவுபட்டு உள்ளது.
3. கங்கன் என்ற விண்கோள் பூமியில் மோதிப் பூமியைத் துளைத்து உள்ளே சென்றபோது ஏற்பட்ட தாக்கத்தினால் பூமியின் மறுபக்கம் தரைப்பகுதியைக் கொண்ட கண்டங்கள் ஏதும் இல்லாமல் போனது. எரிமலைத் தொடர்கள் (Ring of Fire) உருவாகியுள்ளது.
4. கங்கன் பூமியில் மோதி இமயமலை உருவாகும்போது தெறித்து விழுந்த பாறைக் குழம்புகள் இறுகித் திருப்பரங்குன்றம், திருமயம், திருச்சி, திண்டுக்கல் முதலான கிரானைட் குன்றுகளாக உள்ளன.
5. கங்கன் பூமிக்குள் துளைத்துச் சென்ற பின்னர் பிதுங்கி வெளியே வந்த பாறைக் குழம்புகள் இறுகி ஆல்ப்ஸ்மலை, மேற்குத் தொடர்ச்சி மலை முதலான நீண்டமலைத் தொடர்கள் உருவாகியுள்ளன. இதனால் கண்டங்கள் உருவாகிக் கண்டப்பெயர்ச்சி ஏற்பட்டுள்ளது.
6. பூமியின் நடுப்பகுதியில் கங்கன் இன்றும் தீப்பிளம்பாக உள்ளது.

2000 கி.மீ. விட்டம் கொண்ட கங்கன் பூமியில் மோதிப் பூமியின் மையக்கருவாக உள்ளது. கங்கனின் நிறைக்கு (Mass)ச் சமமான நிறையுள்ள பூமியின் மறுபகுதி பிய்த்து எறியப்பட்டுச் சந்திரனாக உருவாகியுள்ளது.


Ganga Puranam Theory :
Ganga, a celestial salt ice water planet was attracted by the earth and that was collided.That place became as Takalamakan Desert.
kalairajan26@gmail.com



Ganga
Himalaya
Ganga Puranam Theory :
Ganga, a celestial salt ice water planet hited on earth. That place was became Takalamakan Desert.
kalairajan26@gmail.com



Ganga Puranam Theory :
The celestial ice water planet fall on earth.
That place became as taklamakan desert. Ganga's water drilled the earth's surface. and came out at Mariana Trench. That's why takalamakan desert and Mariana trench are very deepest.
kalairajan26@gmail.com
17 Sep 2017
Google
IBCAO, Data SIO, NOAA, U.S. Na... 13°47'02"N 110°59'11"E 21,116 km


Ganga Puranam Theory :
Ganga was a celestial sedimentary water ice planet. It was attracted by the earth and fall on at the place of takalamakan desert.
When its water flowed on earth, the colluvium & alluvium formed Thailand, Indonesia and Japan landscapes.
kalairajan26@gmail.com
Google
IBCAO, Data SIO, NOAA, U.S. Na... 13°47'02"N 110°59'11"E 21,116 km



1) கங்கை என்ற விண்பனி நீர்க்கோள் பூமியில் இறங்கியுள்ளது. அது இறங்கும் போது காற்றுமண்டலத்தில் மோதி எரிந்துள்ளது. இவ்வாறு கங்கையில் இருந்த மூலக்கூறுகள் எரிந்து விழுந்த இடங்கள் பூமியில் மிகப்பெரிய பாலைவனங்களாக மாறியுள்ளன.
2) கங்கை என்ற விண்பனி நீர்க்கோள் பூமியில் இமயமலைப் பள்ளத்தாக்கில் (Rim) இறங்கிப் பூமியைத் துளைத்துச் சென்ற இடமே தக்களமேகன் பாலைவனமாக (Taklamakan desert) மாறியுள்ளது !
3) கங்கை என்ற விண்பனி நீர்க்கோள் பூமியில் இமயமலைப் பகுதியில் இறங்கிப் பூமியைத் துளைத்துச் சென்று தண்ணீர் வெளியேறிய இடமே மெரினா ஆழ்கடல் (Mariana Trench) பகுதியாக உள்ளது.
4) கங்கையில் இருந்த தண்ணீரும் சேறும் சகதியும் பாய்ந்தோடிப் படிந்த காரணத்தினால் இந்தோனேசியா நிலத்திட்டு உருவாகியுள்ளது.
5) கங்கையில் இருந்த சேறும் சகதியும் சேர்ந்து படிந்து beding rocks உலககெங்கும் உருவாகியுள்ளன.
6) கங்கைளில் இருந்த சேறும் சகதியும் படிந்து உருவான நிலத்திட்டுகளில் உள்ள default திட்டுக்கள் புரண்டு விழுவதால் நிலநடுக்கமும் சுனாமியும் உண்டாகின்றன.
7)





1) மதுரைக்கு வந்த சுனாமி !
2) கடல்கோளால் உண்டானது நாகமலை !
3) கீழடி அழிந்தது சுனாமியினாலா?
4) விருப்பாச்சிப் பாறைகள் கடல்கோளால் உருவானவையா?
5) அழகர்மலையில் உள்ளது கல்மரமா?
6) சிவகளை மலைத்தொடர் கடல்கோளால் உருவானதா?
7) எழுகடல்தெரு வரை கடலேழும் பொங்கி வந்துள்ளனவா?
8) கொடைக்கானல் மலைமேல் உள்ள பொக்குப் பாறைகள் சுனாமியினால் உருவானவையா?
9) மொரிசியசு தீவு பண்டைய கடல்கொண்ட மதுரையா?
10) டிகோகார்சிகா தீவு பண்டைய தமிழரின் கபாடபுரமா?

முனைவர் கி.காளைராசன் அவர்களது பதிவுகளைக் கீழ்க்கண்ட இணைய வலைத்தளங்களில் காணலாம்.

இணையப் பதிப்புகள்

1) https://pratilipi.com/story/திருப்பூவணப்-புராணம்-lphz8cjwodvi
https://thirukkural-kalairajan.blogspot.com/
https://theory-of-tsunamis-kalairajan.blogspot.com/
https://letters-kalairajan.blogspot.com/
https://books-kalairajan.blogspot.com/
https://publications-kalairajan.blogspot.com/
https://kalairajan26.blogspot.com/
https://kasi-pathayathrai-kalairajan.blogspot.com/
https://kaalaiyarkovil-kalairajan.blogspot.com/
https://thiruppuvanam-kalairajan.blogspot.com/
https://thiruvadanai-puranam-kalairajan.blogspot.com/
https://pulikkarai-iyanar-kalairajan.blogspot.com/
https://temples-kalairajan.blogspot.com/

திருப்பூவணத்தில் அன்னதானம் செய்வோம்

திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற நடனமாது அன்னதானம் செய்து வந்தாள். மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சித்தர் வடிவில் அன்னதானத்தில் தோன்றி, ***36 ஆவது திருவிளையாடலான இரசவாதம் செய்த திருவிளையாடலை*** நிகழ்த்தி அருளினார். சிவபெருமான் சித்தர் வடிவில் திருப்பூவணம் வந்து அன்னதானத்தில் கலந்து கொண்டதால், இங்கு நடைபெறும் அன்னதானத்தில் சிவபெருமானுடன் சித்தர்பெருமக்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர் என்பது ஐதீகம். இத்தகைய புகழ்பெற்ற திருப்பூவணக்காசியில் முன்னோர்கள் முத்தியடையவும், குலம் செழிக்கவும் அன்னதானம் இடுவது சிறப்புடையது.



முடியுடை மூவேந்தரும் ஒன்றாகச் சேர்ந்து வழிபட்ட திருத்தலம் இது. மூவர் தேவாரமும் பெற்ற பாண்டிய நாட்டுத் திருத்தலம் இது ஒன்றே ஆகும். திருஞானசம்பந்தருக்கு வைகை ஆற்று மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்தன. எனவே திருஞானசம்பந்தர் வைகை ஆற்றின் வடகரையில் நின்றபடியே "தென்திருப்பூவணமே" என்று முடியும் பதிகத்தைப் பாடி வணங்கினார். திருப்பூவணநாதர் அகம் மகிழ்ந்து, நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞானசம்பந்தருக்குக் காட்சி அருளினார். திருப்பூவணத்தில் நந்தி மறைக்காது. திருப்பூவணம் ***"காசியை விட வீசம் கூட"*** எனப் புராணம் குறிப்பிடுகிறது.

"திருப்பூவணக்காசி"யில் அன்னதானம் இடுவது காசியில் அன்னதானம் செய்வதை விடச் சிறந்தது.

தருமஞ்ஞன் அவனுடைய பிதுர்கள் முத்தியடைய வேண்டியத் திருப்பூவணத்தில் அன்னதானம் செய்தான். அவன் கொண்டுவந்திருந்த அஸ்திக் கலயத்தில் இருந்த எலும்பு திருப்பூவணத்தில் பூவாக மாறியது. ***"எலும்பு பூவாக மாறிய திருத்தலம்"*** திருப்பூவணம் ஆகும்.

சுச்சோதி என்ற வடநாட்டு அரசன் அவனுடைய பிதுர்கள் முத்தியடைய வேண்டித் திருப்பூவணத்தில் அன்னதானம் செய்தான். அவனது முன்னோர்கள் நேரில் தோன்றிப் பிண்டம் பெற்றுக் கொண்டு அவனை ஆசிர்வதித்தனர். ***"பிதுர் மோட்சபுரி"*** என்ற புகழுடையது திருப்பூவணம்.

நம் இறப்பிற்குப் பின் மற்றொருவர் வாழ்வில் ஒளிகாட்டக் கண்தானம் செய்வோம். இறைவனின் கருணையைப் பெறுவோம்.

அன்னதானம் கண்தானம், இவ்விரண்டு தானங்களையும் சிவபெருமான் ஏற்றுக் கொள்கிறார்.

திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை (80 G வரிவிலக்கு பெற்றது)

THIRUPOOVANAM SRI PONNANAIYAL ANNADHANA TRUST, THIRUPPUVANAM - 630 106, Sivagangai District.

12 A Registration Number AAETT2824KE20211

80 G Approval Number AAETT2824KF20227



STATE BANK OF INDIA,
A/C No. 307 101 349 77,
IFSC : SBIN 0011 064,
CIF Number : 854 743 025 67,

நிறுவுனர் தலைவர் –
ஸ்ரீலஸ்ரீ மாதாஜி அவர்கள்,
அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி திருக்கோயில்,
வேதியரேந்தல் விலக்கு, மானாமதுரை.

தலைவர் –
பேராசிரியர் திரு இராம. திண்ணப்பன் செட்டியார், தேவகோட்டை.

துணைத்தலைவர் –
திரு பழ. சோமசுந்தரம் செட்டியார்,
தேவகோட்டை, (இருப்பு-மதுரை) - 93606 53798

செயலாளர் –
காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,
கோட்டையூர் – 944 350 1912, 824 826 6418

இணைச் செயலாளர் –
திரு. உமாசேகர், தெய்வீகப் பேரவை,
திருப்பூவணம்

இணைச் செயலாளர் –
திரு. மு. ரவி, நெல்முடிகரை, திருப்பூவணம்

பொருளாளர் –
திரு சுவா. முத்துக் குமாரசாமி, பஜார் தெரு,
கோட்டை, திருப்பூவணம் - 97913 72414

பாதயாத்திரை, தீர்த்தயாத்திரை இவைகளால் இந்தப் பாரததேசம் பண்டையகாலத்திலிருந்தே பெருமை பெற்றுள்ளது. புண்ணிய ஆத்மாக்களின் வழிபாட்டால் இந்தப் பாரததேசம் உலகிற்கு ஆன்மீக வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. நடைப்பயணம் மேற்கொண்டு திருத்தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடி அங்குள்ள தெய்வங்களை வழிபடும் மரபைப் பாரதநாட்டினர் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வருகின்றனர். அவற்றுள் இராமேசுவரம் காசி பாதயாத்திரை மிகவும் பிரசித்தி வாய்ந்தது.



வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்களுக்கு, 2014ஆம் வருடம் 11ஆவது முறையாகக் காசி பாதயாத்திரை சென்ற போது அழைத்துச் சென்ற யாத்திரிகர்களில் நானும் ஒருவன். எனது பயண அனுபவங்களை இந்தப் புத்தகத்தின் வழியாக உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இதற்கு முன் இவர் 10முறை இராமேசுவரம் காசி பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். வருடந்தோறும் 20 அடியார்களைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறார். இதற்குக் கட்டணம் ஏதும் இவர் வாங்குவதில்லை.

அன்புடன்
நூலாசிரியர்
காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)
28 அ, குருநாதர் கோயில் தெரு, கோட்டையூர் 630 106
e-mail : kalairajan26@gmail.com
cell phone : 824 826 6418, WhatsApp : +91 94435 01912

கற்றோர் படித்தோரும் காசி கதையைக் கருத்து உகந்து கேட்போரும்,
வற்றாத செல்வமுடன் மதிகதிர் உள்ள மட்டும் வாழ்ந்து இருக்க வாழியதே !

வலையபட்டி சித்தர்
காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா அவர்களுக்கு
இது 11ஆவது காசி பாதயாத்திரை.
இந்த யாத்திரையில் அவர் அழைத்துச் சென்ற
யாத்திரிகர்களில் நானும் ஒருவன்.
எனது பயண அனுபவங்களை இந்தப் புத்தகத்தின்
வழியாக உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி ஐயா
அவர்கள் இதற்கு முன் 10முறை இராமேசுவரம் காசி
பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். கட்டணம் ஏதும்
வாங்காமல் வருடந்தோறும் 25 அடியார்களைத் தன்னுடன்
அழைத்துச் சென்று வந்துள்ளார்.

இராமேசுவரம் காசி பாதயாத்திரைப் பயண அனுபவத்தைப்
படிப்பவரும், கருத்து உகந்து கேட்பவரும்
வற்றாத செல்வமுடன் மதிகதிர் உள்ள மட்டும்
வளமாக நலமுடன்
வாழ்ந்து இருக்க வாழியதே !